இயேசுவின் சிலுவையில் ஏழு நித்திய ஜீவ வசனங்கள்

மேல உப்பூரணி - பஜனையாளர்

S. துரைப்பாண்டியன்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

இயேசுவின் சிலுவையில்
ஏழு நித்திய ஜீவ வசனங்கள்



மேல உப்பூரணி - பஜனையாளர்

S. துரைப்பாண்டியன்

ஜெனிஃபா பப்ளிகேசன்ஸ்

மேல உப்பூரணி

வெளியீட்டு எண்: B.1 / 2014
முதல் பதிப்பு : பிப்ரவரி 2014
பிரதிகள் : 3000

All Richts Reserved :

விலை ரூ 70/-

S. துரைப்பாண்டியன்
மேல உப்பூரணி, கரிசல்பட்டி அஞ்சல்
சேரன்மகாதேவி, வழி - 627414
திருநெல்வேலி மாவட்டம்
செல்: 9443556288, 9585536288

Printed by
Ebenezar Arts
Sivakasi, Cell: 94433 27721, 94425 17751

CHURCH OF SOUTH INDIA - TIRUNELVELI DIOCESE

KARISAL PASTORATE

Rev.Dr.R. Daniel Pauldurai M.A.,B.D.D.D.,M.Th.,Ph.D.,
Pastorate Chairman & Correspondent
T.D.T.A. Primary & Middle Schools

St. Paul's CSI Parsonage
KARISAL - 627 414
(Via) Cheranmahadevi
Ph : 04634-263342
Cell : 94439 81475

Date : 15.10.2013

அணிந்துரை

"இயேசுவின் சிலுவையில் ஏழு நித்திய ஜீவ வசனங்கள்" என்ற தலைப்பில் தலைமை ஆசிரியர், பஜனையாளர், இறையியலாளர் திரு. S.துரைப்பாண்டியன் அவர்களால் எழுதப்பட்ட இந்நூலுக்கு அணிந்துரை எழுதுவது எனக்கு பெரும் மகிழ்ச்சியைத் தருகின்றது. பல ஆண்டுகளாக சிந்தித்த சிந்தனைகளை நூலாக வெளியிட வாய்ப்பளித்த கர்த்தாதி கர்த்தர் இயேசுகிறிஸ்துவுக்கு ஸ்தோத்திரம்

ஒருபானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்ப்பது போல ஆழந்த கடலில் அதாவது "இயேசுவின் சிலுவையில் ஏழு நித்திய ஜீவ வசனங்கள்" என்ற நூலின் கருத்துக் கடலில் மூழ்கி எடுத்துள்ள மூன்று முத்துக்களை மட்டும் உங்கள் முன் வைக்கிறேன்.

1. இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்ட வலது, இடது புறத்துக்கள்ளர்களின் இருதய நினைவுகளும் நிறைவேறுதல்களும், வலதுபுறத்துக்கள்ளன் தன் பாவங்களை அறிக்கையிட்டான். பரலோகம் பெற்றான். அழியா வாழ்வு அவனுக்கு அருளப்பட்டது. (நீதி. 28:13) இடது புறத்துக்கள்ளன் இவ்வுலக வாழ்வை விரும்பினதால் தன் பாவங்களை உணர இயலவில்லை. மண்ணாசை விண்ணாசையை விரும்பவிடாமல் தடுத்தது என்ற கருத்து மிகவும் சிந்திக்கக்கூடியது.

2. அன்பிலே பயமில்லை பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும் (1யோவான் 4:18) என்ற தனது கருத்தின்படி யோவான் பயமற்றவராக இயேசுவின் சிலுவையின் அருகில் நின்றார். பயமடைந்த ஏனைய சீடர்கள் ஓடிவிட்டனர். இதய நினைவுகள் நிறைவேறும் என்ற கருத்து சிறப்பானது.

3. நாலாம் வசனம் கூறும்போது பெரும் அந்தகாரம் இருந்தது. வெளிச்சம்தான் தேவனின் மகிமையென்று எண்ணிக் கொண்டிருந்த நமக்கு அந்தகாரமும் தேவ மகிமையின் வெளிப்பாடு என்பதை இந்நூலின் மூலம் அறிய முடிகிறது. பரமண்டலங்களின் சக்கரத்திலே அவர் உலாவுகிறார் என்று யோபு 22:14ல் குறிக்கப்பட்ட வசனம் இதற்குச் சான்று நான் வானத்திலிருந்து உங்களோடே பேசினேன் என்ற வசனமும் இதற்கு ஆதாரம். (யாத்.20:22)

இந்நூலின் கருத்துக்களை ஆழ்ந்து, ஒருமனப்பட்டு சிந்திப்போம். நாம் பெறுகின்ற ஆசீர்வாதங்களை பிறரும் பெற ஈஸ்டர் பரிசாக பிறருக்கும் வாங்கிக் கொடுப்போம்.

இந்நூல் 50 வருட வாழ்வியலின் சான்றாகும். தமிழ் மொழியாருக்கு மட்டுமல்லாமல், உலகின் பிறமொழிகளாருக்கும் உரித்தாகும் என்று நம்புகிறேன். அதாவது பல மொழிகளிலும்

அன்பு சகோதரன்

MARANATHA MINISTRIES

Nanguneri - 627 108

Pastor P. Joseph Paul

Cell No : 94431-50128

Date : 06.02.2014

வாழ்த்துரை

நேசக்குமாரன் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள் !

அன்பு சகோதரன் S.துரைப்பாண்டியன் அவர்கள் எழுதிய "இயேசுவின் சிலுவையில் ஏழு நித்திய ஜீவ வசனங்கள்" என்ற புத்தகத்தின் கையெழுத்துப் பிரதியை வாசித்தேன். இப்புத்தகமானது நாம் அறிந்திருக்கிற கல்வாரி புண்ணியங்களைக் குறித்த சத்திய வார்த்தைகளை மிக அழகிய நடையில் ஒவ்வொரு வார்த்தைகளுக்கும் சிறப்பான விளக்கங்களைத் தருகின்றது.

முதலாம் வார்த்தையை நாம் பார்க்கும்போது இதுவரை நாம் அறிந்திராத புதிய சத்தியங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. பிதாவே இவர்களுக்கு மன்னியும். தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே (லூக்கா 23:34) இந்த வார்த்தையின் விளக்கம் மிக நேர்த்தியாக விளக்கப்பட்டுள்ளது. இப்படியாக ஏழு திரு வசனங்களும் விளக்கப்பட்டுள்ளன. இவ்வாறாக இந்நூலாசிரியருக்கு தேவன் தந்த வெளிப்பாட்டிற்காக தேவனை நன்றியுடன் துதிக்கிறேன்.

லெந்து காலங்களில் மாத்திரமல்ல, எல்லாக் காலங்களிலும் நாம் வாசித்து பயன்பெற ஒவ்வொரு கிறிஸ்தவ வீட்டிலும் இருக்க வேண்டிய அருமையான புத்தகம்.

இச்சிறந்த நூலின் ஆசிரியர் S.துரைப்பாண்டியன் அவர்கள் பஜனைப் பிரசங்கியாராக தேவப்பணியாற்றி வருகின்றார்கள். இப்புத்தகமானது இவர்களின் முதலாவது முயற்சியாகும். இப்புத்தகமானது தேவனால் அளிக்கப்பட்ட விலையேறப்பெற்ற பொக்கிஷமாகும். தேவன் தமது தாசனுக்கு வெளிப்படுத்தின மேன்மையான வெளிப்பாடுகளால் இப்புத்தகம் நிரம்பி வழிகின்றது. தொடர்ந்து இவர்கள் பணி சிறக்க வாழ்த்துகிறேன்.

கிறிஸ்துவுக்குள்

P. Joseph Paul

(PASTOR P. JOSEPH PAUL)

முன்னுரை

"நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல், வேறொன்றையுங் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக...." கலாத்தியர் 6:14.

அன்பான கர்த்தருடைய பிள்ளைகளே!
இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துக்கள்.

வேதவசனங்களை அடிப்படையாகக் கொண்டு தேவனுடைய ராஜ்யத்தை நோக்கி வழி நடத்தும் செய்திகளே கிறிஸ்தவத்தின் உயிர் நாடியாகும். அவற்றைச் சார்ந்து நம்மில் செய்தி கொடுக்கும் ஊழியர்கள் செய்தியைக்கேட்கும் விசுவாசிகள் அல்லது சபை என்ற இருபகுதியினராகவே நாம் இருக்கிறோம், நிற்க.

நான் சிறுவதிலிருந்து கிறிஸ்தவ செய்திகளைக் கேட்பதிலும் கிறிஸ்தவ புத்தகங்களைப் படிப்பதிலும் ஓரளவு விருப்பம் கொண்டவன். அதைப் போலவே ஊழியம் செய்வதிலும் கர்த்தருடைய கிருபையால் சிறிதளவு பங்களிப்பும் கிடைக்கப் பெற்றவன். அவைமட்டுமின்றி பல சகோதரர்களோடும், விசுவாசிகளோடும் கிறிஸ்தவம் பற்றி சில கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளுகிற பழக்கமும் உண்டு.

இவ்வித அனுபவத்தில் என்னிலே தோன்றிய ஒரு சிந்தை உண்டு, பலரும் இதை அறிய முடியும், அது என்னவெனில், செய்தி கொடுப்பவர்கள் எல்லோரையும், முற்றும் தெரிந்தவர்களாக நாம் சொல்ல முடியவில்லை, ஏனெனில் சில ஆதார செய்திகளை (சில பெரிய ஊழியர்கள் என்று பெயர் பெற்றவர்கள் மூலமாகக் கூட) கேள்விப்படும் போது நாம் சிந்திக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப் படுகிறோம். அப்படிப் பட்ட சந்தர்ப்பங்களில் அவை சரியா, தவறா என்று வேத வசனங்கள் மூலமாக நான் தீர்வு காண முயலுவேன். அவற்றில் பல காரியங்கள் வேதவசனங்களோடு பொருந்தாததாகவே இருப்பதை அறிய முடிகிறது. அதேசமயத்தில் செய்தி கொடுப்பவர்கள் எல்லாவற்றையும் தெரிந்தது போலவே தங்களைப் பாவித்து அழுத்தமாகவே பேசி விடுகின்றனர்.

அப்படிப் பட்ட செய்திகளினால் சத்தியங்கள் சிதைக்கப் படுகின்றன. ஒரே சத்தியம் பலரால் பலவித வண்ணங்களாகி

பற்பல திசை நோக்கிப் பயணிக்கின்றன. அவர்களோ ஆவியானவர்பேசினார் அல்லது வெளிப்படுத்தினார் என்று கூறி ஒரே தீர்வாக முடித்து விடுகின்றனர். அதனால் அவர்கள் புதிய புதிய யுக்திகளையும் வழிமுறைகளையும் வெளிப்படுத்தி, அதன் மூலம் விசுவாசிகளை வசப்படுத்தி ஒரு நிலையற்ற தன்மையுள்ளவர்களாக்கி விடுகின்றனர்.

அதுமட்டுமல்லாமல் அப்படிப் பட்டவர்களினால் கிறிஸ்தவ பாடல்கள், வேதவசனங்களைத் தியானித்தல் மற்றும் ஆராதனை முறைகள் ஆகியவற்றில் வேறுபட்ட தாக்கத்தை உண்டாக்கிக் கொண்டு வருகின்றன. அந்த நிலை நாளுக்கு நாள் விரிவடைந்து பெருகிக் கொண்டு போகின்றன.

அவற்றில் பலவற்றை முழுமையாக ஏற்றுக் கொள்ளவும் முடியவில்லை. தீர்க்கமாக குறை சொல்லவும் நான்முற்பட முடியவில்லை. ஏனெனில் அவற்றில் என்னுடைய பங்களிப்பு மிக மிகக் குறைவானதேயாகும்.

அதே சமயம் இன்னொன்றை நாம் மறுக்கக் கூடாது. சத்தியத்தை சத்தியமாக போதிக்கிற ஒருபெரும் கூட்ட ஊழியர்களும் உண்டு. அவர்களைக் கர்த்தர் என்றென்றும் பயன்படுத்தி வருகிறார். அதனாலேயே இன்றும் கிறிஸ்தவம் வளருகிறது, பெருகுகிறது. கிறிஸ்தவம் சரியான கிறிஸ்தவமாக நிலைநிற்கிறது. அப்படிப் பட்டவர்களுடைய முயற்சியையும், உழைப்பையும், தியாகத்தையும் நாம் அற்பமாக எண்ணிவிட முடியாது. அப்பணியை எடுத்த எடுப்பிலே எல்லாரும் ஏற்று செய்து விடவும் முடியாது என்பதும் உண்மையே. அப்படிப் பட்டவர்கள் நிமித்தமாக கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

கர்த்தருடைய உழியக்காரர்களை "..... சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும், உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு" என்று வேதவசனம் எச்சரிக்கிறது. 2தீமோத்தேயு 2 : 15

இந்த காலக்கட்டத்தில் எனது சிந்தனையில் உதித்த திட்டத்தின் ஒரு பகுதியாக இப்புத்தகத்தை முதன் முதலாக எழுதலானேன். சிறிதளவான இந்த பங்களிப்பை கர்த்தர் அங்கீகரிப்பாராக. ஆசீர்வதித்து நிலை நிறுத்துவாராக.

"இயேசுவின் சிலுவையில் ஏழு நித்திய ஜீவ வசனங்கள்" என்று இப்புத்தகத்தை வெளியிடுவதற்கு இன்னுமொரு காரணம் உண்டு. இயேசு சிலுவையில் சொன்ன ஏழு வசனங்களும், பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட நாளில் மட்டுமே தலைப்புச் செய்திகளாகப் பிரசங்கிக்கப்படுகிறது. அதுவும் சராசரியாக 20 நிமிடங்கள் மட்டுமே. அப்படிப்பட்ட நேரத்தில் ஒரு வசனத்தின் முழுக் கருத்தையும் விரிவான செய்தியாக்குவது முடியாத காரியமாகும்.

மேலும் எல்லாச் செய்தியாளர்களும் வசனங்களை சரியான பாதையில் கையாளுகிறார்களா என்பதும் ஒரு கேள்விக் குறியாகும். மேற்கண்ட உண்மைகளை நான் பல ஆண்டுகளாக கண்கூடாகக் கண்டிருக்கிறேன்.

நமது கர்த்தராகிய இயேசு சிலுவையில் பேசிய ஏழு வசனங்களையும் நான் மிகவும் உன்னதமானவைகளாகக் கருதுகிறேன். என்னுடைய இந்த சிந்தனையை அறிந்து சில ஊழியர்கள் என்னை ஊக்கப்படுத்தினார்கள். அவர்களின் தூண்டுதலினாலேயே முதலில் இப்புத்தகத்தை வெளியிட முடிவு செய்தேன்.

அந்த நேரத்தில் இயேசுவின் சீஷனாகிய சீமோன் பேதுரு கூறின ஒருவாக்கியம் என் நினைவுக்கு வந்தது. "ஆண்டவரே யாரிடத்தில் போவோம், நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே." யோவான், 6:68. எனவே இந்த புத்தகத்துக்கு "இயேசுவின் சிலுவையில் ஏழு நித்திய ஜீவ வசனங்கள்" என்று மன நிறைவோடு பெயரிடப் பட்டது.

பல தலைப்புகளில் பல சத்தியங்களைத் தாங்கி ஏராளமானோர் அநேக கிறிஸ்தவ புத்தகங்களை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றனர். இக்காலக்கட்டத்தில் என்னுடைய இந்த படைப்பையும் வெளியிட கர்த்தர் கிருபை செய்துள்ளார். எனினும் கர்த்தருடைய பார்வையில் சமுத்தர நீரில் ஊசிமுனையில் பட்ட துளிநீரின் ஈரத்தின் அளவானதே என்னுடைய பணி என்று உறுதியாகக் கூறுவேன். தேவனுடைய ஞானம் யாராலும் ஒப்பிட முடியாத மகிமை நிறைந்து தனித்துவம் கொண்டது என்பதை நன்கு அறிவேன்.

கர்த்தர் தமது ராஜ்யத்தின் சுவிசேஷப் பணியை பல படிகளிலான ஊழியங்களைக் கொண்டு நடத்தி வருகிறார். இவை உலகம் முழுமைக்கும் பொதுவானதாகும். அவற்றில் எந்த சபைப் பிரிவாக இருந்தாலும் தீர்மானிக்கப்பட்ட ஒழுங்கு முறையில் பயணப்பட்டுக் கொண்டிருக்கின்ற சபைகள் மிக ஏராளம், ஏராளமாகும். அப்படிப் பட்ட சபைகளில் தினம் தினம் பனியாற்றி, அனுதினமும் தாங்கள் கண்காணிப்பில் பராமரித்து வரும் ஊழியர்களின் பணி அளப்பற்கரியதாகும். அப்படிப்பட்டவர்களுக்கும் விசுவாசிகளுக்கும் இப்புத்தகம் நல்ல பயனளிக்கும் என்று கர்த்தருக்குள் நம்புகிறேன்.

ஒரு வேண்டுகோள் :-

அன்பானவர்களே நீங்கள் தனிமையில் அமைதியான சூழ்நிலையில் மன நிறைவோடு இருக்கும்போது ஜெபசிந்தையுடன் இப்புத்தகத்தைப் படியுங்கள். எப்படியும் பல சந்தர்ப்பங்களாக என்றாலும் முழுமையாகப் படித்து விடுங்கள்.

இப்புத்தகத்திலுள்ள சத்தியங்கள் ஏற்புடையதாகவும் பயனுள்ளவைகளாகவும் இருந்தால் இப்படிப்பட்ட செய்திகளுக்காகவும், செய்தியைத்தரும் ஊழியர்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள், கர்த்தருடைய நாமம் மகிமைப் படுவதாக.

என்னுடய இந்த படைப்புக்கு அணிந்துரை எழுதி அழகுபடுத்திய Rev Dr.R.டேனியல்பால்துரை அவர்களுக்கு என்னுடைய உள்ளத்தின் ஆழத்திலிருந்து அன்பை வெளிப்படுத்தி நன்றி கூறுகிறேன். அவர்களின் ஊழிய ஆரம்ப நாட்களிலிருந்தே கர்த்தரின் அழைப்பினால் கிடைத்தபணி என்று எண்ணி ஊழியத்தை மனநிறைவோடு செய்து நிறைவேற்றுகிறவர்கள். அவர்கள் என் பேரில் மிகுந்த அன்பு கொண்டவர்கள். இப்புத்தகத்தை நான் எழுத ஆரம்பித்த நாட்களிலேயே அதன் கருத்துக்களைப் படித்தறிந்து நான் சோர்ந்து போகாமலிருக்க உடனே வாழ்த்துரை எழுதித்தந்து என்னை ஊக்கப்படுத்தினார்கள். அவர்கள் நிமித்தம் கர்த்தருக்கு ஸ்தோத்திர முண்டாவதாக.

இப்புத்தகத்துக்கு வாழ்த்துரை வழங்கிய பாஸ்டர் P.ஜோசப்பால் அவர்களை நினைத்து நான் மிகவும் பெருமையடைகிறேன். அவர்களின் எளிமை,தாழ்மை, கிறிஸ்துவில் அவர்கள் கொண்டுள்ள வைராக்கியம்,தியாகம் நிறைந்த ஊழியம் இவற்றை நான் அறிவேன். அவர்கள் பணிந்துள்ள இலக்கை நாம் கவனித்தால் அவர்களைக் குறித்துக் கர்த்தரை ஸ்தோரிக்காமல் இருக்கமுடியாது. அவர்கள் என்னுடைய பிரதிகளைப்படித்தறிந்து, இப்பணியையும் என்னையும் வாழ்த்தினதை நினைத்து அவர்களுக்கும் நன்றிகூறி கர்த்தருக்கே மகிமையைச் செலுத்துகிறேன்.

"......இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்......" மத்தேயு 18:16.

இந்த வசனம் இரண்டு அல்லது மூன்று என்று ஒரே ஒரு எண்ணை மட்டும் குறிப்பிடவில்லை. அதன்படி அணிந்துரை மற்றும் வாழ்த்துரை வழங்கிய இருவரையும் நினைக்கிறேன்.அவற்றிற்கு மூலகாரணராகிய தேவனையும் நினைத்து, இந்த படைப்பு மூவருடைய வாழ்த்துதலுடன் கூடிய சாட்சிகளின் வாக்கை பெற்றுள்ளது எனவும் விசுவாசிக்கிறேன்.

என்னுடை ஊழியப் பாதையில் எழுந்த ஆவிக்குரிய இந்த சிந்தனைகளை புத்தகமாக வெளியிடுவதற்கு உறுதுணையாக இருந்த; தேவ பிரசன்னம் நிறைந்த இடமான **"எபனேசர் ஆர்ட்ஸ்"** (சிவகாசி) நிறுவனத்திற்கு எனது உள்ளம் நிறைந்த வாழ்த்துதலையும் நன்றியினையும் இயேசுவின் நாமத்தினால் உரித்தாக்குகிறேன்.

எல்லா துதியும் கனமும் மகிமையும் தேவனுக்கே!

கிறிஸ்துவுக்குள்,

(S. Duraipandian)

பொருளடக்கம்

எண்	தலைப்பு	ப.எண்
1.	இயேசுவின் வார்த்தைகளின் மகத்துவங்கள்....................................	1
2.	முதலாம் வசனம்....................................	30
3.	இரண்டாம் வசனம்....................................	48
4.	மூன்றாம் வசனம்....................................	66
5.	நான்காம் வசனம்....................................	85
6.	ஐந்தாம் வசனம்....................................	107
7.	ஆறாம் வசனம்....................................	125
8.	ஏழாம் வசனம்....................................	144



இயேசுவின் வார்த்தைகளின் மகத்துவங்கள்

இயேசுவின் வார்த்தைகளின் தனிச்சிறப்பு:-

கர்த்தருடைய பெரிதான கிருபையினால், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் பரிசுத்த ஆவியானவருடைய ஒத்தாசையுடன் இயேசு சிலுவையில் கூறின நித்திய ஜீவ வசனங்களை நாம் தியானிக்கப் போகிறோம். அதற்கு முன்னதாக அவருடைய வாயின் வார்த்தைகளின் மகத்துவங்களை நமது மனதில் கொள்வது அவசியமாகும். அவைகள் நமது சிந்தனை மற்றும் நமது தியானத்துக்கு அஸ்திபாரம் ஆகும். நம்முடைய விசுவாசத்துக்கும் பெரிய துணையாயிருக்கும்.

ஏனெனில் "என் (தேவனுடைய) வாயிலிருந்து புறப்படும் வசனம் வெறுமையாய் என்னிடத்துக்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்." (ஏசாயா 55:11) என்று ஏசாயா தீர்க்கதரிசி சொன்னது போல இயேசுவின் வார்த்தைகளும் அப்படியே இருந்தன. ஆம், அவைகள் யாருக்காகச் சொல்லப்பட்டதோ அவர்கள் ஒவ்வொருவரிடத்திலும் அவை ஏதாவது ஒரு பயனைத் தந்தன; அல்லது ஒரு தாக்கத்தை ஏற்படுத்தின.

இயேசுவின் வார்த்தைகளின் பொதுத் தன்மைகள்:-

ஒவ்வொரு சமயத்திலும் ஏதாவது ஒரு நோக்கத்துடனே இயேசுவின் வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தைகளையே நாம் பரிசுத்த வேதாகமத்திலே வாசிக்கிறோம். அவைகளில் சில அதிகார முடையவைகளாகவும், மத்7:28: வல்லமை மிகுதியாக உள்ளதாகவும் : லூக்கா 4:36 ஞானம் நிறைந்ததாகவும், லூக்கா 2:40,46,47; தீர்க்க தரிசனமாகவும், லூக்கா 24:19 : உவமைகள் நிறைந்ததாகவும், மாற் 4:33 ; இருந்தன.

மேலும் அவருடைய வார்த்தைகள் மிகவும் சிறந்த உபதேசங்களாகவும், மத்தேயு 5:2; நம்பிக்கை இழந்தவர்களைத் திடப்படுத்துகிறதாகவும், மத்தேயு 14:27; நித்திய ஜீவ வசனங்களாகவும், யோவான் 6:68; அநேக நோய்களைக்

குணப்படுத்துகிறதாகவும், மத்தேயு 4:23; பிசாசுகளையும் பொல்லாத ஆவிகளையும் விரட்டுகிறதாயும், மாற்கு 1:39; மரித்தோரை உயிரோடே எழுப்புகிறதாயும், யோவான் 11:43,44; இன்னும் அநேக அற்புதங்களை நடப்பிக்கிறவைகளாகவும், யோவான் 2:11 இருந்தன. எல்லாவற்றுக்கும் மேலாக பாவங்களை மன்னிக்கிற வார்த்தைகளாகவும், மத்தேயு 9:2 இருந்தன.

ஆகையினால் அவரை அண்டின மக்கள் ஏதாவதொரு நற்பயனைப் பெற்றவர்களாக இருந்தனர்.

<u>தரப்பட்டுள்ள இயேசுவின் வார்த்தைகள்.</u>

இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகள் சிறப்புகள் நிறைந்தவை எனக் குறிப்பிட்டோம், அந்த வார்த்தைகளை நமக்குத் 'தரப்பட்டுள்ளவை' என்று நாம் குறிப்பிடுவதற்குக் காரணமுண்டு.

"இயேசு செய்த வேறு அநேக காரியங்களுண்டு அவைகள் ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புத்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன்" யோவான் 21:25

அந்தக் காரியங்களே அவ்வளவு அதிகம் என்றால் அவைகளைச் சார்ந்து இயேசு பேசின வார்த்தைகளும், அவற்றின் பொருளும், பொருளின் விரிவும் எவ்வளவு இருக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள்

இவ்வாறு எழுதப்படாதவைகளாக பெரும்பகுதி ஒரு புறமிருக்க எழுதப் பட்டவைகளில் நாம் பயன்படுத்தும் வேதாகமத்துடன் இன்னும் கூடுதலாக சில வேத பகுதிகளையும் சேர்த்து பயன் படுத்துவோரும் உண்டு. இவை தவிர தள்ளுபடி ஆகமப் பகுதிகளாக சிலவற்றை நீக்கி வைத்திருக்கிறதையும் அறிகிறோம். அதுமட்டுமல்ல வேதாகமத்தைத் தொகுத்துப் பிரித்து தெரிந்தெடுப்பதற்கு கிடைக்கப் பெறாமல் போனதான சுருள்களும் இருந்திருக்கலாம்.

மொத்தத்தில் நாம் பயன்படுத்துகிற பரிசுத்த வேதாகமம் என்பது எழுதப் பட்டவைகளிலும், கிடைக்கப் பெற்றவைகளிலு மிருந்து பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலினால் சற்று குறைவான அளவே தெரிந்தெடுத்துத் தரப்பட்டுள்ளது என அறிகிறோம்.

"வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப் பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும் படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தத்துக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜன முள்ளவைகளுமாயிருக்கிறது" 2தீமோத்தேயு 3:16,17.

"......விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" ரோமர் 10:17

நமக்குத் தரப்பட்டுள்ள பரிசுத்த வேதாகமத்திலுள்ள சம்பவங்களும் வார்த்தைகளும்; நாம் சுமந்து கொண்டு செல்வதற்கும், கொண்டு செல்லுகின்ற அந்த வார்த்தைகளைப் பிரசங்கம் செய்வதற்கும், பிரசங்கத்தைக் கேட்பவர்கள் விருப்பத்தோடு ஏற்றுக் கொள்வதற்கும், ஏற்றுக் கொண்டவர்கள் உணர்வடைந்து விசுவாசிப்பதற்கும், விசுவாசிப்பவர்கள் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்வதற்கும் தொழுது கொள்ளுகிற எவனும் இரட்சிக்கப் படுவதற்கும் (ரோமர் 10:13,14,15) மிகவும் போதுமானதாக உள்ளது.

இயேசுவின் வார்த்தைகளும் நாமும்:-

இயேசுவை தங்களின் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டிருக்கிற கர்த்தருடைய பிள்ளைகள் அவருடைய வார்த்தைகளை வெறும் வார்த்தைகளாக அல்ல அவைகளே தங்களின் வாழ்கையின் ஆதாரம் என்று வாழ்வதை நாம் பார்க்கிறோம். அதனால் தினந்தோறும் வேத புத்தகத்தை அடிக்கடி வாசித்து, விசுவாசித்து, தியானித்து அதனை ஏற்றுக் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

அது மட்டுமல்ல கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களிலும் அநேகர் இயேசுவின் வார்த்தைகளைப் புகழ்ந்து பேசுகிறதைப் பார்க்கிறோம். பலதலைவர்களும் அறிஞர்களும் மேதைகளும் கூட இயேசுவின் வார்த்தைகள் சமூக சிந்தனையுடன் பேசப்பட்டவை எனப் புகழ்கின்றனர். இன்னும் சிலர் அவருடைய வார்த்தைகள் கலாச்சார மாற்றத்தை உருவாக்கும் சக்தி வாய்ந்தவை என்று கூறுகின்றனர்.

குறிப்பாக இயேசுவின் மலைப் பிரசங்கத்தைப் படித்தறிந்து, அவற்றில் பலவற்றை தங்களின் வாழ்க்கையின் தத்துவங்களாக மேற்கோள் காட்டி பெருமைப் படுபவர்களும் உண்டு. தெய்வ நம்பிக்கை அற்றவர்கள் என்று சொல்பவர்களும் கூட இயேசுவின் உபதேசங்களை குறை சொல்வது இல்லை. இவ்வாறு இயேசுவின் வாயிலிருந்து வந்த வார்த்தைதள் அனைவரின் உள்ளங்களையும் தொடக்கூடியதாக அமையப் பெற்றுள்ளன.

"பரிசேயர் ஒருவரையொருவர் நோக்கி நீங்கள் செய்கிறதெல்லாம் வீணென்று அறிகிறதில்லையா? இதோ உலகமே அவனுக்கு (இயேசுவுக்கு) பின் சென்று போயிற்றே என்றார்கள்" யோவான் 12:19

<u>இயேசுவின் வார்த்தைகள் தரும் மூன்று பிரதான வெளிப்பாடுகள்:-</u>

"இயேசு கலிலேயா எங்கும் சுற்றி நடந்து அவர்களுடைய ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும், சகல நோய்களையும் நீக்கி சொஸ்தமாக்கினார்."மத்தேயு 4:23

இந்த வசனத்தைப் போன்று இன்னொரு வசனத்தை மத்தேயு 9:35 லும் வாசிக்கிறோம். இந்த வசனங்களில் நாம் குறிப்பிட விரும்புகின்ற மூன்று தன்மையான வெளிப்பாடுகளும் அமைந்துள்ளன. அவைகள் தெளிவாகவும் சரியாகவும் உள்ளன.

அவை :- 1. தெய்வீக சிந்தனையுடன் கூடிய உபதேசங்கள்.
2. பரலோக ராஜ்யத்தின் சுவிசேஷப் பிரசங்கங்கள்.
3. சகல வியாதி நோய்களையும் குணமாக்கின அற்புதங்கள்.

முதலில் இவற்றைப் பற்றி சற்று விரிவாகப் பார்ப்போம்.

1. <u>தெய்வீக சிந்தனையுடன் கூடிய உபதேசங்கள்:-</u>

அந்நாட்களில் கார்த்தருடைய ஜனங்களின் வாழ்க்கை சீர்குலைந்து காணப்பட்டது. தங்களுக்கு ராஜா இல்லாதது

மட்டுமின்றி சிறைப்பட்ட வாழ்கையோடு சிதறடிக்கப்பட்ட வாழ்க்கையில் துன்பத்தையும் வேதனையையும் சுமந்தவர்களாய் ஆறுதலின்றி இருந்தனர். இருதயம் இருள் நிறைந்து காணப்பட்டது. பொல்லாத சிந்தனைகளுடன் அக்கிரமச் செயல்கள் மிகுந்திருந்தன.

"இயேசு அநேக ஜனங்களைக் கண்டு அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போலிருந்த படியால் அவர்கள் மேல் மனதுருகி அநேக காரியங்களை அவர்களுக்கு உபதேசிக்கத் தொடங்கினார்." மாற்கு 6:34

நிம்மதி இழந்து வாழ்க்கையில் பிடிப்பின்றி வாழ்ந்து கொண்டிருந்தோரை தமது உபதேசத்தால் சமாதானம் பெற்று வாழச் செய்தார். உள்ளத்தில் நற்சிந்தனைகளை வளர்த்தார். அவனவன் தன் சகோதரனோடே, தானே முன்வந்து ஒப்புரவாக வேண்டும் என்றார். மத் 5:22-24.

மாய்மாலமான செயல்களைக் கடிந்து கொண்டார். "இந்த ஜனங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள். அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது (மத்தேயு 15:8) என்று கடிந்துகொண்டார்.

தவறாக வழிநடத்துகிறவர்களையும் அதிகாரம் செய்பவர்களையும் கண்டித்தார். "குருடரான வழிகாட்டிகளே உங்களுக்கு ஐயோ" (மத்தேயு 23:16;) என்றார்.

மொத்தத்தில் வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" (மத்தேயு 11:28.) என்று ஓர் அழைப்பை விடுத்தார். இவ்வாறாக இயேசுவின் உபதேசங்கள் தெய்வசிந்தனையுடன் கூடிய சிறந்த பண்பட்ட போதனைகளா யிருந்தன.

<u>2. பரலோக ராஜ்யத்தின் சுவிசேஷப் பிரசங்கங்கள்:-</u>

"இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்" (லூக் 19:10) என்று தாம் இந்த உலகத்துக்கு வந்ததின் நோக்கத்தைக் குறித்து இயேசு கூறினார்.

அவரை விசுவாசித்து ஏற்றுக் கொள்வோரை மீட்டு இரட்சித்து நித்திய காலமாக பரலோக ராஜ்யத்திலே தன்னோடு சேர்த்துக் கொள்ளும் உன்னத நோக்கத்தோடே அவர் இந்த உலகத்துக்கு வந்தார். பரலோக ராஜ்யம் என்பது, தேவனுடைய ராஜ்யம் ஆகும்.

இயேசு கிறிஸ்துவின் இலக்கு தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்ததே. எனவேதான் அதன் அவசியம் பற்றியும் அதை அடையும் வழியைப் பற்றியும் இயேசு ஜனங்களுக்குப் பிரசங்கித்தார். இந்த பூலோகத்திலே வாழும் காலத்தில் 'என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பான்" (மத்தேயு7:21) என்று விசவாசத்தோடு நற்கிரியைகளின் அவசியம் பற்றியும் சுட்டிக் காட்டினார்.

உவமைகள் மூலமாகவும் பரலோக ராஜ்யத்தைக் குறித்து விளக்கினார். ஒரு சமயத்தில் "பரலோக ராஜ்யம் தன் நிலத்தில் நல்ல விதையை விதைத்த மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது என்று சொன்ன இயேசுவானவர், அதில் நல்ல விதை ராஜ்யத்தின் புத்திரர் என்றும், அதில் முளைக்கும் களைகள் பொல்லாங்கனுடைய புத்திரர் என்றும் கூறி அதின் முடிவையும் தெளிவு படுத்தினார். நல்ல விதைகளாக விதைக்கப்பட்ட ராஜ்யத்தின் புத்திரராகிய நீதிமான்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப் போல் பிரகாசிப்பார்கள். (மத்தேயு 13:24-30; 36-43) என்றும் பிரசங்கம் செய்தார்.

இவ்வாறு இயேசு தான் சென்ற இடங்களிலெல்லாம் மக்களின் மனதை தன்னுடைய உபதேசத்தினால் பக்குவப்படுத்தி அந்த உபதேசங்களின் மத்தியிலும், தனித்த நிலமையிலும் ராஜ்யத்தின் சுவிசேஷத்தைக் குறித்த பிரசங்கங்கள் செய்யத் தவற வில்லை என்று அறிகிறோம்.

3. <u>சகல வியாதி, நோய்களையும் குணமாக்கின அற்புதங்கள்:-</u>

இயேசு செய்த அற்புத அடையாளங்கள் ஏராளம். சாதாரணமான நோய் என்று நாம் சொல்லுகிற காய்ச்சல் (ஜுரம்) முதல் நீடித்த நாட்களாகப் பீடித்திருந்த வியாதிகள்வரை அவர் அற்புதமாகக் குணமாக்கினார். பிறவியிலேயே ஊனமுற்றவர்களையும் இயேசு குனமாக்கினார். பிசாசுகளை விரட்டியதையும், மரித்தோரை உயிரோடு எழுப்பினதையும் நாம்

வாசிக்கிறோம். இயேசு செய்த எல்லா அற்புதங்களையும் கூர்ந்து கவனித்தால் அவை மனிதச் செயலாக அல்ல, தெய்வீக வல்லமையோடு நடைபெற்றது என அறிய முடியும்.

இதில் இன்னொரு உண்மையை நாம் மனதில் கொள்ள வேண்டும். இயேசு அற்புத அடையாளங்களைச் செய்யும்படியான பிரதான நோக்கத்துடன் இந்த உலகத்துக்கு வரவில்லை. ஆயினும் அற்புத அடையாளங்களைத் தமது வாயின் வார்த்தைகளினால் செய்து நிறைவேற்றினார்.

தமது உபதேசங்களையும் பிரசங்கத்தையும் கேட்பதற்கு ஆகக் கூடுதலான ஜனங்கள் இயேசுவண்டை வரச் செய்வதற்கு அவரது அற்புத அடையாளங்கள் பேருதவியாகக் காணப்பட்டது. அதுமட்டுமல்ல, வருகிறவர்கள் தங்கள் சரீரத் தேவைகளைப் பெற்று மனநிறைவோடு செல்ல வேண்டும் என்ற மனதுருக்கமும் அவருக்கு இருந்தது. பலனடைந்தவர்கள் அற்புத அடையாளங்கள் மூலம் அவரிடத்தில் இருந்த தெய்வீக வல்லமையைப் புரிந்து கொள்ளவும் முடிந்தது. இயேசு தேவனுடைய குமாரன் தான் என்று ஜனங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்புக்கும் உதவியாக இருந்தது. அதன்படி "....ஜனங்கள் கண்டு ஆச்சரியப் பட்டு இஸ்ரவேலின் தேவனை மகிமைப் படுத்தினார்கள்" மத்தேயு 15:30,31.

இயேசுவைக் குறித்த பேதுருவின் சாட்சியை நாம் இப்படியாக பரிசுத்த வேதாகமத்தில் வாசிக்கின்றோம், "நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார். தேவன் அவருடனே கூட இருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்கு கிறவராயும் சுற்றித்திரிந்தார். அப்போஸ்தலர் 10:38

<u>மூன்று காலக்கட்டங்களும், வார்த்தைகளின் மூன்று வெளிப்பாடுகளும்:-</u>

நமது சிந்தனை, ஆராய்தல், தியானம், விசுவாசம் ஆகிய அனைத்தும் நாம் பயன்படுத்துகின்ற நமது பரிசுத்த வேதாகம வார்த்தைகளை அடிப்படையாகக் கொண்டுதான் இருக்க வேண்டும். எழுதப்படாதவைகளையும், எழுதிக்கிடைக்கப் பெறாததையும், எழுதப்பட்டு நமக்குத் தரப்படாதவைகளையும்,

எழுதி விலக்கப்பட்டதையும் குறித்து நாம் குழப்பமடையக் கூடாது. இவ்விதமான நமது சிந்தனைக்கு வலுவூட்டும் கருத்துக்களை மட்டுமே கவனத்தில் கொள்ளலாம்.

நம்மை வழுவிப் போகச் செய்யும் எதற்கும் நாம் செவி சாய்க்கக் கூடாது. நமது பரிசுத்த வேதாகமம் அரிய பொக்கிஷம். அது தெய்வீக இரகசியத்தின் வெளிப்பாடு. அந்த இரகசியத்தில் சில நமக்குப் புரியவில்லை என்பதற்காக அவை பொய்யாகாது. பவுல் அப்போஸ்தலனுடைய வார்த்தைகளைக் குறித்து பேதுரு அப்போஸ்தலன் கூறுவதைப் பாருங்கள்....

".....அவன் சொன்னவைகளில் சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது. கல்லாதவர்களும் உறுதி இல்லாதவர்களும் மற்ற வேத வாக்கியங்களைப் புரட்டுகிறது போலத் தங்களுக்குக் கேடு வரத்தக்கதாக இவைகளையும் புரட்டுகிறார்கள்." 2 பேதுரு 3:15,16.

பவுல் கூறுவதைக் கவனியுங்கள் "வேறொரு சுவிசேஷம் இல்லையே. சிலர் உங்களைக் கலகப்படுத்தி கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல" கலாத்தியர் 1:17.

வேத வார்த்தைகளைக் கொண்டே நமது தியானம் இருக்க வேண்டும். ஏன் இதைத்திரும்பத் திரும்ப நினைவு படுத்துகிறேன் என்றால் அறிவுப் பெருகிப் போன இந்த காலத்தில் அநேக வேறுபட்ட கண்ணோட்டத்தினால் தான் நமக்குள்ளே பல சபைப் பிரிவினைகள் உடையவர்களாக இருக்கிறோம். ஒரே கிறிஸ்து எத்தனை கோணங்களில் பார்க்கப் படுகிறார்? மூலாதார பிரிவினைகள் என்பது வேறு, பிரிவுகளிலும் உட்பிரிவுகள் எத்தனை? ஆயினும் கிறிஸ்து ஒருவரே.

நமது ஆத்மார்த்த சிந்தனைக்காக இரண்டொரு வேத வசனங்களை நினைவு படுத்துவது சரியென்று தோன்றுகிறது. "பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டும்" (ரோமர் 16:17) என்று அந்த காலக் கட்டத்திலே பவுல் அப்போஸ்தவன் கூறுவது போல தற்காலத்திலே உபதேசங்கள் திசை மாறுகிறதோ என்று ஐயப்பட வேண்டியதுள்ளது.

எப்படியும் நமது சிந்தனை கிறிஸ்துவின் சுவிசேஷம் பற்றியதாகவே இருக்க வேண்டும். "சுவிசேஷம் மனுஷருடைய யோசனையின்படியானதல்லவென்று உங்களுக்குத் தெரிவிக்கிறேன். அவை மனுஷரால் பெற்றதுமில்லை. மனுஷனால் கற்றதுமில்லை" கலாத்தியர் 1:11,12.

மேலும் "ஆவியினாலே ஆரம்பம் பண்ணினவர்கள் இப்பொழுது மாம்சத்தினாலே முடிவுபெறப் போகக் கூடாது." கலாத்தியர் 3:3

இன்னும் இயேசு கடிந்து கொண்ட ஒரு வசனத்தைப் பாருங்கள்; மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்.

மத்தேயு 15:9

இப்போ இயேசு பேசின வார்த்தைகளின் காலத்தைக் குறித்துப் பார்ப்போம்.

30 முதல் 33 $^{1/2}$ வயது வரை

இயேசு தமது 30வது வயதில் ஞானஸ்நானம் பெற்றார், லூக்கா 3:21-23. அந்தவயதுவரை அவரது வாழ்க்கையில் நடைபெற்ற சம்பவங்களை நினைவு படுத்துவோம். அவர் பிறப்பு தவிர வேறு ஏதும் அதிகமாக எழுதப்பட வில்லை. "பிள்ளை வளர்ந்து ஆவியிலே பெலன் கொண்டு ஞானத்தினால் நிறைந்தது. தேவனுடைய கிருபையும் அவர்மேல் இருந்தது". லூக்கா 2:40

அவரது குழந்தைப் பருவத்தில் உலக அமைப்புப்படியாக அவர் பேசின எந்த ஒரு பேச்சும் நமக்குத் தரப்படவில்லை. அது அவசியப்படவு மில்லை என்றே நாம் அறிகிறோம்.

இயேசுவின் 12வது வயதில் பஸ்காபண்டிகை நாளில் எருசலேமுக்குச் சென்றார். அங்கு தேவாலயத்தில் போதகர் நடுவில் உட்கார்ந்து; பிதாவுக்கடுத்தவைகளைப் பேசுவதைக் கேட்கவும், அவர்களை வினாவவும் கண்டார்கள். அவர்பேசக் கேட்டயாவரும் அவருடைய புத்தியையும், அவர் சொன்ன மாறுத்தரங்களையுங் குறித்துப் பிரமித்தார்க்ள மேலும் தன்னைத் தேடின தாயினிடம் நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? என்பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்க வேண்டிய தென்று அறியீர்களா லூக்கா 2:46-50 என்றார். இவ்வளவு தான் அவர்

பேசினதாக் கூறப்பட்டுள்ளது. தாயாரிடம் அவர் என்ன பேசினார் என்று வாசிக்கிறோம். ஆனால் போதகரிடம் என்ன வினவினார் என்று ஏதும் எழுதப்படவில்லை.

இவற்றைப் பார்க்கும் போது, மற்ற இயேசுவின் வார்த்தைகள் எல்லாம் அவர் ஞானஸ்நானம் பெற்ற 30வது வயதிலிருந்து அவர் $33^{1/2}$ வயதில் அடைந்த மரணம் வரை பேசப்பட்டவைகளாகும் என்று அறிகிறோம். அது, அவர் தமது குடும்பத்தை விட்டுப்பிரிந்து, அதாவது பெற்றோர் சகோதர சகோதரிகளை விட்டுப்பிரிந்து, அவரது சீஷர்களுடனே வாழ்ந்த $3^{1/2}$ ஆண்டு காலமாகும்.

எனவே இயேசுவின் வார்த்தைகளை அவர் பேசின கால்ங்களைக் கருத்தில் கொண்டு மூன்று பிரிவுகளாகப் பகுத்துக் கொள்வோம். அப்படிப் பிரிக்க வேண்டு மென்பது கட்டாயமல்ல. ஆனால் நமது சிந்தனைக்கு அது நல்ல பலனைத் தரும். அவை

1. ஞானஸ்நானம் முதல் எருசலேமுக்குப் பவனியாகச் சென்ற நாள் வரை
2. பவனியின் நாள் முதல் சிலுவையில் அறையப்படும் வரை.
3. சிலுவையில் அறையப்பட்டது முதல் அவர் ஜீவன் விடும் வரை.

இப்படியாக மூன்று காலங்களாகப் பிரித்துக் கொள்வோம். இந்த மூன்று காலக்கட்டங்களிலும்; இயேசு தம்முடைய வார்த்தைகளைப் பயன்படுத்திய விதத்தையும், அதனுடைய நோக்கத்தையும் நாம் அறிய வேண்டும். அந்த வார்த்தைகளின் வெளிப்பாட்டில் நாம் கானும் வேறுபாடுகளையும் அறிவது நமக்கு சிறந்த அரணாக அமையும். அவைகள் தேவனுடைய சித்தத்தை நாம் பரிபூரணமாக தெரிந்து கொள்ள உதவும்.

காலப்பிரிவுகள்	தெய்வீக சிந்தனையுடன் கூடிய உபதேசங்கள்
1. ஞானஸ்நானம் முதல் எருசலேமுக்குப் பவனியாகச் சென்ற நாள்வரை ($3^{1/2}$ ஆண்டு காலம்)	பரவலாக இருந்தன. ஏராளம். தெய்வீக சிந்தனை, சமூக சீர்திருத்தம், மனிதநேயம் ஆகியன மிகுந்திருந்தன. மத்தேயு 5:1 மக்கள் கூடின இடங்களான மலையிலும், மத்தேயு 14:13,14 வனாந்தரத்திலும், மத்தேயு 13:54, யோவான் 8:2 } ஜெபஆலயத்திலும்
2. பவனியின் நாள்முதல் சிலுவையில் அறையப்படும் நேரம் வரை (கடைசி 5 நாட்கள்)	உபதேசங்கள் குறைவு. ஆனால் தெய்வீக சிந்தனை மிகுதி, அழுத்தமும் அதிகம். லூக்கா 19:41-44 எருசலேமைப் பார்த்து கண்ணீர்விட்டு அழுது பேசிய வார்த்தைகள்; மத்தேயு 21:12,13 தேவாலயத்தைக் கள்ளர் குகையாக்கினீர்கள் என கடிந்து கூறி சுத்திகரித்தார்; மத்தேயு 23:13-36, வேதபாரகர் பரிசேயரைப் பார்த்து ஏழு ஐயோக்கள்; லூக்கா 22:21,22 யூதாஸ் குறித்து ஐயோ.
3. சிலுவையில் அறையப்பட்டு ஜீவனை விடும் வரை (6 மணிநேரம் மட்டுமே)	உபதேசம் ஏதுமில்லை. ஆனால் ... தாம் உபதேசித்தபடி 1ம் 3ம் வசனங்கள் மூலம் நடந்துகாட்டி நமக்கு முன் மாதிரியானார். இந்த உலகத்துக்கே மாதிரியானார்.

பரலோக ராஜ்யத்தின் சுவிசேஷ பிரசங்கங்கள்	சகல வியாதி, நோய்களையும் குணமாக்கின அற்புதங்கள்
பரவாக இருந்தன மாற் 1:14 "தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷமே" பிரசங்கம். மத்தேயு 6:33 தேவனுடைய ராஜ்யத்தைத் தேடுதலே முன்னுரிமை லூக்கா 8:1 பட்டணங்களுக்கும் கிராமங்களுக்கும் சென்று பிரசங்கம் செய்தார்.	ஏராளமாய் இருந்தன. யோவான் 2:1-11 முதலாம் அற்புதம் கானா ஊர் கலியான வீட்டில் மத்தேயு 14:14. நோய் கொண்ட நலிவுற்ற மக்கள் மத்தியில் லூக்கா 9:14-7. தெய்வீகத் தன்மை வெளிப்படுத்தப்படும் விதமாக. யோவான் 11:25,44 மரித்தவனை உயிரோடே எழுப்பி அவரே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாய் இருப்பதை விசுவாசிக்கச் செய்தார்
மிகுந்திருந்தது மத்தேயு 25:1-30 உவமைகள் மூலம் ராஜ்ய சுவிசேஷ பிரசங்கம். மத்தேயு 22:1-14 கலியாண விருந்தைப் போன்றது. மத்தேயு 24:1-35 கடைசி கால வருகையின் அடையாளம். மத்தேயு 24:36-51 மனுஷ குமாரனின்(எதிர்பாராத)வருகை மத்தேயு 25:31-46 நியாய விசாரணைக் குறித்தது. மொத்தத்தில் அழுத்தமாகவும் ஆழமாகவும் பிரதான இடம் வகித்திருந்தது.	இரண்டே இரண்டு மட்டுமே. 1.மாற்கு 11:12-14; 20-24 அத்திமரத்தை இயேசு சபித்ததும்- அதுபட்டுப் போனது. 2.லூக்கா 22:49,51 வெட்டப்பட்ட வலது காதைத் தொட்டு சொஸ்தமாக்கினார். இவை இரண்டும் எச்சரிப்புக்காகவும், விசுவாசத்தின் அவசியத்தினிமித்தமாகவும் மாத்திரமே செய்யப்பட்டன.
சுவிசேஷ பிரசங்கம் எதுவு மில்லை. ஆனால்... 2-ம் வசனம் மறுமை குறித்தும் 4-ம் வசனம் நமக்காக மரணத்தை ருசித்தது 5-ம் வசனம் மறுமைக்கான ஆத்தும தாகம் 6-ம் வசனம் இரட்சிப்பின் வழியை வெற்றியாக முடிந்தது 7-ம் வசனம் மறுமைக்காக தன் ஜீவனை பிதாவிடம் ஒப்புவித்தல் பரலோக ராஜ்யத்துக்குள் பிரவேசிக்க ஒரு மாதிரியை செய்து முடித்தார்.	அற்புதங்கள் ஏதும் செய்யவில்லை.

அட்டவணையின் சுருக்கம்:-

முதலாவது காலக் கட்டம் என்று நாம் குறிப்பிடுகின்ற 3 1/2 ஆண்டுகளில் இயேசுவின் உபதேசங்கள் பரவலாகவும் அதிகமாகவும் இருந்திருக்கின்றன. அதேசமயம் ராஜ்யத்தின் சுவிசேஷம் அப்போதைக்கப்போது குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இயேசு செய்த அற்புதங்கள் சாதாரணமாகவும், ஏராளமாகவும் நடந்திருக்கின்றன.

இரண்டாவது காலக் கட்டமாகிய கடைசி வாரத்தில் உபதேசங்கள் எண்ணிக்கையில் குறைவாக இருந்திருக்கிறது. ஆனால் சிறப்பு என்னவென்றால் அழுத்தம் அதிகம் காணப்படுகிறது. அதே சமயத்தில் ராஜ்யத்தின் சுவிசேஷப் பிரசங்கங்கள் அதிக அளவில் பேசப் பட்டிருக்கின்றன. இயேசு உவமைகள் மூலம் விளக்கமாகப் பேசி மக்களிடம் வலியுறுத்தியிருக்கிறார். இந்த காலக் கட்டத்தில் மிகக் குறைந்த அளவில் இரண்டே இரண்டு அற்புதங்கள் மட்டுமே இயேசுவால் நிகழ்த்தப் பட்டன.

மூன்றாவது காலக் கட்டம் என்று நாம் பிரித்துக் கொண்ட சிலுவையில் தொங்கின அந்த நேரத்திலும் இயேசு பேசினார். ஆனால் உபதேசம் கொஞ்சமாகிலும் பேசப் படவில்லை. அதேபோல ராஜ்யத்தின் சுவிசேஷப் பிரசங்கமும் இல்லை. அற்புதங்களும் ஏதும் இயேசுவால் செய்யப் படவில்லை.

ஆனாலும் இயேசு சிலுவையில் பேசின ஏழு வசனங்கள் மாத்திரமே உண்டு. உபதேசமாகவும், பிரசங்கமாகவும், அற்புதத்தை நிகழ்த்துகிறதாகவும் இல்லாத அந்த ஏழு வசனங்களும் எந்த வெளிப்பாட்டைத் தெரிவிக்கின்றன? அதை நாம் எந்தத் தலைப்பின் கீழ் எடுத்துக் கொள்வது? அந்த ஏழு வசனங்களும் எவ்வித நோக்கும், பயனுமின்றி பேசப்பட்ட வார்த்தைகளா? அப்படிச் சொல்லக் கூடாதே!

அப்படியானால் அந்த ஏழுவசனங்களும் விசேஷித்த தன்மை வாய்ந்தவைகள் என்பதை முதலில் நாம் மனதில் கொள்ள வேண்டும். அது என்னவாக இருக்கும் என்று நாம் சிந்தித்தால்.... இயேசுவின் வாழ்நாட்களில் அவருடைய உபதேசங்கள் என்ன நோக்கத்தைக் கொண்டிருந்ததோ அதை நிறைவேற்றும் நீதியைச் சார்ந்தும், தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளாக இருந்த அவருடைய பிரசங்கங்களை

உள்ளடக்கியதுமான நிறைவான மானிடவாழ்வின் அனுபவத்தைப் பூரணமாக வெளிப்படுத்துவதாகவே அமைந்திருந்தது என்று எடுத்துக் கொள்வதில் தவறில்லையே. அந்த வசனங்கள் பேசப்பட்ட நேரத்தில் அவர் அற்புதங்கள் ஏதும் செய்யவில்லை. ஆனால் அந்நேரத்திலும் அவர் ஜீவனை விட்டபோதும் சிருஷ்டிகள் அற்புதங்களை வெளிப்படுத்தினவே.

எனவே நாம் ஏற்கனவே பட்டியலிட்டதில் குறிப்பிட்ட உபதேசங்களும், பிரசங்கங்களும், அற்புதங்களும் வேறொரு பார்வையிலும் நமக்கு சிலவற்றை வெளிப்படுத்துகின்றன.

இன்னும் தெளிவாக சொன்னால் 1ம் 3ம் வசனங்கள் உபதேசத்துக்கும், 2,4,5,6,7 வசனங்கள் பிரசங்கத்துக்கும் எடுத்துக்காட்டாகவும், அந்தகாரம், தேவாலய திரைச்சீலை மேலிருந்து கீழாக கிழிந்ததும், பூமி அதிர்ச்சியும், கன்மலை பிளந்ததும், கல்லறைகள் திறந்ததும், நித்திரை அடைந்த பரிசுத்தவான்களின் சரீரங்கள் அநேகம் எழுந்திருந்ததும் இயேசு செய்யாத வேறுயாராலும் செய்யமுடியாத அற்புதங்களாகவும் அமைந்திருந்தன என்பது எவ்வளவு மகிமையான சத்தியங்களாக உள்ளது என்பதை எண்ணி கர்த்தரை ஸ்தோத்திரிப்போமாக. மத்தேயு 27:45,50,51,52.

சிலுவை வசனங்கள் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு மாதிரியாக இருக்கும் படியாக இயேசுவே தம்மை நமக்கு முன் நிறுத்துகிறார். அவருடைய எல்லா வார்த்தைகளும் நேரிடையாகவோ மறைமுகமாகவோ பரலோக ராஜ்யம் என்ற இலக்கை நோக்கியே பயணப்பட்டு நிறைவு செய்கிறது.

"யோவான் ஸ்நானகன் காலம் முதல் இதுவரைக்கும் பரலோக ராஜ்யம் பலவந்தம் பண்ணப்படுகிறது. பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக் கொள்ளுகிறார்கள்."

மத்தேயு 11:12

கிறிஸ்தவர்களுக்கான புதிய காலம்:-

ஒரு கோணத்தில் பார்த்தால் இயேசுவை கிறிஸ்தவர்கள் மாத்திரமல்ல இந்த உலகமே ஏற்றுக் கொண்டு அவரைப் பெருமை படுத்தியுள்ளது. இயேசு இந்த பூமியில் வாழ்ந்த காலத்தை ஒரு மைல் கல்லாக வைத்து அவருக்கு முன் உள்ள

காலத்தை கிறிஸ்துவுக்கு முன் (கி.மு) என்றும் அவர் காலத்துக்குப் பின் உள்ள வருடங்களை கிறிஸ்துவுக்குப் பின் (கி.பி) என்றும் கணக்கிடுவதை நாம் நன்றாக அறிவோம். அதே போல கர்த்தருடைய பிள்ளைகளின் தலைமுறை கால பரிமாணத்திலும் இயேசு ஒரு மைல் கல்லாகக் காணப்படுகிறார்.

ஆதிமனிதர்களாகிய ஆதாமும் ஏவாளும் பாவம் செய்தபின் ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றப் பட்டபின் மனுக்குலத்தின் ஆரம்ப நாட்களை மனச்சாட்சியின் காலம் என்று கூறுகிறோம். அது மோசேயின் காலம் வரை தொடர்கிறது அதன்பின் சீனாய் மலையிலிருந்து மோசேயின் மூலம் நியாயப் பிரமாணத்தைத் தேவன் கொடுத்தார். அந்நாட்களிலிருந்து அந்த காலத்தை நியாயப் பிரமாண காலம் என்று வகைப்படுத்துகிறோம். யாத்திராகமம் 24:12.

இயேசு கிறிஸ்து வாழ்ந்தது நியாயப்பிரமாண காலம் என்பதை சற்று நினைவில் கொள்ளுவோம், ஆனால் இயேசு கிறிஸ்துவின் மரணத்துக்குப் பின் தற்காலம் வரை முந்தைய காலப் பெயர் மாற்றப்பட்டு கிருபையின் காலம் என பெயர் பெற்றுள்ளது.

இந்த பெயர்மாற்றம் பெறுவதினால் நியாயப்பிரமாணம் புறக்கணிக்கப்படவில்லை. அலட்சியப்படுத்தப்படவுமில்லை. இயேசுவினால் முழுமையாக நிறைவேற்றப்பட்டது. "விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாக கிறிஸ்து நியாயப் பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்" ரோமர் 10:4

நியாயப் பிரமாணத்தையானாலும் தீர்க்க தரிசனங்களை யானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக் கொள்ளாதேயுங்கள். அழிக்கிறதற்கு அல்ல நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்" மத்தேயு 5:17.

நிறைவேற்றப்பட்ட தேவ நீதி நமக்குக் கிடைத்ததேயானால் நாம் தண்டனைக்குத் தப்புவிக்கப் படுகிறோம். இரட்சிக்கப்பட்டோம் என்று பொருள், அது விசுவாசத்தினாலே கிடைக்கிறதென்றால் தேவனுடைய் கிருபையே.

"கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப் பட்டீர்கள் இது உங்களால் உண்டானதல்ல. இது தேவனுடைய

ஈவு." எபேசியர் 2:8 எனவே இயேசு கிறிஸ்துவின் காலத்துக்குப்பின் (கி.பி) கிருபையின் காலம்.

புதிய காலத்தில் கிறிஸ்தவத்தில் உண்டான மாற்றங்கள்:-

கிருபையின் காலம் என்று சொல்லப்படுகின்ற இந்த புதிய காலத்தின் ஆரம்பத்திலிருந்து உண்டான மாற்றங்கள் ஏராளம். இங்கே சிலவற்றைக் குறிப்பிடுவோம். முதலாவது இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொண்டவர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்ற பெயர் வழங்கப்பட்டது. "முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று. அப்போஸ்தலர் 11:26

பரிசுத்த ஆவியினால் சிமியோன் என்று பேருடைய ஒரு மனுஷனின் கூற்றைக் கவனியுங்கள் "புற ஜாதிகளுக்குப் (நமக்கு) பிரகாசிக்கிற ஒளியாக தேவன் ஆயத்தம் பண்ணின இரட்சணியம்" (லூக்கா 2:30,31,32) என்று சாட்சி கொடுக்கிறார். அப்படியே "புறஜாதிகளுக்கு விசுவாசத்தின் கதவை திறந்ததையும்" பவுலும் பர்னபாவும் கண்டார்கள்; அப்போஸ்தலர் 14:27. மேலும் "தேவனுடைய இரட்சிப்பு புறஜாதியாருக்கு (நமக்கு) அனுப்பப் பட்டிருக்கிறதென்று உங்களுக்குத் தெரிந்திருக்கக் கடவது" (அப்போஸ்தலர் 28:28) என்று வாசிக்கிறோம்.

மேலும் இயேசுவை ஏற்றுக் கொண்டவர்கள் அவருடைய பிள்ளைகளாகிறார்கள் என்பது மட்டுமல்லாமல் "நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே. தேவனுடைய சுதந்தரரும் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே" ரோமர் 8:17; ".....நம்மை இயேசு கிறிஸ்து மூலமாய் தமக்கு சுவிகார புத்திரராகும்படி முன் குறித்திருக்கிறார்."எபேசியர் 1:6.

இப்படிப்பட்ட மகிமையான ஆசீர்வாதங்கள் இயேசு கிறிஸ்துவினால் நமக்குக் கிடைத்திருக்கின்றன. அவருடைய காலத்துக்குப் பின் இன்னும் ஏராளமான மாற்றங்கள் கிறிஸ்தவர்கள் மத்தியிலே ஏற்பட்டுள்ளன. "ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்து போயின எல்லாம் புதிதாயின" 2 கொரிந்தியர் 5:17

மேற்கண்ட வசனத்தின் கருத்தை நிதானத்தோடே சிந்தித்தால் ஏராளமான பொருள் விளங்கும். ஒரு மனுஷனின் ஆவி, ஆத்துமா, சரீரம் இவை யாவும் புதிதாகும். அதே போல கிறிஸ்தவத்திலும் எல்லாம் புதிதாயின. பழையவைகள் ஒழிந்து போயின.

இயேசுவின் நாமத்தினாலே நாம் எதைக் கேட்டாலும் அதை அவர் நமக்குச் செய்கிறார். யோவான் 14:13,14. ஒரு இடத்திலல்ல, உலகமெங்கும் தேவனை தொழுது கொண்டு ஆராதிக்க அங்கீகாரம் கிடைத்திருக்கிறது. "இந்த எருசலேமிலும் மாத்திரமல்ல எங்கும் பிதாவைத் தொழுது கொள்ளும் காலம் வருகிறது." யோவான் 4:21. மேலும் திரித்துவ தேவனாகத் தொழுது கொள்ளப் படுகிறார்.

ஆராதிக்கும் முறை அடியோடு மாற்றப்பட்டுள்ளது பலிகள் நீக்கப்பட்டுவிட்டன. ஆசாரிய ஊழியத்தின் தன்மைகள் வேறுபாடுகள் உடையதாயின. விருத்தசேதனம் நிறுத்தப்பட்டது. சபைகளின் மத்தியிலே ஞானஸ்நானம், திடப்படுத்தல், திருவிருந்து போன்ற சாக்கிரமெந்துகள் திட்டம் பண்ணப்பட்டன.

எல்லாவற்றுக்கும் மேலாக "இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் உங்களுடனே கூட நான் இருக்கிறேன். மத்தேயு 28:20. என்ற வசனத்தின் படியே இயேசுவின் நாமத்தினாலே தூய ஆவியானவர் தம்முடைய பிள்ளைகளோடு வாசஞ் செய்வதும், ஆவியின் வரங்களை அருளிச் செய்வதும் விசேஷித்த கிருபையே. இவ்வாறாக ஏராளமான மாற்றங்கள் இயேசுவின் காலத்துக்குப் பின் நமக்கு அருளப்பட்டிருக்கிறது.

<u>இயேசுவின் புதிய கட்டளை- புதிய கற்பனை:-</u>

கார்த்தருடைய பிள்ளைகளின் வாழ்வியலிலும், உரிமையிலும், ஐக்கியத்திலும், தேவனுடைய பிரசன்னத்திலும் மிகப் பெரிய மாற்றத்தை இயேசுவானவர் உருவாக்கித்தந்தார். அந்த இயேசுவானவர் நமக்கென்று கட்டளையையும், தமது கற்பனையையும் புதிதாக உருமாற்றம் செய்து தந்தார். இந்த கட்டளைகளும் கற்பனையும் முந்தைய நியாயப் பிரமாண கட்டளைகளையும் கற்பனைகளையும் மீறாமல் நிறைவேற்றினது மட்டுமல்ல அவற்றை உள்ளடக்கிப் புதிதாகத் தந்திருக்கிறார்.

தேவனிடத்திலும் பிறனிடத்திலும் பரிபூரணமாக அன்பு கூருவதில் நியாயப்பிரமாணங்கள் முழுமையும் தீர்க்க தரிசனங்களும் அடங்கியிருக்கிறதென்று இயேசு கூறினார். இது ஒரு வகையான சரியான உபதேசமே மத்தேயு 22:35-40. ஆனால் பெரும்பான்மையான இன்றைய கிறிஸ்தவர்களின் மனோபாவமும் செயலும் எப்படி இருக்கிறது? நம்முடைய இன்றைய நடைமுறையில் தேவனிடத்தில் அன்பு கூருவதாக எண்ணி நம்மை நாமே திருப்தி படுத்திக் கொள்ளுகிறோம். அதேநேரத்தில் பிறரிடத்தில் அன்பு கூருவதைக் குறித்து சிந்தித்துக் கூடப் பார்ப்பதில்லை. அதைப் புறந்தள்ளி விடுகிறோம். இயேசுவின் உபதேசம் அவ்விதமான பிரதான கற்பனையாக தேவனிடத்திலும் பிறனிடத்திலும் அன்புகூர வேண்டும் என்று சொல்வதை மனதில் கொள்வதில்லை.

இன்னும் அநேக கட்டளைகளையும் விதிமுறைகளையும் இயேசு குறிப்பிட்டு இப்போ "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று முக்கிய சத்தியங்களை வலியுறுத்தி சொன்னவற்றை நாம் மத்தேயு 5:22,28,32,34,39,44 ஆகிய வசனங்களில் வாசிக்கிறோம். அவை புதிய உபதேசங்கள். அந்த புதிய சத்தியங்களை நாம் மிகச் சிறந்தவை என ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அவைகளால் தேவனுடைய கற்பனைகளும் கட்டளைகளும் மீறப்படவில்லை என்றும் நாம் விசுவாசிக்கிறோம்.

மேற்கூறிய அந்தக் கருத்தின்படி இயேசு நமக்கு புதியதொரு கட்டளையைத் தந்திருக்கிறார். "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள். நான் உங்களில் அன்பாய் இருந்தது போல நீங்களும் ஒருவரில் ஒருவர் அன்பாயிருங்கள் என்ற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்" யோவான் 13:34.

இன்னும் சற்றுக் கூடுதலாக "நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே என்னுடைய கற்பனை யாயிருக்கிறது." யோவான் 15:12 என்று வாசிக்கிறோம். இயேசு கட்டளையாகக் கூறியதை அவருடைய கற்பனையாக்கி அதிலும் "என்னுடைய கற்பனையாயிருக்கிறது" என்று ஓர் அழுத்தம் கொடுக்கிறதைப் பார்க்கிறோம்.

இந்த புதிய கற்பனை மிகுந்த பலனைத் தருகிறது. "நியாயப்பிரமாணமானது ஒன்றையும் பூரணப்படுத்தவில்லை. அதிக நன்மையான நம்பிக்கையை வருவிப்பதோ பூரணப்படுத்துகிறது. அந்த நம்பிக்கையினாலே தேவனிடத்தில் சேருகிறோம். இப்படிப்பட்ட வசனத்தை எபிரெயர் 7:19ல் நாம் காண்கிறோம். "முந்தின கட்டளை பெலவீனமுள்ளதும், பயனற்றதுமாயிருந்ததினிமித்தம் மாற்றப்பட்டது" எபிரெயர் 7:18;8:7.

இயேசுவின் புதிய உடன்படிக்கை:-

நமது தேவனாகிய கர்த்தர் முற்பிதாக்களாகிய ஆபிரகாம்,ஈசாக்கு,யாக்கோபு என்பவர்களுடன் உடன்படிக்கை செய்தார். லேவியராகமம் 26:42. அது ஆரம்ப காலவாக்கு

பின்பு தேவன் மோசேயை சீனாய் மலைக்கு வரவழைத்து அவனோடும் இஸ்ரேவேலரோடும் வார்த்தைகளின்படியே உடன்படிக்கைப் பண்ணினார். யாத்திராகம் 34:27 அந்த உடன்படிக்கை தேவன் பேசிச் சொன்ன வார்த்தைகள். அந்த வார்த்தைகள் கற்பலகைகளாகிய சாட்சியின் இரண்டு பலகைகளிலே தேவனுடைய விரலினாலே எழுதப்பட்டு மோசேயினிடத்தில் கொடுக்கப்பட்டவை.

கற்பனைகளைப் பெற்றுக் கொண்ட மோசே மலையிலிருந்து இறங்கின போது எடுத்த எடுப்பிலேயே ஜனங்கள் முதலாம் கற்பனையை மீறினதைக் கண்டான். அப்போது கோபம் மூண்டவனாகி அந்தப் பலகைகளை மலையின் அடியிலே எறிந்து உடைத்துப் போட்டான். எனவே கர்த்தர் மீண்டும் சொல்ல மோசே பத்து கற்பனைகளாகிய உடன்படிக்கையின் வார்த்தைகளை பலகைகளின் எழுதினான். யாத்திராகமம் 20:1; 31:18 32:19, 34:28.

தேவன் தம்மில் அன்பு கூர்ந்து தமதுகற்பனைகளை கைக் கொள்ளுகிறவர்களுக்கு அவர் ஆயிரம் தலைமுறைமட்டும் உடன்படிக்கையையும் தயவையும் காக்கிற உண்மையுள்ள தேவன். உபாகமம்7:9.

இப்படிப்பட்டதான வேதவசனங்களும் சத்தியங்களும் இருக்கும் போது இயேசு புதிய கட்டளைகளையும், அவற்றைத்

தமது கற்பனையாகவும் கூறுகிறார். இயேசு கிறிஸ்து நியாயப் பிரமாணத்தின் முடிவாக இருப்பதினால் அவருடைய கற்பனைகள் சத்தியத்தின்படிதான் உள்ளன என்பதை நாம் முழுமையாக ஏற்றுக் கொள்ளத்தக்கதேயாகும்.

இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு முந்தைய நாள் இரவில் தமது சீஷர்களுடன் பந்தி இருக்கையில்..... "போஜனம் பண்ணின பின்பு அவர் அந்தப் படியே பாத்திரத்தையும் கொடுத்து இந்தப் பாத்திரம் உங்களுக்காக சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது" (லூக்கா 22:20) என்று கூறியதை வாசிக்கிறோம்.

சுருங்கச் சொன்னால் கட்டளைகளையும் கற்பனைகளையும் உள்ளடக்கிய நியாயப் பிரமாணங்களோடு கூடிய முந்தைய உடன்படிக்கையின் நோக்கத்தை பூராணமாக நிறைவேற்ற ஏற்படுத்தப்பட்டதே புதிய உடன்படிக்கையாகும். முந்தையது புறக்கணிக்கப்பட்டு அல்ல என்பதை மீண்டும் நினைவுபடுத்திக் கொள்வோம்.

இயேசுவினால் உண்டாகும் புதிய உடன்படிக்கையை பிதாவாகிய தேவனும் ஏற்றுக் கொள்ள வேண்டும் அல்லவா? அவர் ஏற்றுக் கொண்டார். அதன் வழிமுறையைத் தான் இயேசு தமது இராப்போஜன விருந்தில் குறிப்பிட்டுக் கூறினார். "இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்று விளம்புகை செய்தார்.

இந்த நேரத்தில் ஒரு நடைமுறை செயல்பாட்டை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகிறேன். நமது இந்தியா ஒரு ஜனநாயக நாடாகும். இங்கு ஒரு சட்டமோ, சட்டதிருத்தமோ கொண்டு வரப்பட வேண்டுமென்றால் முதலில் பாரளுமன்றத்தில் அதனை தாக்கல் செய்ய வேண்டும். அப்போது அதன் பெயர் மசோதா ஆகும். அந்த மசோதா விவாதிக்கப்பட்டு பாராளுமன்றத்திலும் ராஜ்யசபையிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அது குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பப்படும். அவர் அதை ஏற்றுக் கொண்டு கையொப்பமிட வேண்டும். அதன்பிறகே அது சட்டமாகும். அந்தச்சட்டத்தை அரசும் மக்களும் கடைப்பிடித்து நடக்கத் தக்கதாக அதன்பின் பிரகடனப்படுத்துவார்கள். அது மக்களுக்கான உடன் படிக்கையாகப் பாவிக்கப்படுகிறது

அதன்பின் அமுலுக்கு வந்த அந்த சட்டத்தை- உடன்படிக்கையை மக்கள் மீறுவது கூடாது. மீறுவது குற்றமாகும். மீறுபவர்கள் குறிப்பிடப்பட்ட தண்டனைக்குரியவர் ஆவார்கள்.

இதே போல இயேசுவின் உபதேசங்களும், பிரசங்கங்களும், கட்டளைகளும், கற்பனைகளும் மசோதாவாக அவருடைய பூலோக வாழ்வின் நாட்களில் மக்களின் மத்தியில் சொல்லப்பட்டன. அவை ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்டமாக இயேசுவானவர் பிதா முன் சமர்ப்பிக்கிறார். அதைப் பிதாவாகிய தேவன் அங்கீகரித்து உறுதி செய்கிறார். உறுதி செய்யப்பட்ட சட்டம் பிரகடனப் படுத்தப்படுகிறது. பிரகடனப்படுத்தப்பட்ட அது தேவனுக்கும் மனுஷர்களுக்கும் இடையேயான உடன்படிக்கையாகிறது. அது புதிய உடன்படிக்கையாயிருக்கிறது.

இத்தனைக்கும் மூலகாரணமானவர் இயேசுவே. புதிய கட்டளை மற்றும் கற்பனைகளைச் சொன்னவர் இயேசு. அதை நிறைவேற்றிக்காட்டியவரும் இயேசுவே. அதை உடன்படிக்கையாக்குவதற்கு பிதாவின் முன் கொண்டு சென்றவர் இயேசு. கொண்டு சென்ற நேரம் அவரின் சிலுவை மரணம். அதற்கு அச்சாரம் சிந்தப்பட்ட இயேசுவின் இரத்தம். உடன்படிக்கையாகப் பிரகடனப் படுத்தியது அவருடைய உயிர்த்தெழுதலே.

இவ்வாறாக அனைத்தும் அவரோலே அவருக்குள்ளும் நிறைவேறியதால் இயேசுவே தேவனுக்கும் மனுஷருக்கும் இடையேயான உடன்படிக்கைக்கு மத்தியஸ்தராக இருக்கிறார். அது இயேசுவின் இரத்தத்தை அச்சாரமாகக் கொண்டதினாலே புதிய உடன்படிக்கையானது.

"தேவன் ஒருவரே தேவனுக்கும் மனுஷருக்கும் மத்யஸ்தரும் ஒருவரே" 1தீமோத்தேயு 2:5

"இவரோ (இயேசு) விசேஷித்தத் தங்களின் பேரில் ஸ்தாபிக்கப்பட்ட விசேஷித்த உடன்படிக்கைக்கு எப்படி மத்தியஸ்தராயிருக்கிறாரோ......." எபிரெயர் 8:6.

"முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவிர்த்தி செய்யும் பொருட்டு அவர்(இயேசு) மரணமடைந்து.... புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார்" எபிரெயர் 9:15.

"புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும். இரத்தத்தினிடத்திற்கும்வந்துசேர்ந்தீர்கள்" எபிரெயர் 12:24

இவ்வித வேத வசனங்கள் மூலமாக இயேசுவும் அவருடைய இரத்தமும் முக்கிய இடத்தையும், மேன்மையையும் அதிகாரத்தையும் பெறுகிறதை நாம் அறிகிறோம். அதன்படி "இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்தகரிக்கும்" 1.யோவன் 1:7

மேலும் பேதுரு அப்போஸ்தலன் "இயேசு கிறிஸ்துவின் இரத்தந் தெளிக்கப்படுதலுக்கும் தெரிந்து கொள்ளப் பட்டவர்களுக்கும் எழுதுகிறதாவது; உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்தும இரட்சிப்பை அடைகிறீர்கள்" (1பேதுரு 1:2,9.) என்று கூறுகிறதை வாசிக்கிறோம்.

இந்த உலகத்திலிருக்கும் போது இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து இரட்சிக்கப் பட்டு தேவனுடைய பிள்ளைகளான ஜனக்கூட்டம் பரலோகத்தில் இருக்கக் கண்ட யோவான் "இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்" (வெளிப்படுத்தல்7:14) என்று தெரிவிப்பதைப் பார்க்கிறோம்.

இந்த உடன்படிக்கையின் படிக்கட்டுகளைப் பாருங்கள். மனச்சாட்சியின் காலத்தில் ஒரு பகுதியாக முற்பிதாக்களோடு கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தை உடன்படிக்கையாக்கினார். அதன் பிறகு நியாயப்பிரமாண காலத்தில் கற்பனைகளையும் கட்டளைகளையும் உள்ளடக்கி மோசே மூலமாகக் கொடுத்த நியாயப் பிரமாணங்களை உடன்படிக்கையாக்கினார். கிருபையின் காலத்தில் "இயேசுவின் வார்த்தைகள்" மூலமாக அவருடைய இரத்தத்தினாலாகிய - அதுவும் சிந்தப்பட்ட இரத்தத்தினாலாகிய புதிய உடன் படிக்கை உண்டானது. இது தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்ற தற்காலமாகும்.

புதிய உடன்படிக்கை நிறைவேறின விதம்.

இப்போது இந்த புதிய உடன்படிக்கை நிறைவேறின இரகசியத்தை மீண்டும் தியானிப்போம். இயேசு தந்த புதிய கட்டளை "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்" அதுவே

அவருடைய கற்பனையானது எனக் குறிப்பிட்டோம். நாம் ஒருவரிலொருவர் அன்புகூரும் போது அதன் அளவு எப்படி இருக்க வேண்டுமென்று இயேசுவே விபரமாகக் கூறுகிறார். அதை நாம சரியாகப் புரிந்து கொள்வதில்லை. அல்லது முக்கியமானதாக எண்ணுவதில்லை.

"நான் உங்களில் அன்பாயிருந்தது போல..." இயேசு இப்படியாக அளவிட்டுக் கூறுகிறார்.

தேவனும் நம்மிடம் அன்பு கூர்ந்தார். தேவன் நம்மிடம் அன்பு கூர்ந்து தம்முடைய குமாரனாகிய இயேசுவை நமக்காகத் தந்தார். "தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்" யோவன் 3:16.

இயேசுவும் நம்மிடம் அன்பு கூர்ந்தார். இயேசு நம்மிடம் அன்பு கூர்ந்து நமக்காக தம்முடைய ஜீவனைக் கொடுத்தார் "இயேசு நானே நல்ல மேய்ப்பன். நல்ல மேய்ப்பன் தன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்" யோவான் 10:11; ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன்." யோவான் 10:15. "தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை" யோவான் 15:13.

இவ்வாறாக உள்ள பல வசனங்களை நாம் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது இயேசு இராப்போஜனத்தின் போது திராட்சரசத்தைக் குறித்து "உங்களுக்காக சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக் கையாயிருக்கிறது" என்று சொன்ன வார்த்தைகள் நினைவுக்கு வருகிறது. அதன்படியே சிந்தப்பட்ட இரத்தத்தினாலேயே அவரது மரணம் நிகழ்ந்தது. நல்ல மேய்ப்பனாக ஆடுகளாகிய நமக்காக தமது ஜீவனைக் கொடுத்தார்.

புதிய உடன்படிக்கையின் ஆரம்பநேரம்.

புதிய உடன்படிக்கை சிந்தப் படுகிற இயேசுவினுடைய இரத்தத்தினால் உண்டாகிறது என்பதினால் இரத்தஞ்சிந்துதலுக்குப் பின்புதான் அது உயிர் பெறும் அதாவது அப்படிப்பட்ட மரனத்துக்கு பின்புதான் அது உயிர்பெற்று ஏற்றுக் கொள்ளப்படும்.

இந்த புதிய உடன்படிக்கையை ஏற்படுத்துகிற காரியத்திலும் நியாயப் பிரமாணம் மீறப்படவில்லை. தமது இரத்தத்தை அதற்குக் காரணியான அச்சாரமாக்கினதினால் அது உறுதிப்படுத்தப் படுதிறது. எப்படியென்றால் "நியாயப்பிரமாணத்தின் படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும் இரத்தஞ் சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது" எபிரெயர் 9:22.

மேற் கூறப்பட்ட வசனத்தில் ஒரு உண்மையை எண்ணிப் பார்த்தீர்களா? "கொஞ்சம் குறைய எல்லாம்" என்று ஏன் கூறப்பட்டது.? நியாயப்பிரமாணத்தின்படி காளை, கடா போன்றவை பலியிடப்பட்டது. இரத்தஞ்சிந்தப்பட்டது. எடுத்துக்காட்டாக லேவியராகமம் 9:2-4 வசனங்களில் வாசிக்கிறோம். அவைகள் மிருக ஜீவன்களின் இரத்தம். அவை ஏற்றக்காலத்தில் சிந்தப்படப்போகிற இயேசுவின் இரத்தத்திற்கு முன்பாக, அடையாளமாக, நிழலாட்டமாக் கொடுக்கப்பட்ட தற்காலிக ஒழுங்கேயாகும். மேலும் குறிப்பிட்ட பாவத்துக்காகவும், குறிப்பிடும் குடும்பத்துக்காகவும் அல்லது நபருக்காகவும், குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் செலுத்தப்பட்டவை முந்தைய பலியாகும். எனவே அவை கொஞ்சம் குறைவான பயனையேத் தந்தது. குறைந்த பெலனுடையது தான் என்று குறிப்பிட்டது சரியே.

ஆனால் இயேசுவினுடைய இரத்தம் தேவகுமாரனுடைய இரத்தம். பாவத்தில் கர்ப்பந்தரிக்கப் படாமல், பரிசுத்த ஆவியினால் கழுவப்பட்ட கன்னிகையினிடத்திலே **"பரிசுத்தம்"** என்று பெயர் பெற்ற இயேசுவின் ரத்தம். அது பரிசுத்த இரத்தமாகும். எனவே அது முழுமையாக சுத்திகரிக்கக் கூடியதாகும். அது மட்டுமல்ல ஒருவரின் பாவத்துக்காக மட்டும் அல்ல இயேசு உலகத்தின் முழுபாவத்தையும் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக் குட்டி கிருபையின் காலம் வரை நிலைத்திருக்கும் சுத்திகர்ப்பு. அது சகலருக்கும் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்க வல்லது ஆகும். யோவான் 1:29;

இப்படிப்பட்ட வல்லமையான உடன்படிக்கை இயேசுவின் இரத்தம் சிந்தப்படும்போது ஆரம்பமாகிறது.

சிலுவையின் ஏழு வசனங்களின் சிறப்புகள்.

இயேசு இரத்தஞ்சிந்தி சிலுவையில் மரிக்கப் போகும் நேரம் புதிய உடன்படிக்கை அரங்கேறுகிற நேரம். அது தான் கிருபையின்

கால ஆரம்ப நேரமாகும். அந்த நேரத்தில் இயேசு சிலுவையிலிருந்து ஏழு வசனங்களைப் பேசினார்.

அவர் நமக்கும் தேவனுக்கும் இடையில் மத்தியஸ்தரானார் என்பதற்கு ஏற்ப அந்த ஏழு வசனங்களையும் பேசின நேரத்தில் இயேசுவின் சரீரம் தரையிலும்(பூமியிலும்) இல்லாமல் பரலோகத்திலும் இல்லாமல் இரண்டுக்கும் இடையில் (மத்தியில்) தொங்கிக் கொண்டிருந்தது. அப்போது அவ்விடத்தில் நாட்டப்பட்ட மூன்று சிலுவைகளில் இயேசுவின் சிலுவை நடுவில் (மத்தியில்) இருந்தது. இன்னும் சொல்லப் போனால் பாதாளத்தில் ஆதிசுக்குச் சென்ற ஒருகள்ளனுக்கும் பரதீசுக்குச் சென்ற இன்னொரு கள்ளனுக்கும் இடையில் (மத்தியில்) இயேசு தொங்கிக் கொண்டிருந்தார்.

இயேசு சிலுவையில் பேசின ஏழுவசனங்களும் புதிய உடன்படிக்கையின் மையக் கருத்தாக இருந்தன. அவை இரட்சிப்புக்கடுத்த ஏழுபடிகளாகும். அதன்படியே உபதேசித்து வந்த இயேசு, நமக்கு மாதிரியாக நிறைவேற்றியும் காட்டினார். அவைகள் ஜீவ வார்த்தைகளாகும். அவருடைய சகல உபதேசங்கள் மற்றும் பிரசங்கங்களின் இறுதி தொகுப்பாகும்.

அந்த வசனங்களினால் நாம் போதிக்கப்பட்டு, அவர் காட்டிய மாதிரியின் படி நாம் வாழ்ந்து, நமது வாழ்க்கையை நிறைவு செய்தால் நித்திய ஜீவனை பெறுவோம் என்பதற்குச் சந்தேகமே இல்லை. எனவே அவைகள் நித்திய ஜீவ வசனங்கள் ஆகும்.

பழைய ஏற்பாட்டில் கற்பனைகளும் கட்டளைகள் அடங்கிய நியாயப் பிரமாணங்களும் முக்கிய இடத்தைப் பிடிக்கின்றன. அதைப் போல புதிய ஏற்பாட்டில் இயேசுவின் சிலுவை வசனங்கள் முழும் முக்கிய இடத்தைப் பிடிக்கின்றன என்பது சரியானதென்று ஏற்றுக் கொள்வதில் தவறில்லை.

பரிசுத்த வேதாகமத்தில் ஏழு என்ற எண்ணிக்கையில் அமையப் பெற்ற நிகழ்வுகளில் பல முக்கியமான இடத்தைப் பிடித்துள்ளன. அவற்றுள் இந்த ஏழுவசனங்களும் நமக்கு வெளிப்படையான கருத்துப் படியும் ஆவிக்குரிய சிந்தனைப்படியும் முழுமையான நற்பயனைத் தருபவைகளேயாகும்.

ஏழுவசனங்கள் பேசின நேரம்:-

இயேசு சிலுவையில் சொன்ன வசனங்கள் ஏழும் சாதாரண நிலையில் பேசப்பட்டவைகளாக அல்ல. ஆகக் கூடின சரீர வேதனைகளை அடைந்து அனுபவித்துக் கொண்டிருந்த நேரம். பொதுவாக இப்படிப் பட்ட நேரத்தில் வேதனையினால் கதறுவதும், பிறரையும் உலகத்தையும் வெறுத்து சபிப்பதையுமே நாம் எதிர்பார்க்க முடியும். ஆனால் அப்படிப் பட்ட வேளையிலும் வீண்வார்த்தைகளாக ஏதும் பேசப்படவில்லை. மிகச் சுருக்கமாக ஆழ்ந்த கருத்துக்களுடன் ஒவ்வொன்றும் மிகத் தெளிவுடன் பேசின வசனங்களாகும்.

இன்னும் சொல்லப்போனால் வாழ்க்கையின் கடைசி நேரத்தில் - மரண போராட்டத்தில் -தன்னுடைய ஜீவன் போகும் தருணத்தில் பேசினவைகளாகும், இப்படிப்பட்ட நேரத்தில் ஒருவருடைய இருதயம் எந்த எண்ணத்தினால் நிறைந்திருக்குமோ அதனுடைய வெளிப்பாடாகவே அவருடைய வார்த்தைகள் அமைந்திருக்கும். இயேசுவின் வார்த்தைகள் எல்லாம் அவர் இந்த பூலோகத்துக்கு வந்த நோக்கத்துக்கு எதிராகவோ அவருடைய போதனைகளுக்கு மாறாகவோ இருக்கவில்லை. எல்லாமே மனுக்குல மீட்பு, பரலோக ராஜ்யம் அவற்றை அடையும் வழி இவற்றைக் குறித்த ஏக்கமும் நோக்கமுமாகவே இருந்தது சிலுவை வசனங்களும் அவற்றை வெளிப்படுத்துவதாகவே இருந்தது.

சபைகளில் ஏழுவசனங்களின் வெளிப்பாடுகள்:-

இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கையில் அவருடைய உபதேசங்களும் பிரசங்கங்களும் ஏராளமானவை. அவைகளில் இந்த ஏழு வசனங்களும் மிக மிக முக்கியமானவைகள் என்று பரிசுத்தவான்களும், வேத பண்டிதர்களுமாகிய நமது முன்னோர்கள் கருதியுள்ளார்கள். அதனாலேயே இயேசுவின் மற்ற எந்த வார்த்தைகளையும் விட இந்த ஏழுவசனங்களையும் தனியாக தியானிப்பதற்கான விசேஷித்த நாளை தீர்மானித்து தந்திருக்கிறார்கள்.

அந்த நாள் புனித வெள்ளியென்றும், பெரிய வெள்ளி யென்றும் பெயர் பெறுகிறது. அந்த நாள் இயேசுவின் சிலுவை

மரணத்தினால் முக்கியத்துவம் பெறுகிறது. அந்நாளில் இயேசு கிறிஸ்துவின் மரணத்தை நினைவு கூருவதுடன் இயேசுவின் சிலுவை வசனங்கள் மட்டும் தியானத்துக்கு எடுத்துக் கொள்ளப் படுவதால் அந்நாளின் மகத்துவம் மேலானதாகிறது.

இன்னொரு வித்தியாசமான சிறப்பு அந்த நாளுக்கு உண்டு. கிறிஸ்தவர்களுக்காகத் தீர்மானிக்கப் பட்ட எல்லா திரு நாட்களும் குறிப்பிட்ட தேதிகளில் அனுசரிக்கப்பட்டு வருகின்றன. அவைகள் கிழமைகள் மாறி வரும். ஆனால் லெந்து காலத்தைச் சார்ந்தவை மட்டும் தேதி மாறிவருகின்றன. அவை புனித வெள்ளியை மையமாக வைத்து சாம்பற் புதன்கிழமை மற்றும் ஈஸ்டர் ஆகியவை கிழமைக்கு முக்கியத்துவம் கொடுத்து வருடங்களில் தேதி மாறி மாறி வருகிறதைக் காண்கிறோம். ஏனெனில் இயேசுவின் சிலுவை மரணத்தின் மகிமைக்கு எவ்வித இடற்பாடும், தியானத்தில் குறைபாடும் வரக் கூடாது என்ற சிறந்ததொரு நோக்கத்தில் அப்படி தீர்மானிக்கப் படுகிறது என்பது தனிச் சிந்தனைக் குரியதான வேறு விஷயம். இதில் சிலுவை மரண நாள் முக்கியத்துவம் பெறுகிறது. அந்த நாளில் ஏழு வசனதியானம் தனித்துவம் பெறுகிறது.

அந்த புனித வெள்ளி நாளில் குறிப்பிட்ட ஒரே நேரத்தில் உலகமெங்கிலுமுள்ள தேவாலயங்களில் ஆராதனை நடைபெறுகிறது. எல்லா ஆலயங்களிலும் அது மூன்று மணி நேர ஆராதனையாக நடைபெறுகின்றன. எல்லா ஆலயங்களிலும் குறிப்பிட்ட ஏழுவசனங்கள் தான் உலகமெங்கும் பிரசங்க வாக்கியம். தேவனுக்கே மகிமையுண்டாவதாக.

நடைமுறையில் ஆலய ஆராதனைகளில் ஒரு பிரசங்க வாக்கியத்தில் சுமார் அரை மணி நேரம் பிரசங்கம் கேட்பதற்குள் மக்கள் சலிப்படைந்து விடுகிறார்கள். ஆனால் வருஷா வருஷம் ஒரே மாதிரியான ஏழு வசனங்களையும் மூன்று மணி நேரம் ஆராதனையில் பங்கு பெற்று, பொறுமையோடும் அதேசமயம் ஊக்கத்தோடும் கேட்பது இன்னும் விசேஷித்த சிலாக்கியமாகும். அதிலும் ஒரே ஆராதனையில் ஒவ்வொரு வசனத்தையும் தனித்தனி ஊழியர்கள் மூலமாகத் தியானிக்கிறது பல இடங்களில் நடைமுறையில் உள்ளது. அது இன்னொரு வகை சிறப்பானதாகும்.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே சிலுவையில் இயேசு சொன்ன ஏழுவசனங்களையும் நாம் தியானிப்பதற்கு முன் ஒரு நீண்ட பயணமாக பல பக்கங்களை எழுதிவிட்டேன். இவை தேவைதானா என பலமுறை சிந்தித்து ஒரு முடிவுக்கு நான் வந்தேன். எழுதுவது சரியே என என் உள்ளத்தில் ஓர் உறுதி உண்டானது.

ஒரு வேளை இவை சாதாரணமான காரியம் தானே இவை தேவைதானா என்று நீங்கள் எண்ணுவீர்களானால் உங்கள் நிமித்தமாக கர்த்தருக்கு ஸ்தோத்திரம். ஏனெனில் இதுவரை எழுதப் பட்டவை சார்பான தெளிவு ஏற்கனவே உங்களிடத்தில் இருக்கிறது என்று அர்த்தமாகும்.

ஆனால் நான் ஊழியம் காரணமாக அநேக இடங்களுக்குச் செல்லும் வாய்ப்பை கர்த்தர் எனக்கு தமது கிருபையால் தந்திருக்கிறார். அப்படிச் செல்லும் சமயத்தில் நான் அறிந்த உண்மை ஒன்றுண்டு. நான் இதுவரை எழுதினவைகள் அநேகருக்கு மிகவும் பயனுள்ளதாயிருக்கும் எனபதே அது. இன்னும் சிலருக்கு இவைகள் அவசியமானவைகளும் கூட.

<u>**ஓர் உயில் அமுலுக்கு வருகிறது:-**</u>

இந்த ஏழுவசனங்களும் ஒரு மரணசாசனமாக-ஓர் உயிலாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்-ஏற்றுக் கொள்ளப் படுகிறது. அவை ஓர் உயிலைப் போல இயேசுவின் மரணத்துக்குப் பின் உயிர் பெறுகிறது. அதை வேறு ஒரு கோணத்தில் சொன்னால் இந்த சத்தியங்களை உள்ளடக்கிய புதிய உடன்படிக்கை இயேசுவின் உயிர்த்தெழுதலினால் ரூபிக்கப்படுகிறது ரூபிக்கப்பட்டு உயிர் பெறுகிறது. உயிர் பெற்று அமுலுக்கு வருகிறது.

இயேசு சிலுவையில் பேசின ஏழுவசனங்களையு மேலோட்டமாக அல்ல, கருத்துடன் சரியானபடி நாம் சிந்திக் வேண்டும். அப்போது பரிசுத்த ஆவியானவர் சக சத்தியத்துக்குள்ளும் நம்மை நடத்துவார். இந்த வசனங்கள் ஏழு உணர்த்துகின்ற சிந்தனைகள் அனைத்தையும் நாம் ஏற்று கொண்டு கீழ்ப்படிந்து நடப்போமானால் அதுவே நமது கிறிஸ்த ஜீவியத்துக்குப் போதுமானதாக இருக்கும் என்பதற்குச் சந்தேக இல்லை.

இயேசுவின் சிலுவை:-

"இயேசுவின் சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது. இரட்சிக்கப்படுகிற நமக்கோ அதுதேவ பெலனாயிருக்கிறது."1 கொரிந்தியர் 1:18 இதில் சிலுவையைப் பற்றிய உபதேசம் என்பது, பொதுவாக சிலுவையின் பயன் பாட்டுத் தன்மையையும், அதை அன்றைய மக்கள் தங்கள் சிந்தையில் வைத்திருந்த தன்மை போன்றவற்றையும் சேர்த்து தெரிந்து கொள்ள வேண்டும் என்பதாகும்.

இயேசு சிலுவையில் அறையப் படத்தக்கவரா என சிந்திக்க ஆரம்பித்து அவர்பேரில் சாட்டப்பட்ட குற்றங்கள் எவை? விசாரிக்கப்பட்ட விதம், விசாரிக்கப்பட்ட கால அளவு, தீர்ப்பு தண்டனை நிறைவேற்றப் பட்டதில் அமைந்த அவசரம் இப்படிப் பட்டவைகள் நமது உள்ளத்தை உலுக்கத்தக்கவைகளே. மேலும் சிலுவைக்காட்சி, அதிலிருந்து பிறந்த சாட்சிகள், சிலுவையிலிருந்து இயேசு பேசின வசனங்கள் இப்படிப்பட்ட ஏராளமான சத்தியங்கள் அனைத்தையும் குறிப்பதாகும்.

கட்டப்படுகிற ஒரு கட்டிடத்துக்கு அஸ்திபாரம் எப்படி பெலனாக இருக்க வேண்டுமோ அதைப் போல சிலுவையைப் பற்றிய உபதேசமும் இரட்சிக்கப்படுகிற நமக்கு தேவபெலனாக - அஸ்திபாரமாக இருக்க வேண்டும்.

"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள் அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக் குறித்து சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே" (யோவான் 5:39) என்று இயேசு சொன்ன வார்த்தைகளை நினைவில் கொள்ளுவோம்.

சிலுவையின் ஏழுவசனங்களையும் தியானிப்பதற்கு முன் நமது ஜெபம் இப்படி இருக்கட்டும் "கர்த்தாவே! "உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும் படிக்கு என் கண்களைத் திறந்தருளும் " சங்கீதம் 119:18

பரிசுத்த வேதாகமத்திலே "எழுதப்பட்ட வாக்கியங்கள் செவ்வையும் சத்தியமுமானவைகள். காரியத்தின் கடைத் தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப் பயந்து அவர் கற்பனைகளைக் கைக்கொள். எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே" பிரசங்கி 12:10,13.



முதலாம் வசனம்

லூாக்கா 23:34

"பிதாவே இவர்களுக்கு மன்னியும் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே."

நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்து சிலுவையிலிருந்து பேசின ஏழு வசனங்களில் 1-4-7 ஆகிய மூன்றும் ஜெப வார்த்தைகளாகும். அவற்றில் முதலாம் வசனத்தைப்பற்றி நாம் தியானிப்போம்.

பிதாவே !

முதலாம் வசனத்தின் ஆரம்பத்தில் பிதாவே என்று அழைத்துக் கூறுவதைப் பார்க்கிறோம். தெய்வீகத்தில் திரித்துவ விசுவாசக் கோட்பாடுடையவர்கள் நாம். இதோ நமது விசுவாசத்தைப் பலப்படுத்துகிற ஒரு வசனம். அதை யோவான் 14:16-ல் வாசிக்கிறோம். நான் (குமாரனாகிய இயேசு) பிதாவை (பிதாவாகிய தேவனை) வேண்டிக் கொள்ளுவேன். அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை (பரிசுத்த ஆவியானவரை) அவர் உங்களுக்குத் தந்தருளுவார். மூவரைக்குறித்தும் ஒரே வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதை நாம் அறிகிறோம்.

இவ்வசனத்தின் சத்தியத்தை நாமாகப் புரிந்து கொள்வது சற்று கடினமே. பரிசுத்த ஆவியானவர் தமது தாசர்கள் மூலமாக நமக்குத் தந்திருக்கின்ற கிருபையினாலே அதை அறிந்து கொள்ள முடியும். அவற்றில் மிகவும் சிறந்த ஒரு வெளிப்பாடாக நான் கருதுவது ஒன்றுண்டு. நமது ஆராதனையில் நாம் பயன்படுத்துகிற ஜெபபுத்தகத்தில் ஒரு பகுதி உண்டு.அது பரிசுத்த அதநாஷியஸ் விசுவாசப் பிரமாணம் என்று பேர் வழங்குகிற கிறிஸ்து மார்க்க விசுவாச அறிக்கையாகும். அதை எத்தனை முறை வாசித்தாலும் அதன் கருத்து மேலும் மேலும் உள்ளத்துக்கு இனிமையாகவும் நமது விசுவாசத்துக்குப் பெலனாகவும் இருக்கும் தேவன் தமது பிள்ளைகளாகிய நமக்கு இப்படிப்பட்ட கிருபையின் சத்தியங்களை வெளிப்படுத்தித் தந்ததற்காக ஸ்தோத்திரம். நிற்க!

பிதாவின் ஐக்கியத்திலிருந்து விடுபட்ட இயேசு:-

இனி இயேசு தமது ஊழிய காலத்திலே தம்மையும் பிதாவையுங் குறித்துப் பேசின சில வசனங்களைப் பாருங்கள். குறிப்பாக யோவான் சுவிசேஷகன் மிகத் தெளிவாகவும் உறுதியாகவும் கூறுகிற சில வசனங்கள் இதோ...

யோவான் 10:30, நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்.
யோவான் 16:32, நான் தனித்திரேன். பிதா என்னுடனே கூட இருக்கிறார்.
யோவான் 10:38, பிதா என்னிலும் நான் அவரிலும் இருக்கிறதை நீங்கள் அறிந்து விசுவாசிக்கும்படி....
யோவான் 14:9, என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்.
யோவான் 14:11, நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை நம்புங்கள்.

மேற்கண்ட வசனங்கள் மூலம், பிதா வேறே தெய்வம் என்றும் குமாரனாகிய அவர் வேறே தெய்வம் என்றும் பிரித்துக் காட்டப்படவில்லை என்று அறிகிறோம். ஏகத்துவத்தின் தன்மையைக் குறித்தே இயேசு பேசியுள்ளார்.

ஆனால் முதலாம் வார்த்தையில் பிதாவே என்று இயேசு அழைப்பதினால் ஏகத்துவத்தின் ஐக்கியத்திலிருந்து அவர் விலகி இருக்கிறார் எனத் தெரிகிறது. அப்படியானால் பிதாவே என்று அழைக்கும் சமயத்திலெல்லாம் தேவதன்மையும் மனுஷ தன்மையும் பொருந்திய கிறிஸ்துவாக அல்லாமல் மனுஷதன்மையிலே இருந்திருக்கின்றார்.

இயேசு சிலுவையில் தொங்கும் சமயத்தில் பிதாவே என்று அழைப்பதினால் இன்னொரு மகத்துவம் விளங்குகிறது.அவர் அடைந்த பாடுகளையும் வேதனைகளையும் தெய்வீகம் இன்றி மாம்ச சரீரத்திலேயே அனுபவித்தார் என்று புரிகிறது.

அவருடைய வேதனைகள் கெத்செமனே தோட்டத்திலிருந்தே ஆரம்பித்துவிட்டன. அதாவது தனிமைப் படுத்தப்பட்டுவிட்டார். அதனாலேயே அங்கே "அப்பாபிதாவே" என்று கூப்பிட்டார். மத்தேயு 26:39-42. வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி பலப்படுத்தும் அளவுக்கு வியாகுலப்பட்டார். லூக்கா 22:43. அதற்கு முன்பும் பல சந்தர்ப்பங்களிலே பிதாவே என்று இயேசு அழைத்துள்ளார். ஆனால் இப்போது அவருடைய பாடுகளின் மத்தியில் கூப்பிட்டதை மட்டும் நாம் நமது தியானத்துக்காக எடுத்துக்கொண்டோம்.

மன்னிக்கும் படி பிதாவிடம் வேண்டுகிறார்:-

நானும் பல சந்தர்ப்பங்களிலே இந்த முதலாம் வசன பிரசங்கங்களைக் கேட்டிருக்கிறேன்.பெரும்பாலும் இயேசு மன்னித்தார் என்ற சத்தியத்தையே பலர் குறிப்பிடுகிறார்கள். அதே போல சிறந்த ஊழியர்களும் கூட சிலர் தங்களுடைய புத்தகங்களில் அப்படிப்பட்ட கருத்தையே பதிவு செய்துள்ளனர்.

எனக்கு அப்படிப்பட்ட கருத்தில் முழுமையான உடன் பாடில்லை. நான் அதிக பிரசங்கித்தனமாக இதை எழுதுகிறேன் என்று எண்ண வேண்டாம்.சில வேத வசனங்களின் துணையுடன் இந்த இடத்தைக் குறித்து தியானிப்போம்.

பொதுவாக மனுஷனுடைய பாவங்களை தேவனாகி கர்த்தர் ஒருவரே மன்னிக்க முடியும். இதோ தாவீது சொல்லு வார்த்தை கர்த்தாவே.''என்பாவங்களையெல்லா மன்னித்தருளும்." சங்கீதம் 25:18 "என் பாவமற என்னை சுத்திகரியும்" சங்கீதம் 51:2; "....தேவரீர் என்பாவத்தின் தோஷத்த மன்னித்தீர்" சங்கீதம் 32:5.

இயேசு கிறிஸ்து பூமியிலே பிறந்த பின்பு தகுா காலத்திலே பிதாவாகிய தேவன் தன்னுடைய வல்லமைச எல்லாவற்றையும் அவருக்குக் கொடுத்தார் "பிதாவான குமாரனில் அன்பாயிருந்து எல்லாவற்றையும் அவர் கைய ஒப்புக் கொடுத்திருக்கிறார். யோவான் 3:35. பூமியி பாவங்களை மன்னிக்கிறதற்கு மனுஷ குமாரனுக்கு அதிகா உண்டென்பதை நீங்கள் அறிய வேண்டும் மத்தேயு 9:6. "மக திடன்கொள். உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது." மத்தேயு 9:2.

மேற் கூறப்பட்ட வசனங்கள் தருகின்ற உண்மை இயேசுவுக்கு மன்னிக்கும் அதிகாரம் உண்டு என்பதேயாகும். பிதா கொடுத்த அதிகாரம். அதன் படி அவர் மன்னித்து வந் மன்னிக்கப்பட்டது என்று யாருக்குச் சொன்னாரோ அவர் மன்னிப்பையும் பெற்றுக்கெண்டார்கள். அதே தன்மை வல்லமையும் இப்போது சிலுவையில் தொங்குகிற நேரத் உடையவராயிருந்து,யாருக்கு மன்னிக்க வேண்டுமெ விரும்பினாரோ அவர்களைப் பார்த்து உங்கள் பாவா

உங்களுக்கு மன்னிக்கப்பட்டது என்று சொல்லி இருக்கலாமே. அப்படி இயேசு சொல்லவில்லையே.

பிதாவே இவர்களுக்கு மன்னியும் என்று ஜெபிக்கிறார், விண்ணப்பிக்கிறார், வேண்டுதல் செய்கிறார் அல்லதுபரிந்து பேசுகிறார்.அதை எப்படி வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுவோம். இப்படியிருக்க இயேசு மன்னித்தார் என்று ஒரே தீர்வாக எப்படி சொல்லமுடியும்?.

இயேசு மன்னிக்கவில்லை.ஆனால் அவர்கள் மன்னிக்கப்பட வேண்டியது மிக அவசியம் என்பதை அவர் அறிந்திருந்தார்.

<u>கொடுக்கப்பட்ட அதிகாரத்தை விட்டு விட்ட இயேசு:-</u>

இயேசு ஏன் மன்னிக்கவில்லை?இயேசு பிதாவே என்று அழைத்ததினிமித்தம் தெய்வீகத் தன்மை இன்றி மனிதத் தன்மையிலே பாடுகளை அனுபவித்தார் என்று குறிப்பிட்டு பிதாவின் ஐக்கியத்தை விட்டு விட்டார் என்று தியானித்தோம். இப்போ தானே மன்னிக்காமல் பிதாவிடம் பரிந்து பேசுகிறதினால் பாவத்தை மன்னிக்கிறதற்கு தனக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தையும் அவர் விட்டுவிட்டார் என்று தெரிகிறது.

மேலும் சிலுவைப் பாடுகளை பூரண மனிதத் தன்மையிலே அனுபவிக்கிற இயேசுவால் பாவத்தை மன்னிக்க முடியாது. இன்னும் கூடதலாகச் சொன்னால் அவர் பாவத்தை சுமப்பதினால் அந்த அனுபவத்திலே இருக்கிற நேரத்தில் அவரே பாவத்தை மன்னிக்க முடியாது.

அவருடைய ஜீவிய காலத்திலே பாவங்களை மன்னித்ததற்கும், இப்போ மன்னிப்பதற்காக விண்ணப்பித்த தற்கும் இன்னும் கூடுதலான வேறுபாடுகள் உண்டு. அன்று அவர் தேவகுமாரன் என்பதை ஜனங்கள் அறிந்து கொள்ள அற்புத அடையாளங்களோடு மன்னித்தார்.

இப்போதைய நிலை அதுவல்ல.அவரால் உண்டாகும் இரட்சிப்புக்கான வழி முறைதான் முக்கியம். அதற்கு பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டும். அந்த மன்னிப்பு அவராலேயோ அவர்

மூலமாகவோ நிறைவேற வேண்டும். அது ஒரு சிலருக்கு மட்டுமல்ல.அன்று அங்கு நின்றவர்களுக்கு மட்டுமல்ல. அந்த மன்னிப்பினால் உண்டாகும் இரட்சிப்பின் பங்களிப்பு வருங்காலத்திலும் அதாவது கிருபையின் காலம் முடிவு வரையிலும் நீடித்திருக்க வேண்டும். அது இயேசு பாடுபட்டு பாவத்தின் தண்டனையான மரணத்தை ஏற்று அனுபவிப்பதினால் உண்டாக்கப்படுவதாகும். அவ்வளவு பெரிதான இரட்சிப்பை உறுதிப்படுத்தும் கதவைத் திறக்கும் நேரம் அதுவேயாகும்.

இவ்வாறான இரட்சிப்பின் கிருபையை மனுக்குலம் அனைத்துக்கும் ஒரே வாக்கினாலே கொடுக்கக் கூடுமானால் இயேசு பூமியிலே பிறந்திருக்க வேண்டிய அவசியமே இல்லை . அது தேவ நீதியும் அல்ல. ஆயினும் அந்நேரத்தில் அவர் பிறரை மன்னிக்கவும் முடியாது. ஆனால் மன்னிப்பு அருளப்பட ண்டியது அவசியம். அதே நேரத்தில் அந்த மன்னிப்பு நீடித்த காலமாக அனைவருக்கும் கிடைக்கத்தக்கதாகவும் இருக்க வேண்டும்.

இவ்வாறு அநேக ஆசீர்வாதங்களை உள்ளடக்கின தாகத்தான் முதலாம் வசனம் அமையப்பெற்றுள்ளது.

<u>**முதல் வசனமாக அமையப் பெற்றது-அதன் அவசியம்**:-</u>

இந்த மன்றாட்டு அப்போது அவசியப்பட்டதாக மட்டுமல்ல அவசரமாகவும் தேவைப்பட்டதாக உணரப்பட்டது,அதானாலேயே முதல் வசனமாக இயேசுவினால் பேசப்பட்டுள்ளது.அவசரமாகத் தேவைப்பட்டதாக நாம் எப்படி உணரலாம்?

இந்த நேரத்தில் இயேசு மரித்த போது அதாவது அவர் ஜீவனை விட்டபோது நடந்தவற்றை எண்ணிப்பாருங்கள். தேவாலயத்தின் திரைச்சீலை மேல் தொடங்கி கீழ் வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது. பூமியும் அதிர்ந்தது. கன்மலைகளும் பிளந்தது. கல்லறைகளும் திறந்தது. நித்திரை அடைந்த அநேக பரிசுத்தவான்களுடைய சரீரங்களும் எழுந்திருந்தது மத்தேயு 27:51,52. இப்படியான வசனங்களை வாசிக்கிறோம்.

இயேசு மரிப்பதற்குமுன் அவர் சிலுவையிலிருக்கும்போது ஆறாம் மணிமுதல் ஒன்பதாம் மணிவரை அந்தகாரமும் ஏற்பட்டது. அது சூரியனின் ஒளி தடுக்கப்பட்டதினாலேயோ அல்லது

மறைக்கப்பட்டதினாலேயோ அல்ல. சூரியன் தன்னுடைய ஒளியை இழந்ததினாலே நடந்திருக்கும் என நான் விசுவாசிக்கிறேன்.

இப்படியாக அந்தநேரத்தில் ஆச்சரியப்படத்தக்கதாக விபரீத செயல்களை சிருஷ்டிகள் கொண்டிருந்தன. அவைகளின் இந்த செயல்கள் எல்லாம் நமக்கு எதைப் புரியவைக்கிறது? இயேசு தேவனுடைய குமாரன் என்பதினால் அவர்படும் பாடுகளை எங்களால் சகித்துக்கொள்ள முடியவில்லை.எங்களால் தடுக்கவும் முடியாமல் நிலைதடுமாறி இவ்வாறாக எங்களுடைய வேதனையைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம் என்று தங்களின் மொழியிலே தங்களின் வழியில் சாட்சி கூறுவதாக அமைந்துள்ளனவே.

ஆனால் சிருஷ்டிகளின் அவ்வித செயல்களால் எவ்வித விபரீத விளைவுகளும் ஏற்படவில்லை என்பதை அறிகிறோம் அல்லவா? ஒருவேளை இயேசு முதன் முதலிலே இவ்வாறு மன்னிக்கும்படி ஜெபித்ததினால் அந்நேரத்தில் எந்த ஒரு சேதமும் யாருக்கும் நேரிடாத படி அதிசயம் நடந்திருக்கிறது என்று விசுவாசிப்போமாக.

அது போல இயேசு மன்னிக்கும்படி வேண்டுதல் செய்யாமலிருந்திருந்தால், சத்துருக்கள் தங்கள் வேலையை செய்து முடித்து, இயேசு சிலுவையில் தொங்கின அந்நேரமே விபரீதங்களும் அவற்றால் பல விளைவுகளும் ஏற்பட்டிருக்கும் என்றும் விசுவாசிப்போமாக. அதற்கு ஆதாரமாக பிலாத்துவிடம் இந்த இரத்தப்பழி எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக (மத்தேயு 27:25) என்று அந்த ஜனங்கள் உடன் படிக்கையாகக் கூறி சாபத்தை ஏற்றுக்கொண்டார்கள். அதைத் தேவனும் அறிவார், அந்த அடிப்படையிலேயே நான் விசுவாசிக்கிறதையே உங்களுடனே பகிர்ந்து கொள்ளுகிறேன்.

<u>கூடுதலாக ஒரு நற்சிந்தனை - (எனது சிந்தனையே):-</u>

இந்த சிந்தனை, இயேசு சிலுவையில் தொங்கின நேரத்தைக் குறித்தது, இப்போ இயேசு தமது சரீரவாழ்வை பூலோகத்தில் முடிக்கப் போகிறார், இனி பரலோகத்துக்குப் பிதாவிடம் செல்லப் போகிறார். அதனால் பரலோகம் அவரை வரவேற்க ஆயத்தமாகிறது, தூதர்கள் மத்தியில் ஒரு பெரிய மகிழ்ச்சி. காபிரியேல் தூதன் தலைமையில் ஆர்ப்பரிப்பு.

அந்நேரத்தில் மிகாவேல் தூதனும் அவனுடைய கூட்டத்தாரும் பரபரப்போடு காணப்படுகின்றனர். அப்போது தனது கூட்டத்தாரோடு சந்தோஷத்தில் திளைத்திருந்த காபிரியேல் தூதன் அந்த பரபரப்பைக் கவனித்து விட்டான். உடனே மிகாவேல் தூதனிடம் ஏன் இந்த பரபரப்பு என விசாரிக்கின்றான்,. அதற்கு மிகாவேல் தூதன் இந்த பரபரப்பு நேற்று இரவிலிருந்தே இருக்கிறதே என்கிறான். கவனித்தேன், இன்று அதிகமாகத் தெரிகிறதே ஏன் என்று காபிரியேல் தூதன் கேட்கின்றான்.

அப்போது மிகாவேல் தூதன் பிதாவாகிய தேவனுடைய முகத்தைச் சுட்டிக் காட்டுகிறான். அப்போது தேவனுடைய முகத்தைப் பார்க்கும் போது அது இறுக்கமாக இருக்கிறது. ஏன் பிதாவின் முகம் இறுக்கமாக இருக்கிறது என மிகாவேலிடம் காபிரியேல் தூதன் கேட்கின்றான். அப்போது மிகாவேல் பூலோகத்தில் கொல்கொதாவுக்கு நேராக தனது கையை நீட்டிக் காட்டுகிறான்.

இங்கே இயேசு நாம் விரும்பத்தக்க ரூபம் இல்லாதவராய் இரத்த கோரமாய் சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கிறார். அதைக் கண்ட மிகாவேல் தூதன் தன்னுடைய கூட்டத்தாரோடு பூலோகத்துக்குப் புறப்பட ஆயத்தப்பட்டு பிதாவாகிய தேவனை அவர் அனுமதிக்காக நோக்கிப் பார்த்தான். அந்நேரத்தில் கொல்கொதாவிலிருந்து இயேசுவின் சத்தம் "பிதாவே இவர்களுக்கு மன்னியும்" என்று கேட்கிறது.

மீண்டும் பதில் கிடைக்கும் என பிதாவின் முகத்தை தூதர் கூட்டம் நோக்கிப் பார்த்தனர். பூலோகத்துக்குப் புறப்பட மிகாவேல் தூதனுக்கு அனுமதி இல்லை. பிதாவின் முகம் மேலும் மேலும் இறுக்கமாகிக் கொண்டே இருந்தது. அதனால் தூதர் கூட்டமும் என்ன செய்வதென்று தெரியாமல் மிகவும் தவித்துக் கொண்டிருந்தனர். சிருஷ்டிகளும் தேவனுடைய முகத்தைப் பார்த்து பொறுமை காக்கின்றன. இதுதான் அப்போதைய நிலைமையாகும் என்று விசுவாசிப்போம்.

இப்படியெல்லாம் நான் எழுத வேண்டுமென்று ஒருபோதும் திட்டமிடவுமில்லை. எழுதுவேன் என்று நினைக்கவும் இல்லை முதலாம் வசனத்தைப் பற்றி எழுதிக் கொண்டிருக்கும்போது திடீரென்று எழுதி விட்டேன். எழுதிய பின்பு என் சிந்தனையில்

தோன்றிய அந்த காட்சியைப் பற்றி எழுதியதை மாற்றுவதற்கோ அல்லது நீக்குவதற்கோ எனக்கு மனமில்லை. கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே நான் எழுதியது தேவனுடைய நாமத்துக்கு மகிமை குறைச்சலாக இருக்காது என நம்புகிறேன். அப்படி அவரது சித்தத்துக்கு எதிரானதாக இருந்தால் கர்த்தர் எனக்கு மன்னிப்பாராக. உங்களுக்கும் இதில் உடன்பாடில்லையானால் பொறுத்துக் கொள்ளுங்கள்.

உண்மையில் நற்சிந்தனையே:-

இந்நேரத்தில் இன்னொரு சம்பவத்தையும் நினைவு கூர்ந்து நமது சிந்தனையில் ஒரு தெளிவு அடைவோம். 'கெத்செமனே' என்றாலே "செக்கு" என்று அர்த்தமாம். "Oil Press' என்று ஆங்கிலத்தில் குறிப்பிடுகின்றனர். அங்கு போர்ச் சேவகர் இயேசுவைப் பிடித்த போது சீமோன் பேதுரு பட்டயத்தை உருவி, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரன் ஒருவனுடைய வலது காதற வெட்டினான். இயேசு அவனைக் குணப்படுத்தி ஒன்றைக் கூறினார்.

"நான் இப்பொழுது என் பிதாவை வேண்டிக் கொண்டால் அவர் பன்னிரெண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரை என்னிடத்தில் அனுப்பமாட்டாரென்று நினைக்கிறாயா?" என்று இயேசு சொன்ன வார்த்தைகளை மத்தேயு 26:53-ல் நாம் வாசிக்கிறோம்.ஒரு 'லேகியோன்' படைப்பிரிவில் "ஆறாயிரம் பேர்" என்பது ஒரு கணக்கு. அப்படியானால் பன்னிரெண்டு லேகியோன் என்றால் மொத்தம் எழுபத்திரெண்டு ஆயிரம் எண்ணிக்கையிலான தூதர்களைக் குறிக்கிறது.

இன்னும் தாவீது சொல்லுகிற ஒரு வசனத்தைப் பாருங்கள் "உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர்" சங்கீதம்16:10

இவற்றையெல்லாம் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் இயேசு பிதாவிடம் மன்னிப்புக்காக விண்ணப்பிக்காதிருந்தால் அல்லது வேறு விதமாக விண்ணப்பித்திருந்தால் நிச்சயமாக தூதர்பாளையம் வந்து ஒரு பெரிய சங்காரத்தை இந்த பூமியில் ஏற்படுத்தி இருக்கும்.

அல்லது பூமி பிளந்தோ, கன்மலை நகர்ந்தோ, வானாக்கினி வீழ்ந்தோ, கடல்கள் பொங்கி எழுந்தோ, இப்படி ஏதாவது ஒரு வகையில் சிருஷ்டிகள் தங்கள் ஆக்ரோஷத்தை வெளிக்காட்டி அந்த ஜனத்தை அழித்திருக்கும். ஏன் விஷப் பூச்சிகளும், கொடிய மிருகங்களும், மழையோ, காற்றோகூட தங்களின் கோபத்தைக் கொண்டு பெரிய சேதத்தை உண்டாக்கியிருக்கக்கூடும்.

அப்படிப்பட்ட அழிவு நடந்திராமல், இயேசுவின் அன்பு, இரக்கம், தயவு, மனதுருக்கம் இப்படிப்பட்ட சிந்தையே அவற்றைத் தடுத்திருக்கிறது. இதினிமித்தமாக முதலில் பிதாவே என்று அழைத்தது சரியானதுபோல, பிதாவிடம் மன்னிக்கும்படி வேண்டுதல் செய்ததும் சரியே.

<u>இவர்களுக்கு ... யாருக்கு?</u>

இயேசு மன்னிக்கும் படி வேண்டுதல் செய்வது யாருக்கு என்று பார்த்தால் அன்று சிலுவையில் அறைய அப்போது காரணமானவர்களுக்கு என்று நாம் சிந்திக்கிறோம். அப்படியானால் அவர்கள் யார் யார் ?

பிரதான ஆசாரியர், வேதபாரகர், பரிசேயர், சதுசேயர், மூப்பர், வேவுகாரர், சேனைத் தலைவர், அவர் மேல் கை போட்டவர்கள், பிடித்தவர்கள், பரியாசம் பண்ணினவர்கள், அடித்தவர்கள், கண்களைக் கட்டியவர், தூஷண வார்த்தைகளால் பேசியவர்கள், பொய்சாட்சி சொன்னவர்கள், மறுதலித்தவர், கட்டினவர், குட்டினவர், குற்றஞ்சாட்டினவர், சிலுவையில் அறையக் கேட்டுக் கொண்டவர், ஒப்புக் கொடுத்தவர், வஸ்திரங்களைக் கழற்றியவர், வஸ்திரங்கள் மேல் சீட்டுப் போட்டவர், முள்முடி சூட்டினவர், சிலுவையில் அறைந்தவர், நிந்தித்தவர், ஓடிப்போனவர், விலாவிலே குத்தினவர் என ஒரு பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. அதனால் இயேசு வேண்டுதல் செய்தது அப்படிப்பட்ட இவர்களுக்கு என்று புரிந்து கொள்வோம்.

இந்தப் பட்டியலில் அவரைக் காட்டிக் கொடுத்த யூதாசை சேர்க்கவில்லை. ஏனெனில் அந்நேரத்தில் அவன் உயிரோடு இல்லை. ஒருவேளை அவன் உயிருடன் இருந்திருந்தால் அவனுக்கும் அந்த கிருபை கிடைத்திருக்கும். அன்று அவன் இல்லையே என்று அதிகம் கவலைப்படவேண்டாம். ஏனெனில் அவனுடைய வாரிசுகள் இன்றும் ஏராளம் உண்டு.

மேலும் இயேசு 'இவர்களுக்கு' என்று குறிப்பிட்டது அன்று அவருடைய பாடுகளுக்குக் காரணமான அவர்களுக்கும், அதே போல இந்நாட்களிலும் குற்றஞ்சாட்டத் தகுந்தவர்களாகிய நமக்கும் சேர்த்து அன்றே பிதாவிடம் விண்ணப்பித்து இயேசு அனுமதியைப் பெற்றுத் தந்து விட்டார். ஏனெனில் இன்றும் நம்மில் அநேகர் இயேசுவை சிலுவையில் அறைகிறவர்களாயிருக்கிறோம். "ஏனெனில் ஒரு தரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், பரம ஈவை ருசி பார்த்தும் பரிசுத்த ஆவியைப் பெற்றும், தேவனுடைய நல்வாழ்த்தையையும், இனிவரும் உலகத்தின் பலன்களையும் ருசிபார்த்தும் மறுதலித்துப் போனவர்கள். தேவனுடைய குமாரனைத் தாங்களே சிலுவையில் அறைந்து அவமானப் படுத்துகிறார்கள்" எபிரெயர் 6:4-6

மேற்கண்ட வசனத்தின் கொடுமையையும், கடுமையையும் சற்று எண்ணிப் பார்ப்போமாக

இயேசு பிதாவிடம் விண்ணப்பித்ததின் தனிச்சிறப்பு:-

பொதுவாக நமக்கு எதிராகவோ, நம்மை பாதிக்கும் செயலை ஒருவர் செய்தாலோ அவர்கள் நம்மிடம் மன்னிப்பு கேட்டால் மட்டுமே நமக்கு மன்னிக்க அவசியம் உண்டு என்று சாதாரணமாக எண்ணுவோம். சிலர் மன்னிப்பு கேட்டாலும் மன்னிக்க மாட்டாத வைராக்கியம் கொண்டிருப்போம் என்பது வேறு விஷயம்.

ஆனால் இயேசுவின் நிலைப்பாடு வேறுவிதமானது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இயேசு இவ்வாறு முதலாம் வசனத்தைப் பேசுவதற்கு முன்னோ அல்லது பின்னோ அவரிடம் யாரும் மன்னிப்பு கேட்க வில்லை. இயேசு தாமே முந்திக் கொண்டு பிதாவிடம் மன்னிக்கும்படி வேண்டுதல் செய்கிறார். அதிலும் அவர் மன்னிக்கக்கூடிய தன்மையை விட்ட போதிலும் பிதாவிடம் முந்தி வேண்டுதல் செய்தது உன்னதமான காரியமே.

"தேவன் மன்னிக்கிறதற்கு தயை பெருத்திருக்கிறார் "ஏசாயா 55:7
"நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததனாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்" ரோமர் 5:8

இயேசுவின் உபதேசம்:-

ஒரு சமயம் பேதுரு இயேசுவினிடத்தில் ஒரு கேள்வி கேட்டான் "ஆண்டவரே என் சகோதரன் எனக்கு விரோதமாக குற்றஞ் செய்து வந்தால் நான் எத்தனை தரம் மன்னிக்க வேண்டும்? ஏழு தர மட்டுமோ?" அதற்கு இயேசு "ஏழுதரமாத்திரமல்ல எழுபதுதரமட்டும்" என்று பதில் கூறினார். மத்.18:21,22

மலைப் பிரசங்கத்திலே ஜெபம் பண்ண வேண்டிய விதத்தைக் கற்றுக் கொடுத்த இயேசு "எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்" என்று கூறினார். மத்தேயு 6:12 இப்படி ஜெபிக்கும்போது நாம் தேவனோடு ஓர் உடன்படிக்கை செய்து கொள்ளுகிறது போல பொருளாகிறதல்லவா?

இதன் விளக்கத்தையே இயேசு அடுத்த 13,14 வசனங்களில் கூறுகிறார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால் உங்கள் பரம பிதா உங்களுக்கும் மன்னிப்பார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால் உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார். இவைகள் இயேசு சொன்ன சத்திய வசனங்கள் என்பதை ஒரு போதும் மறந்து போக வேண்டாம்.

இயேசு தமது முதலாவது வசனத்தின் மூலமாக அதைத் தான் செய்தார். அவருக்கு விரோதமான சத்துருக்களாகக் காணப்பட்டவர்களை தனக்குள் தானே முதலாவது மன்னித்து விட்டார். அதனால் தான் அந்த மன்னிப்பின் கிருபையாகிய பலன் அவர்களுக்கு அருளப்படஅங்கீகாரம் பெற பிதாவிடம் விண்ணப்பிக்கிறார்.

ஒரு சுயபரிசோதனை:-

கிறிஸ்தவர்களுக்குள்ளே சிலர் பிறரிடம் 'நீ இரட்சிக்கப் பட்டிருக்கிறாயா?' என்று ஒரு கேள்வியைக் கேட்பதை நான் பல சந்தர்ப்பங்களிலே பார்த்திருக்கிறேன். அவர்கள் எந்த நோக்கத்தில் அப்படிக் கேட்கிறார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். இரட்சிக்கப் பட்டவர்களுக்கு அவர்கள் அடையாளமாக குறிப்பிட்டு எதிர்பார்க்கும் எல்லை எது ? சிந்தித்துப் பாருங்கள்.

இரட்சிப்பு என்பது பாவ மன்னிப்பின் நிச்சயம் என்று நாம் நன்கு அறிவோம். அதற்கு இயேசுவை விசுவாசிக்க வேண்டும். அப்போஸ்தலர் 16:31; இது ஆவிக்குரிய ஒரு விசுவாச சிந்தனையாகும்.அதற்கு அடையாளமாக இயேசு கூறிய வார்த்தைகளை மீண்டும் நினைவு கூருவோம். இதற்கு முந்தைய 'இயேசுவின் உபதேசம்' என்ற தலைப்பை திரும்பவும் படித்துப் பாருங்கள்.

பிறரை மன்னிக்காவிட்டால் நாம் மன்னிக்கப்பட வில்லை என்பது தானே இயேசுவின் உபதேசம். பின்பு எப்படி நாம் இரட்சிக்கப்பட்ட அடையாளத்தை வேறு விதத்தில் தேட முடியும்? கைப் புண்ணைப் பார்க்க கண்ணாடி எதற்கு?

நம்மில் அநேகர் இரட்சிக்கப் பட்டிருக்கிறோம் என்று நம்புகிறோம்; சொல்லுகிறோம், கர்த்தருக்கு ஸ்தோத்திரம். ஆனால் அப்படிப்பட்டவர்களின் குடும்பங்களிலும் குறிப்பிட்டவர்களால் உண்டாகிற சண்டை, சச்சரவு, உறவுமுறை விவகாரங்கள் எண்ணிலடங்காமல் இருக்கிறதானால் அவர்கள் ஒருவருக்கொருவர் மன்னிக்கும் சுபாவம் இல்லாததினால் தான் உண்டாகிறது.

இன்னும் சொல்லப் போனால் கணவன், மனைவி; மாமி மருமகள்; சகோதரர் சகோதரிகள், பெற்றோர் பிள்ளைகள் இவர்களுக்குள் இருக்க வேண்டிய சந்தோஷம் சமாதானம் இவை குறைவு பட்டிருப்பது மன்னிக்கும் பண்பு குறைவினால் உண்டாகிறது. கிறிஸ்தவர்கள் பொதுவாக மக்களிடம் இருக்கும் சாதாரண மனிதப்பண்பும் அன்பு கூருதலும் கூட இல்லாதவர்கள் இரட்சிக்கப்பட்டு விட்டோம் என்று கூறுவது சரியாகாது.

உலகத்திலுள்ள சபைகள் ஏராளம். அவைகள் பல பிரிவுகளைச் சார்ந்தவைகள். எப்படியும் எல்லாரும் கிறிஸ்தவர்களே. ஒவ்வொரு சபைக்குள்ளும், சபைப் பிரிவுகளுக்குள்ளும் இருக்கின்ற பகைமை உணர்வு, போட்டி, பொறாமை, அடிதடி, வழக்கு இவைகள் ஏராளமாக இருக்கின்றன. அன்புகூருதலும், மன்னிக்கும் பண்பும் இல்லாததே இவற்றிற்குக் காரணங்களாக அமைந்துள்ளன.

பொதுவாக சபைகளின் கோட்பாடுகளைக் குறித்த எனது கருத்துக்களை எழுத்தில் பதிய வைப்பது எனக்கடுத்த காரியமல்ல

என்று நான் எண்ணுபவன். ஆனால் சாதாரண மக்களிடம் இருக்கின்ற அன்புகூருதலும் மனித நேயமும் கிறிஸ்தவர் களிடத்தில் இல்லையென்றால் அதை எப்படி புரிய வைப்பது என்பது பெரிய கேள்விக்குறியாயிருக்கிறது.

"உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள். உங்களை சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள். உங்களைப் பகைக்கிறவர் களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களை நிந்திக்கிறவர் களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்" மத்தேயு 5:44 இந்த வசனத்தின் முழுப்பகுதியின் படியே இயேசு நடந்து கொண்டு அதன் வெளிப்பாடாக முதலாம் வசனத்தைக் கூறினார் என்பது மேன்மையிலும் மேன்மையாகும்.

<u>உயிருள்ள ஒரு சாட்சி:-</u>

இந்த நேரத்திலே, கடந்த நூற்றாண்டின் கடைசியில் நமது இந்திய திரு நாட்டில் ஒரிசா (தற்போது ஒடிசா) மாநிலத்திலுள்ள மனோகர் பூர் கிராமத்தில் நமது காலத்திலே நடந்த ஓர் உண்மைச் சம்பவத்தை நினைவு படுத்துவது பொருத்தம் என எண்ணுகிறேன். ஆஸ்திரேலியாவிலிருந்து 'கிரஹாம் ஸ்டெயின்' என்ற பாதிரியார் குடும்பத்துடன் மேலே குறிப்பிட்ட கிராமத்தில் தங்கி சமூகப் பணியாக மருத்துவ சேவையும் அத்துடன் சுவிசேஷப் பணியும் செய்து வந்தார்.அவருக்கு மனைவியும் இரண்டு மகன்களும் உண்டு. அவர்களும் அவருடனே கூட தங்கி இருந்தனர். அவருடைய மனைவியின் பெயர் கிளாடிஸ், ஒரு மூத்த மகள் எஸ்தர் ஜாய் (வயது 14) மகன் 'பிலிப்' (வயது 11) இன்னொரு மகன் 'டிமோதி' (வயது 7) ஆவார்கள். கடந்த 22.01.1999 அன்று இரவு பணி முடித்து வந்து அக்கிராமத்திலிருந்த ஆலயத்தின் முன்பாக தன்னுடைய வேனை நிறுத்தி அதில் பாதிரியார் கிரஹாம் ஸ்டெயின் அவருடைய இரண்டு மகன்களுடன் தூங்கிக் கொண்டிருந்தார்.

நடு இரவு நேரத்தில் வேனில் தூங்கிக் கொண்டிருந்த மூவரையும் சமூக விரோதிகளில் சிலர் வேனோடு சேர்த்து தீயிட்டுக் கொழுத்தி கொன்று விட்டனர். அந்தோ பரிதாபம்! அந்த கொடுமையான செய்தி இந்தியா முழுவதும் பரபரப்பாகப் பேசப்பட்டது.கிறிஸ்தவர்கள் மத்தியிலும் பெரிய கலக்கத்தை உண்டாக்கியது.

வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த பாதிரியாரின் மனைவி ளாடிஸ் மற்றும் மகள் எஸ்தரும் மட்டும் உயிர்தப்பினர். அரசு ிசாரித்து வழக்கு பதிவு செய்து குற்றவாளிகள் கைது சய்யப்பட்டனர்.

அதே சமயம் பாதிரியாரின் மனைவி கிளாடிஸ் ர்கதியாக்கப்பட்டார்.இந்தியாவில் தனித்து விடப்பட்டார்; ிதவையாக்கப்பட்டார்; அனாதையாக்கப்பட்டார். அதனால் அவருடைய சொந்த நாடான ஆஸ்திரேலியாவுக்குப் புறப்பட்டுச் சன்று விட்டார்.ஆம் இறைபணியாற்றும்படி இன்முகத்துடன் ந்தியாவுக்கு வந்தவர் துன்பக் கடலில் தள்ளப்பட்டு விட்டார். த்தனையும் ஓர் இரவில் நடந்து முடிந்து விட்டது. அதுவும் அவர் ார்த்திருக்க அவரின் கண்ணெதிரே மூவரும் அக்கினிக்கு ரையாக்கப்பட்டு விட்டனர். அனைவரின் நெஞ்சையும் பதற வக்கும் சம்பவம் அல்லவா?

இதில் நாம் குறிப்பிட விரும்புவது; திருமதி கிளாடிஸ் ஆஸ்திரேலியாவுக்குப் புறப்பட்டுச் செல்லும்போது நிருபர்கள் வரிடம் ஒரு கேள்வி கேட்டார்கள்.உங்கள் கணவரையும் உங்கள் ள்ளைகளையும் எரித்துக் கொன்றவர்களைக் குறித்து நீங்கள் ன்ன சொல்ல விரும்புகிறீர்கள்? அதற்கு அவர் சொன்ன ஒரே தில் “நான் அவர்களை எப்போதோ மன்னித்து ட்டேன்”என்பதே.

கிறிஸ்துவுக்குள் பிரியமான கர்த்தருடைய பிள்ளைகளே! ந்த அம்மையார் சொன்ன பதில் நமது பார்வையில்...? ாசிக்கிறோமா?

யேசுவின் ஜெபத்தை தேவன் ஏற்று மன்னித்தாரா:-

இயேசு இந்த பூமியிலே வாழ்ந்தது நியாயப்பிரமாண காலம். வருடைய மரணத்தைத் தொடர்ந்து அவருடைய பிர்த்தெழுதலுக்குப் பிறகுதான் கிருபையின் காலம் என்று ாதுவாக அறிவோம். இயேசு நியாயப்பிரமாணத்தின் ிவாயிருக்கிறார் என்பதினால் அவர் நியாயப்பிரமாண லத்திற்கும் முடிவாயிருக்கிறார். எனவே இயேசுவானவர் நியாயப் மாணத்தை மீறுகிறவராகவும் இருக்கக்கூடாது. இருக்கவும் ியாது.

இந்தக் கருத்தின்படி ஒரு சிந்தனை.இதை வேத வசனங்களை அடிப்படையாகக் கொண்டு ஓர் உரையாடலாகப் பாவித்து சிந்திப்போம். இதுவும் அதாவது இந்த உரையாடலும் சிந்தனையும் என்னுடைய விசுவாசமே.

இயேசு பூலோகத்திலே சிலுவையில் அறையப்பட்ட நிலையில் முதலாம் வசனத்தைக் கூறினதை பரலோகத்திலிருந்து கேட்ட பிதாவாகிய தேவனிடம் பிறந்த கேள்வி...

பிதாவின் கூற்று:- நாம் எந்த ஒரு பாவத்தையும் மன்னிக்க வேண்டுமானால் முதலாவது அது என்ன பாவம் என்று அறியப்பட வேண்டுமே!

இயேசு:- என் பிதாவே, அது இந்த ஜனங்கள் அறியாமல் செய்த பாவம். தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே.

பிதா:- ஒருவன் அநியாயமாய் அறியாமையினால் பாவஞ்செய்தால் நியாயப்பிரமாணத்தின்படி அதற்கான பரிகாரம் என்ன? நிவாரணமுறை எப்படி? அது எங்கே? நான் அதை மீறி மன்னிக்க முடியாதே. அது என் குமாரனாகிய இயேசுவாக இருந்தாலும் அந்த என்னுடைய தேவநீதியை நான் மீற மாட்டேன்.

இயேசு:- பிதாவே அறியாமையினால் செய்யப்படும் பாவங்களுக்குரிய பரிகாரம் நியாயப்பிரமாணத்தில் உண்டு.அது எண்ணாகமம் 15:24-29-ல் உள்ள வசனங்களில் தெளிவாகவும் தீர்க்கமாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.அதன் விளக்கங்கள் பற்றி சற்று விபரமாக லேவியராகமம் 4ம் அதிகாரத்தில் வாசிக்க முடிகிறது.

பிதா:- அதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று என்னுடைய நியாயப் பிரமாணத்தைப் பற்றி தெரியுமா?

இயேசு:- நன்றாகத் தெரியும் என் பிதாவே. பலி செலுத்தப்பட்டு, பலியின் இரத்தம் தெளிக்கப்பட வேண்டும். தவிர அதன் மாமிசம் பாளையத்துக்குப் புறம்பே சுட்டெரிக்கப் பட வேண்டும்.(லேவியராகமம் 4:3,6,12,14,21)

பிதா:- மிகவும் சரிதான் அப்படியானால் இந்த ஜனங்களுக்கு நான் மன்னிக்கத்தக்கதான பலி எங்கே?

இயேசு:- என் பிதாவே நீர் அறியாததா? உமக்குத் தெரியாத திட்டமும் இரகசியமும் ஏது? அதற்கு உகந்த பலியாக நான் என்னையே தருகிறேன். நியாயப் பிரமாணத்தின் படியே என்னுடைய இரத்தம் பரிசுத்த நகரம் என்று பேர் பெற்ற எருசலேமில் சிந்தப்பட்டதையும், என்னுடைய மாமிசம் பாளையத்துக்குப் புறம்பே சுட்டெரிக்கப் பட்டுக் கொண்டிருக்கிற தென்பதையும் நீர் நினைவு கூர்ந்து ஏற்றுக் கொள்ளும். நான் அதை நிறைவேற்றத்தானே இந்த பூலோகத்துக்கு வந்தேன்.

பிதா:- சரி. நான் ஏற்றுக் கொள்ளுகிறேன். அதனால் இந்த ஜனங்களை நான் இப்பொழுது அழிவுக்கு ஒப்புக் கொடுக்க வில்லை, அதே சமயம் வருகிற நியாயத் தீர்ப்புக்குத் தப்ப வேண்டுமானால் இந்த ஒழுங்கையும் இந்த பலியையும் விசுவாசித்து ஏற்றுக் கொள்ளுகிறவர்களுக்கு அவர்கள் பாவங்களையும் மன்னித்து எனது இரட்சிப்பை அனுமதித்து விடுகிறேன். அப்படியே முடிவு பரியந்தம் நடக்கட்டும்.

ஆம், கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே இவ்விதமான ஒழுங்கு சிலுவைப்பாடுகளிலே கடைப்பிடிக்கப்பட்டு நிறைவேறியது. தேவன் இயேசுவைப் பாவம் போக்கும் பலியாக ஏற்றுக் கொண்டு இயேசுவினுடைய இந்த முதலாம் வசனத்தின் விண்ணப்பத்தையும் ஏற்றுக்கொண்டார். அதனால் உண்டான மன்னிப்பு நமக்கும் இந் நாள்வரை கிருபையாக அனுமதிக்கப்பட்டுக் கொண்டு வருகிறது.

"அதன்படி எந்த மிருகங்களுடைய இரத்தம் பாவங்களினிமித்தமாக பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரதான ஆசாரிய னாலே கொண்டு வரப்படுகிறதோ, அந்த மிருகங்களின் உடல்கள் பாளையத்துக்குப் புறம்பே சுட்டெரிக்கப்படும். அந்தப்படியே இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தை பரிசுத்தம் செய்யும் படியாக நகர வாசலுக்குப் புறம்பே பாடுபட்டார்." எபிரெயர் 13:11,12

இவ்வாறான பரிசுத்த ஒழுங்கையும், அந்த ஒழுங்கின்படி நிறைவேற்றப்பட்ட தேவ நீதியையும், அதன் பலனாக உண்டான இரட்சிப்பை கிருபையாக நாமும் பெற்றுக் கொள்ள அருளி செய்த கர்த்தரை ஸ்தோத்தரிப்போமாக.

இந்த முதலாம் வசனம் தரும் பாடம்:-

இயேசுவாகிய பாவநிவாரணப்பலியை தேவன் ஏற்றுக்கொண்டார். அதனாலே அவர் செய்த விண்ணப்பத்தையும் ஏற்றுக்கொண்டார். அதன்படி அந்நாட்களில் அங்கு காணப்பட்டோருக்கு மன்னிப்பு அனுமதிக்கப்பட்டது.

அது மட்டுமல்லாமல் இயேசு மறுபடி இந்தப் பூமிக்கு வரும் வரை இந்த சத்தியத்தை ஏற்று விசுவாசிப்போருக்கும் தேவனாலே அந்த கிருபை வழங்கப்பட்டுள்ளது.

அதற்காக நாம் செய்ய வேண்டியவைகளாக இயேசு தரும் உபதேசங்களை அறிந்து நடக்க வேண்டும்.

1. மன்னிக்கும் சுபாவம் நமக்கு அடிப்படையாக வேண்டும்:-

யாதொருவரையும் மன்னிக்கும் தன்மை வேண்டும். "ஒருவருக்கொருவர் தயவாயும், மன உருக்கமாயுமிருந்து கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" எபேசியர் 4:32

இவ்வசனத்தில் கிறிஸ்துவுக்குள் என்று குறிப்பிடப்படுவது நமதுசிந்தனைப்படி முதலாம் வசனத்தில் இயேசு விண்ணப்பித்ததை அடிப்படையாகக் கொண்டதுபோல அமைகிறதல்லவா? சபைகளிலே இந்த கோட்பாடு கடைப்பிடிக்கப் பட்டால் எத்தனை மேன்மை, இது ஒருகட்டளை அல்லவா? கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

2. நாம் பிறருக்கு மன்னித்தால் மட்டுமே நமக்கும் மன்னிப்பு:-

நமது வாழ்க்கையில் பாவ மன்னிப்பின் நிச்சயம் வேண்டும் என்ற கூற்றை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம்.அது ஒரு நல்ல காரியமே. ஆனால் பரிசுத்த வேதாகமம் கூறுகின்ற அடையாளத்தைப் பற்றி அதிகமாகக் கவலைப்படுவதில்லை.அந்த அடையாளத்தை நாம் பிறருக்கு மன்னித்திருக்கிறோமோ என்பதி லிருந்தே உறுதி செய்து கொள்ளலாம்."மனுஷருடைய தப்பிதங் களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால் உங்கள் பரம பிதா

உங்களுக்கு மன்னிப்பார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால் உங்கள் பரம பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்" மத்தேயு 6:14,15

இதைப் போன்று கருத்தைக் கூறி மன்னிக்கிறவர்களின் விசுவாச ஜெபத்தின் மகத்துவத்தையும் இயேசு கூறுவதை மாற்கு 11:22-26 ஆகிய வசனங்களில் வாசிக்கிறோம்.

<u>மன்னியாதிருந்தால் கிரியை இல்லாத விசுவாசமாகிவிடும்:-</u>

நாம் மன்னியாதிருந்தால் நமது பாவங்களும் நமக்கு மன்னிக்கப்படமாட்டாது. அது மட்டுமல்லாமல் நாம் கர்த்தர் பேரிலே விசுவாசம் கொண்டிருக்கிறோம் என்றாலும் அது பயனற்றதாகிவிடும். கடைசியாக மன்னியாதவனை உபாதிக்கிறவர்களிடத்தில் ஒப்புக் கொடுத்த ராஜாவின் உவமையையும் மத்தேயு 18:23-35 வசனங்களில் வாசிக்கிறோம்.

சில பரிசுத்த வேதவசனங்களைக் கவனியுங்கள் "ஒருவன் தனக்கு விசுவாசம் உண்டென்று சொல்லியும் கிரியைகள் இல்லாதவனானால் அவனுக்குப் பிரயோஜனமென்ன? அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமோ?.... ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறது போல கிரியையில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது". யாக்கோபு 2:14,26

"கிறிஸ்து இயேசுவினிடத்தில் விருத்தசேதனமும் விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுக்கும் உதவாது. அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும்". கலாத்தியர் 5:6



இரண்டாம் வசனம்

லூக்கா 23:43

"இன்றைக்கு நீ என்னுடனே கூட பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்"

இவ்வசனம் பிறந்த சூழ்நிலை:-

இது நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் பேசின இரண்டாவது வசனமாகும்.முதலாவது வசனம் அப்போது அப்படி இயேசு பேச வேண்டியது அவசியப்பட்டது.ஆனால் இந்த வசனம் இப்படிப் பேச வேண்டிய அவசியப்படாவிட்டாலும் பேசக்கூடிய நிலை அப்போது ஏற்பட்டது.இதுவும் தேவனுடைய அளவற்ற கிருபையே.

ஏனெனில் இந்த வசனம் பலருக்காகவோ, பெரும் ஜனக்கூட்டத்துக்காகவோ பொதுவானதாகவோ பேசப்படவில்லை. ஒரு தனி மனிதனுக்காக, அவனையே நேரிடையாகக் குறிப்பிட்டு, திட்டமிட்டு அல்ல அப்போதிருந்த சூழ்நிலையில், நல்லவனென்று பேர்பெற்றவனுக்காக அல்ல நல்லவனாக பாவிக்கப்பட்டு பேசப்பட்ட வசனமாகும்.

இந்த வசனம் ஒரு கள்ளனைப் பார்த்துப் பேசினதாகும்.இதினிமித்தம் ஒன்று புரிகிறது.நூறு ஆடுகளில் காணாமற் போன ஒரு ஆட்டைத் தேடின மேய்ப்பனைப் பற்றியும், பத்து வெள்ளிக் காசுகளில் காணாமற் போன ஒரு வெள்ளிக்காசைத் தேடின ஸ்திரீயைப் பற்றியும், லூக்கா 15:3-10ல் இயேசுவானவர் இந்த அர்த்தத்தில் தான் கூறியிருக்கிறார். எந்த ஒரு தனி மனிதனைக் குறித்தும் அக்கறை கொள்ளுகிறவர் நமது கர்த்தர். அவருடைய பரிசுத்தமுள்ள நாமத்துக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக.

இப்போது இந்த வசனத்தைத் தியானிப்பதற்கு முன்பாக அன்று அங்கு நிலவிய காட்சியை நமது கண்களுக்கு முன் சற்று கொண்டு வருவோம். அப்போது நடைபெற்ற சம்பவத்தை நினைவில் கொள்ளுவோம்.அந்நேரத்தின் சூழ்நிலைகளையும் நமது மனதில் பதிய வைப்போம்.

அங்கே இயேசு சிலுவையில் அறையப்பட்டு தொங்குகிறார்.அவரோடு கூட வலது பக்கத்தில் ஒரு சிலுவையில்

ஒரு கள்ளனும், இடது பக்கத்தில் ஒரு சிலுவையில் ஒரு கள்ளனும் தண்டனை பெற்று தொங்கிக் கொண்டிருக்கின்றனர்.அதில் ஒரு கள்ளனைப் பார்த்து இந்த வசனத்தைக் கூறுகிறார்.அப்படியானால் அவனைப் பார்த்து மட்டும் இந்த வசனத்தைக் கூறுவதன் காரணம் என்ன? அதே நேரத்தில் மற்ற கள்ளனைப் பார்த்து ஏன் அப்படிச் சொல்ல வில்லை.? அந்த இரு கள்ளர்களின் நிலைப்பாடு என்ன என்பதை நாம் தெரிந்து கொள்வது மிகவும் அவசியமாகும்.

அன்று மரண தண்டனை விதிக்கப்பட்ட மூவர் கொல்கொதா மேட்டிலே சிலுவையில் அறையப்பட்டு கொல்லப்பட வேண்டும்.அதன்படி நிறைவேற்றப்பட்ட தண்டனையின் சமயத்தில் இயேசுவின் சிலுவை நடுவில் நடப்பட்டிருந்தது.அந்த சிலுவையின் மேல் "இவன் யூதருடைய ராஜாவாகிய இயேசு" என்று எழுதி அவர் சிரசுக்கு மேலாக வைத்தார்கள். மத்தேயு 27:37. அதுவும் "கிரேக்கு, லத்தீன், எபிரெயு எழுத்துக்களில் எழுதி அவருக்கு மேலாக வைக்கப்பட்டது." லூக்கா 23:38

அந்த இடத்தில் இயேசுவின் பேரில் அன்பு கொண்டவர்கள் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரே இருந்தனர்.மற்ற அனைவருக்குள்ளும் பஸ்கா பண்டிகையை ஆசரிக்கும்படி எருசலேமுக்கு வந்தவர்கள் அதிகம். இன்னும் இயேசுவை விசுவாசியாத மக்கள், பகைவர்கள் வேலையாட்கள் இப்படி பலதரப்பட்டவர்களும் ஏராளமானோர் கூடியிருந்தனர்.அந்த பெருங் கூட்டத்தார் இயேசுவின் சிலுவைக் காட்சியைப் பார்த்து செல்கிறவர்களாக மட்டும் இல்லை. இயேசுவை நோக்கி விரும்பத்தகாத வார்த்தைகளை அம்புகளாக எய்து கொண்டே சென்றார்கள்.அவர் அடைந்த வேதனைப் பாடுகளோடு அந்த சொல்லம்புகளும் அவரை மிகவும் காயப்படுத்தி வேதனையை அதிகப்படுத்திக் கொண்டிருந்தன. அவை...

1. லூக்கா 23:35 அதிகாரிகள் அவரை இகழ்ந்து கிறிஸ்துவானால் தன்னைத்தானே இரட்சித்துக் கொள்ளட்டும் என்றார்கள்.

2. லூக்கா 23:36,37 போர்ச் சேவகரும் நீ யூதரின் ராஜாவானால் உன்னை இரட்சித்துக் கொள் என்று அவரை பரியாசம் பண்ணினார்கள்.

3. மத்தேயு 27:39,40 அந்த வழியாய் நடந்து போகிறவர்கள்

தாங்கள் தலைகளைத் துலுக்கி உன்னை நீயே இரட்சித்துக் கொள்.நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையிலிருந்து இறங்கி வா என்று அவரைத்தூஷித்தார்கள்.

4. மத்தேயு 27:41,42 பிரதான ஆசாரியரும், வேதபாரகரும், மூப்பரும் பரியாசம் பண்ணி,இவன் இஸ்ரவேலின்ராஜாவானால் இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கிவரட்டும்.

5. லூக்கா 23:39 சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்ற வாளிகளில் ஒருவன், நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக் கொள் என்று அவரை இகழ்ந்தான்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள வசனப் பகுதிகளில் சம்பந் தப்பட்ட எல்லோரும் சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்த இயேசுவை இகழ்ந்தார்கள் - பரியாசம் பண்ணினார்கள் - தூஷித்தார்கள் என்று பார்க்கிறோம்.

பிசாசானவனின் கடைசி முயற்சியா:-

அந்த எல்லா வசனங்களையும் மீண்டும் ஒரு முறை வாசித்துப் பாருங்கள்.அந்த எல்லா வசனங்களிலும் சில காரியங்களில் அவை ஒற்றுமையாகவும், ஒரே திசையை நோக்கியும் கை கோத்து நிற்பதைக் காண முடியும்.

அவற்றை வகைப்படுத்திப் பார்ப்போம். அவைகள் எல்லாம் அவருடைய தெய்வீகத் தன்மையைக் குறி வைத்தே அமையப் பெற்றிருந்தன. அது மட்டுமல்ல, அவை இந்த உலகத்தில் நம்முடைய இந்த கண்கள் காணத்தக்கதான பலனை அவர் செய்து நிரூபிக்க வேண்டுமென்றே அவரைத் தூண்டி கீழ்ப்படியச் செய்யும் முயற்சியாகவே இருந்தன. இயேசு தம்முடைய தெய்வீகச் சிந்தனையை தேவனுடைய சித்தத்தின் படி சரீரத்தில் அனுபவித்துக் கடந்து செல்கின்றார். இந்த ஆவிக்குரிய திட்டத்தை அவர்கள் அறிய வில்லை.

அதனாலேயே அவர்களுடைய இந்த பேச்சு அவருக்கு ஆறுதலளிக்கவில்லை. மாறாக வேதனை அளித்தது. அதனாலேயே தாங்க முடியாத ஆகக் கூடின சரீர வேதனையை அனுபவித்துக் கொண்டிருந்த அந்நேரத்தில் இந்த வேதனையும்

ந்து கொண்டன என்று குறிப்பிட்டோம். அது ஆகக் கூடின கொடுமையாகும்.

அவர்கள் கூறிய வார்த்தைகளில் உள்ள ஒற்றுமையைக் கவனியுங்கள். நீ கிறிஸ்துவானால், நீ யூதரின் அல்லது இஸ்ரவேலின் ராஜாவானால், நீ தேவனுடைய குமாரனானால் என்று இப்படிப்பட்ட வார்த்தைகளைக் கொண்டு அவரையே குறி வைத்துத் தாக்குகிறதை நாம் அறிகிறோம்.

இப்படியாக இந்த வசனங்களை நாம் சிந்திக்கும் போது, இயேசு ஞானஸ்நானம் பெற்று வனாந்தரத்திற்கு கொண்டு போகப் பட்டு பிசாசு சோதித்தபோது கேட்ட கேள்விகளே நினைவுக்கு வருகிறது."நீர் தேவனுடைய குமாரனேயானால்..." என்றல்லவா பிசாசு அவரை தூண்டி விட்டு கேள்வி கேட்டான். ஆவிக்குரிய ஊழியத்தின் ஆரம்பத்தில் இயேசுவைப் பார்த்து அப்படி கேட்டு பிசாசானவன் தோற்றுப் போனான்.

இப்போதும் இயேசுவின் இவ்வுலக வாழ்வும் அவரின் நேர்மையான ஊழியமும் நிறைவடைகிற நேரத்திலும் அவரை விழுத்தட்டும் செயலாக சாத்தானின் தூதுவர்களாக அநேகர் 'நீ கிறிஸ்துவானால் , ராஜாவானால் 'என்று அவரைச் சீண்டி விட்டு தூஷித்தார்கள்.ஆனால் இயேசுவோ அவர்கள் பேச்சுக்கு பதிலாக ஏதும் நிகழ்த்தவில்லை. அதி வல்லமையாக மரித்தோரை உயிரோடே எழுப்பினதை அறிந்தவர்கள் தெரிந்தவர்கள் அங்கு அதிகம். அதைக் குறித்து கேள்விப்படாதவர் அவர்களில் யார் இருக்கக்கூடும். தான் கிறிஸ்து என்று அவர்கள் அறியத்தக்க ஏராளமான சாட்சிகள் அங்கே ஏற்கனவே உண்டே. எனவே அவர்கள் நிந்தையை ஒரு பொருட்டாக எண்ணவில்லை என்றே தோன்றுகிறது.

ஆகக் கூடின வேதனை:-

அடுத்து நாம் கவனத்தில் கொள்ளும் காரியம் அவர்கள் இயேசுவிடம் கேட்ட கேள்வியில் அடங்கியிருக்கிற எதிர்பார்ப் பற்றியதாகும்.அதுவும் ஒன்று போலவே இருந்திருக்கிறது. அ "உன்னை நீயே இரட்சித்துக் கொள்" என்பதாகும்.அதாவ நாங்கள் எங்களாலான மட்டும் உனக்கு எதிராக எவ்வளவு செய் முடியுமோ அவ்வளவும் செய்து, நீ கீழே இறங்கி வர முடியாதபடி

உன்னை சிலுவையிலும் அறைந்து விட்டோம். நீ இனி மேல் உயிர் பிழைக்கவும் வழி இல்லை.உன்னிடம் தெய்வீகம் இருந்தால் அந்த தெய்வீக வல்லமையினால் நீ உயிர் பிழைத்து சிலுவையிலிருந்து கீழே இறங்கி வந்து உன்னை நீயே இரட்சித்துக் கொள் என்பது தான் அவர்களின் அறை கூவல். நிந்தனையுமாகும்.

இவ்விதமான சூழ்நிலையின் வார்த்தைகளினூடே இடது பக்கக் கள்ளன் ஒருபடி மேலே சென்று உன்னையும் எங்களையும் இரட்சித்துக் கொள் என்று கேட்டான். வலது பக்கம் மற்றும் இடது பக்க கள்ளர்கள் யார் யார் அவர்கள் பெயர் என்ன என்பதை வரலாறு கூறும் பின்னணியிலிருந்து அறிய முடியும். அது தவிர வேத வசனங்களின் ஆவிக்குரிய சிந்தனை மூலமாக வலது பக்க இடது பக்க கள்ளர்களில் யார் எதைப் பேசினார்கள் என நிதானிக்க முடியும். இப்போ அது ஒன்றும் அவ்வளவு தியானத்துக்கு உள்ளாக்கப்படவில்லை.

இயேசு இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கிற சரீ வேதனையையும் மன வேதனையையும் இன்னொரு வகையான அளவில் நிதானித்துப் பார்ப்போம்.இயேசுவின் விசாரணை அநியாயம், தீர்ப்பு அக்கிரமம்,வழங்கப்பட்ட தண்டனை நீதியின் படியல்ல, தீர்ப்பிட்ட பிறகு துன்புறுத்தப் பட்டது கொடுமை, தீர்ப்பின் நாளிலே தண்டனை நிறைவேற்றப்பட்டது தவறான தீர்ப்புக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

அவ்வளவு வேதனைகளின் மத்தியிலும் அவரைப் பார்த்துப் பேசின யாருக்கும் இயேசு எந்த பதிலும் கூறவில்லை அவ்வாறு அவரைப் பார்த்துப் பேசினவர்களில் இடது பக்கத்துக் கள்ளனும் உண்டு என்று நாம் ஏற்கனவே சுட்டிக் காட்டி இருந்தோம்.அதே சமயம் சிலுவையில் அறையப்பட்ட இன்னொரு கள்ளன் என்ற வார்த்தையின் படி இயேசு பேசினது வலது பக்கக் கள்ளனைப் பார்த்து தான் என அறிகிறோம்.

எனவே அந்த இரண்டு கள்ளரை மட்டும் கொஞ்சம் தனிமைப்படுத்தி அவர்களுக்குள் ஒப்பிட்டுப் பார்ப்போம். சிலுவை வேதனை என்பது மூவருக்கும் பொதுவான ஒன்று தான் ஒரேயொரு வித்தியாசம் கள்ளர் இருவரும் சிலுவை மரணத்துக்கு ஏதுவான குற்றம் புரிந்தவர்கள், ஆனால் இயேசு கிறிஸ்து மரணத்துக்கு ஏதுவான குற்றம் ஏதும் புரியவில்லையென்று பரிசுத்த வேதம் கூறுகிறது. லூக்கா 23:22

இந்நிலையில் இடது பக்கக் கள்ளனும் அவரை நிந்தித்தான் என்று கூறும்போது அவனுடைய வார்த்தைகள் எப்படி இருந்தன என்பதைக் கவனிப்போம்."நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக் கொள்." என இயேசுவைப் பார்த்து கூறினான்.பொதுவாகவே அவனது வாழ்க்கையில் தெய்வ நம்பிக்கை அற்றவனாக வாழ்ந்திருக்கிறான்.அவன் கண்டதே காட்சி , கொண்டதே கோலம் என்ற எண்ணம் கொண்டவன். வலப்பக்கக் கள்ளனுடைய கூற்று இதை உறுதி செய்கிறது.

ஆகவே இடது பக்கக் கள்ளனின் வார்த்தைகளின் விபரம் இவ்வாறு இருப்பதாகத் தெரிகிறது."எனக்குக் கடவுள் நம்பிக்கை கிடையாது. அப்படி கடவுள் ஏதும் இருந்தாலும், கடவுளுடைய நம்பிக்கையும் வல்லமையும் இவனுக்கு (இயேசுவுக்கு) இருந்தால் அவனையும் என்னையும் இரட்சிக்கட்டுமே" என்று அப்படிப்பட்ட கருத்தில் பேசுகிறான்.

அடுத்து இந்தக் கள்ளன், தான் அடைந்த தண்டனை சரியானது தான் என்றும் ஒத்துக் கொள்ளவில்லை, அந்த தண்டனையை ஏற்று அனுபவிக்கவும் விரும்பவில்லை என்றும் தெரிகிறது. ஒரு வேளை எவ்விதத்தினாலாவது இத்தண்டனையிலிருந்து விடுபட்டால் தான் விட்டு வந்த தொழிலை தொடர்ந்து செய்யும் எண்ணமே அவனை ஆட்கொண்டுள்ளது.மீண்டும் அதே குண நலனுடனே இந்த உலகத்தில் வாழ ஆசைப்படுகிறான்.கொஞ்சம் கூட அவன் மனம் மாறவில்லை.

ஆறுதலளிக்கும் வார்த்தைகள்:-

இந்த நிலையில் இன்னொரு சத்தம் இயேசுவின் செவிகளில் விழுகிறது.அந்த சத்தம் எங்கிருந்து வருகிறது? அங்கு சிலுவையில் அறையப்பட்ட வலது பக்க கள்ளனிடமிருந்து வந்தது.

அது என்ன சத்தம்..? அவன் இடது பக்கக் கள்ளனைப் பார்த்துப் பேசுகிறான், அவன் பேசின வார்த்தைகளைப் பாருங்கள். "நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படு கிறதில்லையா? நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம். நாம் நடப்பித்தவைகளுக்குத் தக்க பலனை அடைகிறோம். இவரோ தகாததொன்றையும் நடப்பிக்க வில்லையே என்று அவனைக் கடிந்து கொண்டான் லூக்கா 23:40,41

வலது பக்கக் கள்ளனின் இந்த வார்த்தைகள் இயேசுவுக்கு மிகவும் ஆறுதலாகக் காணப்பட்டது.

இதில் இன்னொரு சிறப்பு. சிலுவையிலிருந்த மூவரும் பேசியிருக்கிறார்கள். முதலில் இடது பக்கக் கள்ளன் இயேசுவை நோக்கி நிந்தித்து மட்டுமே பேசியுள்ளான். ஆனால் வலது பக்கக் கள்ளன் முதலில் இடது பக்கக் கள்ளனைப் பார்த்தும் பிறகு இயேசுவை நோக்கியும் பேசியுள்ளான்.

முதலில் வலது பக்கக் கள்ளன் இடது பக்கக் கள்ளனையும் அவனது செயலையும் கடிந்து கொண்டான். அதை இப்படிச் சொல்வோமா? ஒரு கள்ளன் இன்னொரு கள்ளனை நீதியினிமித்தமாகக் கடிந்து கொள்ளுகிறான். அவ்வாறு கடிந்து கொள்ளுதலின் பொருள் ஏராளமாக இருக்கும். ஏனெனில் பாம்பின் கால் பாம்பறியும் என்பார்களே!

இடது பக்கக் கள்ளன் இயல்பாகவே தெய்வ பய அற்றவனாக மட்டுமல்ல முரட்டு சுபாவம் கொண்டவனாகவு இருந்திருக்கிறான். தண்டனை பெற்று அதை அனுபவித்து கொண்டிருக்கும்போதும் இருதயக்கடினம் வெளிப்படுகிறது இவனுடைய இந்த வைராக்கியம் மோசேக்கு முன்பாக ஜனங்களை விடுவதற்கு மறுத்த பார்வோனின் இருதயத்தைப் போ அமைந்திருக்கிறது.

வலது பக்கக் கள்ளனின் வார்த்தைகளின் முதல் பகு இடது பக்கக் கள்ளனைப் பற்றியும், இயேசுவைப் பற்றியு தன்னைப் பற்றியும் ஆக மூவரின் நிலைப் பாட்டையும் இரத்தி சுருக்கமாக ஓர் உண்மை நிலையை விளக்குகிறது.

எதிரும் - புதிரும்

இடது பக்கக் கள்வனின் பேச்சு தரும் வெளிப்பாடு இயேசுவை நோக்கி மட்டும்	வலது பக்கக் கள்வனின் பேச்சு தரும் வெளிப்பாடு இடது பக்கக் கள்வனை நோக்கி
தெய்வ பயமற்ற வாழ்வு	தெய்வ பயம் அவனுக்குள் இருந்தது.
தண்டனை அடைந்த பின்னும் வருந்தவும் திருந்திய மனமும் இல்லை.	தண்டனைத் அவனைதிருத்தி உணர வைத்துள்ளது.
தான் செய்தது தண்டனைக் குரியது தான் என ஒத்துக் கொள்ள மனமில்லை.	தான் செய்தது தண்டனைக் குரிய குற்றம்தான் என ஒத்துக் கொள்கிறான்.
தண்டனையை அனுபவிக்க மனமில்லை.	தண்டனையை அனுபவிக்க மனதார ஏற்றுக் கொள்ளு கிறான்.
இயேசு செயல்பாடுகள் பற்றி சிந்தனை கூட சிந்திக்க வில்லை.	இயேசு தகாததொன்றும் செய்யவில்லையென புரிந்து கொண்டான்.
இயேசு அடைந்த தண்டனை பற்றியும் கண்டு கொள்ள வில்லை.	இயேசுவின் தண்டனை அநியாயமானது என்ற முடிவுக்கு வந்தான்.
இயேசுவை இகழ்ந்து பேசுகிறவர்களை மட்டும் கவனித்திருந்தான்.	இயேசுவின் முதலாம் வசனத்தையும் கவனித்திருக்கின்றான்.
அந்தப் பொல்லாதோர் கூட்டத்தில் தன்னையும் இணைத்துக் கொண்டான்.	பொல்லாதோர் கூட்டத் தோடும் இடதுபக்க கள்ளனோடு சேராதபடி விலகிக் கொண்டான்.
இயேசுவை நிந்தித்தான்.	இயேசுவை நிந்தித்த இடது பக்கக் கள்ளனை கடிந்து கொண்டான்.

இருவரும் இயேசுவை நோக்கி

நீ கிறிஸ்துவானால் என்றான்.	ஆண்டவரே என்றான்.
உன்னையும் எங்களையும் இரட்சித்துக் கொள்.	உம்முடைய ராஜ்யத்தில் வரும் போது அடியேனை நினைத்தருளும்.
சிலுவையில் மரிக்காமல் இருக்க ஆசை.	சிலுவையில் மரித்தாலும் பரவாயில்லை.
இந்த உலகில் பழைய நிலையில் வாழ விருப்பம்.	இயேசுவோடு பரலோகத்தில் வாழ விருப்பம்.
இம்மையின் வாழ்வே குறிக்கோள்.	மறுமையின் நித்திய ஜீவ வாழ்வே குறிக்கோள்.
பேச்சுக்கு விண்ணப் பத்திற்கு பதில் இல்லை.	பேச்சுக்குவிண்ணப்பத்திற்கு நல்ல பதில் கிடைத்தது.

விசுவாச அறிக்கை:-

மேற்கண்ட பட்டியலில் இரண்டு கள்ளர்களின் பேச்சுக்களில் உள்ள உட்கருத்துக்களை அறிகின்றோம். இனி வலதுபக்கக் கள்ளனின் வார்த்தைகள் இயேசுவை நோக்கி பேசப்பட்டவைகளின் மகத்துவங்களை அறிவோம்.

"ஆண்டவரே நீர் உம்முடைய இராஜ்யத்தில் வரும் போது அடியேனை நினைத்தருளும்" லூக்கா 23:42

இந்த வசனம் மிக மிக முக்கியத்துவம் வாய்ந்தது. அது மட்டுமல்ல சிறந்த சத்தியங்கள் நிறைந்தது. மேலும் வலதுபக்கக் கள்ளனின் இந்த விண்ணப்பம் தான் இயேசு இரண்டாவது வசனம் பேசுவதற்குக் காரணமாக அமைந்தது.

இரண்டு கள்ளர்களின் பேச்சு, தன்மை, நோக்கங்கள் இவற்றைப் பற்றிய பட்டியலைக் கருத்துடன் படித்தாலே புரியும்.

இவன் இயேசுவை நோக்கி முதலில் 'ஆண்டவரே' என்று அழைத்தான். இந்த அழைப்பே அவனுக்கு இயேசுவினால் கிருபை கிடைப்பதற்கு போதுமானதாகிறது. தன்னை யாரென்று விளங்கச் செய்வதிலேதானே, இயேசு மிகவும் பிரயாசப்பட்டார். அவரை தேவனுடைய குமாரன் என்று ஏற்றுக் கொள்ளாத தினாலே அறியாததினாலேதானே சிலுவையில் அறைந்தார்கள்.

"சகோதரரே நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச் செய்தீர்கள்" அப்போஸ்தலர் 3:17.

இயேசு ஒரு சமயத்திலே தன்னுடைய சீஷர்களிடத்திலே கேட்டார். ஜனங்கள் என்னை யாரென்று சொல்லுகிறார்கள்? அதற்கு சீஷர்கள், உம்மை யோவான் ஸ்நானகன், எலியா எரேமியா என்று சொல்லுகிறார்கள் என்று சொன்ன பதில் திருப்தியளிக்காமல்: நீங்கள் என்னை யாரென்று சொல்லுகிறீர்கள்? என்று கேட்டார். சீமோன் பேதுரு நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான் அப்போ இயேசு சொன்னார், மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை. பரலோகத்திலிருக்கிற என்பிதா இதை உனக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். மத்தேயு 16:13-17.

இக்கள்ளன் அவரை 'ஆண்டவரே' என அழைத்தது கர்த்தருடைய கிருபை அல்லவா?

மறுமையின் நிச்சயம்:-

"நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது....." இவ்விதமான சொற்களைப் பற்றி நாம் தியானிப்பதற்கு முன் ஒன்றை இங்கே குறிப்பிடுகிறேன். இந்த விண்ணப்பத்தை நாம் பார்க்கும் போது ஒரு சந்தேகம் வருகிறது. ஒரு திருடனால்; இயேசுவின் பிரசங்கத்தை இதற்கு முன் கேட்காதவனால்; கேட்டு விவாதிக்காதவனால் எப்படி இவ்வாறான முழு முதல் சத்தியத்தைக் குறித்துப் பேச முடிந்தது? அவனுடைய ஒவ்வொரு சொற்களும் அவ்வளவு விலையேறப் பெற்றது ஆகும்.

நிச்சயமாக தேவனுடைய முன்குறித்தலும், அழைப்பும், அநாதி தீர்மானமும், தெரிந்தெடுத்தலும், தேவனுடைய கிருபையுமே அவன் இப்படி பேசும்படியாயிற்று என்று சொல்லலாம். அவனுடைய வார்த்தைகளைப் பாருங்கள். தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்தது.

இந்த சத்தியம் மிக மிக முக்கியமானதாகும். தேவனுடைய ராஜ்யமே பரலோக ராஜ்யம். பரலோகத்தைப் பல்வேறு பெயர்களிலே அழைக்கும் உலக மக்களை நாம் அறிவோம். அப்படிப் பட்டவர்கள் அதை அடைய தெரிந்து கொண்ட பாதைகளும் வேறுபட்டதே. ஆனால் அதைக் குறித்து இயேசு சொன்ன வார்த்தைகளை நம் இருதயத்தில் ஆழமாகப் பதிய வைத்துக் கொள்வோமாக. இயேசு "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்" என்று கூறினார். யோவான்14:16.

பரலோக ராஜ்யத்தின் சரியான சத்தியத்தை மக்கள் அறிந்து அந்த சிலாக்கியத்தை இயேசுவின் மூலம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது தேவனின் திட்டம். அதை புரிய வைக்கவும் அதை ஏற்றுக்கொள்ளவும் இயேசு எடுத்துக் கொண்ட முயற்சி ஏராளம். தேவன் அதை செயல்படுத்த கையாண்ட வழிமுறைகள் வலுவானவைகளாகவும் இருந்தன. அவைகளில் ஒன்று இதோ....

முன்தூதனாகிய யோவான் ஸ்நானகனை இப்பூமியில் தோன்றச் செய்தார். அவன் பிரசங்கத்தைக் கவனியுங்கள். மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது"

மத்தேயு 3:2. அதன் பொருள் அது இயேசுவால் சமீபித்திருக்கிறது என்பதே. இந்தப் பிரசங்கம் கேட்க எளிமையாக இருந்தாலும் உட்கருத்து கடினமானதே. ஆராதனை, விசுவாசம், ஆச்சாரம், கலாச்சாரம் எல்லாம் திட்டமிட்டுபுதிய வழிக்கு மனந்திரும்புங்கள் என்பதல்லவா பொருள். அது எவ்வளவு பெரிய காரியம்?

இயேசுவும் தன்னுடைய உபதேசத்தில் முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்... மத்தேயு 6:33 என்றுதானே பிரசங்கம் செய்தார்.

பாடுகளுக்குக் கிடைத்த முதற்பலன்:-

மேலும் பரலோக ராஜ்யத்தைக் குறித்து பல பிரசங்கங்கள் மூலமாகவும், பல உவமைகள் மூலமாகவும் இயேசு வலியுறுத்தியுள்ளார். இவற்றைப் பற்றி ஏற்கனவே இயேசுவின் வார்த்தையின் மகத்துவங்கள் என்ற தலைப்பில் பட்டியல் போட்டு ஓரளவு தெளிவுபடுத்தி உள்ளேன். அவருடைய பிறப்பிலிருந்து சிலுவை மரணம் அடையப்போகும் இந்த நேரம் வரையிலும் நடைபெற்ற நிகழ்வுகள் மூலம், அந்த உபதேசத்தின் பொருளும் சத்தியமும் புரியாததினாலேதான் அன்று அவர்மேல் குற்றஞ்சாட்டினார்கள்.

ஆனால் அப்படிப்பட்ட சத்தியத்தையும் உபதேசத்தையும் தன் வாழ்நாளில் இந்த வலதுபக்கக் கள்ளன் கேட்டதில்லை உவமைகளின் உபதேசத்தையும் அதன் விளக்கங்களையு தெரிந்தவனும் அல்ல. இயேசுவின் அற்புத அடையாளங்களைப் பார்த்தவனுமாயிருந்திருக்கவும் மாட்டான்.

"இயேசுவை சிலுவையில் அறைந்தபோது மூன்றாம் மன வேளையாயிருந்தது." மாற்கு15:25. நமதுகணக்குப்படி கால ஒன்பது மணி. இந்த இரண்டாம் வசனத்தை அந்நேரத்திலிருந் ஒரு சில மணித்துளிகளில் பேசினார். அப்படியானால் அதற் முன்பாகவே வலதுபக்கத்துக் கள்ளன் தன்னுடை வார்த்தைகளைப் பேசி விட்டான். ஒரு காரியத்தி உறுதிப்படுவோம். இந்த ஒரு சில மணித்துளி நேரம் தான் இவ இயேசுவை நேருக்கு நேர் பார்த்திருக்க முடியும். அவர் பேசி முதலாவது ஒரேயொரு வசனத்தை மட்டும் தான் அவ கேட்டிருக்கிறான்.

அவ்வளவு குறைந்த நேரப் பார்வையிலும், குறைவாகக் கேட்ட வார்த்தைகளின் சிந்தனையிலும் வலதுபக்கக் கள்ளனின் வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தைகளைப் பாருங்கள் "ஆண்டவரே உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்" இந்த விண்ணப்பத்தினாலேதான் இயேசு இரண்டாவது வசனத்தைப் பேசினார். "இன்றைக்கு நீ என்னுடனே கூட பரதீசிலிருப்பாய்"

என்ன மகிமையான காரியம். எவ்வளவு மேன்மையான பாக்கியம்? இந்த வலதுபக்கக் கள்ளன் ஒரு சாதனை படைத்துவிட்டான். அதை இனியாரலும் முறியடிக்க முடியாது. அது என்னவென்றால் இயேசு இந்த பூலோகத்துக்கு வந்து எந்த நோக்கத்துக்காக இத்தனை பாடுகளையும் அனுபவித்தாரோ அதற்கு "இயேசுவுக்குக் கிடைத்த முதற்பலன்" இந்த வலதுபக்கக் கள்ளனே.

இராஜ்யத்தின் சுவிசேஷமே பிரதானம்:-

அவனுடைய இந்த விண்ணப்பத்தின் அறிக்கை நம்மெல்லாருக்கும் ஒரு மாதிரிக்காகவும், எச்சரிப்புக்குமாக அமைந்துள்ளது என்பதை யாரால் மறுக்கக் கூடும். இயேசுவின் பேரிலும் அவர் மூலமாகவும் ஒருவனுக்கு எந்த அளவு விசுவாசம் இருக்க வேண்டுமோ அது அவனுக்குள் இருந்தது அப்போது வெளிப்பட்டது. கர்த்தருடைய பரிசுத்தமுள்ள நாமம் மகிமைப்படுவதாக.

நான் ஏன் இந்த கள்ளனைக் குறித்து இவ்வளவு தூரம் பெருமையுடன் குறிப்பிடுகிறேன் என்றால் ராஜ்யத்தின் சுவிசேஷம் அவ்வளவு முக்கியமானது. அதனால் தான் இயேசுவும் அதை வலியுறுத்தினார். அது அப்போது அக்கள்ளனுக்கு இருதயத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்று நான் விசுவாசிக்கிறேன். அதுவும் தேவகிருபையே.

அதே சமயம் இன்றைய கிறிஸ்தவத்தின் நிலையை சற்று நினைத்துப் பார்ப்போம். பெரும் பாலும் ஊழியத்தின் மத்தியிலும் ஊழியர்கள் மத்தியிலும், விசுவாசிகள் என்று சொல்வோர் மத்தியிலும் ராஜ்யத்தைக் குறித்த சுவிசேஷம் எப்படி இருக்கிறது? ஒரு வேளை பேச்சளவிலே அது நிற்கிறதை காணமுடியும். அதற்கான முக்கியத்துவம் செயல்பாடுகளிலே காணப்படவில்லையே.

"தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல, பெலத்திலே உண்டாயிருக்கிறது" 1கொரிந்தியர் 4:20.

கிறிஸ்தவம் மலிவான நோக்கத்தை மையப்படுத்தியே வழங்கப்பட்டு வருகிறதாக நாம் நினைக்கத் தோன்றுகிறது. சுயவளர்ச்சி, தன்னை முன்னிலைப்படுத்துதல், சுய பெருமை இப்படிப்பட்டவைகள் பட்டவர்த்தனமாக வெளிப்படுவதை நாம் காண்கிறோம். ராஜ்யத்தைக்குறித்த சுவிசேஷப் பணி நேரிடையாகவோ, மறைமுகமாகவோ குறைக்கப் பட்டுக் கொண்டுவருகிறது.

"தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்கு சிருஷ்யானது மிகுந்த ஆவலோடே காத்துக் கொண்டிருக்கிறது" அதுவுமல்லாமல் ஆவியின் முதற்பலனை பெற்ற நாமும் கூட நம்முடைய சரீரமீட்பாகிய புத்திர சுவீகாரம் வருகிறதற்குக் காத்திருந்து நமக்குள்ளே தவிக்கிறோம்" ரோமர் 8:19,23. இந்த வசனங்களின் பொருள் என்ன? அவை நமக்குப் போதிப்பவை எவை?

இவை சம்பந்தப்பட்ட இன்னொரு காரியத்தை இயேசு சொன்ன விதத்தைக் கவனியுங்கள். "உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன" என்று சீஷர்கள் கேட்ட போது இயேசு சொன்னவற்றைப் பாருங்கள். அநேகர் வந்து என் நாமத்தைத் தரித்துக் கொண்டு நானே கிறிஸ்து என்று சொல்லி அநேகரை வஞ்சிப்பார்கள். யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள். ஆனாலும் முடிவு உடனே வராது.

பஞ்சம், நோய், பூமியதிர்ச்சி போன்றவைகள் வேதனைகளுக்கு ஆரம்பம். அதேசமயம் ராஜ்யத்தினுடைய இந்த சுவிசேஷம் பூலோக மெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாக பிரசங்கிக்கப்படும். அப்போது முடிவு வரும்.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! இன்று நடைபெறுகிற அநேக பெருங்கூட்டங்களிலானாலும் சரி, பிரசங்கங் களிலானாலும் சரி மேலே குறிப்பிட்டப்பட்ட காரியங்கள் எவ்வாறு கையாளப்படுகின்றன என்பதை உங்களுடைய சிந்தனைக்கே விட்டு விடுகிறேன்.

இயேசுவுக்கு ஒரு ராஜ்யம் உண்டென்றும். இப்போது மரிக்கப் போகிற இயேசு எப்படியோ(உயிர்த்தெழுந்து) அவர் திரும்ப வருவாரென்றும் முழுநிச்சயமாய் நம்பி அக்கள்ளன் விண்ணப்பித்ததினால் அவன் விசுவாசத்தில் வல்லவனானான். மேலும் அந்த ராஜ்யத்தின் பாக்கியத்தை அவரேதரமுடியும் என்றும், அதற்காக தன்னை தாழ்த்தி அடியேனை நினைத்தருளும் என்று பிரார்த்தித்தது மேன்மையிலும் மேன்மையாகும். அந்தத் தாழ்மையினிமித்தமாகவே அவர் தமது திருடையை அளித்துள்ளார்.

இயேசு சிலுவையில் சொன்ன ஏழு வசனங்களிலும், இந்த இரண்டாவது வசனத்தில் மட்டும் இயேசுவின் வார்த்தைகளை விட கள்ளர்களின் வார்த்தைகளை சற்று கூடுதலான அளவில் தியானத்துக்கு எடுத்துக் கொண்டேன் என்பது நான் அறியாதது அல்ல. ஆனால் அவை நமக்குத் தேவை என்பதினாலேயே அப்படி அமையப் பெற்று விட்டன.

இன்னொரு விசேஷமும் இதில் பொருந்தியுள்ளது. இயேசுவும், தானும் இப்போசிலுவையில் மரிக்கப்போவது நிச்சயம். அதன்பின் ஒரு நாளில் திரும்பவருவார் என்பதுடன், தனக்கும் மரித்த பின்பு ஒரு வாழ்வு ஒன்று உண்டு என்பதையும் இந்தக் கள்ளன் விசுவாசித்திருந்தான் என்பது புரிகிறது.

இப்போது இயேசு தன்னை ஆண்டவரே என்று அழைத்த வலது பக்கக்கள்ளனை நினைத்து மிகுந்த ஆனந்தம் அடைந்திருப்பார். ஏனெனில் தன்னோடு இருந்த சீஷர்கள் கூட இவ்விதமான விசுவாச அறிக்கையோடு கூடிய விண்ணப்பத்தை ஏறெடுக்கவில்லை. ஆனால் மரண தண்டனை பெற்ற ஒரு கள்ளன் மனம் திரும்பி இப்படி விண்ணப்பித்தது இயேசுவுக்கு கட்டற்ற மனநிறைவே. இயேசு சிந்தின இரத்தத்தின் முதற்பலனாகக் கிடைத்தவன் இவனே. அதனால் தான் அவன் கேட்டுக் கொண்டதற்கும் அதிகமான ஆசீர்வாதத்தை அவனுக்கு அருளிச் செய்தார்.

அது எப்படியென்றால் இயேசுவை நோக்கி "நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது...." என்று தான் வலது பக்கக் கள்ளன் கேட்டான். ஆனால் இயேசுவோ, மகனே உன்னுடைய

வேண்டுதலுக்கான பதிலை நீ பெற்றுக் கொள்கிறதற்கு அதிக காலம் காத்திருக்க வேண்டாம். இதோ இப்பொழுதே பதில் தருகிறேனென்று இரண்டாம் வசனத்தை உடனே பேசினார். மேலும் அந்த பதிலில் அவன் எதைத்தருகிறதற்குக் கேட்டானோ அதைத்தருகிறதற்கும் சந்தோஷத்தோடு இயேசு பதில் கூறினார். அதை நான்வரும் போது அடையப் போகிறதற்கு அச்சாரத்தை நீ இன்றே அனுவிப்பாய் என்றும் இயேசு கூறினார். இது கூடுதல் ஆசீர்வாதமாகும்.

"நாம் வேண்டிக் கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய்... நமக்குச் செய்ய வல்லவர்" எபேசியர்3:20.

இயேசுவின் வார்த்தைகளின் பொருள் இவ்வாறு இருக்கிறதாகப் பாவித்து சுவைப்போம். ஆம் என்மகனே என்னுடைய ராஜ்யத்திலே நான் வரும்போது... என்று, வருங்காலத்தைக் குறித்து உனக்கு நான் பதில் தருவதை விட இதோ நீ உயிரோடு இருக்கும் இப்பொழுதே நிகழ்காலத்தே அந்த நிச்சயத்தைப் பெற்றுக்கொள், என்பதாக அவரின் பதில் அமைந்துள்ளது.

இவ்வசனம் நமக்கு விளங்கச்செய்கிற இன்னும் சில மகத்துவங்களைப் பார்ப்போம்.

<u>சிறப்புத் தன்மை:-</u>

கிறிஸ்தவர்களிலே நாம் எந்தப்பிரிவைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவரவர் தங்களுக்குள்ளே சில ஒழுங்கு முறைகளை ஏற்படுத்தி இருக்கிறோம். காலாகாலத்தில் அந்தந்த சபைகளிலே அந்த அந்த முறைமைகள் மக்களால் கடைப்பிடிக்கப்பட வேண்டும். அவைகள் அந்தந்த சபைகளின் சட்டதிட்டங்கள் என்ற பெயரால் வழங்கப்பட்டு வருகின்றன. அவைகளுக்கு உட்பட்டவர்களைத்தான் நாம் சபைகளில் வைத்திருப்போம். இப்போ ஒருகேள்வி இந்த வலதுபக்கக் கள்ளன் எந்த பிரிவு சபையைச் சேர்ந்தவன்? எந்த சட்டதிட்டங்களைக் கடைப் பிடித்தவன்?

தவிரவும் சபைகளில் ஆவிக்குரிய வளர்ச்சிக்கான நடை முறையில் சில சாக்கிரமெந்துகள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தக் கள்ளன் அவைகளிலும் பங்குபெறவில்லையே. ஆம்

இவ்விதமான நிலையின் சிறப்புக்கு ஒரேயொரு காரணம், இது இயேசுவின் நேரடித் தேர்வு என்று நாம் எண்ணலாம். இக்கள்ளனும் இயேசுவும் சந்தித்தது சிலுவையில் தொங்கிக் கொண்டு இருக்கும் போது.. இருவரும் பேசின அந்த நேரத்தை கவனிப்போம், பூமியிலும் இல்லை, வானத்திலும் இல்லை அந்தரத்தில் தொங்கிக் கொண்டு இருக்கும் போது.. என்னே விந்தை கர்த்தருடைய பரிசுத்தமுள்ள நாமத்துக்கு ஸ்தோத்திரம்.

எனக்குள் ஒரு சிந்தனை. சத்துருக்களுக்கும் பாவிகளுக்கும் மன்னிக்கும் படி பிதாவிடம் விண்ணப்பித்தவர் இயேசு. இப்போது சற்று நேரத்துக்குள்ளாக முதலாம் வசனத்தை விட வேறுபட்டு இந்த இரண்டாம் வசனம் அமைகிறதுபோல் இருக்கிறதே. ஆம் இன்றைக்கு நீ என்னுடனே கூட பிரதீசிலிருப்பாய் என்று பாவ மன்னிப்புபெறுவோர் அடையும் பாக்கியத்தை எப்படி உறுதியாகச் சொன்னார்.

ஒருவேளை இப்படியும் நடந்திருக்கலாம். இதுவும் என்னுடைய விசுவாசமாகும். இயேசு சிலுவையில் தொங்கினபோது அதைக் காணக்கூடாமலும் சகிக்கக்கூடாமலும் சிருஷ்டிகள் தவித்துக் கொண்டிருக்கும். காற்றும் கூட தன்னுடைய பங்காக விரைந்து சுழன்று ஒருமுறை வீசியிருக்கலாம். அப்போது இயேசுவின் சரீரத்திலிருந்து சிந்திய இரத்தத்தில் ஒரு சொட்டு இந்த வலதுபக்கக் கள்ளன் மேல் விழத்தக்கதாக காற்று செயல்பட்டிருக்கும். சுத்திகரிக்கப்பட்டிருப்பான். இந்த விபரத்தை நமக்கு 1யோவான் 1:7 மீண்டும் நினைவுபடுத்துகிறது.

இயேசுவின் வார்த்தைகளின் படி பிறகு என்ன நடந்திருக்கும்? எல்லோருக்கும் உள்ள ஒழுங்குபோல மரித்தோரின் ஆத்துமா பாதாளம் செல்லும். அங்கு இருபிரிவு, இருதட்டுகள். ஒன்று பரிசுத்தவான்களின் ஆத்துமாக்கள் இளைப்பாறும் இடம் பரதீசு, இன்னொன்று பாவிகளின் ஆத்துமா சேர்ந்திருக்கும் இடம் அது ஆதீசு, இவ்விபரத்தை இயேசு சொன்ன ஐசுவரியவான்-லாசரு உவமையிலிருந்து புரிந்து கொள்ளலாம். இயேசு பரத்துக்கு எழுந்தருளினபோது அவரோடுகூட பரதீசையும் பரலோகத்துக்கு இடம் மாற்றியதாக ஒரு குறிப்புரையில் நான் படித்ததுண்டு நிற்க.

எப்படியும் இயேசு பேசின இந்த இரண்டாம் வசனத்தின் மூலமாக இப்படித்தான் நடந்திருக்கும். இயேசு எப்போது தன் ஜீவனை விட்டாரோ அதே நேரத்தில் அந்த நொடியிலேயே வலதுபக்கக் கள்ளனின் ஜீவனும் போயிருந்திருக்கும்.

அந்த நேரத்தில் இயேசுவை ஆவலோடு எதிர்பார்த்து அவரை வரவேற்க பரதீசு ஆயத்தப்பட்டுக்கொண்டிருக்கிறது என வைத்துக்கொள்வோம். இதோ இயேசு பரதீசுக்குள் பிரவேசிக்கிறார். ஆம் அப்போது அவர் வலதுபக்கக் கள்ளனின் கரத்தைப் பிடித்துக்கொண்டு பிரவேசித்திருப்பார், அந்த ஒருவனின் நிமித்தமாக தூதர்கள் மத்தியில் மிகுந்த சந்தோஷம் உண்டாகியிருக்கும். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

இந்த இரண்டாம் வசனம் தரும் பாடம்

1. நாம் பாவி என்று ஒத்துக் கொள்ள வேண்டும்

எல்லா மனிதர்களைக் குறித்தும் பரிசுத்த வேதாகமம் கூறுவதைப் பாருங்கள். "எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களானோம்" ரோமர் 3:23.

வலதுபக்கக் கள்ளனின் வார்த்தைகளிலிருந்து ஒரு தெளிவைப் பெற்றோம். அவன் சொன்னது "இவரோ(இயேசுவோ) தகாத தொன்றும் நடப்பிக்க வில்லையே" ஆம் அது ஒரு சத்தியம். "அவர் பாவம் செய்யவில்லை" 1பேதுரு 2:22.

இவ்விதமான சத்தியங்களை நாம் ஏற்றுக் கொண்டு கர்த்தருக்கு முன்னாக வரவேண்டும்."நாம் பாவம் செய்யவில்லை என்போமானால் நாம் அவரை பொய்யராக்குகிறவர்களா யிருப்போம். அவருடைய வார்த்தை நமக்குள் இராது" 1யோவான் 1:10.

2. பாவத்தை (இயேசுவிடம்) அறிக்கை செய்து விட்டு விட வேண்டும்:-

"தன்பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான். அவைகளை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான்." நீதிமொழிகள் 28:13.

வலதுபக்கக் கள்ளன் தன் வாழ்வில் பாவம் செய்தவன் என்று ஏற்றுக் கொண்டு இயேசுவிடம் விண்ணப்பித்தான். பாவத்தை உணர்ந்தான் என்பதனாலே அறிக்கையிட்டான் என்ற பொருளில் எடுத்துக் கொள்வோம். அவன் விட்டுவிட்டானா என்றால்; அவனுடைய வாழ்வு முடிவுபெறப் போகிறதால் அதை விட்டு விட்டவனாகவே இயேசுவின் பார்வையில் பாவிக்கப்பட்டுள்ளான்.

மேலும் இளைய குமாரனுடைய பாவ அறிக்கையில் அதைத்தான் இயேசு உவமையாகக் கூறினார் "தகப்பனே பரத்துக்கு........பாத்திரன் அல்ல" லூக்கா 15:21.

இன்னுமொரு வசனத்தைக் கவனியுங்கள். "அவராலேயன்றி (இயேசுவாலேயன்றி) வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும் படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவில்லை" அப்போஸ்தலர்.4:12

3.மறுமை - நித்தியத்தைப் பற்றி நிச்சயம் வேண்டும்:-

அந்நாட்களிலே யோபு கூறிய வார்த்தை மிகவும் உன்னதமானது "என்மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசி நாளில் பூமியின் மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன்" யோபு19:25.

கிறிஸ்தவ வாழ்க்கையின் மிக முக்கிய பங்களிப்பு தேவன் பேரிலும் அவருடைய வசனத்தின் பேரிலும் நாம் கொள்ளும் விசுவாசம். "காணப்படுகிறவைகளை அல்ல, காணப் படாதவைகளை நோக்கி இருக்கிற நமக்கு.... காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள். காணப்படாதவைகளோ நித்தியமான வைகள். 2.கொரிந்தியர் 4:17,18.

யார் என்னவிதமாகச் சொன்னாலும் நமக்கு வேதம் சொல்லுகிறது "அன்றியும் ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத் தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப் பட்டிருக்கிற படியே." எபிரேயர் 9:27.

"விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு நித்திய ஜீவனைப் பற்றிக்கொள். அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்" 1தீமோத்தேயு 6:12.

மூன்றாம் வசனம்

யோவான் 19:26,27
ஸ்திரீயே அதோ உன்மகன் - அதோ உன் தாய்

இது நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்து பேசின மூன்றாவது வசனமாகும். இருவரோடு பேசப்பட்ட வசனம் என்பதை நாம் அறிகிறோம். இயேசு கூறிய இந்த வசனத்துக்கு முன்பகுதியில் இப்படியாக எழுதப்பட்டுள்ளது. "அப்பொழுது இயேசு தம்முடைய தாயையும் அருகே நின்ற தமக்கு அன்பாயிருந்த சீஷனையும் கண்டு"... என்று எழுதப்பட்டுள்ளது.

<u>யார் அந்த இருவர்:-</u>

இந்த இரண்டு பேரும் யார் என்பதை இயேசுவே அடையாளப் படுத்தினதை நாம் அறிகிறோம். ஒன்று தாய். இன்னொன்று சீஷன். இந்த இருவரையும் கண்டு என்று வசனம் கூறுகிறபடியால் இயேசுவால் காணக் கிடைக்கப் பெற்ற இருவரின் தன்மை என்ன? அதன் சிறப்பு என்ன? அவர்கள் இருவரையும் கண்டு இயேசு இந்த மூன்றாம் வசனத்தைப் பேசக் கூடிய அளவ அவரைத் தூண்டினது எது? இவற்றை நாம் முதலில் சிந்திப்போம்.

இயேசு சிலுவையில் மகா வேதனையை அனுபவித்துக் கொண்டிருந்த நேரம். அதை இருதய சுத்தத்தோடு நோக்கினால் யாரும் சகிக்கக் கூடியதாக இல்லை. உள்ளங்காலில் இருந்து உச்சந்தலை வரை ஆங்காங்கே காயங்களில் இரத்தந்தோய்ந்த கோர காட்சி. முகத்தைக் கூட சரியாக அடையாளம் காண முடியாத அளவு அலங்கோலம். ''அவருக்கு அழகுமில்லை சௌந்தரியமுமில்லை. அவரைப் பார்க்கும் போது நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது " ஏசாயா 53:2

ஒரு உண்மையை இந்த நேரத்தில் உறுதிப்படுத்துவோம். இவ்விதமான கோரக் காட்சியைப் பார்ப்பவர்களில் மிக அதிகமாக பாதிக்கப் படக் கூடியவர்கள் யாராக இருக்கக்கூடும் ? யார் யார் அவரிடத்தில் மிக அதிகமாக அன்பு கூருபவராக இருப்பார்களோ அவர்களே அதிக பாதிப்புக்குள்ளாவார்கள். அப்படியாக ஒருவர் மீது அதிக அன்பு பாராட்டுபவர்கள் அவரின் தாயாகத் தான் இருப்பார்.

இப்போதும் இங்கே அந்த நிலையைத் தான் காண்கிறோம். இரண்டு பேர்கள் மட்டுமே மிக அதிக அன்பு கூருபவர்களாக இருந்திருக்கிறார்கள். ஒன்று இயேசுவின் தாய் மரியாள், இன்னொன்று தமக்கு அன்பாயிருந்த சீஷன் என்பதோடு இயேசுவினிடத்தில் மிகவும் அன்பாயிருந்த சீஷன் என்ற உண்மையையும் சேர்த்துக் கொள்வோம். அவன் பேர் யோவான்.

அந்த இருவரைப் பற்றியும் சற்று கூடுதலாக நினைவு படுத்திக் கொள்வோம். அந்த இருவரைப் பார்த்து இந்த மூன்றாம் வாசகத்தைக் கூறுவதற்குப் பொதுவான காரணம் உண்டு. அவர்கள் இயேசுவின் பேரிலும் இயேசு அவர்கள் பேரிலும் ஒருவருக்கொருவர் கொண்டிருந்த அன்பே.

தாய் மரியாளின் நிலை:-

இயேசு பிறப்பதற்கு முன் அவளிடம் அறிவித்த தூதன் கிருபை பெற்றவளே வாழ்க. கர்த்தர் உன்னுடனே இருக்கிறார். ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள். பயப்படாதே அவர் பெரியவராயிருப்பார். - அரசாளுவார். அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது." லூக்கா 1:28-33 இப்படிப்பட்ட மேன்மையும் மகிமையும் நிறைந்த வார்த்தைகள் ஏராளமானவை. அந்த வார்த்தைகளெல்லாம் என்னவாயிற்று? இப்படி அநியாயமாய் மரிக்கப் போகிறாரே என எண்ணி கலங்கி நிற்கிறாள்.

இயேசு பிறந்த பொழுது வயல் வெளியில் மந்தையைக் காத்துக் கொண்டிருந்த மேய்ப்பர்களிடம் "கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்" என்று கர்த்தருடைய தூதன் அறிவிக்க பரம சேனையின் திரள் அத்தூதனுடனே தோன்றி துதித்தார்கள். அதைக் கேட்ட மேய்ப்பர்கள் பெத்லகேம் சென்று மரியாளையும் பிள்ளையையும் கண்டு தங்களுக்குச் சொல்லப்பட் சங்கதிகளைப் பிரசித்தம் பண்ணினார்கள். லூக்கா 2:11,13,15,17. அந்த பெருமை இது தானோ என்று மரியாள் ஏங்கி நிற்கிறாள்.

இயேசு பிறந்த எட்டாம் நாளிலே அவரை எருசலேம் தேவாலயத்துக்குக் கொண்டு சென்றபோது, சிமியோன் என்ற பேர் கொண்ட மனுஷன் பிள்ளையைக் கைகளில் ஏந்தி ஆண்டவரை நோக்கி "உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது" என்று சொல்லி தேவனை ஸ்தோத்தரித்தானே ! அது இந்தப் பாடுகளுக்காகத் தானா என புலம்பி நிற்கிறாள்.

இயேசு பிறந்து ஒரு சில மாதங்களில் கிழக்கிலிருந்து வந்த சாஸ்திரிகள் ஒரு நட்சத்திரம் வழி காட்ட எருசலேமுக்கு வந்து யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே என்று கேட்டனர். பின்னும் நட்சத்திரம் வழி நடத்த இயேசு பிறந்திருந்த பெத்லகேமில் பிள்ளை இருந்த வீட்டுக்குள் பிரவேசித்து பணிந்து கொண்டு காணிக்கைகளை வைத்தார்கள். மத்தேயு 2:1,2,5,11. அந்த காரியங்களையெல்லாம் எண்ணி மரியாள் இனம் புரியாமல் தவித்து நின்றாள்.

தன்னுடைய பன்னிரெண்டாவது வயதிலே எருசலேம் பண்டிகைக்குச் சென்றிருந்தார். அப்போது தனது பெற்றோரையும் மறந்து தேவாலயத்திலே பிதாவுக்கடுத்த காரியத்திலே விவாதித்து, சிறுவயதிலே எத்தனை ஞானமாய் வினவினார் என்பதை நினைத்துப் பெருமூச்சு விட்டாள்.

தூதனால் முன்னறிவிக்கப்பட்ட இயேசு இப்போ சிலுவையில் தொங்குகிற அந்தக்காட்சியை அந்தத் தாயால் கண்டு சகிக்க முடியவில்லை. இப்படி ஒவ்வொரு சம்பவங்களையும் முன் நடந்த காரியங்களையும் நினைத்து விம்மி விம்மி அழுதாள்.

எத்தனைபேர் உள்ளத்துக்கு ஆறுதலாக அவர் செய்த உபதேசங்களுக்குக் கிடைத்த பலன் இதுதானோ என எண்ணி வேதனைப்பட்டாள்.

அநேகருடைய வியாதிகளையும் குணமாக்கி, ஒரு சிலரை மரித்தபின் உயிரோடேயும் எழுப்பினாரே அப்படிப்பட்ட மகன் இப்போது தனது உயிரை விடப்போகிறார். அதை எண்ணி எண்ணி மரியாள் திக்கு முக்காடுகிறாள்.

ஒரு பிள்ளையின் மரணத்தை ஒரு தாயால் தாங்க முடியாது. அதினிமித்தம் பெற்றவளின் குடல் துடிக்கும். 1 ராஜாக்கள் 3:26 ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல் தன் பாலகனை மறப்பாளோ? ஏசாயா 49:15

இப்படியாக இயேசுவைக்குறித்த நற்செய்திகளும் நற்செயல்களும் மரியாளின் மனதில் மாறி மாறி நினைவுக்கு வருகின்றன. அவை மேலும் மேலும் அவளுடைய வேதனையைப் பெருக்கிக் கொண்டே போயின. அப்போது நடைபெற்ற செயல்களின் ஊடே சொல்லப்பட்ட ஒரு செய்தி பளிச்சென ஒரு தாக்கத்தை உண்டாக்கியது.

இயேசு பிறந்த எட்டாம் நாளிலே எருசலேம் தேவாலயத்தில் சந்தித்த சிமியோன் மரியாளை நோக்கி "உன் ஆத்துமாவையும் ஒரு பட்டயம் உருவிப் போம்" லூக்கா 2:25.35. என்று சொன்னதை நினைத்து அது இது தானோ என படபடத்து நின்றாள்.

அத்தோடு இன்னொரு வேதனையும் அவளுடைய நெஞ்சை அடைத்தது. இயேசு, அங்கு சத்துருக்களாகக் காணப்பட்ட பெருங் கூட்டத்திற்காக மன்னிக்கும்படி ஒரு ஜெபத்தை ஏறெடுத்தார். அதையடுத்து அவருடைய வலது பக்கத்தில் தொங்கிக் கொண்டிருந்த கள்ளனுக்கும் நல்ல வார்த்தைக் கூறினார். ஆனால் அவரைப் பெற்றெடுத்து முப்பது வருஷகாலம் பாரமரித்து வளர்த்த தாயாகிய எனக்கு ஒரு வார்த்தையும் கூறவில்லையே. அப்படியானால் சகல ஜனங்களைப் போல அவர்களில் நானும் ஒருத்திதானா? அல்லது அந்த கள்ளனுக்குக் கிடைத்த ஆறுதல் கூட நான் பெறத் தகுதி இல்லாதவளா? என்ற துக்கம் தொண்டையை அடைத்தது.

மரியாளை நோக்கிப் பார்க்கும் இயேசு:-

இப்படியே வைத்த கண் வாங்காமல் மரியாள் இயேசுவையே பார்த்துக் கொண்டு நிற்கிறாள். இத்தனை நேரமும் அவர் சூழ நின்று ஆர்ப்பரித்த கூட்டத்தைப் பார்த்தார். பரம பிதாவை நோக்கி விண்ணப்பித்தார். அதன் பின் அருகிலிருந்த இரண்டு கள்ளர்களையும் பார்த்தார். வலதுபக்கக் கள்ளனோடு பேசினார். இதோ இப்போது அவருடைய கண்கள் அந்தக் கூட்டத்தின் மத்தியில் யாரோ ஒருவரைத் தேடுகிறது.

ஆம் இயேசு தேடுகிறதை மரியாள் கவனித்துக் கொண்டாள். ஒருவேளை அவர் தன்னைத்தான் தேடுகிறாரோ என எண்ணியவள் ஒருவகை ஏக்கத்தோடு எதிர்பார்ப்புடன் நின்றாள். அங்கும் இங்கும் சுழன்ற கண்கள் இப்போ மரியாள் நிற்கும் இட நோக்கி வருகின்றன. இதோ இயேசுவின் கண்கள் அவருடைய தாயார் தவித்துக்கொண்டு நிற்பதைக் கண்டு கொண்டன.

சுற்றிவந்த கண்கள் தன்னையே பரிதாபத்துடன் பார்ப்ப மரியாள் கண்டாள். கண்களில் கண்ணீர் தாரை தாரையாக வடி தன்னுடைய மார்பிலே அடித்துக் கொண்டு இயேசுவை நோக் "என் மகனே" எனக் கதறுகிறாள். ஒருவேளை அக்குர

வெளியே கேட்க வில்லலையோ? அவருடைய நாவும் வறண்டு போயிற்றோ? அவளுடைய உதடுகள் மட்டும் அசைவதைப் பார்க்க முடிகிறது.

சீஷர்களில் ஒரே ஒரு யோவானின் நிலை:-

இப்போது அங்கு நின்ற அவருடைய சீஷன் யோவானுடைய நிலையைக் குறித்து நாம் சிந்திப்போம்.

1. இரவு முழுவதும் பிரயாசப் பட்டும் கடலில் ஒன்றும் மீன் பிடிக்காமல் சீமோன் வலையைஅலசிக் கொண்டிருந்தான் அப்போது இயேசுவின் வார்த்தையின்படி மீண்டும் படவை ஆழத்திலே தள்ளிக் கொண்டு போய் வலைகளைப் போட்டு இரண்டு படவுகள் அமிழத்தக்கதாக மீன்களைப் பிடித்தனர். அப்படிப் பட்ட வல்லமையைக் கண்டு பிரமித்தவர்களில் ஒருவன் யோவான். லூக்கா 5:4

2. இயேசு அழைத்த போது தங்கள் படவுகளை கரையிலே கொண்டு போய் நிறுத்தி எல்லாவற்றையும் விட்டு அவருக்குப் பின் சென்றவர்களில் இந்த யோவானும் ஒருவன். யோவான் 5:7,10,11

3. இயேசுவுக்கு அன்பாயிருந்தவனும் இராப்போஜனம் பண்ணுகையில் அவர் மார்பிலே சாய்ந்து “ஆண்டவரே உம்மைக் காட்டிக் கொடுக்கிறவன் யார் என்று கேட்டவனுமாகிய சீஷன் தான் அவன். யோவான் 21:20.

இயேசுவின் சிலுவையினருகே நின்றிருந்த திரள் கூட்டத்தில் அவர்பேரில் உண்மையான அன்பு கொண்டிருந்த மிகச்சிலரே நின்று கொண்டிருந்தனர்.

இந்த நேரத்தில் கூடுதலாக ஒன்றைப் புரிந்து கொள்ளுவோம். இயேசுவின் சிலுவையினருகே அவரிடம் அன்பு கூர்ந்தவர்களில் நான்கு அல்லது ஐந்து பெண்கள் மட்டும் நின்றிருக்கிறார்கள். ஆனால் அவர்களுடன் இந்த யோவான் மட்டும், ஒரே ஒரு ஆண் நின்றிருக்கிறான்.

இயேசுவோடு கூட மூன்றரை ஆண்டு காலம் உண்டு, உறங்கி, உபதேசம் பெற்று, சேர்ந்து வாழ்ந்த மற்ற சீஷர்கள் அங்கு இல்லை. அவர் கொடுத்த அதிகாரத்தினால் தாங்களும்

அற்புத அடையாளங்களைச் செய்து அவரைப் பின்பற்றின
ர்களில் இந்த யோவான் மட்டுமே அங்கு நின்றான். மரித்துப்
பான யூதாஸ் தவிர மற்ற பத்து பேரும் அங்கு இல்லை. மற்ற
ஷர்கள் பயந்து அவரை விட்டு ஓடிப் போய் விட்டார்கள் என்றே
சால்ல வேண்டும்.

மறு ஜென்ம காலத்திலே மனுஷகுமாரன் தம்முடைய
கிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும்போது என்னைப்
ன்பற்றின நீங்களும் இஸ்ரவேலின் பன்னிரண்டு
காத்திரங்களையும் நியாயந் தீர்க்கிறவர்களாக பன்னிரண்டு
ங்காசனங்கள் மேல் வீற்றிருப்பீர்கள் என்ற உத்திரவாதம்
பற்றவர்களில் பதினொரு பேரைக் காணவில்லை. மத்தேயு
:28

மரிக்க வேண்டியதாயிருந்தாலும் மறுதலிக்க மாட்டேன்
ன்று சொன்ன பேதுரு அங்கு இல்லை. மத்தேயு 26:35

அவரோடே கூட நாமும் மரிக்கும் படிக்கு யூதேயாவுக்குப்
ாவோம் என்று சொன்ன தோமாவும் அங்கே இல்லை.
ாவான் 11:16

தங்களுடைய குடும்பம், தொழில், வீடு, வாசல்
த்தனையையும் விட்டு அவருக்குப் பின் சென்றவர்கள்
ங்கேயோ சென்று விட்டார்கள். அவர்கள் மறுமையிவல்
றத்தனையாய் திரும்பப் பெறுவது எப்படியோ? மத்தேயு 19:29

மனிதர்களைப் பிடிப்பதற்காக அழைக்கப்பட்டவர்கள் என்ன
னார்கள் என்றே தெரியவில்லை. மத்தேயியு 4:19

மறு ரூப மலையில் இயேசுவோடு கூட கூடாரம் போட்டுத்
குவதற்கு ஆசைப்பட்டவனும் அங்கே இல்லை. மாற்கு 9:5

பொதுவாக சிறப்பான இடத்தைப் பிடித்த மூன்று சீஷர்கள்
ண்டு. அவர்கள் பேதுரு, யாக்கோபு, யோவான் என்பவர்களே.
ந்த மூன்று பேர்களிலும் இந்த யோவானே இயேசுவுக்கும்
ன்பானவனாகவே இருந்தான். அவன் இப்போதுள்ள
ாதனையிலும் இயேசுவை விட்டுத் தூரமாகச்
ல்லவில்லை.சிலுவையின் அருகிலேயே நிற்கிறான். "அன்பிலே
மில்லை. பூரண அன்பு பயத்தை புறம்பே தள்ளும்."
யாவான் 4:18

யோவானை நோக்கிப் பார்க்கும் இயேசு:-

அந்த யோவான் இப்போ இயேசுவினுடைய அன்பையும் ஆதரவையும் ஆறுதலையும் இழந்து நிற்கிறதாக உணர்ந்து வேதனையோடு இருக்கிறான். தான் மிகவும் அன்பு கூர்ந்த இயேசு, கோரமான மரணத்தைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார். யோவான் அதைத் தன் கண்களால் கண்டும் தன்னால் ஏதும் செய்ய இயலாதவனாக ஏக்கத்தோடு கலங்கி பரிதாபகரமாக நிற்கிறான். இவ்வாறு பாரத்துக் கொண்டிருந்த யோவானின் பார்வை சிறிது வேறுபடுகிறது.

இப்போது இயேசுவானவர் தனது தாயாரைப் பார்க்கிறதை யோவான் தெரிந்து கொண்டான். அடுத்ததாக அவரின் பார்வை தன்மீத விழாதா என பெரும் எதிர்பார்ப்போடு நிற்கிறான். அந்த எதிர்பார்ப்பு அவனது உள்ளத்தில் ஒரு நம்பிக்கையாக மாறுகிறது. இதோ அந்த நம்பிக்கை அவனுக்கு வீண் போகவில்லை.

ஆம் தனது தாயாரைப் பார்த்த இயேசுவின் பார்வை அதிலிருந்து விலகி அருகில் நின்ற இந்த யோவான் மேல் விழுகிறது. அவனைப் பார்த்ததும் இயேசுவின் விழிகள் சற்று ஆறுதலைடகிறதையும் புரிந்துகொள்ள முடிகிறது. இப்போதுதான் இயேசு பேச ஆரம்பிக்கின்றார்.

ஸ்திரீயே!-

இயேசு தமது தாயாரை நோக்கி ஸ்திரீயே என்று அழைக்கிறார். தன்னைப் பெற்றெடுத்த தாயைப் பார்த்து இயேசு ஸ்திரீயே என்று அழைத்தது சரிதானா? அதைக்குறித்து முதலில் சிறிது சிந்திப்போம்.

மனித வாழ்க்கையில் ஒருவரை ஒருவர் அழைக்கும் தன்மையில் பல வேறுபாடுகள் உண்டு. குடும்பத்துக்குள் இரத்த சம்பந்தமான உறவுமுறையில் அழைக்கும் தன்மை ஒன்று உண்டு. அதில் அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி, அண்ணன் தம்பி அக்கா தங்கை, மாமா அத்தை போன்றவை அடங்கும் மேலும் பல சந்தர்ப்பங்களில் பிறரை மரியாதையினிமித்தமா தாத்தா பாட்டி, அண்ணன் அக்கா தங்கை போன்ற உற முறைகளைப் பயன்படுத்தி அழைக்கிறோம். ஆனால் அவர்க உண்மையில் இரத்த சம்பந்தமான உறவுமுறையா இருக்கமாட்டார்கள்.

அதே போல மரியாதையினிமித்தம் பொதுவாக நாம் அழைக்கும் பண்புள்ள வார்த்தைகள் இன்னும் சில உண்டு. அவை ஐயா (சார்) அம்மா (மேடம்) சகோதரனே (பிரதர்) சகோதரியே (சிஸ்டர்) போன்றவைகளாகும்.

இந்த நேரத்தில் தனது தாயார் சிலுவையினருகே அங்கலாய்த்துக் கொண்டு நிற்பதை இயேசு கண்டார். அந்தத் தாய் தன்னுடைய மற்ற பிள்ளைகளோடு சென்றுவிட வில்லை. அவர்களை விட்டு, மிகுந்த பாடுகளின் மத்தியில் மரண போராட்டத்தில் இருக்கும் இயேசுவின் சிலுவையண்டை நிற்கிறாள். இந்த உன்னதமான அன்பின் ஆழத்தை இயேசுவும் அறிகிறார்.

இயேசு தன்னை விட்டுப் பிரியப்போகிற நேரமாக இருந்தாலும் மரியாளுக்கு இயேசுவை பிரிய மனமில்லை என்பது உண்மையாகிறது. இதை அறிந்த இயேசு அந்த அம்மாவை அழைக்கிறார். அப்படி இயேசு தன்னை அழைப்பதினால் மரியாளுக்கு எவ்வளவு பேரானந்தம்?

இப்போது மரியாளின் உள்ளம் பரிதவிப்புக்கு உள்ளாகிறது. என் மகன் என்னை அடையாளப்படுத்திக் கொண்டி ருக்கிறான். தன்னுடைய மரண அவஸ்தையிலும் என்னை என் மகன் மறக்கவில்லை. என் மகனுடைய சரீர வேதனையை நான் பகிர்ந்து கொள்ள முடியவில்லை. காயத்துக்கு ஒத்தடம் கொடுக்க முடியவில்லை. வீக்கத்தைத் தடவிக் கொடுக்க முடியவில்லை. ஆறுதலான வார்த்தைகள் கூட கூறி தேற்ற முடியவில்லை. மாரோடு அணைத்து கதற முடியவில்லை. இரத்தம் வெளியேறு வதினால் உண்டாகும் தாகத்தை என்னால் தீர்க்க முடியவில்லை. ஐயகோ நான் என்ன செய்வேன் என புலம்புகிறாள்.

ஆனால் அப்படிப்பட்ட அந்த நேரத்தில் தான் இயேசு மரியாளுக்கு ஆறுதலாக அவளை அழைக்கிறார். பொங்கி வரும் அந்த அம்மாளின் வேதனைக்கு ஒத்தடம் கொடுக்கிறார். அவருடைய வேதனையிலும் கூட மரியாளைத் தேற்றுகிறார்.

அந்த அம்மாள் இப்படிப் பூரித்திருப்பாள். என்னை அவர் அழைக்க வேண்டுமென்று ஆசைப்பட்டேன். ஆனால் அழைப்பார் என எதிர்பார்க்கவில்லை. இதோ அழைத்து விட்டார் "ஸ்திரீயே"

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! இந்த மூன்றாம் வசனத்தைப்பற்றி தியானிக்கும் முன்பாக இவ்வளவு நேரமும் நாம்

எடுத்துக்கொண்ட கருத்து இயேசுவினிடத்தில் அவருடைய தாயார் மற்றும் சீஷனாகிய யோவான் ஆகிய இருவரும் கொண்ட அன்பைப் பற்றியதே. அந்த அன்பின் மிகுதியை மையமாகக் கொண்டே மூன்றாவது வசனம் அமையக் காரணமாயிற்று என்ற கோணத்தில் நடை பயின்றோம்.

அப்படியானால் இயேசு தம்முடைய தாயையும், தமக்கு அன்பாயிருந்த சீஷனையும் கண்டு தம்முடைய தாயை நோக்கி, ஸ்திரீயே என்று அழைத்ததாக வாசிக்கிறோம். அதெப்படி ஸ்திரீயே என்று அழைப்பது சரியானதாக இருக்கும்? நமது தமிழ் வார்த்தையின்படி அம்மா என்ற வார்த்தையாகவோ அல்லது அந்த பொருள்படும் வார்த்தையாகவோ அல்லவோ அழைத்ததாகக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

இயேசு தனது தாயை அழைத்த அந்த சம்பவத்தைக் குறித்து ஆங்கில வேதாகமத்தில வாசிக்கும் போது "தாயை நோக்கி" "unto his mother" என்றும் "ஸ்திரீயே" "woman" என்று அழைத்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படியானால் தனது தாயாரை பொதுவாகக் குறிப்பிடுவது போல பெண்ணே என்று அழைத்திருப்பதை நாம் இவ்விடத்தில் தெளிவாக அறிகிறோம்.

இது என்ன வினோதமான அழைப்பு? தாயன்பு தனி அன்பு அல்லவா? அதற்கு ஈடு இணை எதுமில்லையே அப்படியானால் இயேசு தனது தாயாரைப் பார்த்து ஸ்திரீயே என்று அழைத்து அவமரியாதை செய்தாரா? அல்லது தனது குழந்தைப் பருவத்திலிருந்து அப்படித்தான் அழைத்திருப்பாரா? இப்படி பல கேள்விகள் நமது உள்ளத்தில் தோன்றுகிறது.

ஒரு வேளை நீங்கள் இந்த அழைப்பின் வார்த்தைக்கு இவ்வளவு சிந்தனையா என்று எண்ணலாம். ஆம் கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே அதில் ஒரு மிகப்பெரிய உன்னதமான சத்திய அடங்கியிருக்கிறது என்று நாம் அறிய வேண்டும். அதற்காகவே அந்த வார்த்தையை இப்படியாகத் தீர்மானிக்கிறோம்.

இயேசுவினுடைய முப்பது வயது வரையிலான சம்பவங் களில் அவருடைய பேச்சுக்களோ வார்த்தைகளோ அதிகமா எதுவும் பரிசுத்த வேதாகமத்தில் குறிப்பிடப்படவில்லை என்பதை நாம் அறிவோம். அவரது பன்னிரெண்டாவது வயதி பண்டிகைக்குச் சென்ற சம்பவம் தவிர வேறு ஏதும் இல்லை.

எனினும் முப்பது வயதான காலக்கட்டம் வரை இயேசு தமது தாயாரை எப்படி அழைத்திருப்பார் என்பதை சற்று நிதானித்துப் பாருங்கள். ஒரே தீர்வாகச் சொல்ல வேண்டுமானால் அவர் ஒரு தாய்க்கு நல்லதொரு மகனாகவே வளர்ந்து வந்தார். கண்டிப்பாக அவர் தன் தாய்க்கு எந்த ஒரு மரியாதையையும் கொடுக்கத் தவறி இருக்கமாட்டார். நிச்சயமாகத் தன் தாயாகிய மரியாளை அம்மா என்றுதான் அழைத்திருப்பார். இதில் சந்தேகப்பட ஏதுமில்லை.

பற்றற்ற வாழ்க்கை:-

அதே சமயம் இயேசுவின் வாழ்க்கை அவரது முப்பதாவது வயதில் அவர் ஞானஸ்நானம் பெற்றதற்குப் பின் முற்றிலும் வேறுபட்டிருந்தது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அவருடைய உறவு அவருடைய வீட்டோடும் வீட்டாரோடும், இல்லை. முப்பதாவது வயதுவரை அப்பா, அம்மா, சகோதரன், சகோதரி ஆகிய உறவோடு வாழ்ந்து கொண்டிருந்தவர் அவர்களை விட்டு விலகினார். உறவு முறையிலும் ஒரு இடைவெளி உண்டானது.

அப்போது இயேசு தமக்கென்று சீஷர்களைத் தெரிந்தெடுத்துக் கொண்டார். அவர்களை மனுஷர்களைப் பிடிக்கிறவர்களாக்குகிறேன்.அதிலிருந்து அவர்களுடனே தனது உறவை வைத்துக் கொண்டார்.

அந்நாட்களில் இயேசு தன்னுடைய பெற்றோருடன் தமது வீட்டிலேயும் தங்கினதாக இல்லை."நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு. மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை என்றார்" மத்தேயு 8:20 இவ்வாறுதான் இயேசு ஒரு தேசாந்திரி போல வனாந்திரத்திலும், மலைப்பிரதேசத்திலும், கடலிலும், கடற்கரையிலுமாக சுற்றித்திரிந்ததை நாம் அறிகிறோம்.இயேசு, கிராமங்கள் பட்டணங்கள்தோறும் பிரயாணமாக அலைந்து திரிந்து தங்குகிறவராகவும் காணப்பட்டார்.

அவருடைய உணவும் கூட சொந்த வீட்டில் இல்லை. இவ்வாறாக இயேசுவின் வாழ்க்கை அவரது கடைசி மூன்றரை ஆண்டு காலத்தில் முற்றிலும் வேறுபட்டிருந்ததைப் பார்க்கிறோம். அக்காலகட்டத்தில் இவ்வுலகத்தில் வாழ்வதற்கு அவசியப்பட்ட

உறவு, உணவு, உறைவிடம் ஆகிய இவைகளுக்கு இயேசு முக்கியத்துவம் கொடுத்து, இவைதான் வாழ்வின் இலட்சியம் என்று வாழவில்லை.

உலகில் வாழத் தேவையான இப்படிப்பட்டவைகளை ஒரு நாள் இவ்வுலகில் நாம் விட்டுத்தானே செல்ல வேண்டும். அதன் பின்பு அவைகள் நமக்குத் தரப்படுவதுமில்லை. தேவைப்படுவதுமில்லையே. உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு கொண்டு வந்ததுமில்லை இதில்லிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை என்பது நிச்சயம்.1தீமோத்தேயு 6:7.

எனவே தான் இயேசுவும் அவற்றை உணர்த்தும் முகமாக ஒரு சிறந்த மாதிரியாக அப்படி நடந்து கொண்டார் என எண்ணலாம், மேலும் அவருடைய பிறப்பின் நோக்கத்துக்கு மேற்கூறிய மூன்று தேவைகளும் இடையூறாக இல்லாதபடி ஒரு தனிப்பட்ட வாழ்க்கையை அவர் மேற் கொண்டார். எனவே அது ஒருவகையான பற்றற்ற வாழ்க்கையாகும்.

அதனாலேயே இயேசு தன்னுடைய கடைசி மூன்றரை ஆண்டு கால வாழ்வில் தனது தாயாரைப் பார்த்து "ஸ்திரீயே" என அழைக்கிறார்.

கானா ஊரில் கலியாண வீட்டில் நடைபெற்ற விருந்தின் போது திராட்சரசம் குறைவுபட்ட சம்பவத்தில் இயேசு தனது தாயாரைப்பார்த்து "ஸ்திரீயே" என அழைத்தார். அப்படி அழைத்ததோடு மட்டுமல்ல "உனக்கும் எனக்கும் என்ன" என்ற ஒரு வித்தியாசமான கேள்வியை முன் வைத்துள்ளார். யோவான் 2:4.

இன்னொரு சம்பவத்தையும் வாசிக்கிறோம். ஒரு வீட்டி இயேசு இருக்கும் போது "உமது தாயாரும் சகோதரரு உம்மோடே பேச வேண்டுமென்று வெளியே நிற்கிறார்கள் என்ற ஒரு தகவல் சொல்லப்பட்டது. அப்பொழுது இயேசு சொன்ன வார்த்தையைக் கவனியுங்கள். என் தாயார் யார்? சகோதரர் யார் என்று சொல்லி தம்முடைய கையை தமது சீஷர்களுக்கு நேரா நீட்டி இதோ என் தாயும் என் சகோதரர்களும் இவர்களே பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறா என்றார். மத்தேயு 12:46-50.

இயேசுவின் இன்னுமொரு உபதேசத்தைப் பார்ப்போம்.தன் தகப்பனையும் தாயையும்.... தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்கு சீஷனாயிருக்க மாட்டான்: அது தன் சிலுவையை சுமக்கிற ஓர் அனுபவம் லூக் 14:26,27. இதை ஓர் ஆழ்ந்த கருத்துள்ள சத்தியமாக நான் எண்ணுகிறேன். சுருங்கச் சொன்னால் 'தன் சிலுவையை சுமத்தல்' என்பது நமது வாழ்நாளில் நமக்குக் கொடுக்கப்பட்ட இவ்வுலக வாழ்க்கையின் அளவீட்டை ஏற்றுக் கொள்ளுதல் ஆகும். அந்தப் பாத்திரத்தைச் சுமக்கிற அனுபவம். நமது பாடுகளை சகிக்கிற அனுபவம். ஒருவேளை அதை நாம் மனதார விரும்புகிறபடி இல்லாவிட்டாலும் அதை ஏற்றுக்கொண்டு இடுக்கமான வாசல் வழியாய் பிரவேசிக்கிற வேறுபட்ட அனுபவமாகும். லூக்கா 13:14.

எனவே இயேசு ஸ்திரீயே என்று அழைத்தது, பிதாவின் சித்தத்தை தன்னில் நிறைவேற்ற உலக உறவை பின்னாகத் தள்ளின பற்றற்ற ஜீவிய அனுபவமாகும்.

<u>அதோ உன் மகன்:</u>

தாயைப் பார்த்து "ஸ்திரீயே" என இயேசு அழைத்தாலும் அவளுக்கென்று ஓர் ஆறுதலை அவர் கொடுத்தார். அதன் விபரம் இதுதான் அம்மா! நான் உன் மகன் தான். ஒரு முப்பது வருஷகாலம் நல்ல ஒரு மகனாக உன்னோடு வாழ்ந்தேன். பிறகு மூன்றரை ஆண்டு காலம் ஒரு மகனைப் போலத்தான் ஆனால் இப்பொழுது இன்னும் சிறிது நேரத்தில் உன்னை விட்டு, எல்லா உறவையும் விட்டுத் துண்டித்துக் கொண்டு போகப் போகிறேன்.

நான் போனதும் இனி உனக்கு ஒரு மகனாக நான் இல்லையென்று முற்றிலும் அந்த இடம் வெற்றிடமாகி விட வேண்டாம்.என்னுடைய அந்த இடத்தை நிரப்ப அதோ நான் நேசித்த என்னுடைய சீஷன் நிற்கிறான். அவனை உன்மகனாக ஏற்றுக்கொள். நான் இல்லாத போது இப்போது அவனுக்கும் அன்புபாராட்டும் ஓர் உள்ளம் தேவைப்படுகிறது" என்ற பொருளில் இயேசு தாயாரிடம் பேசுகிறார்.

ஆம் இயேசு தன் தாயாரிடத்தில் கூறின அந்த வார்த்தைகள் மரியாளுக்கு மிகுந்த ஆறுதலாக இருந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.அதன் பொருள் என்னவென்றால் "அம்மா"! ஒருமகன் தன் தாய்க்கு என்னென்ன கடமைகளைச்

செய்ய வேண்டுமோ அத்தனையையும் இனி அவன் உனக்குச் செய்வான்.குறிப்பாக நான் உன்னோடு இருந்து என்னென்ன உனக்கு நான் செய்து நிறைவேற்ற வேண்டுமோ அத்தனையையும் அவன் உனக்குக் குறைவின்றி செய்து நிறைவேற்றுவான்". இந்த உன்னத ஒரு அனுபவத்தை வெளிப்படுத்தவே "அதோ உன் மகன்" என்று கூறினார்.

<u>**கடமையைச் செய்தார்:-**</u>

பற்றற்ற ஜீவியத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்கிய இயேசுவானவர் தன் தாய்க்குச்செய்ய வேண்டிய கடமையும் தனக்கு உண்டு என்பதை தனது மரண போராட்டத்திலும் மறக்கவில்லை.

"உன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக" உபாகமம் 5:16. இந்த பிரமாணத்தை மீறாமல் அதை நிறைவேற்றினார்.இயேசுவானவர் "கொர்பான்" என்னும் காணிக்கையைச் செலுத்தி பெற்றோருக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்யாமல் பரிகாரம் தேடும் பாரம்பரியத்தை கடந்து பேசியவராவார் மாற்கு 7:10-13 அந்த இயேசு இப்போது உள்ளன் போடு தனது தாயாருக்கு ஆறுதலளித்து கடமையைச் செய்தார். கனம் பண்ணினார்.

இந்நேரத்தில் ஒன்றைக் குறிப்பிடுவது அவசியம் என எண்ணுகிறேன். தற்காலத்தில் கிறிஸ்தவர்களில் பலர் மிகப் பெரிய ஒரு தவறை செய்து கொண்டுதான் வருகின்றனர். பெற்றோருக்கு ஒரு வேளை கொடுக்கிறவர்களாக இருந்தாலும் முறையாக கனம் பண்ணுவதில்லை.அந்த நிலையை ஒருவேளை நீங்கள் புரிந்து கொள்ளத்தக்க என்னால் விளக்க முடியாமலிருக்கலாம். ஆனால் அந்த பயங்கரம் நடந்து கொண்டுதான் இருக்கிறது.தங்களுடைய செயலுக்குத் தாங்களாகவே ஒரு நியாயம் கற்பித்துக் கொண்டு சமாதானமடைந்து விடுகின்றனர். பெற்றோர் விஷயத்தில் எந்த ஒரு பிற சமாதானமும் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல.

சிலர் பெற்றோரை ஒரு பொருட்டாக எண்ணாமல்,கனம் பண்ணாமல் அவமரியாதை செய்கின்றனர். உள்ளான அன்பு பாராட்டாமல் உலக ஒப்புக்காக ஏதோ கொஞ்சம் செய்கின்றனர். செய்த கொஞ்சத்தையும் பிறர் மத்தியில் பெரிதுபடுத்தி பெருமை பாராட்டுகின்றனர். தகுதி இல்லாத தன் பெற்றோருக்குத், தான்

செய்தவைகளே அளவுக்கு அதிகமானது என்று தம்பட்டமடித்துக் கொள்கின்றனர்.

தங்களின் நிலைப்பாட்டுக்குப் பெற்றோரையே குறை சொல்லுகின்றனர். அந்நியரைப் போல் நடத்துகின்றனர்.அதே சமயத்தில் பெற்றோர் மறைந்த நாளில் மட்டும் ஆடம்பரமாகச் செலவு செய்து தங்களை உத்தமராகக் காட்டிக் கொள்கின்றனர்.

சிலர் தங்களை பரிசுத்தவான்கள் என்றும் பெற்றோரை பாவிகள் என்றும் கூறி பெற்றோரைக் கண்டு கொள்வதே இல்லை. இறுதி மரியாதை கூடச் செய்யாத சிலரைக் கேள்விப்பட்டிருக்கிறேன். எது எப்படியோ அப்படிப்பட்டவர்களை வேதாகமம் போதிக்கவில்லையா? கர்த்தர் ஏற்றுக் கொள்வாரா? கடைசி நாளில் நியாயம் தீர்க்கப்படமாட்டோமா?

அத்தோடு கீழ்க்கண்ட வசனங்களை நமது இருதயத்தில் பதித்துக் கொள்ளுவோம். “உன்னைப் பெற்ற தகப்பனுக்குச் செவி கொடு. உன் தாய் வயது சென்றவளாகும் போது அவளை அசட்டை பண்ணாதே” நீதி மொழிகள் 23:22.

“தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவது வாக்குத் தத்தமுள்ள முதலாம் கற்பனையாயிருக்கிறது.” எபேசியர் 6:3

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே இப்படிப்பட்டதான வேத வசனங்கள் இருக்கும் போது அதை விட்டு நாம் வழுவிப் போக நம்மை வழி நடத்துவது யார்? ஒன்றை புரிந்து கொள்ளுவோம். வேத வசனங்களை விட பெரிய உபதேசங்கள் இல்லை.இயேசுவை விட மேலான வழிகாட்டியும் இல்லை.இந்த சத்தியம் நம்மில் நிலைபெறுவதாக.

குடும்பச் சூழ்நிலை காரணமாக நாம் சேர்ந்திருந்தாலும் தனித்திருந்தாலும் பெற்றோரைக் கனம் பண்ணுதல் மிக மிக அவசியம்.அருகிலிருந்தாலும் பணியினிமித்தமாக தூரமாக இருந்தாலும் பெற்றோரைக் கனம் பண்ணி செய்ய வேண்டிய கடமையைச் செய்ய வேண்டியது நமது தலையாய கடமை. நம்மிடம் வசதி இருந்தாலும் இல்லாவிட்டாலும் பெற்றோருக்குச் செய்ய வேண்டியவற்றை குறைவின்றி முன்னுரிமை கொடுத்து செய்து நிறைவேற்றுவோம்.

அதோ உன் தாய் :-

இப்போது சிலுவையண்டையில் நிற்கின்ற யோவானிடம் வருவோம். தன்னை மகனாக ஏற்றுக் கொள்ளும்படி மரியாளிடம் இயேசு கூறினதைக் கேட்ட யோவானுக்கு எத்தனை பெரிய ஆறுதல். அவனால் மறக்கக் கூடாத ஒரு அனுபவம் அல்லவா அது.

இயேசு மீண்டும் யோவானைப் பார்க்கிறார்.ஆம்,ஏதோ ஒன்று நம்மை பார்த்துச் சொல்லப் போகிறார் என்ற எதிர்பார்ப்பு யோவானிடம் அதிகமாகிறது.அந்தப் பார்வையின் பொருள் இப்படியாக இருந்திருக்கும். "யோவானே! நீ மட்டும் இங்கே நிற்கிறாய்.நீ என்னிடத்தில் கொண்ட அன்பிற்கு அளவே இல்லை. இதோ இன்று நான் உன்னை விட்டும், இவ்வுலகை விட்டும் போகப் போகிறேன். இந்த சமயத்தில் எனது தாயை உன்னிடத்தில் ஒப்படைக்கிறேன். நீ என்னுடைய ஸ்தானத்தைப் பெற்றுக்கொள். அவளும் நான் உன்னிடம் காட்டின அதே அன்பைப் பாராட்டுவாள்.என்னுடைய தாயாகிய அவளை உன்னுடைய தாயாக ஏற்றுக்கொள்" இப்படிப்பட்ட பொருளிலே தான் இயேசு யோவானிடம் "அதோ உன் தாய்" என்று கூறுகிறார் என நிச்சயமாக அறிகிறோம்.

மேலும் இயேசுவின் தாயாகிய மரியாளும் அன்பான சீஷனாகிய யோவானும் உறவினர்களாக இருந்திருக்கலாம்.அது வேறு விஷயமாகும். ஏனெனில் அந்த உறவு முறையே ஒருவருக்கொருவர் போதுமான அன்பு பாராட்டத் தக்கதாக இருந்திருக்குமேயானால் இயேசு இப்படி மூன்றாவது வசனத்தைக் கூற வேண்டியதில்லை.அப்படியானால் ஒருவருக்கொருவர் அன்பு பாராட்டல் என்பது வேறொரு கோணத்தில் நம்மை வலியுறுத்தும் சத்தியமாக அமையப் பெறுகிறது என்பதே உண்மை.

ஆவிக்குரிய ஐக்கியம்:-

உறவின் முறையையும் தாண்டி மரியாள் தான் பெற்றெடுத்த ஒரு பிள்ளையைப் போல யோவானை ஏற்றுக் கொள்ளவும் யோவான் தன்னை பெற்றெடுத்த தாயைப் போல மரியாளை ஏற்றுக்கொள்ளவும் போதிக்கிறது. அந்த உறவுடன் ஒருவருக்கொருவர் தத்தெடுத்தது போல உரிமை கொள்ளச் செய்கிறது.இவ்வித உரிமை கொள்ளலுக்கு இயல்பாக உள்ள உறவு முறை குறுக்கே வருதல் என்பது கூடாத காரியம்.

இப்படிப்பட்ட ஒரு உறவு நமக்குள்ளே குறிப்பாக சபைக்குள்ளே இருக்க வேண்டும். அது ஓர் ஆவிக்குரிய ஐக்கியத்தின் வெளிப்பாடு ஆகும்.இதை நாம் விசுவாசத்தோடு ஏற்றுக் கொண்டு நடக்க வேண்டும்.அதுவே மிகவும் அவசியமானதாகும்.

தேவனுடைய வார்ததையின் படி தேவனிடத்தில் அன்பு கூருவது பிரதானமானதாகவும், பிறனிடத்தில் அன்பு கூருவது அதற்கு ஒப்பான கற்பனையாகவும் உள்ளது. அதை இயேசுவும் வலியுறுத்தின வார்த்தைகளை நாம் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறோம்.அதனுடைய முழுமையான பரிணாம வளர்ச்சியே இந்த மூன்றாம் வசனத்தினுடைய கருத்து என்று சொன்னாலும் தவறில்லை.

பரிசுத்த பவுலும் அப்படியொரு அனுபவத்தை கொண்டிருந்து அதைக்குறிப்பிட்டுக் கூறும் ஓர் உன்னதமான வாக்கியத்தை நாம் வாசிக்க முடியும். “கர்த்தருக்குள் தெரிந்து கொள்ளப்பட்ட ரூபையும், எனக்கும் தாயாகிய அவனுடைய தாயையும் வாழ்த்துங்கள்” என்று குறிப்பிடுவதைக் கவனியுங்கள். ரோமர் 16:13.

அதுமட்டுமல்லாமல் அந்த அதிகாரத்தில் குறைந்தது இன்னும் ஏழு உத்தம பெண்களானவர்களைக் குறிப்பிட்டுக் கூறுவதை வாசிக்க முடியும்.பெபெயாள் (வ.1) பிரிஸ்கில்லாள் (வ 3) மரியாள் (வ-6) திரிபேனாள், திரிபோசாள், பெரிசியாள் (வ 15) ஆகியோரே அவர்கள். அவர்களைப் பற்றி இந்தஇடத்தில் குறிப்பிடுவது எனக்கு மனநிறைவளிக்கிறது. அவர்கள் சபைகளுக்குள்ளே கர்த்தருடைய பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்ட பரிசுத்த நிலையின் ஆவிக்குரிய உயரிய இடத்தை பரிசுத்த பவுல் கொடுத்திருப்பதை அறிகிறோம்.

அந்த அனுபவமும் ஐக்கியமும் சபைகளிலே எப்படி முழுமையாகப் பரிமளிக்க வேண்டும் என்பதை பவுல் அப்போஸ்தலன் நல்லதொரு புத்திமதியாய்ச் சொல்வதைக் கவனியுங்கள்.

“முதிர் வயதுள்ளவனைத்... தகப்பனைப் போலவும், பாலிய புருஷரை சகோதரரைப் போலவும்,முதிர்வயதுள்ள ஸ்திரீகளைத் தாய்களைப் போலவும்,பாலிய ஸ்திரிகளை எல்லாக் கற்புடன்

சகோதரிகளைப் போலவும் பாவித்துப் புத்தி சொல்லு.உத்தம விதவைகளாகிய விதவைகளைக் கனம் பண்ணு" 1 தீமோத்தேயு 5:1-3.

தீமோத்தேயுவுக்குக் கொடுக்கப்பட்ட இவ்வித உபதேசம் சபைகளிலே இருக்க வேண்டியது எவ்வளவு அவசியம் என்பதை சிந்திக்க வேண்டியது. முக்கியமான ஒன்றாகும். சபைகளின் மத்தியில் சீர்கேடுகள் குறைந்து இவ்விதமான ஓர் ஆவிக்குரிய ஐக்கியம் இருக்க வேண்டும்.இயேசு கூறின மூன்றாவது வசனம் அந்த விதமான சத்தியத்தையும் உணர்த்துகிறது.

இந்த மூன்றாம் வசனம் தரும் பாடம்

1. அர்ப்பணிப்பின் வாழ்க்கை தேவை- அதுவே பற்றற்ற வாழ்க்கை:-

"ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக் கடவன்" மத்தேயு 16:24.

இந்த வசனத்தில் மூன்று கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. தன்னைத் தான் வெறுத்தல் = உலகில் முக்கியமான இடம் பெறத்தக்கவைகளுக்கு முன்னுரிமை கொடாதிருத்தல்.

தன் சிலுவையை எடுத்தல், மற்றும் இயேசுவை பின்பற்றுதல் ஆகும், இப்படியாக வாழ அர்ப்பணிப்பின் குணம் இருந்தால் மட்டுமே முடியும்.

"தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல.மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல. தன் சிலுவையை எடுததுக்கொண்டு என்னைப் பின் பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல" மத்தேயு 10:37,38.

2. கனம் பண்ணுதல் - கடமையைச் செய்தல் வேண்டும்:-

"உன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக" யாத்திராகமம் 20:12.

இதைப்பற்றி ஏற்கனவே தியானித்துவிட்டோம்.ஆயினும் இப்போது மூன்று கேள்விகளை மட்டும் முன்வைப்போம் அதற்குரிய நமது பதிலே நமக்குப் பாடம் புகட்டும்.

1. பெற்றோரைப் பராமரிப்பதும்,கொடுப்பதும் பற்றி அல்ல. ஒரு வேளை பிள்ளைகள் எந்த முறையிலும் நிறைவேற்றலாம். ஆனால் அது எப்படி என்பது தான் கேள்வி.

கொடுப்பதற்கு முன்பாக பெற்றோர் என்ற இதய சுத்தியுடன் வடிய சிந்தையுடன், மன நிறைவோடு கனம் பண்ண வேண்டும் என்ற எண்ணம் இதயத்தில் வேரூன்றி உள்ளதா?

2. பெற்றோர் தன் பிள்ளைகளுடன் கொண்ட அன்பு, பாசம், யாகம் இவற்றிற்குப் பிரதிபலனாக அவர்களுக்கு எப்போ, எங்கே, படி செய்து நிறைவேற்றப்பட்டது?

"பெற்றோர் செய்த நன்மைகளுக்குப் பதில் நன்மைகளைச் செய்யக் கற்றுக் கொள்ளக் கடவர்கள்". 1தீமோத்தேயு5:4.

3. பெற்றோரைக் குற்றம் சாட்ட அல்லது குறை சொல்ல பிள்ளைகளுக்கு அதிகாரம் உண்டா?

"பிள்ளைகளே உங்கள் பெற்றோருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள். இது கர்த்தருக்குப் பிரியமானது" கொலோசேயர் 3:20.

. கிறிஸ்தவ (ஆவிக்குரிய) ஐக்கியம் வேண்டும்:-

".... நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள் ..." கொலோசேயர் 3:15.

எந்த மதம், இனம், நாடு சார்ந்தவர்களானாலும் கிறிஸ்தவர் களைக் குறித்து பரிசுத்த பவுல் சொல்லுகிறதைப் பாருங்கள்.

அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம். ரோமர் 12:5 ஆனால் இன்றைய நிலையை சற்று நிதானித்துப் பாருங்கள் நமக்குள்ளே ஐக்கியத்துக்குப் பதில் பகைமைத் தாண்டவமாடுகிறதே.

இன்னொரு விளக்கம்; நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம், கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிற தல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா?

ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்கு பெறுகிற படியா
அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோ
1கொரிந்தியர் 10:16,17.

மேற்கண்ட வசனங்களின் கருத்தை அறிகிறோமா?

"ஆனபடியால் சமாதானத்துக் கடுத்தவைகளையு
அந்நியோந்நிய பக்தி விருத்தி உண்டாக்கத்தக்கவைகளையு
நாடக்கடவோம்" ரோமர் 14:19.

நான்காம் வசனம்

மத்தேயு 27:46 மாற்கு 15:34

" என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்"

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! இந்த நான்காம் வசனத்தைக் குறித்து தியானிப்பதற்கு முன்பாக சில கருத்துக்களை நினைவு கூருவது சரியானதாக இருக்கும் என எண்ணுகிறேன்.

இயேசு சிலுவையில் சொன்ன ஏழு வசனங்களில் நான்காவது வசனம் என்பது நடுவில் அமையப் பெற்றதாகும். அதாவது மத்தியில் உள்ள வசனமாகும். பொதுவாக நடுநிலை அல்லது மத்தியஸ்தம் எனப்படுவது, அவ்வளவு எளிதான காரியமல்ல. அதைப் போலவே இந்த வசனமும் தியானிப்பதற்கு எளிதானது என சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாததாகும்.

ஏனெனில் தேவகுமாரனாகிய இயேசுவின் உபதேசங்களெல்லாம் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய அளவில் அமைந்திருந்தன.அதைப்போலவே இயேசு சிலுவையில் சொன்ன மற்ற எல்லா வசனங்களும் மிக எளிதில் புரிந்து கொள்ளக் கூடியதாகவும் கர்த்தருடைய கிருபையினால் அவற்றின் ஆவிக்குரிய சிந்தனையை நாம் தியானிக்கக் கூடியதாகவும் இருக்கின்றன.

<u>பயன்படுத்தப்பட்ட மொழி ஆக்கம்:-</u>

இந்த நான்காவது வசனம் மட்டும் ஒரு தனித்தன்மை வாய்ந்திருந்தது. நேரிடையாக எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய அளவில் இல்லை. முற்றிலும் தேவனுடைய கிருபையினால் ஆவியானவர் மட்டுமே இதை விளங்கச் செய்ய முடியும்.

இந்த வார்த்தையின் சிறப்பினை இன்னும் நாம் அலசிப் பார்ப்போம். சிலுவையில் இயேசு பேசின எல்லா வசனங்களின் மொழி ஆக்கத்தை கவனியுங்கள். அவற்றில் இந்த நான்காவது வசனத்தில் மட்டுமே இயேசு பேசினதான வார்த்தைகளை "ஏலி ஏலி லாமா சபக்தானி" என நாம் அறியாத ஒரு மொழியில் கூறி அதன்பின் என் தேவனே என் தேவனே "ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம் என எழுதப்பட்டுள்ளது. அப்படி எழுதப்பட்டுள்ள படியால் இந்த வசனத்தில் இனம் புரியாத ஓர் அழுத்தம் உள்ளதை அறையலாம் இதைப் போல இன்னும் ஒரு சில நிகழ்வுகளில் இப்படிப்பட்ட மொழி ஆக்கத்தை நாம் பார்க்க முடியும்.

பெல்ஷாத்சார் ராஜா தகாத விதமாக விருந்துண்டு வேறே தேவர்களைப் புகழ்ந்து மதுவினால் மதிமயங்கிய போது "மனுஷ கைவிரல்கள் தோன்றி விளக்குக்கு எதிராக சுவரிலே "மெனே மெனே தெக்கேல் உப்பார்சின்" என அங்கிருந்தயாருக்கும் புரியாத ஒரு பாஷையில் எழுதிற்று. அதைத் தானியேல் மட்டும் தேவ ஆவியானவருடைய ஒத்தாசையினாலே வாசித்து அதனுடைய அர்த்தத்தைக் கூறினான். தானியேல் 5:4,5,25-28.

"கலிலேயாக் கடலருகே கொன்னை வாயுடைய ஒரு செவிடனை இயேசுவினிடத்தில் கொண்டு வந்தனர். இயேசு தமது விரல்களை அவன் காதுகளில் வைத்து, உமிழ்ந்து, நாவைத் தொட்டு, வானத்தை அண்ணாந்து பார்த்துப் பெருமூச்சு விட்டு "எப்பத்தா" என்றார். அதற்கு திறக்கப்படுவாயாக என்று அர்த்தமாம். உடனே செவ்வையாய் அவன் பேசினான்." மாற்கு 7:32-35.

"ஜெப ஆலயத் தலைவரில் ஒருவனாகிய 'யவீரு' என்பவனுடைய மகள் மரித்துப் போனாள். இயேசு பிள்ளையின் கையைப் பிடித்து "தலித்தா கூமி" என்றார். அதற்கு சிறு பெண்ணே எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்று அர்த்தமாம்". மாற்கு 5:22,41.

இவ்வாறாகப் பயன்படுத்தப்பட்டுள்ள அந்த வார்த்தைகளைப் பற்றிய முக்கியத்துவம் அதன் பின்னணி போன்றவற்றை வேதப் பண்டிதர்களும் பரிசுத்தவான்களும் அறியாமலிருக்க மாட்டார்கள். அவற்றுக்குள் நான் பிரவேசிக்க எனக்குத் தகுதியுமில்லை.அவசியமும் இருப்பதாக நான் உணரவில்லை. எனினும் வேறுபட்ட நிலையில் அந்த வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டிருக்கும் தன்மைகளைக் கவனிக்கும் போது ஏதாவது ஒரு குறிப்பிட்ட நோக்கம் இல்லாமல் இருக்க முடியாது என்ற என் எண்ணத்தில் வலுவாக உள்ளேன். ஆனால் அவற்றின் நோக்கம் என்ன என்பது பரிசுத்த வேதாகமத்தில் வெளிப்படையாகக் கூறப்படவில்லை. என்ற போதிலும் அவற்றில் கூடுதலான சிறப்பு உண்டு என்பதை நிச்சயமாக ஏற்றுக் கொள்வோமாக.

முன்னுரைக்கப்பட்ட வார்த்தைகள்:-

இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையில் அவரது பிறப்பு முதல் உயிர்த்தெழுந்து பரலோகம் சென்றதுவரையிலும் நடந்த

சம்பவங்களில் குறிப்பிடத்தக்கவைகள் எல்லாம் தீர்க்க தரிசனங்களாக முன்னுரைக்கப்பட்டவைகளாகும். பொதுவாக இயேசுவை கிறிஸ்துவாக உலகத்துக்கு அடையாளம் காட்டி, பலமாக ரூபகப்படுத்துவது தேவனால் முன்னுரைக்கப்பட்ட வார்த்தைகளும் தீர்க்கதரிசனங்களுமேயாகும்.

அப்படிப்பட்டவைகளில் இயேசு சிலுவையில் சொன்ன நான்காவது வசனமும் தொடர்ந்து நடைபெற்ற சில சம்பவங்களும் 22 மற்றும் 69 ஆகிய சங்கீதங்களில் கூறப்பட்டுள்ளன. அதிலும் குறிப்பாக சங்கீதம் 22:1ல் என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கை விட்டீர் என்று உரைக்கப்பட்டுள்ளது. எனவே இந்த நான்காவது வசனமும் தீர்க்க தரிசன நிறைவேற்றம் என்பதை முதலாவது அறிந்து கொள்ளுகிறோம்.

இனி இந்த வசனத்தைக் குறித்த சத்தியத்தையும் அதன் மகத்துவத்தையும் அறிய முற்படுவோம்.நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல இந்த நான்காம் வசனமானது மத்தியஸ்த வார்த்தை மட்டுமல்ல மிக்க ஆழம் நிறைந்ததுமாகும்.இதன் கருத்தை பலர் பலவிதமாக அர்த்தப்படுத்தி பேசுகிறதை நான் கேட்டிருக்கிறேன்.எது எப்படியாயினும் இதன் இரகசியம் மிகவும் பெரியது.

அவிசுவாசிகளுக்கு இடறலானதா?

இயேசு சிலுவையில் பேசின ஏழு வசனங்களிலும் தேவனோடு பேசினவைகள் மூன்று. அவை 1-4-7 ஆகியவையாகும் அவற்றில் முதலாவது வசனத்தில் 'பிதாவே' என்று தேவனை அழைத்த இயேசுவானவர் இந்த நான்காவது வசனத்தில் என் தேவனே' என அழைக்கிறார். இந்த வேறுபாடு ஏன் என்பதும் நமது சிந்தனைக்கு வலுவான ஓர் அஸ்திபாரமாகும்.

மேலோட்டமாகப் பார்த்தால் அந்த அழைப்பு இயேசு வினுடைய வல்லமையையும், மகிமையையும் சீர் குலைப்பதாக அல்லவோ அமைந்துள்ளது. இயேசு தேவ குமாரன் என்ற விசுவாசத்தை வலுவிழக்கச் செய்கிறது போலத் தோன்றுகிறது. ஆம். அப்படியாகப் பல சிந்தனைகள் நமது மனதில் ஏற்பட வாய்ப்பிருக்கிறது.

நாம் வாசிக்கின்ற அந்த நான்காம் வசனம் ஒரு கேள்வியாக அமைந்துள்ளது. அக்கேள்வியை இயேசு தேவனிடம் கேட்கிறார். அது,ஏன் என்னைக் கைவிட்டீர்? இதை நன்கு கவனித்தால் முடிந்து போன ஓர் அனுபவத்தை இயேசு குறிப்பிட்டுக் கேட்கிறதை அறிய முடிகிறது.அந்த அனுபவத்தில் தேவன் இயேசுவைக் கை விட்டதாக அல்லவோ கதறுகிறார்.

இயேசு இப்படிக் கூறுவது ஏற்புடையதாகுமா? இதற்கு முன் பேசிய மூன்று வசனங்களும் உலகில் பிறர் மத்தியில் நல்லுபதேசங்களாகவும், தத்துவமாகவும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக அமைந்திருதன. ஆனால் இந்த நான்காவது வசனம் ஏதோ ஒரு வகையில் இயேசு முற்றிலும் பாதிப்புக்குள்ளாகி விட்டது போலவும் அதை அவரே வேதனையோடு அறிக்கையிடுவது போலவும் அல்லவா இருக்கிறது?.

தனக்கு எதிராக செயல்பட்ட அனைவரையும் பிதா மன்னிக்க வேண்டுமென்று இயேசு பரிந்துரைத்தார். வலதுபக்கத்துக் கள்ளனுக்கு பரதீசின் பாக்கியத்தை வாக்களித்தார். தனது தாயாருக்கும் சீஷனுக்கும் ஆறுதலளித்தார்.இப்போது "என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்" என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார் என்றால்; (மத்தேயு 27:46) அதைக் கேட்போர் என்ன எண்ணுவார்கள்?

இயேசுவினால், தேவனுடைய கிருபையினால் ஆறுதல் பெற்ற கள்ளனுக்குக் குழப்பம் வராதா?பெற்ற தாயும் அன்பு கொண்ட யோவானும் கலங்கிப் போய் விடமாட்டார்களா? அப்படியானால் இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்போர்கள் விழுந்து போகத்தக்கதான வார்த்தைகளை அவர் பேசலாமா? நிச்சயமாக அப்படி இருக்க முடியாதே.அப்படியும் இல்லை என்பதே சத்தியமாகும்.

பரிசுத்த வேதாகமத்திலே கூறப்பட்டுள்ள எல்லா சம்பவங் களிலும், அவைகளைக் குறித்து எழுதப்பட்டுள்ள எல்லா வார்த்தைகளிலும் எதுவும் வீணாக எழுதப்படவில்லை என்பது ஒரு மேலான மகிமையாகும். எல்லாக் காரியங்களிலும் தேவனுடைய ஞானம் பொருந்தியிருக்கும் என்ற சத்தியத்தை நாம் ஒரு போதும் மறந்து விடக் கூடாது.

எடுத்துக்காட்டாக ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுகிறேன். இயேசுவின் பிறப்புக்கு முன் மரியாளுக்குத் தரிசனம் தந்த கர்த்தருடைய தூதன் சொன்ன வார்த்தைகளை வேத புத்தகத்திலே வாசிக்கிறோம். அதில் காலம், தேசம், ஊர், கோத்திரம், குடும்பம் இவைகளெல்லாம் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அவை மட்டுமல்லாது மரியாளைப்பற்றி கூறப்பட்டுள்ள விபரத்தைப் பாருங்கள். நீ கர்ப்பவதியாவாய் என்று ஒரு கன்னிகையினிடத்திலே அதிலும் திருமணத்துக்கு நியமிக்கப்பட்ட ஒரு கன்னிகையினிடத்திலே தூதன் கூறுகிறான். அவை ஒவ்வொருன்றுக்கும் நிறைவான காரண காரியங்கள் உண்டு. இன்னும் சொல்லப்போனால் யோசேப்புக்கு நியமிக்கப்பட்ட கன்னிகை என்பதிலும் உயர்வான சத்தியம் உண்டு. என்ற விசுவாசத்தை வலுவிழக்கச் செய்கிறது போலத் தோன்றுகிறது.

மேலோட்டமாக உலக பார்வையில் அவமானமாக எண்ணத் தோன்றுகிறதாக இருந்தாலும் முற்றிலும் பரிசுத்த தெய்வீக ஒழுங்காகும்.அதைத் தான் தூதனின் வார்த்தைகள் விளங்கச் செய்கின்றன. மரியாளைப் பார்த்துச் சொன்ன வார்தைகளை கவனியுங்கள். கிருபை பெற்றவளே வாழ்க. கர்த்தர் உன்னுடனே இருக்கிறார். ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் லூக்கா. 1:26-28. (விபரம் கன்னிகை பிறப்பு என்ற என்னுடைய அடுத்த வெளியீட்டில்...)

ஆம் கர்த்தருடைய பிள்ளைகளே இயேசுவின் பிறப்பின் மகத்துவத்தையும் தெய்வீக ஒழுங்கையும் அதன் அவசியத்தையும் சரியாக புரிந்து கொள்ளாத உலகம் அதில் பெரும் குறைகள் உள்ளது போலவே பாவித்துக் கொள்ளும். அதே மனநிலையிலேயே அநேக கிறிஸ்தவர்களும் இருப்பதினாலேயே சபைகளிலே விசுவாசக் குறைச்சல் காணப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்த நான்காம் வசனமும் அதைப் போலவே தெய்வீக ஒழுங்கு நிறைந்தது. அந்த ஒழுங்கே அவசியமுமானது. தேவனாலே ஞானத்தைப் பெற்று உலகத்தில் சிறந்த ஞானி எனப் பெயர் பெற்ற சாலொமோன் கூறுவதைப் பாருங்கள். "கர்த்தர் ஞானத்தினாலே பூமியை அஸ்திபாரப்படுத்தி புத்தியினாலே வானங்களை ஸ்தாபித்தார். அவருடைய ஞானத்தினாலே ஆழங்கள் பிரிந்தது. ஆகாயமும் பனியைப் பெய்கிறது". நீதிமொழிகள் 3:19,20.

"கர்த்தருக்கு விரோதமான, ஞானமுமில்லை, புத்தியுமில்லை, ஆலோசனையுமில்லை". நீதிமொழிகள் 21:30

எனவே இவ்விதமான சிந்தனையோடு இந்த நான்காம் வசனத்தை நாம் தியானிப்போம். ஆவியானவர் தாமே துணைபுரிவாராக.

<u>அந்தகாரத்துக்குப் பின்:-</u>

முதலில் இயேசு இந்த நான்காம் வசனத்தைச் சொன்ன சந்தர்ப்பத்தின் சூழ் நிலை, அப்போ நடைபெற்ற காரியங்கள் இவற்றைச் சிந்திப்போம்.

இயேசு இந்த வசனத்தைத் திடீரென்று சொல்ல வில்லை ஆனால் இப்படிச் சொல்லக் கூடிய ஏதோ ஒரு நிகழ் நடைபெற்றுள்ளது. அதே சமயம் அந்தநிகழ்வு அவர்எதிர்பார்த்தது தான். அது என்ன காரியம்? அது என்ன வென்று அந் சந்தர்ப்பத்தில் விளக்கமாக ஏதும் குறிப்பிடப் படவில்லை. ஆனா இந்த வசனம் முடிந்து போன ஓர் அனுபவம் என நாம் கூறியதை மீண்டும் நினைவில் கொள்ளுவோம்.

முடிந்து போன அந்த அனுபவம் எப்போ நடந்தது? இயே குற்றம் ஏதும் செய்யாமல் தமது சரீரத்திலே வேதனையோ பாடுகளை அனுபவித்தாரே! அது அந்த அனுபவமா? இருக் முடியாதே! ஏனெனில் வெறுமனே இந்த உலகத்திலே வேதனைகளும் பாடுகளும் கொடூரமாக அநேகருக்கு நிகழ்ந் கொண்டு தான் இருக்கின்றன. அப்படியானால் இயே கைவிடப்பட்ட அனுபவ நிகழ்வு எது? ஆவியானவருடை ஒத்தாசையுடன் இன்னும் சற்று கூடுதலாக தியானிப்போம்.

இந்த நான்காம் வசனத்தைக் குறித்து நா வாசிக்கும்போது “ஆறாம் மணி நேரம் முதல் ஒன்பதாம் மண நேரம் வரைக்கும் பூமியெங்கும் அந்தகாரம் உண்டானது. மத்தே 27:45 ஒன்பதாம் மணி நேரத்திலே இயேசு ஏலி ஏலி லாம சபக்தானி என்று மிகுந்த சத்தமிட்டுக்கூப்பிட்டார். அதற் என்தேவனே என்தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர் என் அர்த்தமாம். மத்தேயு 27:46.

இப்போது நமது உள்ளத்தில் ஒரு கேள்வி எழும்புகிற அல்லவா? அந்த மூன்று மணி நேர அந்தகாரத்துக்கு அவசிய என்ன? அது எப்படி ஏற்பட்டது? அப்போது என்ன நடந்தது அப்போது இயேசுவின் நிலை என்ன? அந்தகாரம் முடிந்தது தானே இயேசு மிகுந்த சத்தமிட்டு என்தேவனே என்தேவனே ஏன்

...னைக் கைவிட்டீர் எனக் கதறுகிறார். அதாவது அந்த அந்தகார ...த்தில் ஏன் என்னைக் கைவிட்டீர் என பெருமூச்சு விட்டுக் ...கிறார்.

அந்தகார நேரத்துக்கு முன் இயேசு தமது முதலாவது ...த்தில் பிதாவே என்று அழைத்தார். அந்தகார நேரசூழ்நிலை ...பவத்தில் அதைக் கடந்தபோது என்தேவனே என ...ழக்கிறார். இவ்வாறாக வேறுபடுத்தி அழைக்கும் அளவுக்கு ...பெரிய நிகழ்வு அந்த நேரத்தில் நடந்திருக்கிறது.

பொதுவாக அந்தகாரம் என்றால் இருள் என்று ...துக்கொள்ள கூடாது. அதை விட முற்றிலும் இருண்டது ...தாகும். எவ்வித நிழலாட்டமான பிம்பங்களும் கொஞ்சம் கூடத் ...யாத ஒரு நிலையாகும். அதைப் புரியும் படி சொல்ல ...ணடுமானால் பிறவியிலேயே (விழியின்றி) பார்வையற்றவர்கள் ... அதை முற்றிலும் அறிவார்கள். இன்னும் சொல்லப் போனால் ...ள. இரவு, இருட்டு என்று பெயர் பெறுகிற எந்த ஒரு சமயத்திலும் ... உலகில் சூரியன் ஒருபுறம் தனது ஒளியைக் கொடுத்துக் ...ணடுதான் இருக்கிறது. ஆனால் இப்போது நாம் குறிப்பிடுகிற ...தகாரத்தைக் குறித்து 'பூமியெங்கும்' அந்தகாரம் உண்டானது ...று வேதவசனம் கூறுகிறது. அதனுடைய விளக்கம் இப்படி ...ககலாமே! அந்த மூன்று மணிநேரமும் சூரியன் தன்னுடைய ...யைக் கொடாமல் இருண்டு விட்டதாகக் கொள்ளலாமே.

எது எப்படியாயினும் அந்த நேரத்தின் அந்தகாரத்தைக் ...த்து உலக வரலாற்றுக் குறிப்புகளிலும் அவை இடம் ...ுள்ளதாகக் கூறுகின்றனர். பொதுவாக இருள் அந்தகாரம் ...றைக்குறித்து வேறொரு கோணத்தில் சில சிந்தனைகளை ...வோம். அப்படிப்பட்ட செயல்களின் நேரத்தில் தேவனுடைய ...துவங்கள் நிறைந்த சில சம்பவங்களை பரிசுத்த வேதாகமம் ...கு வெளிப்படுத்துகிறது.

...தகாரத்தில் தேவ மகத்துவங்கள்:-

தேவனாகிய கர்த்தர் சீனாய் மலையிலிருந்து மோசேயினிடம் ... தமது கற்பனைகளைக் கொடுக்கும் போது மூன்றாம் நாளிலே ...ார்மேகமும் ... உண்டானது (யாத்திராகம் 19:16) என்று எழுதப் ...ருக்கிறது. இதையே மோசே விளக்கிக்கூறும் போது "...

காரிருளிலிருந்து மகா சத்தத்துடனே சொன்னார்" (உபாகமம்.
5:22) என்று விவரிக்கிறதை வாசிக்கிறோம்.

"காரிருளில் வாசம் பண்ணுவேன் என்று கர்த்த
சொன்னார்" என்று சாலொமோன் கூறுவதையும் வாசிக்கிறோம்.
1ராஜாக்கள் 8:10,12.

ஆபிரகாமை காரிருள் மூடிக்கொண்டபோது வருங்கா
நிகழ்வுகளைக்குறித்து தேவனால் அவனுக்கு வெளிப்பா
கிடைத்தது. ஆதியாகமம் 15:12-21.

எல்லாவற்றுக்கும் மேலாக நம்முடைய தேவனாகிய கர்த்த
பரலோகத்தில் இருக்கிறார் என்று வேதம் கூறுகிறது. யோபு 22:1
மத்தேயு 6:9 மாற்கு 11:26, சங்கீதம் 123:1, அதேசமயத்தி
அவருடைய இருப்பிடம் ஒரு விசேஷித்த மகிமை பொருந்தியதாகு
அதன் விபரத்தைப் பாருங்கள்.

"இருளைத் தமக்கு மறைவிடமாக்கினார், கரும்புன
களையும் ஆகாயத்துக் கார்மேகங்களையும் தம்மைச் சூழ
கூடாரமாக்கினார்." சங்கீதம் 18:11.

"தேவன் அந்தகாரத்துக்கு அப்புறத்திலிருக்கிறவர்" என்று
மேகங்கள் அவருக்கு மறைவாயிருக்கிறது என்றும் யோ
22:13,14 ஆகிய பகுதிகளில் வாசிக்கிறோம்.

மேற்கூறிய வசனங்களிலிருந்து பிதாவை ஒருவனும்கண்
உயிருடன் இருக்கக் கூடாது என்பதினால் யாத்திராகமம் 33:2
தேவன் தமது மகிமையின் பிரசன்னத்தை வெளிப்படுத்தும் போ
காரிருளிலிருந்தும் மகத்துவமாக செயல் பட்டுள்ளார் என்பன
அறிய முடிகிறது.

எகிப்திலே கர்த்தர் அனுப்பின ஒன்பதாவது வாதை மூன்
நாள் காரிருள் அகும். யாத்திராகமம் 10:22,23, ஆனா
இப்போது ஏற்பட்டது அப்படிப்பட்ட அந்தகாரமோ? இல்
இல்லை, அதை விடக் கொடூரமானது ஆகும். அதனாலே
அவ்வித அந்தகாரம் இந்த நான்காம் வசனத்துக்
காரணமாகும் என ஒரு முடிவுக்கு நாம் வரலாம்.

இந்த மூன்று மணி நேர அந்தகாரம்:-

இப்போ விசுவாசத்தோடு அந்த மூன்று மணிநேர அந்தகாரத்துக்குள் பிரவேசிக்க முற்படுவோம். இந்த நேரத்தில் ஒரு உண்மையை நான் குறிப்பிடுவதில் பெருமைப் படுகிறேன். இயேசுவின் சிலுவை வசனங்களைக் குறித்து எழுதப்பட்ட பல புத்தகங்களை நான் படித்திருக்கிறேன். எனது சிறுவயதிலிருந்தே அநேகருடைய பிரசங்கங்களையும் கேட்டிருக்கிறேன். அவைகள் எல்லாவற்றிற்கும் மேலாக அருள்திரு S. பரமானந்தம் ஐயர் அவர்கள் எழுதிய புத்தகத்தில் இந்த நான்காம் வசனத்தைக் குறித்து எழுதும் போது அதன் ஒரு பகுதியில் "பாத்திரமும் வேளையும்" எனத் தலைப் பிட்டுத் தந்திருந்த விபரம் என்னை மிகவும் ஆட்கொண்டது. ஐயா அவர்களினிமித்தம் கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

அப்போதைக்கு ஏற்பட்ட அந்தகாரம் சூரிய கிரகணத்தினால் ஏற்பட்டதல்ல, சூரியகிரகணம் அமாவாசை அன்று மட்டுமே நிகழும். வரலாற்றுப் பின்னணியில் பார்த்தால் இயேசு சிலுவையில் அறையப் பட்டகாலம் அமாவாசை தினமும் அல்ல; அதை ஒட்டிய காலமும் கூட இல்லை என ஒரு தெளிவான குறிப்பும் உண்டு. மேலும் சூரிய கிரகணத்தினால் ஏற்படுகின்ற இருள் அந்தகாரமாகாது. அதுமட்டுமல்ல சூரியகிரகணம் என்பது ஒருசில குறிப்பிட்ட இடங்களில் மட்டும் தான் உண்டாகும். அவை மூன்று மணி நேரம் நீடிப்பதும் கிடையாது.

முன் நடந்தவை:-

இப்போது இயேசுவின் பாடுகளை மீண்டும் சற்று நினைப்போம் இயேசு அடிக்கப்பட்டார் குட்டப்பட்டார், துப்பப்பட்டார், அவமதிக்கப்பட்டார், முள்முடி சூட்டப்பட்டார் என்பன போன்ற காரியங்களை வலுவாகக் குறிப்பிடுகிறோம். நிச்சயமாக அப்படிக் கூறித் தியானிப்பதில் கொஞ்சம் கூடத் தவறில்லை..

காரணம் இயேசு தேவகுமாரன். அவர் பாவம் செய்ய வில்லை அவருடைய வாயில் வஞ்சனை காணப்படவுமில்லை. அவர் வையப் படும்போது பதில் வையாமலும், பாடு படும்போது பயமுறுத்தாமலும் நியாயத் தீர்ப்பு செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார். 1பேதுரு 2:22,23.

இயேசு அனுபவித்த அந்தப் பாடுகளின் கொடூரத்தையும் அவர் அதைச் சந்தித்த விதத்தையும் ஏசாயா 53ம் அதிகாரம் மிகத் தெளிவாகக் கூறுகிறது. முன் கூட்டியே கூறப்பட்ட இந்த தீர்க்க தரிசன வார்த்தைகளின் பாடுகள் தம்மில் நிறைவேறப்போகிறது என்பதை இயேசுவும் ஏற்கனவே அறிந்திருந்தார். அது மட்டுமல்ல அவற்றைக் குறித்து தமது சீஷர்களுடனே முன்னதாகவே தெளிவாகப் பேசியுமிருக்கிறார்.

"இயேசு தாம் எருசலேமுக்குப் போய் மூப்பராலும் பிரதான ஆசாரியராலும், வேத பாரகராலும் பல பாடுகள் பட்டு, கொலையுண்டு, மூன்றாம் நாளில் எழுந்திருக்க வேண்டும் என்பதைத் தம்முடைய சீஷர்களுக்குச் சொல்லத் தொடங்கினார்". மத்தேயு 16:22.

"மனுஷகுமாரனும் அவர்களால் பாடு படுவார்" மத்தேயு 17:12. "மனுஷகுமாரனும் தம்முடைய நாளிலே தோன்றுவதற்கு முன்பு அவர் அநேகம் பாடுபட்டு இந்த சந்ததியினால் ஆகாதவனென்று தள்ளப்பட வேண்டியதாயிருக்கிறது. லூக்கா 17:24,,25.

"நான் பாடு படுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்த பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன்". லூக்கா 22:15.

இயேசு சரீரத்திலே வேதனையோடுகூட அனுபவித்த பாடுகள் அவர் சிலுவையில் அறையப் படுவதற்கு முந்தின நாள் இரவிலே கெத்செமனே தோட்டத்தில் பிடிக்கப் பட்ட நேரத்திலிருந்து ஆரம்பித்தன. அந்நேரம் முதல் மறுநாள் காலை 9 மணியளவில் சிலுவையில் அறையப்படும் வரை இரவும் பகலும் தொடர்ந்து அவர் அடைந்த பாடுகளுக்கு அளவே கிடையாது. அதன் பின் பகல் 12 மணி வரை கொடிய வேதனையோடு சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்தார்.

இதுவரை நடைபெற்ற சம்பவங்கனின் கொடூரத்தை இப்படி பட்டியலிடுவோம். அவரிடத்தில் நடைபெற்றது அநியாய விசாரணை குற்றம் காணப் படாவிட்டாலும் குற்றவாளியாக்கப் பட்டார். குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப் படாவிட்டாலும் அநியாயமான தீர்ப்பு அளிக்கப்பட்டது. அநியாயமான மரணதண்டனை விதிக்கப் பட்டது. தீர்ப்பளிக்கப்பட்ட பின்பு பரிசீலனையோ மேல்முறையீடோ வழங்கப்படவில்லை. தீர்ப்பு சொல்லப்பட்ட அன்றைக்கே தண்டனை நிறைவேற்றப் பட்டது. தீர்ப்பளிக்கப் பட்டபின்பு

ளடனை நிறைவேற்றப்படும் வரை கூடுதலாக மனத்தளவிலும் ரத்திலும் வேதனை உண்டாக்கும் விதத்தில் துன்புறுத்தப்பட்டார்.

இயேசுவின் இந்தப் பாடுகளை குறைத்து மதிப்பிட்டு லட்சியப்படுத்தி பேசுபவர் ஒரு விசுவாசியாக இருக்க முடியாது. துபெரும் பாவமாகக் கருதப்படும். இயேசுவின் பாடுகளை வமானப் படுத்தினோமேயானால் அவரை மறுதலிக்கிறவர்களாக ருப்போம்.

அதே சமயம் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். தனை பாடுகளின் மத்தியிலும், வேதனையின் மத்தியிலும் யேசு தெளிந்த புத்தியுடனும் அமைதியுடனும் ஆசீர்வாதமான னறு நல்வசனங்களையே பேசினார்.

ஆனால் இப்போ நாம் தியானிக்கப் போகின்ற நான்காம் னம் அப்படிப்பட்ட தன்மையிலே சொல்லப் படவில்லை, டுகளின் மத்தியில் தமது சரீரம் பிட்கப்படுவதையும், தமது ரத்தம் சிந்தப் படுவதையும் குறிப்பிட்டு அதன் உச்ச கட்ட மையை தமது கடைசி இராப்போஜன விருந்தின் போது றிப்பிட்டுப் பேசினார். அதுவே புது உடன்படிக்கை எனவும் றிவித்தார். அதைப் பலியாகப் பாவித்துக் குறிப்பிட்டார். அதை ம் அப்படியே விசுவாசிக்க வேண்டும். மறுதலிக்கக் கூடாது.

"மறுதலித்துப் போனவர்கள் தேவனுடைய குமாரனைத் ங்களே மறு படியும் சிலுவையில் அறைந்து அவமானப் டுத்துகிற படியால் மனந்திரும்புகிறதற்கேதுவாய் அவர்களை றுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம்". எபிரெயர் 6:6

ன்று மணி நேர அந்தகார நிகழ்வு = கெத்செமனே ஜெபம்:-

இயேசு கெத்செமனேயில் ஒரு காரியத்தை மையப் டுத்திஜெபித்தார். அந்த ஜெப நேரத்தில் அவருடைய ார்த்தைகளைக் கவனிப்போம்.

"இயேசு அங்கே துக்கப்படவும், வியாகுலப்படவும் தொடங்கினார்" மத்தேயு 26:37, திகிலடையவும், மிகவும் வியாகுலப் படவும் தொடங்கினார். மாற் 14:33. மேலும் அந்நேரத்தில் "என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கம் காண்டிருக்கிறது". மத்தேயு 26:38 மாற்கு 14:34.

மேலே குறிப்பிடப்பட்ட வசனங்களின் முக்கியத்துவத் தையும் ஆழத்தையும் சிந்திப்போம். இயேசு துக்கப்படவும், வியாகுலப்படவும், திகிலடையவும் தொடங்கினது அவருடைய சரீரப் பாடுகளை மனதில் கொண்டதல்ல. அந்த சரீர பாடுகளின் வழியாய் கடந்து சென்று அடையப்போகும் ஆத்தும மரணத்தைக் குறித்ததாகும். அந்த நேரத்தையே அவர் 'வேளை' என்று குறிப்பிடுவதையும் ஆத்தும மரணத்தைச் சந்திக்கும் அனுபவத்தை அவர் ஏற்றுக் கொண்ட பாத்திரம் என்று அழைப்பதையும் நாம் அறியவேண்டியதாகும்.

இயேசு அங்கே கெத்செமனே தோட்டத்தில் அதை எண்ணியே ஜெபித்தார். அந்த வேளையும் அதில் அவர் அனுபவிக்கும் பாத்திரமும் தன்னால் சகித்துக் கொள்ளத்தக்க தல்ல என்று உணர்ந்தே அவை தன்னை விட்டு நீங்கிப் போக வேண்டு மென்று ஜெபித்தார். ஆகிலும் என் சித்தத்தின் படியல்ல உம்முடைய சித்தத்தின் படியே ஆகக்கடவது என பாரத்தோடு விண்ணபித்தார். மத்தேயு 26:39, மாற்கு 14:35,36 அதற்கு அந்நேரத்தில் பதில் இல்லை. ஆனால் வானத்திலிருந்து ஒரு தூதன் மட்டும் தோன்றி இயேசுவைத் தேற்றினான். லூக்கா 22:43.

அதன் பின்னரும் இயேசு அதிக ஊக்கத்தோடே ஜெபித்தார். ஒருமுறை இருமுறையல்ல மூன்று முறை ஜெபித்தார். அவருடைய சரீரத்திலிருந்து, வேர்வை இரத்தத்தின் பெருந்துளியாய் தரையிலே விழுந்தது. லூக்கா 22:44

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! கெத்செமனே தோட்டத்திலே இயேசு ஜெபித்தபோது இயேசுவின் வார்த்தைகள், அவருடைய பாரம், அப்போது நடந்தவை ஆகியவற்றை இன்னொரு முறை வாசித்துப் பாருங்கள். உலக இயல்புக்கும் நடைமுறைக்கும் வித்தியாசமான காரியங்களாக அவைகள் நமக்குத் தெரிய வில்லையா?

அந்த ஜெபத்துக்கு பிதாவிடமிருந்து பதில் இல்லை என்பதினால் பிதா ஒன்றும் கவனிக்க வில்லை என்று எண்ணுதல் தகாது. அந்த வேளையின் பயங்கரத்தை அறிவார். தம்முடைய குமாரன் அதற்குள் பிரவேசிக்கும் அனுபவத்தையும் அறிவார். ஆயினும் அந்நேரத்தின் மௌனமானது மனுக்குலத்தின் பேரில்

தேவன் அன்பு கூர்ந்து "தம்முடைய சொந்தகுமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தார்" (ரோமர் 8:32) என்பதே ஆகும்.

இறுதியாக அதுவே தேவ சித்தம் என்று எண்ணி இயேசுவும் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார். அந்நேரத்தில் அவரைப் பிடிக்க ஜனக்கூட்டத்தோடு சேவகரும் மூப்பரும் வரும்போது மனுஷகுமாரன் பாவிகளுடைய கைகளில் ஒப்புக் கொடுக்கிற வேளை வந்தது என்று குறிப்பிடுகிறார். மத்தேயு 26:45 மாற்கு 14:41.

அந்நேரத்தில் பிரதான ஆசாரியனுடைய வேலைக் காரனாகிய 'மல்குஸ்' என்பவனுடைய வலது காதற பேதுரு பட்டயத்தால் வெட்டினான் யோவான் 18:10. இயேசு அவனுடைய காதைத் தொட்டு சொஸ்தப் படுத்தினார். லூக்கா 22:51. இது ஓர் அற்புதமாகும், அந்தநேரத்தில் நான் இப்பொழுது என் பிதாவை வேண்டிக் கொண்டால் அவர் பன்னிரெண்டு லேகியோனுக்கு அதிகமான (6000x12=72000) தூதரை என்னிடத்தில் அனுப்ப மாட்டாரென்று நினைக்கிறாயா? (மத்தேயு 26:53) என்று மட்டும் கூறினார். ஆனால் அப்படி வேண்டிக் கொள்ள வில்லை.

இதிலிருந்து இயேசு பாடுகளை அனுபவிக்கும் போது பூரணமனித தன்மையிலேயே, தானே அதை ஏற்றுக் கொண்டார் என்பது நாம் விசுவாசிக்கத் தக்கதாகும். அந்த நேரத்திலே அவர் கத்தவோ கதறவோ இல்லை. யாரையும் தூஷிக்கவுமில்லை, தன் நிலைக்காகப் பதறி எந்த ஒரு வார்த்தையையும் கூறவும் இல்லை.

ஆனால் அந்த பாடுகளைத் தொடர்ந்து அந்தகார நேரத்தில் தானே இயேசு துக்கப்படும் காரியம் நடந்துள்ளது. அப்போதுதானே அவர் திகிலடையும் சம்பவத்தை சந்தித்துள்ளார். அந்நேரத்தில் தானே வியாகுலப் படத்தக்க வினை வந்து சேர்ந்துள்ளது.

ஆம், இதுதான் அது, அவருடைய ஆத்துமா மரணத்தை ருசி பார்த்துள்ளது, அந்த வேளையில் அந்த பாத்திரத்தின் பயங்கர அனுபவத்துக்குள் அவர் பிரவேசித்துள்ளார். அதைக் குறித்துதான் கெத்செமனேயில் ஜெபித்துள்ளார்.

மறுபடியும் நினைவில் கொள்ளுவோம். அந்தக் கொடூரம், பாடுகள். நிந்தனை, வேதனை, ஆகியவை சரீர மரண உபாதையைச் சார்ந்தவை அல்ல, அவைபற்றி முன் கூட்டியே இயேசு அறிவித்தபோது பேதுரு அதைத் தடுத்துக் கூறினான். அப்போது இயேசு அவனை, எனக்குப் பின்னாலே போ சாத்தானே எனக் கடிந்து கொண்டதையும் நாம் அறிவோம். அதன்படியே இயேசு பாடுகளை சகித்தார். ஆனால் அந்தகாரவேளை அனுபவத்தை சகித்துக்கொள்ள முடியவில்லை அது இயேசுவுக்கு மிகவும் கசப்பான அனுபவமே.

இதனுடைய சில கருத்துக்களை மீண்டும் மீண்டும் நான் குறிப்பிடுவது போலத் தெரியும், நானும் அதை அறிகிறேன். ஆனால் திரும்பத் திரும்ப சுற்றி சுற்றி வருகின்ற சத்தியத்தை வலியுறுத்தவே அந்த ஒரே கருத்தை பல கோணத்தில் நினைவுபடுத்துவதற்காக அப்படி எழுதுகிறதாக உணருகிறேன். பொறுத்துக் கொள்ளுங்கள்

இயேசுவின் நிலை:-

இயேசு கிறிஸ்துவினுடைய அப்போதைய நிலைமையை ஒட்டு மொத்தமாக விளக்கும் உன்னதமான சத்தியங்களடங்கிய கருத்துக்களை நமக்குத் தரும் மகிமையான ஒருவசனத்தை பவுல் அப்போஸ்தலன் கூறுகிறதை உங்கள் முன் நிறுத்துகிறேன்.

"மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப் பிரமாணம் செய்யக் கூடாததை தேவனே செய்யும் படிக்கு தம்முடைய குமாரனை பாவ மாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும், அனுப்பி மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக் குள்ளாகத் தீர்த்தார்". ரோமர் 8:3

இயேசு சிலுவையில் பேசின நான்காம் வசனத்துக்குக் காரணமான மூன்று மணி நேர அந்தகாரத்தில் மேலே குறிப்பிடப் பட்ட வசனத்தின் நிறைவேறுதல் பூரணப்பட்டது. அந்த வசனத்திலே இயேசு கிறிஸ்துவின் மூன்று வித நிலைகளைக் குறிப்பிடுவதைப் பார்க்கிறோம், அவை ஒவ்வொன்றையும் சரியானபடி தியானிக்கும் போது இந்த நான்காம் வசனத்தின் காரண காரியமும் பயனும் நமக்குப்புரியும்.

1. பாவ மாம்ச சாயலானார்:-

முந்தின மனுஷன் பூமியிலிருந்து உண்டான மண்ணானவன். இரண்டாம் மனுஷன் வானத்திலிருந்து வந்த கர்த்தர். 1கொரிந்தியர் 15:47. இந்த வசனத்தில் குறிப்பிடப் பட்ட இரண்டாம் மனுஷன் இயேசுகிறிஸ்துவே. அவர் வானத்திலிருந்து- அதாவது மூன்றாம் வானத்திலிருந்து வந்தார் வானத்தில் பரலோகத்தில் இருந்தவர் - ஆவியாக இருந்தவர் இன்னும் சொல்லப் போனால் வார்த்தையாயிருந்தவர்.

அவர் பாவ மாம்ச சாயலானார், பூமியில் மனுஷனாகப் பிறந்தார், இப்படிப் பட்ட வசனங்களின் மூலமாக நமக்காக இயேசு கடந்து வந்த பாதைகளைக் கவனிப்போம். அவர் எவற்றையெல்லாம் துறந்தார் என எண்ணிப் பார்ப்போம்.

தமது இருப்பிடமாகிய பரலோகத்தைத் துறந்தார், பிதாவின் மடியிலிருந்தவர், அதைத் துறந்து பூமியில் வந்து தலைசாய்க்க இடம் இல்லாமல் போனது. ஐசுவரிய சம்பன்னர்ஏழை ரூபமானார். நமது நிமித்தம் தரித்திரரானார். துதித்திடும் தூதர்கள் மத்தியில் இருந்தவர் தூஷிக்கும் பாவிகள் மத்தியில் வாழ்ந்தார்.

மேலும் பாவமாம்ச சாயலானதால் நம்மைப் போல பசி, தாகம், துக்கம், தூக்கம், மகிழ்ச்சி, சோதனை, வேதனை, போன்ற மாம்ச இன்பதுன்ப பண்புகளைக் கொண்டவரானார், இயேசு பிறந்த பொழுது கர்த்தருடைய தூதன் சொன்ன வார்த்தைகளினிமித்தமாக ஓர் அடையாளமாக அவரின் தன்மை வெளிப்படுத்தப்பட்டதை வாசிக்கிறோம். லூக்கா 2:10-14

இவற்றிவிருந்து நாம் கற்றுக் கொள்ளுகிற முதல் பாடம் இயேசு மனுஷ சாயலானார் என்பதினால் பரலோக வாசத்தையும் அதைச் சார்ந்த மேன்மைகளையும் அவர் விட்டார் என்பதே.

2.பாவத்தைப் போக்கும் பலியானார்-பாவத்தைச் சுமந்தார்:-

"... நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப் பட்டிருக்கிறாரே". 1கொரிந்தியர் 5:7

"இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" யோவான் 1:29

நியாயப்பிரமாணத்தின் படி பாவத்தைப் போக்க கடா அல்லது காளை பலியாகச் செலுத்தப்படும். பலியாகச் செலுத்தப்படுகிற அவை பாவம் செய்ய வில்லை. ஆனால் யாருக்காகச் செலுத்தப்படுகிறதோ அவர்களுடைய பாவத்தை அது சுமந்ததாகவும், அதற்குரிய தண்டனையை அது ஏற்றுக் கொண்டதாகவும் அங்கீகரிக்கப்படும். அதனால் அது கொல்லப்படும். அதன் இரத்தஞ்சிந்தப்படும், அந்த இரத்தம் சுத்திகரிக்கிறதாக தேவனாலே ஏற்றுக்கொள்ளப்படும்.
எபிரெயர் 9:22

இயேசுவும் அப்படியே (அவர் பாவம் செய்யாமல்) நம்முடைய பாவங்களை சுமந்து தீர்க்க வெளிப்பட்டாரென்று அறிவீர்கள். 1யோவான் 3:5. இந்த நேரத்தில் அவரோடு கூட சிலுவையில் அறையப்பட்ட கள்ளர்கள்; அவர்கள் செய்த குற்றங்களுக்காக, பாவங்களுக்காக சிலுவையில் அறையப் பட்டிருந்தார்கள் என்பதையும் நினைவு கூருவோம்.

"நாம் பாவங்களுக்குச் செத்து நீதிக்குப் பிழைத்திருக்கும் படிக்கு அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேலே சுமந்தார், அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்". 1பேதுரு 2:24.

"மெய்யாகவே இயேசு நம்முடைய பாடுகளை ஏற்றுக் கொண்டு நம்முடைய துக்கங்களைச் சுமந்தார். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர்காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப் பட்டார். கர்த்தரே நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர் மேல் விழப்பண்ணினார்". ஏசாயா 53:3-6

"நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலி அவரே, நம்முடைய பாவங்களை மாத்திரமல்ல, சர்வ லோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்".
1யோவான் 2:2.

இயேசு நமக்காக நம்முடைய பாடுகளை அவர் ஏற்று கொண்டார் என்று சொல்லும் போது. நாம் விடுவிக்கப் படுகிறோம் நாம் விடுவிக்கப் படுவதுடன் அவருடைய இரத்தத்தினாலே சுத்திகரிக்கப் படுகிறோம். இவ்வாறாக பாவமாம்ச சாயலானதினா பரலோக வாசத்தையும் அதன் மேன்மைகளையும் விட்ட இயேசு,

நம்முடைய பாவங்களை ஏற்றுக்கொண்டு அதனாலுண்டான பாடுகளை அவர் சுமந்ததினாலே அந்நாளிலே தமது ஜீவித்தத்தையும் விட்டவராகவே காணப்பட்டார்.

3. நமக்காகப் பாவமானார்:-

ரோமர் நிருபம் எட்டாம் அதிகாரம் மூன்றாம் வசனத்தில் குறிப்பிட்ட மூன்று காரியங்களில் இரண்டு தன்மைகளை அறிந்தோம், அவ்வசனத்தின் மூன்றாவது நிலையைக் கவனிப்போம்."மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்" இதன் பொருளை நமக்கு விளக்கும் இன்னொரு வசனத்தைப் பார்ப்போம். "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவமறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்". 2கொரிந்தியர் 5:21

இதற்கு முந்தைய குறிப்புரையில் இயேசு நமது பாவத்தைப் போக்க பலியிடப்பட்டிருக்கிறார் எனக் கூறினோம். அதற்கான செயல்களில் ஒரு பகுதி நமது பாவத்தைச் சுமந்தார் என்பதாகும். அதனால் அதைச் சார்ந்து நிகழ்ந்த செயல் அதன் தண்டனையை அடைந்ததாகும். இவற்றை நாம் புரிந்து கொள்வதற்காகவே பகுத்துப் பார்க்கிறோம். மற்றபடி பலியிடப்பட்டார். பாவத்தைச் சுமந்தார், தண்டனையை அனுபவித்தார் என்பது முந்தினதா பிந்தினதா என்பதற்காக அல்ல.

பாவம் காரணியாகவும்; பாடுகளும், வேதனைகளும், அதற்குரிய தண்டனை என்பது காரியமாகவும் விளைந்தன, அவற்றை இயேசு ஏற்றுக் கொண்டதினால் எல்லாம் அவரில் நிகழ்ந்தன. அது தேவ நீதியாகும். அவை கெத்செமனே தோட்டத்திலிருந்து மூன்று மணி நேர அந்தகாரம் வரை பாடுகளும் வேதனைகளுமாகத் தொடர்ந்தன. அவற்றோடு அந்த மூன்று மணி நேர அந்தகார வேளையில், பாவ தண்டனையை ஏற்று பலியாகி இருக்கிறார். அந்தநேரத்தில் இயேசு பாவத்தின் சம்பளமாகிய "மரணத்தை ருசிபார்த்தார். தேவ தூதரிலும் சற்று சிறியவராக்கப்பட்டிருந்தார் எனவும், மரணத்தை உத்தரித்தார்" என்றும் (பவுல்) உன்னதமான கருத்துக்கள் அடங்கிய சத்திய வசனத்தை எழுதியுள்ளதை வாசிக்கிறோம். எபிரெயர் 2:9 எனவே இயேசு பாவமறியாத அவர் பாவமாக்கப்பட்டார். இயேசு "பாவமாக" தோற்றமளிக்கிறார்

இந்த நேரத்தில் இன்னொரு வசனத்தை நாம் நினைவு கூருவது சரியானதாக இருக்கும், தேவனாகிய கர்த்தர் "தீமையைப் பார்க்க மாட்டாத சுத்தக்கண்ணன்." ஆபகூக் 1:13

எனவே பாவமாகவே காட்சியளித்த இயேசுவை பிதாவாகிய தேவன் பார்க்கக் கூடாதபடிக்கு தம்முடைய முகத்தை அந்த நேரத்தில் மறைக்கிறார். இப்போது இயேசு கூறின ஒரு உவமை நமது நினைவுக்கு வருகிறது. இளையகுமாரன் பாவ சேற்றில் உழன்றபோது ஒரு தீர்மானம் எடுத்ததாக இயேசு கூறுகிறார். அது தகப்பனே இனிமேல் நான் உமது குமாரன் என்று சொல்லப் படுவதற்குப் பாத்திரன் அல்ல. என்பதாகும் இந்த சமயத்தில் இயேசுவின் நிலையும் அதுதான். இளைய குமாரனுடைய அந்த நிலைமைக்குத்தள்ளப்பட்டார்.

அந்த மூன்று மணி நேர அந்தகார வேளையில் இயேசு தமது பிதாவினால் கைவிடப்பட்ட அனுபவத்தில் இருந்தார். மரணத்தைருசிபார்த்தார். தேவனுடைய பிரசன்னத்தையும் இழந்தார். அந்த அனுபவத்தை அவரால் சகித்துக் கொள்ள முடிய வில்லை. எனவே என்தேவனே என் தேவனே ஏன் என்னைக் கை விட்டீர் என பரிதவிக்கிறார்.

இவ்வாறாக பாவமாம்ச சாயலானதினால் பரலோக வாசத்தையும் அதன் மேன்மைகளையும் விட்ட இயேசு, நமது பாவங்களை ஏற்றுக்கொண்டு அதனோடு பாடுகளையும் அவர் சுமந்ததினாலே அந்நாளிலே தமது பரிசுத்தத்தையும் விட்ட இயேசு, அவரே பாவமாக ஆக்கப்பட்டு கைவிடப்பட்டதினாலே பிதாவாகிய தேவனுடைய பிரசன்னத்தையும் விட்டவரானார். "உமது முகத்தை மறைத்துக் கொண்ட போதோ நான் கலங்கினவனானேன்". சங்கீதம் 30:7

பிதாவின் பிரசன்னத்தை இழந்த அந்த அனுபவத்தின் முடிவிலே; அதை நாம் புரிந்து கொள்ளும் நோக்கிலே தானே முதலாம் வசனத்திலே 'பிதாவே' என அழைத்தவர் இப்போது என் 'தேவனே' என அழைக்கிறார். இதிலும் பொத்தாம் பொதுவாக தேவனே என அழைக்காமல் என்தேவனே என்தேவனே என இரு முறை அழைப்பதின் சூட்சமத்தை புரிந்தால் இன்னும் நமது ஆத்துமா சந்தோஷப்படும்.

அந்தகார நேரத்தின் கொடூரம் :- (எனது ஒரு சிந்தனை)

மூன்றுமணி நேர அந்தகாரவேளையில் என்ன சம்பவித்திருக்கும் என்பதை நமது விசுவாசக் கண்களினால் காணுவோம். அந்த கொடூரத்தை விளக்கிட யாரால் கூடும்? அந்நேரத்தில் நடை பெற்றதாக நாம் உணரக்கூடியதை யாரால் விவரிக்கக்கூடும்.

அந்த நேரத்தில் உலகத்தின் பாவங்கள் அனைத்தும் அவர்மேல் விழுந்து அவரைமுற்றிலும் மூடிப்போட இயேசு பாவத்துக்குட்படுத்தப் பட்டார், அந்த மூன்று மணி நேரத்தில் நடந்த காரியங்கள் மனிதனுக்குக் கொடுக்கப்படும்பாவத்தின் சம்பளமாகிய மரணஅனுபவமாகும். அது வார்த்தைகளினாலே குறிக்கப் படாதவைகளின் அனுபவம், அது மறுமையில் நியாயத் தீர்ப்புக்குப்பின் பாவிகளுக்காகக் கொடுக்கப்படும் தண்டனையின் வெளிப்பாடு. அதன் பயங்கரத்தை தரிசனங்களினாலும் உவமைகளினாலும் நாம் எழுத்து வடிவில் படித்து, கேட்டு அறிந்திருக்கிறோமேயன்றி நேரிடையாக அனுபவித்தவர்களாக நாம் யாரும் இல்லை. அது அப்படியொரு மறைபொருளானது. அது ஓர் இரகசியமும் ஆகும்.

அதைப் போலவே இயேசு அனுபவித்த ஆத்தும மரணத்தின் கொடூரத்தை நாம் நேரிடையாகக் காணக் கூடிய அளவில் வெளியரங்கமாக இல்லை. அதுவும் அத்தனை மறை பொருளாக உள்ளது. அதுமட்டுமல்லாமல் இரகசியமானதும் ஆகும். ஆயினும் அந்த பயங்கரத்தை நாம் சில வேத வசனங்களின் மூலம் நிதானிப்போமாக.

இப்போ அந்த காரிருள் நேரத்தில் ஒரு மயான. அமைதி, அப்போது அங்கேயோ எங்கேயோ என்ன நடந்தது என்பதை இந்த உலகம் காணாது, காணக்கூடாது, காணமுடியாது.

அந்த அந்தகார நேரத்தில் திடீரென ஏதோ ஒரு விபரீத சத்தம். அது மகாசத்தமாய் நீண்ட நேரம் கேட்கும் ஒரு மரண ஓலம், மேலும் பயங்கரமான உறுமல்; திணறிவரும் பெருமூச்சு.

"அநேகம் காளைகள் என்னைச் சூழ்ந்திருக்கிறது. பாசான் தேசத்துப் பலத்த எருதுகள் என்னை வளைந்து கொண்டது பீறிக்

கெர்ச்சிக்கிற சிங்கத்தைப் போல் என்மேல் தங்கள் வாயைத் திறக்கிறார்கள். நாய்கள் என்னைச் சூழ்ந்திருக்கிறது. பொல்லாதவர்களின் கூட்டம் என்னை வளைந்து கொண்டது. என் கைகளையும் கால்களையும் உருவக் குத்தினார்கள்." சங்கீதம் 22:13,16.

அந்த நேரத்தில் அந்த இருள்... அழுகையும் பற்கடிப்புமுள்ள அக்கினிச் சூளையின் அனுபவமாகும். மத்தேயு 13:50

தமது ஆத்துமாவை மரணத்திலூற்றி... பாவத்தைச் சுமந்து- பலியானார். ஏசாயா 53:12

இப்படிப் பட்டதான வசனங்களும் அந்நாட்களில் சிலுவை மரத்தில் இயேசு சொன்ன நான்காம் வசனமும் நமக்கு ஆழமான சத்தியங்களடங்கிய உன்னதமான போதனைகளைத் தருகின்றன.

இந்த நான்காம் வசனம் தரும் பாடம்

1. தேவன் நீதிபரர் - பட்சிக்கிற அக்கினி:-

கர்த்தர் நீதியுள்ளவர், நீதியின் மேல் பிரியப் படுவார்... சங்கீதம் 11-7

கர்த்தரைத் குறித்த இன்னொரு வசனத்தை இவ்வாறு வாசிக்கிறோம். நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியா யிருக்கிறாரே. எபிரெயர் 12:29

தேவன் தன்னுடைய நீதியை நிறைவேற்றுவதில், தன்னுடைய குமாரனேயானாலும் பாரத்தைக் குறைக்க பாதையை மாற்றுகிறவர் அல்ல. அதனாலேயே அவர் நீதிபரர் கர்த்தாவே நீர் நீதிபரர். உமது நியாயத்தீர்ப்புகள் செம்மையானவைகள். சங்கீதம் 119:137.

அப்படிப்பட்டதான வைராக்கியமுள்ள தேவனாக அவர் இருந்ததினாலே பாவத் தண்டனையான ஆத்தும மரணத்தை இயேசுவில் நிறைவேற்றி தேவ நீதியை விளங்கச் செய்தார்.

இயேசு அதை சிலுவையின் அந்தகார வேளையில் நிறைவேற்றியதாலேயே அவர் மூலம் நமக்கு மீட்பு கிடைத்தது.

கர்த்தர் எரிச்சலுள்ளவரும் நீதியைச் சரிக்கட்டுகிற வருமான
வன்; கர்த்தர் நீதியைச் சரிக்கட்டுகிறவர், உக்கிர
ாபமுள்ளவர்... அவர்களை ஆக்கினையில்லாமல்
புவிக்கமாட்டார்....நாகூம் 1:23.

தேவன் பட்சபாதமுள்ளவர் அல்ல அப்போஸ்தலர் 10:34.

தேவன் அன்பாகவே இருக்கிறார்:-

அன்பில்லாதவன் தேவனை அறியான் தேவன்
ாபாகவே இருக்கிறார் 1 யோவான் 4:8.

முந்தைய தலைப்பில் தேவன் பட்சிக்கிற அக்கினி
றோம். இதில் அன்பாகவே இருக்கிறார் என்கிறோம்.

தேவன் தம்முடைய ஒரேபேரான குமாரனை
வாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய
னை அடையும் படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய்
கத்தில் அன்பு கூர்ந்தார் யோவான் 3:16.

தேவன் நம்பேரில் அன்பு கூர்ந்து தமது குமாரனை
க்காகத் தந்தது போல, குமாரனும் நம்மீது அன்பு கூர்ந்து
க்காகத் தமது ஜீவனைத் தந்தார். அதன் வசனமும் இதோ...
ன்னில் அன்பு கூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்
டுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே
ழத்திருக்கிறேன். கலாத்தியர்2:20. தேவனாகிய
தர்.குமாரனாகிய இயேசு ஆகிய இவர்களின் அன்பினாலேயே
க்கு மீட்பு கிடைக்கிறது.

பாவத்தண்டனையின் பயங்கரத்தைத் தெரிந்து கொள்ளுகிறோம்.

துன்மார்க்கரும் தேவனை மறக்கிற எல்லா ஜாதிகளும்
த்திலே தள்ளப்படுவாகள் சங்கீதம் 9:17. பாவத்தின் சம்பள
ிய ஆத்தும மரணம் நிகழும் இடமே நரகம் எனப்படும். அதன்
டுமை பல வசனங்கள் மூலம் விளக்கப்பட்டுள்ளன. சுருங்கச்
ன்னால் தூற்றுக் கூடை அவர் கையில் இருக்கிறது. அவர்
து களத்தை நன்றாய் விளக்கி கோதுமையைத் தமது
ஞ்சியத்தில் சேர்ப்பார்.பதரையோ அவியாத அக்கினியினால்
டரிப்பார் லூக்கா 3:17.

இன்றும் சற்று கூடுதலாக —இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் வெளிப்படுத்துதல் 21:8.

அந்த பயங்கரம் எப்படியிருக்கும்? இதோ [illegible] சிந்தனை அது இயேசுவை என் தேவனே என்று கதற வைத்த மூன்று மணிநேர அந்தகார நேர சம்பவமே.

அதிலிருந்து நம்மை அந்த தண்டனையை எனக்காக இயேசு சிலுவையில் ஏற்றுக் கொண்டார் என்று விசுவாசித்து மீட்கப்படுவோம். களிகூருவோம். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

ஐந்தாம் வசனம்

யோவான் 19:28
தாகமாயிருக்கிறேன்

பிறரோடு பரந்துபட்டு தாக்கத்தை உள்ளடக்கிய வார்த்தை களைப் பேசிய இயேசு இந்த ஐந்தாம் வசனத்தை தனக்குத் தானே கூறிக்கொள்ளுகிற ஒரு வார்த்தையாக வெளிப்படுத்துகிறார். எது எப்படியாயினும் இயேசுவின் எல்லா வார்த்தைகளும் தெய்வீக சிந்தனையைச் சார்ந்ததாக தியானிக்கத்தக்கதாகும் என்பதை நாம் மறந்து விடலாகாது. அதன் அடிப்படையிலே இந்த ஐந்தாம் வசனமும் கையாளத்தக்கதாகும். அப்படியே எடுத்துக் கொள்ளுவோம்.

தாகத்தின் தன்மைகள்:-

பொதுவாகத் தாகம் என்பது இருவிதப் பொருளைத் தரும் தன்மையுடைய வார்த்தையாகும். ஒன்று தண்ணீர் குறைவினால் அது சரீரத்திலே உண்டாகிறதாகும். சரீர தாகத்தினால் நாவறண்டு போகும். செவித்திறன் குறைந்து உடலும் சோர்ந்து காணப்படும். அந்த தாகத்தைத் தண்ணீர் அல்லது சில பானங்களை பருகுவதினால் நாம் தீர்க்க முடியும்.

இன்னொன்று நமது வாஞ்சை அல்லது விருப்பத்தைக் குறிப்பதாகும். அப்படியானால் அந்த வாஞ்சை எதன்பேரில் என்பதை அறிந்து அதை நிறைவேற்றுவதின் மூலம் அந்தத் தாகம் தீர்க்கப்பட்டதாகக் கருதப்படும்.

இயேசு சிலுவையில் தாகமாயிருக்கிறேன் என்று கூறினார். அது எந்தத் தாகத்தைக் குறித்தது என்று நாம் தெரிந்து கொள்வது சரியான தியானமாகும். அது சரீர தாகத்தைக் குறித்ததா? அல்லது வேறு ஏதாவதொரு வாஞ்சையைப் பற்றியதா? அதாவது ஆத்தும தாகமா? அல்லது இந்த இரண்டு வகைத் தாகத்தையும் பற்றியதா என ஆராய்வோம்.

சரீர தாகம்:-

முதலாவது சரீர தாகத்தைக் குறித்துக் கவனிப்போம். பழைய ஏற்பாட்டிலே தாகமடைந்தோர்க்கு தேவனாகிய கர்த்தர்

சாதாரணமாக அல்ல, அற்புதமான முறையிலே தாகத்தைத் தீர்த்ததை பல இடங்களிலே வாசிக்கிறோம்.

ஆகார் தன் பிள்ளையுடன் வனாந்தரத்தில் இருக்கும் போது தண்ணீர் இல்லாததினால் அந்த பிள்ளை மிகவும் அழுதது. அப்போது கர்த்தர் அந்த இடத்திலே ஒரு துரவைக் காட்டினார். அதிலிருந்து தண்ணீரைத் துருத்தியிலே நிரப்பி பிள்ளைக்குக் குடிக்கக் கொடுத்தாள். ஆதியாகமம் 21:14-19

இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலிருந்து கானானுக்குப் பிரயாணமாய்ப் போகும்போது அவர்கள் தாகத்துக்கு வனாந்தரத்திலே கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்பட்டு வரச் செய்தார். ஜனங்கள் அத்தண்ணீரைக் குடித்து தங்கள் தாகத்தைத் தீர்த்துக் கொண்டார்கள். யாத்திராகமம் 17:6

சிம்சோன் தாகமடைந்தபோது அவனுடைய தாகத்தைத் தீர்க்க தேவன் லேகியிலுள்ள பள்ளத்தைப் பிளக்கப் பண்ணி அவனுக்குத் தண்ணீர் கொடுத்தார். நியாயாதிபதிகள் 15:18,19

தண்ணீர் இல்லாதபோது காற்றும் மழையும் காணப்படாத போதும் பள்ளத்தாக்கு தண்ணீரால் நிரப்பப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எலிசா கூறினான். அப்படியே மறுநாளிலே நிறைவேறினது. 2 ராஜாக்கள் 3:9,17,20

இவ்வாறாக தேவன் தம்மை நோக்கிக் கூப்பிட்டவர்களுக்கு அற்புதமாகத் தண்ணீர் கொடுத்து அவர்கள் தாகத்தைத் தீர்த்தார். இவை தவிர தாகம் தீர்த்தலின் தன்மையை இயேசுவானவர் வேறொரு பரிமாணத்தில் வெளிப்படுத்தினதை ஒரு சம்பவத்தின் மூலம் நாம் அறிகிறோம்.

சமாரியா ஸ்திரீ ஒருத்தியிடம் இயேசு தம்முடைய தாகத்துக்குத் தண்ணீர் கேட்டார். அவள் மறுத்தாள். அப்போது இயேசு சொன்ன வார்த்தையைக் கவனியுங்கள். "இந்த தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகமுண்டாகும். நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது. நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவ காலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும்." யோவான் 4:13,14

இது சற்று வித்தியாசமானதொரு சத்தியமல்லவா? தன்னுடைய சரீர தாகத்துக்கு தண்ணீர் கேட்ட இயேசு, தான் கொடுக்கும் தண்ணீரைப் பற்றிக் கூறுவது சற்று வேறுபட்டுத் தோன்றுகிறதல்லவா? நிற்க

ஆத்தும தாகம்:-

இனி வேறு சில வசனங்களைப் பார்ப்போம்.

"ஓ தாகமாயிருக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் தண்ணீர் களண்டைக்கு வாருங்கள்..." ஏசாயா 55:1

'தாகமாயிருக்கிறவன் வரக்கடவன். விருப்பமுள்ளவன் ஜீவ தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக் கடவன்" வெளிப்படுத்தல் 22:17

"தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவ தண்ணீரூற்றில் இலவசமாய்க் கொடுப்பேன்" வெளிப்படுத்தல் 21:6

"இயேசு நின்று சத்தமிட்டு ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக்கடவன்" யோவான் 7:37

இந்த சில வசனங்களிலே கூறப்பட்டுள்ள தாகம் வெறுமனே சரீர தாகத்தைக் குறிப்பிடுவதாக அல்ல. ஆத்தும மீட்பைப் பற்றி விருப்பமுள்ளவர்களைக் குறிப்பிட்டு அழைத்துக் கூறப்பட்டதாகவே நாம் அறிய முடிகிறது. இது ஆவிக்குரிய சிந்தனையாகும்.

மொத்தத்தில் வேதவசனங்கள் மூலம், சரீர பிரகாரமான தாகம் உண்டு என்றும், இன்னொன்று ஆத்தும தாகத்தைக் குறிப்பிடுவதாக உண்டு என்றும் நாம் அறிகிறோம். அத்தோடு அவை இரு தன்மையுடைய தாகமாக இருந்தாலும் அவற்றைத் தேவன் தீர்த்து வைக்கிறதாகவே வேத வசனங்கள் மூலம் தெரிந்து கொள்ளுகிறோம். இயேசுவும் அந்த அதிகாரமும் வல்லமையும், தன்னிடத்தில் உண்டு என அறைகூவல் விடுகிறதையும் நாம் வாசிக்கின்றோம்.

இத்தனை உண்மைகளும், வசனங்களும் இருந்தும் இயேசு தாகமாயிருக்கிறேன் என்று கூறுவது சரிதானா?

இந்தவிதமான சிந்தனைக்குள் நாம் பிரவேசிக்கும் முன் ஒரு கருத்தை நமது இதயத்தை விட்டு எடுக்கக் கூடாது. அது; இயேசு தகாத விதமாக எந்த ஒரு வார்த்தையையும் பேசுகிறவர் அல்ல, பேசினவரும் அல்ல. பேசவும் மாட்டார். அதிலும் தாகமாயிருக்கிறேன் என்று இயேசு கூறிய இந்த வசனம் மரிக்கப் போகும் சமயத்தில் சிலுவையில் இருந்து இயேசு பேசினது என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுவோமாக. இந்த அடிப்படையில் முதலாவது இயேசுவும் சரீரதாகமும் என்ற கருத்தைத் தியானிப்போம்.

<u>**இயேசுவும் சரீரதாகமும் :-**</u>

பஸ்கா பண்டிகை நாட்கள் நெருங்க நெருங்க தாம் அடையப்போகும் பாடுகளும் மரணமும் தம்மை நெருங்கி வருகிறதை இயேசு அறிந்திருந்தார். அந்நாட்களில் அதிக பாரத்தோடும் மன அழுத்தத்தோடும் அவரது பேச்சு, செயல் முதலானவைகள் இருந்தன என்பதை நாம் வேத வசனங்களில் வாசிக்கிறோம். மேலும் அந்தப் பாடுகளை முற்றிலும் தமது சரீரத்திலே ஏற்று நிறைவேற்றினார் என்றும் அறிகிறோம்.

அப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒரு மாமிச சரீரத்தில், இயல்பாகவே வழக்கத்துக்கு மாறாக நாவறண்டு, தாகம் சற்றுக் கூடுதலாக உருவாகுவது உண்டு என்பதை நாம் நன்கு அறிவோம்.

இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு முந்தைய நாள் இரவில் தமது சீஷர்களுடன் இராப்போஜன விருந்தில் பங்கு பெற்றார். அப்போது தன்னைக் காட்டிக் கொடுக்கப் போகிற யூதாசைக் குறித்துப் பேசி வேதனைப்பட்டார். தான் புசிப்பது கடைசி விருந்து என்பதை இயேசு அறிந்திருந்தாலும், யூதாசைக் குறிப்பிட்டு வேதனைப்பட்டதாலும், அப்போதே ஓர் அழுத்தத்தோடு அவர் இருந்தார் என்பது உண்மையே.

அதன்பின்பு கெத்செமனே தோட்டத்துக்குச் சென்று அதிக பாரத்தோடு ஜெபித்ததை வாசிக்கிறோம். அந்த வேளையின் தன்மை சில குறிப்பிட்ட வார்த்தைகள் மூலம் விவரிக்கப்படுகிறது. “துக்கமடையவும், வியாகுலப்படவும் தொடங்கினார்.” மத்தேயு 26:37. “அவருடைய ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கம் கொண்டிருந்தது.” மத்தேயு 26:38. “இயேசு திகிலடைந்தார்” மாற்கு

14:33; "அதிக ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார். அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளியாய் தரையிலே விழுந்தது." லூக்கா 22:44

மேற்கண்ட வசனங்களை நாம் வாசிக்கும்போது அவருடைய சரீர தாகம் மேலும் அதிகரிக்கத்தான் செய்யும் என்பதை வெகு எளிதாக நிதானிக்க முடியும்.

அந்தச் சூழ்நிலையில் இயேசுவை போர்ச் சேவகர்கள் வந்து பிடிக்கிறார்கள். தாக மேலீட்டத்தோடு இருந்த அவர் இரவு முழுவதும் தூக்கமின்றி விழித்திருக்கின்றார். அந்நேரத்தில் விசாரணையுடன் அலைக்கழிக்கப்படுகிறார். மேலும் துன்புறுத்தல், அடித்தல், காயப்படுத்துதல் போன்ற கொடுமைகளைச் சந்தித்துள்ளார். அதனால் அவருடைய சரீரத்திலிருந்து இன்னும் கூடுதலாக இரத்தம் சிந்தி வெளியேறி இருக்கிறது. எனவே இயேசுவின் சரீரதாகம் இன்னும் கூடுதலாகி இருக்கும் என்பதற்கு சந்தேகமே இல்லை.

மேலும் இத்தனை பாடுகளோடு தண்டனையாக சிலுவையில் அறையப்பட தீர்ப்பளிக்கப்பட்ட நிலையில் இயேசு பாரமான சிலுவையை அன்றையத் தினமே தாமே சுமந்து சென்றிருக்கிறார். சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பாக இயேசுவுக்கு கசப்பு கலந்த காடியைக் குடிக்கக் கொடுத்தார்கள். அவர் அதை ருசிபார்த்து குடிக்க மனதில்லாதிருந்தார். மத்தேயு 27:33,34. "வெள்ளைப்போளம் கலந்த திராட்ச ரசத்தை அவருக்குக் குடிக்கக் கொடுத்தார்கள். அவர் அதை ஏற்றுக்கொள்ளவில்லை." மாற்கு 15:23. இந்த சந்தர்ப்பத்திலும் அவருடைய தாகம் தீர்க்கப்படவில்லை எனவும் தெரிகிறது. அதே சமயம் தாகம் மேலும் அதிகரிக்கத்தான் செய்திருக்கிறது என்பது தெளிவு.

அதன்பின்பு இயேசு சிலுவையில் அறையப்படுகிறார். ஏற்கனவே முள்முடி சூட்டப்பட்டதினால் தலையிலிருந்து வெளியேறிய இரத்தத்துடன் கால்களிலும் கைகளிலும் ஆணிகள் கடாவப்பட்டதினால் இரத்தம் இன்னும் கூடுதலாக வெளியேறுகிறது. அதனால் அவருடைய தாகம் மிகக் கொடூரமாக அதிகரிக்கிறது. இவ்வாறாக ஒவ்வொரு நிகழ்விலும் அவருடைய தாகம் மேலும் மேலும் அதிகரித்துக்கொண்டே போகும் தன்மையைத்தான் அறிகிறோம். அதே நேரம் அந்தத் தாகத்தை எவ்விதத்திலும் தீர்க்க எதுவும் செய்யப்படவில்லை என்றும் அறிகிறோம்.

இயேசுவின் தாகத்தின் உச்சநிலை:-

எல்லாவற்றுக்கும் மேலாக நான்காம் வார்த்தையைத் தியானிக்கும் போது அங்கே குறிப்பிட்ட அந்தகாரத்தையும் அப்போது நடந்ததாக நாம் விசுவாசிக்கின்ற பயங்கரத்தையும் மீண்டும் ஒருமுறை சிந்தித்துப் பாருங்கள். அந்த சந்தர்ப்பத்திலே இயேசுவின் சரீரம் ஆகக் கூடின பாடுகள் அடைந்து அதனால் அவருடைய தாகமும் உச்சநிலையில் இருக்கும்.

ஒருவேளை அந்தத் தாகத்தின் கொடுமையானது இயேசு கற்பித்த ஓர் உவமையில் ஐசுவரியவான், ஏழை லாசரு இவர் களின் உரையாடலில் ஐசுவரியவான் குறிப்பிடும் வார்த்தையின் சாயலில் நிகழ்ந்திருக்கும் அல்லவா? இயேசு அந்த அக்கினி ஜுவாலையின் வேதனையை அனுபவித்திருப்பார் அல்லவா? எப்படியெனில் அந்த நரகாக்கினையைத்தானே அந்த மூன்று மணி நேரத்தில் அனுபவித்தார். எனவே அந்த நேரத்தில் தண்ணீரில் நனைக்கப்பட்ட விரல் நுனியினால் உண்டாகும் குளிர்ச்சிகூட நாவுக்குப் பெரிதாகத் தேவைப்பட்டிருக்கும் அல்லவா?

எனவே தாகமாயிருக்கிறேன் என்று சொன்னதும் அங்கே வைக்கப்பட்டிருந்த பாத்திரத்தில் இருந்த காடியில் கடற் காளானைத் தோய்த்து, ஈசோப்புத் தண்டில் மாட்டி அவர் வாயினிடத்தில் நீட்டிக் கொடுத்த போது அதை வாங்கினபின்பு (யோவான் 19:29,20) என்று எழுதப்பட்டுள்ளது.

இவ்வாறாக அநேக சம்பவங்களையும் சத்தியங்களையும் நாம் தியானிக்கும் போது இயேசு உண்மையிலேயே தமது சரீரத்தில் மிகவும் தாகமுடையவராகக் காணப்பட்டார் என்பது சரியானதாகும். அந்தத் தாகம் மிகவும் கொடியதாகவும் இருந்திருக்கிறது.

தீர்க்கதரிசனமும் கூட :-

மேலும் நாம் அந்த வசனத்தை ஆழ்ந்து சிந்தித்தால் "அதன் பின்பு எல்லாம் முடிந்தது என்று இயேசு அறிந்து வேத வாக்கியம் நிறைவேறத்தக்கதாக தாகமாயிருக்கிறேன் என்றார்" யோவான் 19:28 இந்த வசனமும் நமக்குக் கூடுதலான விசுவாசப் பெலனைத் தருகிறது.

எப்படியெனில் இயேசுவை நமக்கு கிறிஸ்து என்று அடையாளம் காட்டுவது வேதவாக்கியங்கள் என்பதை நாம் அறிவோம். அந்த வேத வாக்கியங்கள் எல்லாம் பழைய ஏற்பாட்டு வசனங்களே. அவை பல நூறு வருஷங்களுக்கு முன்பாகவே இன்னும் சொல்லப்போனால் சில ஆயிர வருஷங்களுக்கு முன் பாகவே கூறப்பட்டவையாகும். அவை எழுதி வைக்கப்பட்டவை யாகும். அதைக் குறித்து பல சந்தர்ப்பங்களிலே, பல வடிவங் களிலே நாமும் குறிப்பிட்டிருக்கிறோம். அவற்றை தீர்க்கதரிசனங் களாகவும் சிலவற்றில் பார்க்கிறோம்.

ஆக இயேசு கிறிஸ்துவைக் குறித்து முன்னறிவிக்கப்பட்ட அத்தனை காரியங்களும் முழுமையாக நிறைவேறித் தீர வேண்டும். அது சிறிய காரியமானாலும் பெரிய காரியமானாலும் சரி சற்றும் பிசகாமல் முழுமையாக நிறைவேற வேண்டும். அப்படி யானால் தான் அவர் கிறிஸ்து. இயேசு தாகமாயிருக்கிறேன் என்று சொன்னதும் "என் தாகத்துக்குக் காடியை குடிக்கக் கொடுத்தார்கள்" (சங்கீதம் 69:21) என்ற வேதவாக்கியம் நிறைவேறலாயிற்று.

இதுவரை இயேசு சரீர தாகத்திலிருந்தாலும் "எல்லாம் முடிந்தது என்று அறிந்து..." என எழுதப்பட்டுள்ளது யோவான் 19:28 இதிலிருந்தும் ஒருசில அரிய சத்தியங்கள் நமக்கு கிடைக்கின்றன.

இயேசு இந்த உலகத்திற்கு ஒளியாய் வந்ததன் நோக்கத்தை உள்ளடக்கி பிதாவின் சித்தத்தை அதனதன் ஒழுங்கின்படி பரிபூரணமாக நிறைவேற்ற வேண்டும் என்பதிலேயே மிகவும் கருத்துள்ளவராகக் காணப்பட்டிருக்கின்றார். அந்த சித்தம் மூன்றுமணிநேர அந்தகார வேளை உச்சகட்ட நிலைப்பாடு ஆகும். அதையும் அப்படியே செய்து நிறைவேற்றினார். அதை அவர் செய்து முடிக்கும் வரை (அதனாலேதான் முடிந்தது என அறிந்து) அவருடைய சரீரதாகம் கூட அவருக்கு ஒரு பொருட்டாகத் தெரியவில்லை.

கருமமே கண்ணாயினார் என்ற பழமொழிக்கேற்ப காரியம் முடிந்தபின்பே தனது சரீர தாகம் குறித்தும் வாய் திறந்துள்ளார். அப்படி இருந்தாலும் இன்னும் சிறிது நேரத்தில் மரிக்கப் போகிற இயேசு எவ்வளவோ பாடுகளை சகித்து வாய் திறவாமல் இருந்தவர், இப்போதும் தாகமாயிருக்கிறேன் என்று சொல்லாமலே தன்னுடைய ஜீவனை விட்டிருக்கலாமே என்றும் எண்ணத்

தோன்றும். இது வசன நிறைவேறுதலாகும் என்று பரிசுத்த வேதம் நமக்குக் கூறும்போது பிதாவாகிய தேவன் மகிமைப்படுகிறார், இயேசுவும் வசனத்துக்குக் கீழ்ப்படிகிறார் என்றும் ஒரு வசனத்தின் உறுப்பு கூட தவறிவிடவில்லை என்றும் அறிகிறோம்.

இப்படிப்பட்ட சங்கதிகளை நாம் அறிந்துகொள்ளும் போதும், நடைபெற்ற எல்லா சம்பவங்கள் மூலமாகவும் இயேசுவே கிறிஸ்து என்று பலமாக ரூபகப்படுத்தப்படுகிறார்.

தொடரும் குரல் :

இனி இன்னொரு கோணத்தில் இவ்வசனத்தைத் தியானிப்போம். இந்த வசனம் ஓர் எதிர்பார்ப்பை உள்ளடக்கி யிருக்கிறது. ஏழு வசனங்களிலும் இவ்வசனத்தின் தொனி ஒரு தொடர் அலையைக் கொண்டுள்ளது.

அந்த வசனத்தை இப்போதும் ஒருசில முறைகள் தொடர்ந்து சொல்லிப்பாருங்கள். தாகமாயிருக்கிறேன்... தாகமாயிருக்கிறேன் தாகமாயிருக்கிறேன் இன்னும் தாகமாயிருக்கிறேன்... இப்போதும் தாகமாயிருக்கிறேன். இவ்வசனம் நம்மைப் பார்த்து கூவுகிறதாக கேட்கவில்லையா? அப்படியானால் நீ என் தாகத்தைத் தீர்ப்பாயா என் தாகத்தைத் தீர்ப்பதற்கு நீ என்ன செய்யப் போகிறாய் என்பன போன்ற கேள்விக் கணைகளைத் தொடுத்து அதற்கான பதிலை நம்மிடம் எதிர்பார்த்துக் காத்திருக்கிறது.

ஒரு வேளை அன்றைக்கு நான் அந்த இடத்தில் இருந் இவ்விதமாக இயேசு தாகமாயிருக்கிறேன் என்று கூறு வசனத்தைக் கேட்டால் ஏதாவது செய்திருப்பேன் என் சொல்வோமேயானால் அது மிகவும் தவறு. ஏனெனில் இந்த வசனம் அவரது சரீர தாகத்தைத் தீர்ப்பது சம்பந்தபட்டது மட்டு தான் என்றாலும் எத்தனை பேர்தான் அவருடைய தாகத்தைத் தீர்த்துவிட முடியும்?

அப்படியே அந்த நேரத்தில் ஒருவரோ அல்லது இரண் பேர்களோ அவருடைய சரீர தாகத்தைத் தீர்த்தாலும் இ வசனத்தின் தாக்கமோ அல்லது பலனோ பிறருக்குக் கிடையாதா தனியாக வலது பக்கத்துக்கள்ளன் ஒருவனுக்கு பரதீசி பாக்கியத்தை அருளிச் செய்ததை தெரிந்த நாமும் அ பெற்றுக் கொள்ளத்தக்கதாக உன்னத போதனைகளைப்

பெற்றோம். அப்படியானால் இந்த ஐந்தாம் வசனத்துக்குத் தீர்வாக நாம் செய்யத்தக்கது ஏதும் இல்லையா? இப்படியாகப் பல கேள்விகள் நமக்குள்ளே பிறக்கின்றன.

எனவே இயேசுவின் இந்த வார்த்தை அவருடைய சரீர தாகத்துக்கு முக்கியத்துவம் தருவதாக இருந்தாலும் அதற்குச் சமமாக நம்மைப் பொருத்தமட்டிலும் அதாவது அந்நாட்களுக்குப் பிந்தைய சந்ததியாராகிய நாமும் அந்த வார்த்தையின் ஒலியைக் கேட்டு, அதன் தாக்கத்தை உணர்ந்து இயேசுவின் தாகத்தைத்தீர்க்கவும் கடமைப்பட்டுள்ளோம்.

மேலும் இந்த வசனத்தைக் குறித்து இவ்வளவு காலங்கடந்து நாம் என்ன பதில் சொல்ல முடியுமென்று நம்மை நாமே விலக்கிக் கொள்ள முடியாது. இயேசு கிறிஸ்து மறுபடியும் இந்த உலகத்துக்கு வரும்வரை வாழ்கின்ற அனைத்து மக்களும் இந்த ஐந்தாம் வசனத்துக்கான தீர்வை உண்டாக்க நமக்குக் கடமை உண்டு. அதுவும் தேவனுடைய சித்தம் என்பதை உணர்வது கூடுதல் பெலனாகும்.

அப்படியானால் அது என்ன தாகம் என்றும் அதை நாம் எப்படி தீர்க்க முடியும் என்றும் ஆராய்வோம். அது ஆத்தும தாகம். அது ஓர் ஆவிக்குரிய சிந்தனை. அந்தத் தாகம் பல கிளைகளைக் கொண்டதாகும். அவற்றில் முக்கியத்துவப் படுத்தப்படுகிற வைகளவற்றை நாம் அறிய முற்படுவோம். கர்த்தர் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக.

இயேசு தமது ஜீவிய காலத்திலே மகா உன்னதமான காரியத்தை செய்து நிறைவேற்றி விட்டார். ஒரு மனிதனுக்கு அதாவது ஒரு ஆத்துமாவுக்கு நித்திய ஜீவனை சுதந்தரிப்பதற்கு தேவையான எல்லாவற்றையும் குறைவின்றி முழுமையாக செய்து நிறைவேற்றி விட்டார்.

அதே சமயம் பிதாவின் சித்தமாகவும், இயேசுவின் ஆவலாகவும் அமையப் பெற்றவைகளில் சில காரியங்கள் காலப் பிரமாணத்தின்படி நடைபெற வேண்டியவைகளாக இருந்தன. அப்படிப்பட்டவைகளை இயேசு வாழ்ந்த அந்த காலத்திலேயே அவர் செய்ய முடியாது. அவற்றை நாம் செய்து நிறைவேற்ற இயேசு விட்டுச் சென்றவைகளாக அறிந்து ஏற்றுக்கொள்ள வேண்டும். அது கட்டாயமும் கூட. அவற்றை நாமே செய்து

நிறைவேற்ற இயேசு மிகவும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். அப்படியாக அவர் சொன்ன உபதேசத்தின்படி இயேசுவின் தாகத்தை நாம் தீர்த்து வைத்து அவரால் நற்சாட்சி பெற வேண்டும்.

நாம் தீர்க்க வேண்டிய சரீர தாகம் :-

"உன் சத்துரு பசியாயிருந்தால் அவனுக்குப் புசிக்க ஆகாரங் கொடு. அவன் தாகமாயிருந்தால் குடிக்கத் தண்ணீர் கொடு." நீதிமொழிகள் 25:21

"சத்துரு தாகமாயிருந்தால் அவனுக்குப் பானங்கொடு. நீ இப்படிச் செய்வதினால் அக்கினித் தழலை அவன் தலையின் மேல் குவிப்பாய்." ரோமர் 12:20

மேற்கண்ட இந்த வசனங்களிலுள்ள வார்த்தைகளைக் கவனியுங்கள். அவைகளை நாம் வாசிக்கிறதற்கு எளிதானவை களாக இருக்கலாம். ஆனால் அவற்றின் கருத்தை ஏற்றுக் கொண்டு அதற்குக் கீழ்ப்படிந்து நடக்கிறவர்கள் இன்று எத்தனை பேர்? சாதாரண விசுவாசிகள் முதல் பெரிய ஊழியக்காரர்கள் வரை, பெரும்பாலோனார் தங்களுடைய சத்துருக்களை கடித்துக் குதறாத குறை மட்டும் தான். கோபத்தினாலோ, பொறாமையினாலோ, பழிவாங்கும் சுபாவத்தினாலோ, நேரிடை யாகவோ, மறைமுகமாகவோ பரவலாக அப்படிப்பட் சுபாவங்களைக் கொண்டவர்கள், நிறைந்து செயல்படுகிறதை அறிகிறோம். (அதே சமயம் யாருமே வசனத்துக்குக் கீழ்ப்படிந்தவ களாக இருக்க மாட்டார்கள் என்று கூறுவது சரியான சிந்தனையு ஆகாது.) மொத்தத்தில் சத்துருக்களாயிருந்தாலும் அவர்கள் தா முள்ளவர்களாயிருந்தால் - நாம் அவர்களுடைய தாகத்தை தீர்க்கமுடியுமென்றால் கண்டிப்பாக அவர்கள் தாகத்தைத் தீர்க் வேண்டும். அப்படித்தான் பரிசுத்த வேதம் நமக்குப் போதிக்கிற

சற்று நிதானமாக யோசித்துப் பாருங்கள். சுபாவ அன் குறைந்து போகிற இந்த கடைசி காலத்திலே நாம் எத்தகைய ம நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதைக் குறித் நம்மை நாமே பரிசோதித்துப் பார்ப்பது மிகவும் நல்லதாகு தன்னுடைய பெற்றோரின் பசியைப் போக்காத கிறிஸ்தவர்க வாழ்வில் எத்தகைய பெரிய பாவநிலையில் இருக்கிறோம் என் எண்ணுவதில்லையே.

"ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து, தன் சகோதரனுக்கு குறைச்சலுண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக் கொண்டால், அவனுக்குள் தேவஅன்பு நிலை கொள்ளுகிறதெப்படி" 1 யோவான் 3:17. இப்படியொரு வேத வசனம் உண்டென்று எத்தனைபேர் நினைவில் உள்ளது. இப்படிப் பட்ட நிலையில் உள்ளவர்கள் அதற்கும் அடுத்தபடியாக உண்மை யிலேயே தரித்திரராக வாழ்ந்து கொண்டிருப்பவர்களின் பசியைப் போக்கும் சிந்தையை எப்படி நாம் காணமுடியும்.

இப்படிப்பட்ட சூழலில் நமது சத்துருவாக உள்ள ஒருவன் பசியாயிருந்தால் அவனது பசியைப் போக்கும் குணம் எவ்வளவு அரிதான காரியம் என்பதை உணர வேண்டும். அதே சமயத்தில்அது எவ்வளவு அவசியமானது என்பதை மீண்டும் நினைவில் கொள்ளுவோமாக.

இன்னொரு தன்மையினாலே, பசியுள்ளவர்களாகவும் தாகமுள்ளவர்களாகவும் இருப்பவர்களைக் குறித்து பவுல் அப்போஸ்தலன் கூறுவதை பரிசுத்த வேதாகமத்தில் (1 கொரிந்தியர் 4:11லும் 2 கொரிந்தியர் 11:27-லும்) நாம் வாசிக்கிறோம். பலவித மான பாடுகளோடும், வேதனைகளோடுங்கூட பசியும் தாகமும் கிறிஸ்துவினிமித்தம் உண்டானதாக அந்த வசனங்களிலே கூறப் பட்டுள்ளதை நாம் வாசிக்க முடியும்.

கர்த்தருடைய சுவிசேஷப் பணியை உண்மையாய் செய்து நிறைவேற்றுகிறவர்கள் பல சந்தர்ப்பங்களிலே பவுல் அப்போஸ்தல னைப் போல பசிதாகத்தை உடையவர்களாக காணப்படக்கூடும். அப்படியானால் அவர்களுடைய பசியைப் போக்கி தாகத்தைத் தீர்க்க வேண்டியவர்கள் யார் என்று எண்ணிப்பாருங்கள். அப்படிப் பட்டவர்களைக் குறித்த பாரம் விசுவாசிகளாகக் காணப்படுகிறவர் களை அழுத்த வேண்டும். அப்படித்தான் பரிசுத்த வேதமும் நமக்கு வழிகாட்டுகிறது.

பொதுவாக எந்த ஒரு பணியும், உழைப்பும், தியாகமும் இருந்தால் மட்டுமே சிறப்பானதாக அமையும். அதிலும் கர்த்தருடைய பணியாகிய சுவிசேஷப்பணி அவ்வாறு இருந்தால் இன்னும் மகிமை நிறைந்ததாக இருக்கும். அது மிகவும் தூய்மை யானதாக இருக்க வேண்டும். மேலும் அது கனமான ஊழியம் மட்டுமல்ல கடினமானதுமாகும். அதில் கர்த்தருடைய ஊழியக்காரர் களுக்கும் மிகப் பெரிய கடமை உள்ளது. இந்தத் தன்மையுடைய வர்களுடைய பசிதாகம் தீர்க்கப்பட வேண்டும்.

சுவிசேஷப் பணியாற்றுபவர்களுடைய தாகம் தீர்க்கப்பட நாம் உதவிட வேண்டும். அது நமது கடமையாகும் என்பதை மீண்டும் நினைவில் கொள்ளுவோம். அதினால் நாம் பெறும் ஆசீர்வாதமும் அளவிட முடியாததாகும்.

தாகத்துக்குத் தண்ணீர் கேட்ட எலியேசரின் தாகத்தையும் ஒட்டகங்களின் தாகத்தையும் தீர்த்து வைத்த ரெபேக்காளே ஈசாக்குக்கு மணவாட்டியாக தகுதியானாள் என்ற இனிய வரலாற்றை நாம் ஆதியாகமம் 24:17-20 வசனங்களில் வாசிக்கிறோம்.

இதில் ஒட்டகம் என்றாலே, வாய்திறந்து கேட்காத - கேட்க முடியாத, அதேசமயம் பத்து ஒட்டகங்களுக்குத் தண்ணீர் தேவை என்பதினாலே தேவை மிகுந்த ஏழைகளைக் குறிப்பதாகும் என நான் பல சந்தர்ப்பங்களிலே மிகத்துணிவுடன் கூறுவதுண்டு தேவை மிகுந்த ஏழைகளின் தாகத்தை தீர்ப்பது அவசியம் என்பது வலுவான சத்தியமாகும். ஏனோ இன்று அநேகர் அந்த உண்மை யை மறந்து விட்டனர். மறந்து விட்டனரா அல்லது சாத்தான் வஞ்சகமாக மறைத்து விட்டானா? மறந்தோ மறைத்தோ அல்லது மறுத்தோ வாழ்பவர்கள் எப்படி மணவாட்டியாக முடியும்?

மேலும் கர்த்தருடைய ஊழியக்காரனாகிய எலிசா தீர்க்க தரிசியினுடைய பசி தாகத்தைப் போக்கிய கனம் பொருந்திய ஸ்தி போஷிக்கப்பட்டதையும் பரிசுத்த வேதாகமம் நமக்கு திட்டமாய் போதிக்கிறது. 2 ராஜாக்கள் 4:8,9 8:1-6

இவ்வாறாக இன்னும் எலியா உட்பட பலர் தாகம் தீர்க்கப் பட்டதையும் அதினால் ஆசீர்வதிக்கப் பட்டதையும் நாம் தெளிவாக அறிந்தும் அந்த சத்தியத்துக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறதில் அக்கறை கொள்வதில்லை.

இரட்சிப்பை சுதந்தரித்த சகேயு என் ஆஸ்தியில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன் (லூக்கா 19:8,9) என்றதையும் இயேசு சொன்ன உவமையில் ஏழையான லாசருவுக்கு பசி தாகம் போக்காத ஐசுவரியவான் நியாயத்தீர்ப்பிலே தன் தாகத்தினால் கதறுவதையும் லூக்கா 16:8,9 ; நியாயத்தீர்ப்பு நாளிலே, நான் தாகமாயிருந்தேன் என் தாகத்தைத் தீர்த்தீர்கள் என்றும் அதைக் குறித்து இந்த சிறியரில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் (மத்தேயு 25:35,37,40) என்று கூறும் இயேசுவின் சாட்சியின் உபதேசங்களையும் நாம் தெளிவாக வாசிக்கிறோம்.

இவ்வளவு தெளிவாக தாகம் தீர்த்தலைப் பற்றி இயேசு
யெ பின்பும் அந்த வகையான சாட்சியின் ஜீவியம் இல்லாமல்
லோக ராஜ்ஜியம் சென்று விடலாம் என்று நாம் எண்ணினால்
எவ்வளவு பெரிய ஏமாற்றம்? மேற்கூறியவற்றை நாம்
சிக்கும்போது அவற்றை வெறும் எழுத்துக்களாகவே இருக்கும்
விட்டு விட்டு பெரும்பாலானோர் பரலோக ராஜ்ஜியத்துக்குள்
வழியாய் பிரவேசிக்க முற்படுகிறோம் என்று பொருளாகும்.
வேதான் இவ்வளவு தூரம் இதைத் தெளிவுபடுத்தி வலியுறுத்த
ண்டியதுள்ளது.

ம் தீர்க்க வேண்டிய ஆத்தும தாகம் :-

இனி மற்றொரு சிந்தனைப் பகுதியான ஆவிக்குரிய
ளிப்பாடாக ஆத்தும தாகத்தைத் குறித்து நாம் தியானிப்போம்.
தத்திலுள்ள எந்த தீர்க்கதரிசனமும் சுய தோற்றமான
ருளை உடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறிய வேண்டி
" 2பேதுரு 1:20. இந்த வசனத்தின்படி சில சத்தியங்களை
க்கு முன்பாக நிலை நிறுத்துவோம்.

"என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சிறைப்பட்டுப்
னார்கள்." அவர்களுடைய திரளான கூட்டத்தார் தாகத்தால்
றண்டு போனார்கள். ஏசாயா 5:13

மேற்கூறிய வசனத்துக்குக் காரணமாகத் தேவன்
டைய ஜனத்தை - அதாவது இஸ்ரவேல் வம்சத்தைத்
சைத் தோட்டமாகவும், யூதாவின் மனுஷரை அவரின்
மகிழ்ச்சியின் நாற்றாகவும் (ஏசாயா5:4) பாவித்து, அவர்கள்
பான பழத்தைத் தந்ததினால் (ஏசாயா 5:5) வேலியை எடுத்துப்
டுவேன். அதுமிதியுண்டுபோம் என்று கூறினார்.

தற்காலத்திலும் கிறிஸ்தவர்களுக்குள் அப்படிப்பட்டதான
நிலையைப் பரவலாகப் பார்க்கிறோம். ஒருவகையில் பார்த்தால்
யசுவைப் பற்றி அறியாத அநேக மக்களுக்காக சுவிசேஷம்
விக்க வேண்டிய பாரம் நமக்கு உண்டு. அது ஒருபுறம் இருக்க
அளவு சபைகளின் மத்தியிலும் நல்ல பழத்தை எதிர்
க்கும் நமது தேவனுக்குக் கசப்பான பழத்தைக் கொடுத்துக்
ண்டிருக்கும் கூட்டமாகவே அநேகர் இருக்கிறதைப்
க்கிறோம். ஆகவே இந்நாட்களிலே சபைகளிலே கர்த்தர் வேலி
எடுத்துப் போட்டாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. அதினி

மித்தம் பட்டினி, தாகத்தால் நாவறண்டு போனதால், அந்தப்
தாகத்தைப் போக்கும் சிறப்பான முயற்சியும் நமக்குத் தேவை
படுகிறது.

இன்னொரு வசனத்தைப் பார்ப்போம். "தாமதிக்கிறார் என்
சிலர் எண்ணுகிறபடி கர்த்தர் தமது வாக்குத்தத்தைக் குறி
தாமதமாயிராமல் ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மன
திரும்ப வேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்
ளவராயிருக்கிறார்." 2பேதுரு 2:9

சிதறிக் காணாமல் போனது ஒரு ஆடாக இருந்தாலு
மேய்ப்பன் அதைத் தேடாமல் இருப்பானோ? அதைப் போல இ
சிறியரில் ஒருவனாகிலும் கெட்டுப் போவது உங்கள் பிதாவி
சித்தமல்ல." மத்தேயு 18:12-14

இப்படிப்பட்ட ஆத்தும தாகத்தைக் கொண்டுள்ள இயே
மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகு
சந்தோஷம் உண்டாகியிருக்கும். (லூக்கா 15:7) என்று சொன்
ரே அவருடைய இந்த தாகத்தை நாம் தீர்க்க வேண்டுமல்லவ

மேலும் ஒரு வசனத்தைக் கவனிப்போம். "கர்த்
தேசத்தின் மேல் பஞ்சத்தை அனுப்பும் நாட்கள் வரும். ஆகா
குறைவினால் உண்டாகிய பஞ்சமல்ல, ஜலக்குறைவினா
உண்டாகிய தாகமுமல்ல. கர்த்தருடைய வசனம் கேட்கக் கூடா
பஞ்சத்தை அனுப்புவேன்." ஆமோஸ் 8:11

மேற்கூறப்பட்ட வசனத்தின் நிறைவேற்றம் தற்காலத்தி
நிகழ ஆரம்பித்திருக்கிறதாகவே நாம் உணர முடிகிறது. இ
உண்மையையும் அதன் காரணத்தையும் பூரணமாக அறிகிற
கள் மிகமிகக்குறைவு. அறிவின் பெருக்கம், நாகரீகத்தின் வளர்
கலாச்சார சீரழிவு, மண்ணாசை, பெண்ணாசை, பொன்னா
போன்றவை வேற்றுரு கொண்டு உட்புகுதல், மாமிச அறிவை
கொண்டு பரிசுத்த வேத வசனங்களை ஆராய்தல், மாமிச சிந்
யின்படி வேத வசனங்களுக்கு விடை காணுதல் போன்ற காரண
களால் கிறிஸ்தவம் புதியதொரு பரிணாமத்துக்கு நே
உருமாற்றம் செய்யப்பட்டு வருகிறது.

சத்தியம் போதிக்கப் படுவதற்குப் பதில் சத்தியத்
தங்களுடைய சுய எண்ணத்துக்கு வலுவூட்ட மாத்திரமே

ணையாகக் கொள்ளுகிற ஊழியங்கள், பெருகி வருகிறதை இக் காலத்திலே நாம் கண்கூடாகக் காண்கிறோம். இயேசுவின் இரண்டாம் வருகைக்கு முன் சகல இடங்களிலும் அறிவிக்கப்பட வேண்டிய ராஜ்ஜியத்தின் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படாமல் ஏதோ மலிவு விற்பனை போன்ற ஒரு மாய தோற்றத்தை வெளிப்படுத்தும் ஊழியங்களும் பெருகி வருகின்றன. வேத வசனங்களின் சத்தியங்களுக்குப் பதில் சுய விளக்கங்களும், சுய விளம்பரங்களும், வியாபாரத் தொழில் போலவும் மிஞ்சி நிற்பதைக் கண்ணாரக் காண முடியும்.

தூய ஆவியானவருடைய கிரியைகளும் நடத்துதலும் வேறாக விளக்கப்படுவதையும் கிறிஸ்துவின் மாதிரி பல வடிவங்களிலும் பின் தள்ளப்படுகிறதையும் பார்க்கிறோம். மொத்தத்தில் சுவிசேஷம் அதாவது நற்செய்தி என்ற மகத்துவம் நிறைந்த வார்த்தை என்னென்ன சத்தியங்களை தன்னுள் கொண்டது என்ற நோக்கமே இல்லாமல் போகிறதையும் காண்கிறோம். இதனாலேயே தாகம் தீர்க்கப்படாமல் போகிறது என்பது உண்மையே.

சுவிசேஷம் என்பது இயேசுவினுடைய ராஜ்ஜியம், மத்தேயு 4:23, 9:35, 24:14, மாற்கு 1:14; தேவனுடைய கிருபை; அப்போஸ்தலர் 20:24; கிறிஸ்துவின் உபதேசம் ரோமர் 15:19; இரட்சிப்பின் சுவிசேஷம் எபேசியர் 1:13; ஆகியவற்றைக் குறிப்பதாகும். இதைப் பரிசுத்தவான்களும் பெரியோர்களும் ; தேவ சமாதானம், இரட்சிப்பு தேவனுடைய கிருபை, தேவனுடைய ராஜ்ஜியம் ஆகிய பகுதிகளாக வகைப்படுத்தியுள்ளார்கள்.

குறிப்பிட்ட அந்த சத்தியங்கள் இல்லாமல் செய்யப்படுபவைகள் கர்த்தருடைய வசனம் கேட்கக் கிடைக்காத பஞ்சத்தை நோக்கிச் செல்லுகிறதாகவே இருக்கும். அந்தத் தாகத்தையும் நாம் தீர்க்கக் கடனாளிகளாக இருக்கிறோம்.

சுவிசேஷம் என்பது இவ்வுலக வாழ்வுக்கான தேவைகளை உள்ளடக்கினது தானே தவிர, இவ்வுலக வாழ்வுக்கான மேன்மைகளைப் பெறுவது மட்டும்தான் என்பதல்ல என்பதை உறுதியாக அறிந்து கொண்டு அதை நமது மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். இதில் தெளிவில்லையென்றால் ஜீவனற்ற மாயத்தோற்றத்திலே நாம் பயணப்படுகிறதாகவே இருக்கும்.

தற்கால நிலையில் உலகத்தின் முடிவு, இயேசுவின் இரண்டாம் வருகை, நியாயத்தீர்ப்பு, நித்தியம் போன்ற சத்தியங்கள டங்கிய சுவிசேஷத்தினால் ஆத்துமாக்களின் தாகம் தீர்க்கப் படுவதாக பரிசுத்த வேதம் கூறுவதை எப்பொழுதும் நினைவில் கொள்வோமாக. எனவே கர்த்தருடைய வசனங்களைக் கொண்டு சரியான பாதையில் சுவிசேஷ தாகத்தை நாம் தீர்க்க வேண்டும்.

இந்த ஐந்தாம் வசனம் தரும் பாடம்

1. எல்லாரும் மனம் திரும்ப வேண்டும்;-

"... ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி நம்மேல் பொறுமை யுள்ளவராயிருக்கிறார்." 2 பேதுரு 3:9

இந்த வசனம் இயேசுவினுடைய விருப்பத்தைக் (ஆவலைக்) குறிக்கிறது. 'எல்லாரும்' என்று சொல்லும்போது அவருடைய அன்பு, கிருபை ஆகியவற்றின் ஆழத்தையும் விரிவையும் நாம் பார்க்கிறோம். அதே சமயம் இன்னொரு வசனத்தைக் கவனியுங்கள். "... மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் தேவனுடைய தூதருக்கு முன்பாகச் சந்தோஷமுண்டாயிருக்கிறது." லூக்கா 15:10 "...பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டா யிருக்கும்." லூக்கா 15:7

இந்த வசனங்களைக் காணும்போது மனந்திரும்புகிற செயலின் மேன்மையையும் அறிய முடிகிறது. அதே சமயம் எவ்வளவு அரிதானதாகவும் இருக்குமோ என எண்ணத் தோன்றுகிறது.

"...பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன்" மத்தேயு 9:13. இதுவும் இயேசுவின் தாகமே. இந்த சத்தம் அவரின் வருகை மட்டும் ஒலிக்கும்.

2. சரீரதாகத்தைத் (தேவையைத்) தீர்க்க வேண்டும்:-

"நீ விருந்துண்ணும்போது ஏழைகளையும், ஊனரையும், சப்பாணிகளையும், குருடர்களையும் அழைப்பாயாக. அப்பொழுது நீ பாக்கியவானாயிருப்பாய்; அவர்கள் உனக்குப் பதில் செய்யமாட்டார்கள்; நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் உனக்குப் பதில் செய்யப்படும். லூக்கா 14:13,14

கர்த்தருக்குப் பலியாக / காணிக்கையாகக் கொடுத்தலும் ஏழைகளுக்குக் கொடுத்தலும் ஆகிய இரண்டும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள். அவ்வளவு முக்கியம் வாய்ந்தவையாகும். பரிசுத்த ஊழியர்களையும் தாங்க வேண்டும். அதைக் குறித்து 2 கொரிந்தியர் 8,9 ஆகிய இரண்டு அதிகாரங்களையே பரிசுத்த பவுல் அப்போஸ்தலன் தனியாக பிரித்து எழுதியுள்ள வார்த்தைகளை வாசித்துப் பாருங்கள். அதே சமயம் இக்காலத்தில் ஊழியங்கள், தொழிலாக உருமாற்றம் பெறுகிறதோ என்ற ஐயப் பாட்டையும் காண்கிறோம். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

எப்படியும் நாம் சரியான வழியைத் தெரிந்தெடுத்து தானமும் செய்ய வேண்டும் (மத்தேயு 6:1-4). தர்ம சகாயமும் செய்ய வேண்டும். (2 கொரிந்தியர் 9:1,6)

"உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்." 2 கொரிந்தியர் 9:7

"நீங்கள் இந்த தர்ம காரியத்திலும் பெருக வேண்டும் ; ... உங்களுடைய செல்வம் அவர்களுடைய வறுமைக்கு உதவுவதாக" 2 கொரிந்தியர் 8:7,15

3. **ஆத்தும தாகத்தைத் தீர்க்க வேண்டும்:-**

"... நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" மாற்கு 16:15

சுவிசேஷம் என்பது நற்செய்தியாகும். அது உலக வாழ்க்கைக்குரியதாக மட்டுமல்ல ; உலக வாழ்க்கையை உள்ளடக்கியதான தெய்வீகக் காரியத்தைப் பிரதானமாகக் கொண்டதாகும். மத்தேயு 6:25-33 ஆகவே இயேசுவைக் குறித்தும்; லூக்கா 2:10,11; இரட்சிப்பைக் குறித்தும், சங்கீதம் 96:2; தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்தும் மத்தேயு 4:23 சுவிசேஷப் பணியாற்றி ஆத்துமாக்களின் தாகத்தைத் தீர்க்க வேண்டும்.

இயேசுவின் வார்த்தை இந்நாட்களுக்கும் பொருந்துவ தாகவே உள்ளது. "அவர் திரளான ஜனங்களைக் கண்டபோது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போல தொய்ந்து போனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்த படியால்..."

மந்தையைப் போல் இராத படிக்கு ..." எண்ணாகமம் 27:16 என்று பூர்வ நாட்களிலே சொல்லப்பட்டது போல உள்ள நிலையையும் நினைப்போம்.

இந்தக் காரியத்தில் கர்த்தர் நமக்குப் பாராட்டின கிருபைக்குத் தக்கதாக அவருடைய தாகத்தைத் தீர்ப்பதில் ஏதாவது ஒரு வகையில் நமது பங்களிப்பும் இருப்பதாக.

ஆறாம் வசனம்

யோவான் 19:30

முடிந்தது

நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்து சிலுவையிலிருந்து பேசின ஏழு வசனங்களிலும் மிகவும் சிறியது. இந்த ஆறாவது வசனமாகும். ஒரு வார்த்தையே ஒரு வசனமாகக் கூறப்பட்டுள்ளது. இது ஒருவகை சிறப்பானதாகும்.

வார்த்தையில் அறிய வேண்டிய பொருள்:-

பொதுவாக முடிந்தது என்று கூறும் வார்த்தையானது எது முடிந்தது என சொல்லுகிறோமோ அது நிறைவடைந்தது என்று பொருள்படும், இங்கே ஒரு கருத்து முக்கியமானதாகும். முடிந்தது ன்று பொதுவாகச் சொன்னாலும், முடிந்ததின் பயன் என்ன ன்பதைப் பொறுத்துதான் அதன் மேன்மை அளவிடப்படும்.

இன்னும் சொல்லப்போனால் "முடிந்தது" என்று கூறப்படும் பார்த்தை, ஒரு செயல் நடைபெறும் கால அளவு, நடைபெற்ற சயல் ஆகிய இரு தன்மையையும் குறிக்கும். அப்படிப் பார்க்கும் பாது இயேசுவின் செயல்களுக்கான காலம் முடிந்ததா? அல்லது அவர் செய்து நிறைவேற்ற வேண்டிய செயல் செய்து முடிக்கப்பட்டு பிட்டதா? இப்படிப்பட்ட கேள்விகள் எழும்பும். இவற்றின்படி றிக்கப்பட்டக் காலத்தில் செய்யப்பட வேண்டிய காரியம் முழுமை பற்று முடிந்தது என்றால்மட்டுமே அந்த வார்த்தை முழுமையான யனைத் தந்து மேன்மை பெறும்.

எனவே இப்போது இயேசு "முடிந்தது" என்று எதைச் சால்லுகிறதாக நாம் எடுத்துக் கொள்ளுகிறோம்? அது எப்படி டிந்தது? அதன் விளைவு என்ன போன்ற கேள்விகளுக்கு டைக்கும் விடையைப் பொறுத்துதான் அதன் சிறப்பு அமையும்.

கல்வி கற்போருக்கு கற்க வேண்டிய காலமும் முடிந்து, க வேண்டிய கல்வியைப் கற்றுள்ளாரா என்பதை அறிய தற்குரிய தேர்வும் முடிந்திருக்கலாம். ஆனால் அதன் வளிப்பாடு என்ன என்பது ஒரு காரியமாகிறது. அதாவது தேர்ச்சி ற வேண்டும்.

ஒரு வேலைக்காக நேர்காணலுக்குச் செல்பவர், குறித்த நேரத்தில் சென்றுவர வேண்டும். இப்போ நேர்காணலும் முடிந்தது எனக் கூறுவோம். ஆனால் வேலை கிடைத்தால் தானே நடந்து முடிந்த நேர்காணல் பயனைத் தந்ததாகும்.

அதைப் போலவே உலகத்தில் மரித்தவர்களைக் குறித்து "முடிஞ்சு போச்சு" என்று கூறுவதும் உண்டு. அப்படியானால் அவருக்குக் கொடுக்கப்பட்ட ஜீவனோடு, வாழ்ந்த வாழ்வின் பயன் அடையத்தக்கதாக அமையப் பெற்றிருந்தாரா என்று கேட்கப்படாத ஒரு கேள்வி உண்டு. இது சாதாரணமாகத் தோன்றினாலும் ஒரு மிகப்பெரிய கேள்வியாகும். இதை வேறொரு பதத்துடன் முக்கியத்துவம் கொடுத்து பெரியவர்கள் குறிப்பிடுவதுண்டு. மனிதன் பிறந்து வாழ்ந்து முடித்தால் 'பிறவிப்பயன்' பெற வேண்டும் என்பதே அந்த கருத்தாகும்.

மேற்கண்ட கருத்துக்களோடு கூடிய வாழ்க்கையைப் பற்றி தெய்வீக நம்பிக்கை அற்றவர்கள் கவலைப்பட வேண்டியதில்லை. கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்பது போலவும் செத்தவன் தலை வடக்கேயோ தெற்கேயோ, எப்படியானால் என்ன என்று வாழ்பவர்களும் கவலைப்பட வேண்டியதில்லை. அப்படிப் பட்டவர்களுக்கு இப்படிப்பட்ட சத்தியங்கள் தேவையும்படாது என்பதும் சரியே.

அதே நேரத்தில் இன்னொரு உண்மையையும் இந்த நேரத்தில் நாம் ஒப்புக்கொண்டாக வேண்டும். கிறிஸ்தவர்களிலும் அநேகர் பரவலாக இன்று இந்த விஷயத்தில் தெய்வ நம்பிக்கை அற்றவர்களைப் போல் வாழ்ந்து முடித்துக் கொள்வதுண்டு. வாழ்வின் நற்பயனைப் பற்றி சிந்திக்காத இடப்பக்கக் கள்ளனின் வாழ்வே அது.

இப்போ முடிந்தது என்று சொல்பவர் இயேசு. அவர் எதைக் குறித்துச் சொல்கிறார் என்பது பற்றித்தான் நமது தியானம். பொதுவாக இயேசுவின் வாயிலிருந்து பிறந்த சொற்களில் பயனுள்ளவைகள் மட்டுமே நமக்கு வேத வசனங்களாகத் தரப் பட்டுள்ளன. வீணானவைகளான எந்த ஒரு வசனமும் தரப்பட வில்லை. அதிலும் சிலுவையிலிருந்து இயேசு பேசினார் என்றால் அது மிக்க பொருளுடையதாயிருக்கும் என்பதற்கு சந்தேக மில்லை. நிறைந்த பயனுடையதாகவும் இருக்கும்

இன்னொரு சிறப்பு அம்சம். இயேசுகிறிஸ்துவின் உபதேசங்களும் வார்த்தைகளும் ஒரு போதும் வேத வசனங்களுக்கு விரோதமாக இருந்தது இல்லை.

ஒருவேளை இந்த வார்த்தையின் முழுக்காரணங்களையும் நாம் புரிந்து கொள்ளமுடியாவிட்டாலும் அதை பரிசுத்த ஆவியான வருடைய துணை கொண்டு தியானிப்போமாக. இயேசு "முடிந்தது" என்று பொதுவாகச் சொன்னது போலத் தெரிந்தாலும் எவையெல்லாம் முடிந்தது? அவை எப்படி முடிந்தது என அறிந்து கொள்வது நம்முடைய விசுவாச வாழ்வுக்கு மிகுந்த பெலனாகும்.

<u>**மனித சரீர வாழ்க்கை முடிந்தது**</u>

நம்முடைய சரீரம் மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையது "அவன் (மனுஷன்) மாம்சம் தானே. அவன் இருக்கப் போகிற நாட்கள் நூற்றிருபது வருஷந்தானே." ஆதியாகமம் 6:3 இவ்வாறு ஒரு விபரத்தைக் கர்த்தர் தருகிறார். பிந்தைய நாட்களில் கூறப்பட்ட இன்னொரு வசனத்தையும் நாம் அறிவோம். எங்கள் ஆயுசு நாட்கள் எழுபது வருஷம் பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமாயிருந்தாலும்..." சங்கீதம் 90:10. இம்மாதிரியான வசனங்களினால் மனுஷனுக்கு ஒரு முடிவு உண்டு என்பதை உறுதியாக வெளிப்படுத்தி விட்டார்.

மேலும் நடுமரத்துக்கனியை புசிக்கும் நாளிலே சாவதை முன்னறிவித்த தேவன் புசித்த நாளுக்குப் பின் ஜீவ விருட்சத்தின் கனியைப் புசித்து என்றென்றும் உயிரோடிராதபடி தடை செய்து விட்டதினாலே (ஆதியாகமம் 3:22-24) மனிதனுக்கு மரணமே ஒரு முடிவாக இந்தப் பூலோகத்திலே தீர்மானிக்கப்பட்டு விட்டது என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளுகிறோம்.

இப்போதைய சிந்தனைக்கு நேரிடையாக தேவைப்படா விட்டாலும் கூடுதலாக கிறிஸ்தவர்களுக்கானது மட்டுமல்ல மனித வாழ்வுக்கான சிறந்த தத்துவத்தைக் குறிக்கும் சில வேத வசனங் களைப் பார்க்கிறோம். அதில் சிறப்பானது என நான் கருதுவது இதோ "அன்றியும் ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத் தீர்ப்படை வதும் மனுஷனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே..." எபிரெயர் 9:27 இந்த வசனத்தின் வெளிப்பாடு மனுஷகுமாரனான இயேசுகிறிஸ்துவில் நிறைவேறினது என்பது உண்மையும் சிறப்பானதுமாகும். குறிப்பாக நியாயத்தீர்ப்பு என்பது

உயிர்த்தெழுந்தபின், என்பதினாலேயே கிறிஸ்துவில் மரணம் நிறைவேறினதாக நான் குறிப்பிடுகிறேன். மொத்தத்தில் சரீர மரணம் என்பது மாற்றப்படாததும், மாற்ற முடியாததுமாகும் என உறுதியாக அறிகிறோம்.

"நீ மண்ணாயிருக்கிறாய் மண்ணுக்குத் திரும்புவாய்" ஆதியாகமம் 3:19. இந்த வார்த்தையின் ஒழுங்கின்படி மனித வாழ்வு அமைந்துள்ளது. இன்னொரு வசனத்தின் மூலம் விசேஷித்த தத்துவார்த்தமான செய்தியை அறிகிறோம். "மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது." லேவியராகமம் 17:11

இவை எல்லாவற்றையும் குறித்தே "பிறக்க ஒரு காலமுண்டு, இறக்க ஒரு காலமுண்டு, பிரசங்கி 3:2 அதேபோல எந்த சரீரமாக இருந்தாலும் அது அதன் உயிராகிய இரத்தத்தை உடையதாக இருந்தால் அது பிரிக்கப்பட வேண்டும். அதாவது அந்த உயிர் இரத்தத்தில் பொருந்தி இருப்பது பிரிக்கப்பட வேண்டும். இப்போது உயிரற்ற இரத்தத்தைக் கொண்ட சரீரம் உயிரற்ற மாம்சமாகிறது. அது மண்ணுக்குத் திரும்புகிறது. இதில் உயிர்பிரிந்து மரணம், சரீரம் மண்ணுக்குத் திரும்புகிறது ஆகிய இரு பிரிவான செயல் உண்டு என்பதை நினைவில் கொள்ளுவோம்.

அதனாலேயே பரிசுத்த பவுல் இதை மரண சரீரம் என்று குறிப்பிடுவதைப் பார்க்கிறோம். ரோமர் 7:24

"... இனி இயேசுவைக் குறித்த வசனங்களைப் பார்க்கிறோம். பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க அவரும் அவர்களைப் போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்." எபிரெயர் 2:14

இத்தகைய மாமிசத்தையும் இரத்தத்தையும் உடைய சரீரத்துக்கு மரணம் என்பது பொதுவானதாகையால் இயேசுவும் ஒருநாளில் மரிக்க வேண்டியது அவசியமாகிறது. அந்த சரீரம் ஒரு முடிவுக்கு வரக்கூடியது தான். அது சரியே.

அதே சமயம் இயேசுவின் சரீரம் வேறுபட்டதொரு தன்மையுடையது என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். நம்முடைய பிறப்பைப் போல் துன்மார்க்கத்தில்

உருவாகவில்லை. பாவத்தில் கர்ப்பந்தரிக்கப்படவில்லை. சங்கீதம் 51:5 ஸ்திரீயின் வித்தாக, பரிசுத்த ஆவியானவராலே ஜென்ம பாவங்கொண்ட கன்னிகையான மரியாளின் கர்ப்பம் உட்பட அவளது சரீரம் கழுவப்பட்டு அதன்பின்பு உன்னதமானவருடைய பெலத்தினால் உண்டானதுதான் இயேசுவின் சரீரம். மண்ணினாலே உண்டானது அல்ல. லூக்கா 1:35. ஆதலால் அவளிடத்தில் பிறந்தது பரிசுத்தமுள்ளது.

இப்போது ஒரு சிந்தனையில் இரு கருத்துக்களை அறிவோம். (1) பாவத்தில் பிறந்த மனிதன் மாம்சத்தையும் இரத்தத்தையும் கொண்டவன்தான். அந்த உடல் உயிரைப் பிரிந்து மரணத்தைச் சந்திக்கும். அந்த உடல் மண்ணுக்குத் திரும்பும். (2) அதே போல பரிசுத்தத்தில் பிறந்த இயேசு பாவ மாம்ச சாயலில் வந்ததினால் அந்த உடல் உயிரைப் பிரிந்து மரணத்தைச் சந்திக்கும். ஆனால் அந்த உடல் மண்ணுக்குத் திரும்பத்தக்கதல்ல இயேசுவின் உயிர்த்தெழுதலின் இரகசியங்களுக்கு இந்தத் தன்மையும் ஒரு பங்களிப்பாகும்.

இவ்விதமான கருத்துக்களின் அடிப்படையில் இயேசு தனதுசரீரம் மரணத்தைச் சந்திக்கும் நேரம் மிகவும் நெருங்கி விட்டதை அறிந்து இந்த சரீர வாழ்க்கையைக் குறித்து முடிந்தது என்று கூறுகிறார்.

<u>பூலோகத்தில் மனிதத் தன்மையின் வாழ்க்கை முடிந்தது:-</u>

இயேசு கிறிஸ்துவின் பிறப்பு என்பது காலத்தில் புதிதாக ஏற்பட்ட ஒன்றல்ல. "... அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது. மீகா5:2. அவர் ஏற்கனவே ஆதியிலே இருந்தவர். மனிதனாக அவதரித்தார். "ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். யோவான் 1:1,2 "தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை. பிதாவின் மடியிலிருக்கிற ஒரே பேரான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்" யோவான் 1:18 "இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்" எபிரெயர் 13:8 அவர் "கொடுக்கப்பட்ட குமாரன்" ஏசாயா 9:6. இவ்வாறான வசனங்கள் இயேசுவின் நித்திய தன்மை குறித்து நமக்குத் தெளிவாக விளக்குகின்றன.

இருந்தவரான தேவகுமாரனானதினால் அவருடைய தெய்வீகத் தன்மையை உள்ளடக்கி மனிதத் தன்மையிலேயே இயேசு வாழ்ந்து வந்தார். எனவே அவரிடத்திலே நம்மைப் போல பல பண்புகளும் உணர்வுகளுடனும் காணப்பட்டன. நம்மைப் போன்றே சரீர வளர்ச்சி, பசி, தாகம், துக்கம், தூக்கம், கோபம், கவலை, மனவேதனை போன்றவை காணப்பட்டன. "பிள்ளை வளர்ந்து ஆவியிலே பெலன் கொண்டு ஞானத்தினால் நிறைந்தது. தேவனுடைய கிருபையும் அவர் மேல் இருந்தது."

லூக்கா 2:40

"இரவும் பகலும் நாற்பது நாள் உபவாசமாயிருந்த பின்பு அவருக்கு பசியுண்டாயிற்று" மத்தேயு 4;2

"சமாரியா நாட்டாளாகிய ஒரு ஸ்திரீயினிடம் தாகத்துக்குத் தா என்றார்" யோவான் 4:8

"கப்பலின் பின்னணியத்தில் அவர் தலையணையை வைத்து நித்திரையாயிருந்தார்." மாற்கு 4:38

"அவர்களுடைய இருதயக் கடினத்தினிமித்தம் அவர் விசனப்பட்டு கோபத்துடனே சுற்றிலும் இருந்தவர்களைப் பார்த்து ... மாற்கு 3:5, இயேசு கண்ணீர் விட்டார்." யோவான் 11:35

இயேசு ... "துக்கமடையவும் வியாகுலப்படவும் தொடங்கினார்" மத்தேயு 26:37

"நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன்." மத்தேயு 11:29

மேலே கூறப்பட்டுள்ள வசனங்களில் காணப்படுகின்ற இயேசுவின் பண்புகளை அறிகிறோம். அவை அவர் கல்வாரிச் சிலுவையில் மரிக்கும் வரை அவரிடத்தில் குடி கொண்டிருந்தன.

இதே போன்று, குணநலன்களும், மனிதத்தன்மையும், உணர்வுகளும் உலகில் எல்லா மக்களிடமும் காணப்படுவது இயல்பானதே. அதைப்பற்றி நாம் பெரிதாக எடுத்துக்கொள்ளா விட்டாலும், அநேக விசுவாசிகளும் அப்படிப்பட்ட நிலையைக் கொண்டிருந்தார்கள் என்றும் வேதபுத்தகத்திலே வாசிக்கின்றோம். அப்படிப்பட்ட எல்லாரும் கூட மரித்தார்கள். சரீரத்தினின்று உயிர் பிரிந்தது. அவர்களுடைய வாழ்வு முடிந்தது. மரித்தவர்கள் அனைவரும் மௌனத்தில் இறங்கினார்கள்.

இவ்வாறு உலக மக்களானாலும், கர்த்தரால் மீட்கப்பட்டவர் களானாலும் சரி, மரித்தபின் கர்த்தருடைய நாளுக்காக நித்திரை யாயிருக்கிறார்கள் அவ்வளவே.

ஆனால் இயேசு மட்டும் மரித்து அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாள் உயிரோடு எழுந்திருந்தார். எழுந்தவர் தரிசனம் கொடுத்தார். தாம் உயிரோடு எழுந்ததை பல சாட்சிகள் மூலம் உறுதியாக வெளிப்படுத்தினார்.

இயேசு மரித்து உயிர்த்தெழுந்தபின் அந்நாட்களிலே மனிதத் தன்மை பொருந்தியதாகக் குறிப்பிட உணர்வுகள் ஏதும் கொண்டவராகக் காணப்படவில்லை. அதன்பின் பரத்துக்கு மேகங்கள் மேல் ஏறிப்போனார். "அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒருமேகம் அவரை எடுத்துக்கொண்டது." அப்போஸ்தலர் 1:9

இவைகளெல்லாவற்றையும் நாம் கவனிக்கும்போது அவை சாதாரண மனிதத்தன்மையினின்று வேறுபட்டதாகத் தோன்றுகிறதல்லவா? ஆம் நாம் அறிகின்றபடி இயேசுவின் மாமிச உணர்வுகள் ஒரு முடிவுக்கு வந்து, முற்றிலும் அவர் தமது தெய்வீகத்திலே பிரவேசிக்க வேண்டியது நியாயமே. சரியே. அதை உணர்த்தும் முகமாகவே, மக்களே ! என்னுடைய உள்ளுணர்வான மனிதத் தன்மை பொருந்திய வாழ்க்கை "முடிந்தது" என்று இயேசு கூறுகிறார்.

இயேசு இப்பூமியில் நிரந்தரமாக வாழ முடியாது:-

இயேசு இந்தப் பூமியில் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக மட்டுமே மனிதனாகப் பிறந்தார். அதன்பின் அதாவது அந்த நோக்கம் நிறைவேறிய பின் அந்த மனித சரீரத்தோடு இந்த பூமியில் வாழ முடியும் என்றாலும் அப்படிப்பட்டதான வல்லமைக்குள் இயேசு பிரவேசிக்க பிதா அனுமதிக்கவில்லை. அது தேவை என்றும் தீர்மானமும் இல்லை. இயேசு காலமெல்லாம் அப்படியாக வாழக்கூடிய நோக்கத்தோடு வந்தவருமல்ல. வாழக்கூடியவருமல்ல.

ஏனெனில் இயேசு தேவகுமாரன். அவர் இந்த பூலோக வாழ்க்கையை தேவசித்தத்தின்படி முடித்து, அதன்பின் தொடர்ந்து நடைபெற வேண்டிய காரியங்கள் ஏராளம் உண்டு. அவற்றின் முக்கியத்துவமும் கிறிஸ்தவத்துக்கு மிகத் தேவையானதாகும்.

முதலாவது மரித்து இயேசு மீண்டும் உயிரோடு எழுந்திருக்க வேண்டும். அப்படியானால்தான் அவர் தேவகுமாரன்.

அவர் அப்படி உயிர்த்தெழுந்தால்தான் பரிசுத்த வேதஒழுங்கின்படி, பூர்வ வெளிப்பாடுகளின்படி மனுக்குலமும் மரித்து பின்பு குறிப்பிட்ட காலத்திலே உயிரோடெழும்புவதற்கு முன்னோடியாக இயேசுவும் உயிரோடெழும்புவதும் பல நிலைகளிலே அவசியமாகிறது. "அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து; பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்." 1கொரிந்தியர் 15:23

இயேசு உயர்த்தப்பட வேண்டும். சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும் தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு உயர்த்தப்பட வேண்டும். யோவான் 3:14,15. இவ்வாறாக இயேசுவும் தனது மரணத்தின் அவசியத்தைக் குறித்து வெளிப்படுத்தியுள்ளார். அதன்படியே இயேசு கிறிஸ்துவை அதாவது சிலுவையிலே அறையப்பட்ட இயேசுவை நோக்கிப் பார்த்து விசுவாசித்து இரட்சிக்கப்பட்டு நித்திய ஜீவனை அடையத்தக்கதான கதவு திறக்கப்படுகிறது.

இயேசுவின் மூலமாக இரட்சிப்பு என்பதனால், அவர் இப் பூலோகத்திலே தன்னுடைய வாழ்வை இவ்வண்ணமாக நிறைவு செய்யவில்லையெனில் பின்னே எப்படிதான் நிறைவு செய்வது? எப்போதான் நிறைவு செய்வது? மனித வாழ்நாள் ஆண்டுகளையும் தாண்டி தலைமுறை தலைமுறையாக வாழ்ந்தால் அதன் பொருள்தான் என்ன? அப்படியானால் தொடர் செயல்கள் எப்படி நடைபெறும்?

இயேசுகிறிஸ்து விட்டுச்சென்றதொரு மிகப்பெரிய பணி உண்டு. அது அவர் காலத்துக்குப்பின் இப்பூலோகமெங்கும் அறிவிக்கப்பட வேண்டிய சுவிசேஷமாகும். "பின்பு அவர் அவர் களை நோக்கி : நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" மாற்கு 16:15. அதன் விளைவாகவே திருச்சபையாகிய மணவாட்டி ஆயத்தம் பண்ணப்பட முடியும்.

மனுஷர் மத்தியிலே வாழ்ந்த இயேசு இன்னொரு சத்தியத்தைக் கூறினார். "நான் என் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன். அப்பொழுது என்றென்றைக்கும்

உங்களுடனே கூட இருக்கும்படிக்கு சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்" யோவான் 14:16. "....அந்த தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார். யோவான் 14:26. ... "அவர் என்னைக் குறித்து சாட்சி கொடுப்பார்" யோவான் 15:26 ... "நான் போகாதிருந்தால் தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார். நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்தில் அனுப்புவேன்." யோவான் 16:7

இப்படியாக இன்னும் ஏராளமான காரண காரியங்களினால் பல ஒழுங்குகள் நிறைவேற்றப்பட வேண்டியவை ஏராளம் உண்டு. ஆகையினால் இயேசு இந்த பூமியில் நிரந்தரமாக வாழக்கூடாமல் இந்த சாயலை விட்டு வெளியேறித்தான் தீருவார். அவர் வெளியேறியே தீர வேண்டும். ஆகவே அதைக் குறிக்கும் வண்ணமான என் காலப்பிரமாணம் முடிந்தது என்று கூறினார் எனத் தெரிந்து கொள்ளுவோம். கர்த்தருடைய பரிசுத்தமுள்ள நாமத்துக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக.

நியாயப்பிரமாணம் முழுமையும் நிறைவேற்றப்பட்டு முடிந்தன

நியாயப்பிரமாணத்தையானாலும், தீர்க்கதரிசனங்களை யானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள். அழிக்கிறதற்கு அல்ல நிறைவேற்றுவதற்கே வந்தேன். மத்தேயு 5:17

இந்த வசனத்தில் இரண்டு மிக முக்கிய சத்தியங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதில் முதலாவதாக உள்ளது, "நியாயப் பிரமாணம்" ஆகும். இயேசு அதை நிறைவேற்ற வந்தேன் என்று கூறுவதை நாம் புரிந்துகொள்ள முடிகிறது. இந்த நேரத்தில் இப்புத்தகத்திலுள்ள 14வது பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கிறிஸ்தவர்களுக்கான புதிய காலம் என்ற தலைப்பின் கீழ் உள்ள பகுதியை மீண்டும் ஒருமுறை வாசித்துப் பாருங்கள்.

பரிசுத்தவான்களும் வேத பண்டிதர்களும் வரலாற்றுக் காலங்களைப் பல பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். அப்பகுதியில் நான் குறிப்பிட்டுள்ளவை மிக மிக முக்கிய இடத்தை வகிக்கும். அது மோசேயின் மூலமாக தேவனால் கொடுக்கப்பட்டது என்பதை

நாம் அறிவோம். அதில் கற்பனைகளையும் அதைச் சார்ந்த கட்டளைகளையும் தேவன் கொடுத்தார். அவை ஒட்டுமொத்தமாக 613 என கணக்கீடு செய்துள்ளனர்.

இப்போது ஒரு கருத்தைப் பார்ப்போம். கட்டளையை மீறுவது பாவமாகும். "பாவம் செய்கிற எவனும் நியாயப் பிரமாணத்தை மீறுகிறான். நியாயப் பிரமாணத்தை மீறுகிறதே பாவம்" 1 யோவான் 3:4

இதினிமித்தம் கட்டளைகளை மீறுகிறதினால் உண்டாகும் பாவங்களுக்கு பரிகாரமாக பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பல விதமான பலிகள் நியமிக்கப் பட்டிருந்தன. அது ஒருபுறமிருக்க அநேக மீறுதல்களுக்கான தண்டனைகளையும் வேறுவிதமாக விபரமாகத் தந்திருக்கின்றார். அந்தத் தண்டனைகள் சாதாரணமானவைகள் அல்ல. அவற்றில் ஒன்றிரண்டை மட்டும் இங்கு குறிப்பிடுகிறோம்.

"...ஜீவனுக்கு ஜீவன், கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், கைக்குக் கை, காலுக்குக் கால், சூட்டுக்குச் சூடு, காயத்துக்குக் காயம், தழும்புக்குத் தழும்பு, பழி கொடுக்க வேண்டும்." யாத்திராகமம் 21:23-25

மேலும் "அஞ்சனம் பார்க்கிறவர்கள்" (லேவியராகமம் 20:27) "தூஷித்தவன்" (லேவியராகமம் 24:4) "ஓய்வுநாளை மீறுகிறவர்கள்" (எண்ணாகமம் 15:35;) "கர்த்தரைவிட்டு விலக ஏவுகிறவன்" (உபாகமம் 13:10) "விபசாரம் செய்கிறவன்" (உபாகமம் 22:24) இப்படிப்பட்டவர்களை கல்லெறிந்து கொல்ல வேண்டுமென்றும் பிரமாணங்களில் கூறப்பட்டுள்ளன. இப்படிப்பட்ட தண்டனைகள் மிகவும் கொடூரமானவைகள் என்றும் நாம் அறிகிறோம்.

இவ்வாறான சத்தியங்களை நாம் வாசிக்கும் போது ஒரு உண்மை நமக்குப் புலப்படும். நாம் குறிப்பிட்ட 613 கட்டளை களையும் ஒரு மனிதன் கடைப்பிடிப்பதென்பது முடியாத காரியம். "நியாயப்பிரமாணமானது ஒன்றையும் பூரணப்படுத்தவில்லை." எபிரெயர் 7:19

"நியாயப்பிரமாணத்திலே ஒருவனும் தேவனிடத்தில் நீதிமானாகிறதில்லை..." கலாத்தியர் 3:11

"எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை." ரோமர் 3:20

அப்படியானால் நியாயப்பிரமாண காலத்திலே வாழ்ந்த இயேசுவின் நிலை என்ன? நியாயப்பிரமாணத்துக்கு முன்பாக இயேசுவின் நிலைப்பாட்டின் அளவு என்ன? அதைக் குறித்து பவுல் அப்போஸ்தலன் கூறுவதைக் கேளுங்கள். "விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாக கிறிஸ்து நியாயப் பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்." ரோமர் 10:4

இப்போது ஒரு கேள்வி. இயேசு நியாயப்பிரமாணத்திலுள்ள 613 கட்டளைகளையும் ஏற்று முழுமையாக நிறைவேற்றி விட்டாரா? ஆம் அப்படித்தான். இயேசு இந்த பூமியிலே மானிடனாய் வந்ததின் நோக்கங்களில் ஒன்றாக, அதையே அவர் குறிப்பிட்டிருக்கிறார். அதனால் அவர் கட்டளைகளை முழுமையாக நிறைவேற்றிவிட்டார் என்பதே சத்தியமாகும். அப்படி ஏதும் குறை இருக்குமானால் அதற்கு முன் அவர் மரிக்க முடியாது. தேவனும் அதை நீதியாக அனுமதிக்கவும் மாட்டார். அப்படியானால் எல்லா சத்தியங்களும் பொய்யாக ஆகிவிடும்.

"எப்படியெனில் ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக் கொண்டிருந்தும் ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான்." யாக்கோபு 2:10. இந்த வசனம் தருகிற உண்மையின்படி ஒரு காரியம் நமக்குத் தெளிவாக விளங்குகிறது. இயேசு நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டது மட்டு மல்ல அவருடைய மரணபரியந்தம் அதாவது சிலுவையின் மரண பரியந்தம் ஒன்றில் கூடத் தவறிப் போகவில்லை என்று தெரிகிறது.

இதினிமித்தமாக மாம்சத்தில் வந்த இயேசு தமது மாம்ச சரீரத்திலேயே நியாயப்பிரமாணத்தை நிறைவேற்ற எவ்வளவு சிந்தை உள்ளவராக இருந்துள்ளார் என்பதும் புரிகிறது. எனவே இயேசு நியாயப்பிரமாணம் முழுவதையும் நிறைவேற்றி முடிந்தது.

<u>தீர்க்கதரிசனங்களும் நிறைவேறி முடிந்தது:-</u>

பரிசுத்த மத்தேயு சுவிசேஷம் 5ம் அதிகாரம் 17ம் வசனத்தின் ஆரம்பத்தில் இரண்டாவது கருத்துள்ள வார்த்தையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது, "தீர்க்கதரிசனம்". இயேசு அதை நிறைவேற்ற வந்தேன் என்று கூறினதையும் இங்கு

நினைவு கூருகிறோம். ஆம் இயேசு தீர்க்கதரிசனங்களையும் நிறைவேற்ற வந்தார்.

இயேசுகிறிஸ்துவைக் குறித்த தீர்க்கதரிசனங்கள் ஏராளம், ஏராளம். அவை குமாரன் என்ற நிலையிலும், இயேசு என்ற பெயரிலும், ஆட்டுக்குட்டியானவர் என்கின்ற தன்மையிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் குமாரன் என்ற நிலை அவருடைய பிறப்புக்கு முன்னும் குறிப்பிட்டுள்ளது. இன்னும் இந்த உலகில் நித்தியத்திலும் நடைபெறக் கூடியவைகளும் உண்டு. பொதுவாக தீர்க்கதரிசனங்கள் பூர்வத்திலிருந்து நித்தியம் வரை கூறப்பட்டுள்ளன.

தீர்க்கதரிசனங்களில் சில தேவனாலே முன்னுரைக்கப் பட்டவை. சில தேவ தூதர்கள் மூலமாக கூறப்பட்டவை. இன்னும் பல கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் மூலமாக சொல்லப்பட்டவை. எப்படியாயினும் அவைகள் எல்லாம் மிகச் சரியாக நிறைவேற வேண்டும். அல்லது நிறைவேற்றப்பட வேண்டும். அப்படியானால் தான் அவர் கிறிஸ்து என்று ஏற்றுக்கொள்ளப்படுவார்.

அதன் ஆரம்ப அறிவிக்கை ஏதேன் தோட்டத்திலே தேவனாலே வெளிப்படுத்தப்பட்டது. "உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன். அவ உன் தலையை நசுக்குவார். நீ அவர் குதிங்காலை நசுக்குவா என்றார்" ஆதியாகமம் 3:15

இந்த வசனம், ஆதாம் ஏவாளுக்குப் பிறகு, இவ்வுலகி பிறக்கும் எல்லா மனிதர்களுக்கும் தேவன் நியமித்த ஒழுங்குக்கு நடைமுறைக்கும் வித்தியாசமானது. இயேசுவின் பிறப்பிற் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே தேவன் சொன் வார்த்தைகளாகும். ஒரு வேளை "ஸ்திரீயின் வித்தாக" ஒரு எப்படி பிறக்கமுடியும் என்ற ஒரு சிந்தனையின் தெளிவு யாருக்கு அந்நாட்களிலும், தொடர்ந்த காலங்களிலும் இருந்திருக்காது.

ஆனால் இயசு பிறப்பதற்கு சுமார் 700 ஆண்டுகளுக் முன், ஏசாயா தீர்க்கதரிசி ஒரு குறிப்புரை தருகிறார். "ஆதலா ஆண்டவர்தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப் இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவா அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்" ஏசாயா 7:14 இந்

வார்த்தையின்படியே இயேசு, ஸ்திரீயின் வித்தாக கன்னிகை யினிடத்தில் பிறந்தார். லூக்கா 1:26,27

இயேசு சிலுவையில் பேசின ஆறாம் வசனத்தைக் குறித்துத்தியானிக்கும்போது முதலாவது இந்த பூலோக வாழ்வில் சரீர வாழ்வு "முடிந்தது" என்று குறிப்பிட்டோம். அப்படிப்பட்ட வாழ்வு முடியும்வரை இயேசுவிடம் என்னென்ன காரியங்கள் நடக்க வேண்டுமென்று தீர்க்கதரிசனங்கள் குறிப்பிட்டனவோ அவை யெல்லாம் நடந்து முடிந்து விட்டன.

இந்த நேரத்தில் நியாயப் பிரமாணத்தைக் குறித்து யாக்கோபு அப்போஸ்தலன் (2:10) கூறியதுபோல, தீர்க்கதரினசத்தைக் குறித்தும் அதேபோல ஓர் எண்ணத்தை நாம் கொள்வோமே. அந்த அடிப்படையில் இப்படி ஒரு கூற்றை நாம் ஆய்வு செய்து சிந்தித்துப் பார்ப்போம். "இயேசு கிறிஸ்துவைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள் எல்லாம் நிறைவேறினாலும், ஒன்றில் தவறு ஏற்பட்டாலும் இயேசுவானவர் கிறிஸ்துவாக மகிமைப்பட முடியாது. (இயேசு மரித்தபின்பும் நிறைவேறக்கூடிய காரியங்களாகக் கூறப்பட்ட தீர்க்கதரிசனங்களும் நிறைய உண்டு. அவைகளும் தவறாமல் நிறைவேறின என்பது கூடுதல் தியானம்.)

இயேசுவின் பிறப்பைக் குறித்து ஆதியில் கூறப்பட்ட தேவ வாக்கு பற்றி குறிப்பிட்டோம். அது தவிர இன்னும் சிலவற்றை நினைவு கூருதல் நமக்கு நலமே. அதே சமயம் எல்லாவற்றையும் நாம் குறிப்பிடுவது இந்நேரத்தில் சரியாகவும் இருக்க முடியாது.

இயேசு பிறந்த காலம், நாடு, ஊர், குலம், கோத்திரம், தகப்பன், தாய், உடன்பிறந்தோர் சார்ந்தவைகள் ஒன்றுவிடாமல் நிறைவேறின. அவர் பிறந்த காலத்தில் நடந்த அரசியல் சார்ந்த சில முக்கிய நிகழ்வுகளும் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டவைகளாகும்.

இயேசு வளர்ந்த ஊர் வளர்ந்தவிதம் சம்பந்தப்பட்டவை களும் தீர்க்கதரிசன நிறைவேறுதலே. இன்னும் சொல்லப் போனால் அவருடைய ஜனங்கள், அவரை ஏற்றுக்கொள்ளாதது, பகைத்தது, காட்டிக் கொடுக்கப்பட்டது, பிடிபட்டது, அடிபட்டது, பாடுகளை ஏற்றுக்கொண்டது, அவருடைய காயங்கள், வஸ்திரங்கள், சிலுவையில் உயர்த்தப்பட்டது எல்லாம் முன்னறிவிக் கப்பட்ட தீர்க்கதரிசன நிறைவேறுதலே. இவைகள் பற்றி பரிசுத்த

வேதாகமத்தில் தெளிவாக வாசிக்கிறோம். அவைகளையெல்லாம் குறிப்பிட்டால் அது ஒரு தனியான புத்தக வடிவுக்குச் சென்றுவிடும்.

எனவே இயேசுவின் வாழ்வில் நடக்கத்தக்கதாக முன்னுரைக்கப் பட்ட தீர்க்கதரிசனங்கள் அனைத்தும் நிறைவேறி முடிந்தது.

இரட்சிக்கும் பணி முடிந்தது:-

இயேசுவின் பிறப்பின் காலத்தில் யோசேப்புக்குத் தேவ தூதன் சொப்பனத்திலே கூறிய வார்த்தைகளைக் கவனியுங்கள் "அவள் (மரியாள்) ஒரு குமாரனைப் பெறுவாள் அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்." மத்தேயு 1:21

பொதுவாக இரட்சிப்பு என்றால் விடுதலை அல்லது மீட்பு என்று நாம் அர்த்தப்படுத்தினாலும் எதிலிருந்து என்று ஒரு கேள்வி எழும்பும் அல்லவா? அதற்கான தெளிவு வேண்டும் என்பதனாலேயே தூதன் சற்று ஆழமாகவே அதைக் குறிப்பிட்டுள்ளதாக நாம் எடுத்துக் கொள்ளலாமே. அது பாவங்களை நீக்கி இரட்சிப்பார் என்பதாகும்.

சகரியாவும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு தனது குமாரனாகிய யோவான்ஸ்நானகனைக் குறித்துச் சொல்லும் போது "நீயோ பாலகனே ... நீ கர்த்தருக்கு வழிகளை ஆயத்தம் பண்ணவும் ... பாவமன்னிப்பாகிய இரட்சிப்பைத் தெரியப்படுத்தவும் அவருக்கு (இயேசுவுக்கு) முன்னாக நடந்து போவாய்." (லூக்கா 1:76,77) என்று ஒரு தெளிவைத் தருவதை நாம் வாசிக்கிறோம்.

இயேசுவும் தம்மைக் குறித்து "இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்றார்" லூக்கா 19:10

யோவான் கூறுவதைக் கவனியுங்கள். "உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல் அவராலே உலகம் இரட்சிக்கப்படு வதற்காகவே அவரை அனுப்பினார்" யோவான் 3:17

"...நான் உலகத்தை நியாந்தீர்க்க வராமல் உலகத்தை
-சிக்க வந்தேன்" யோவான் 12:47

பாவம், பாவத்தின் தண்டனை, அதிலிருந்து மீட்பு
னைத்தும் அவ்வளவு சாதாரணமாக எடுத்துக்கொள்ளக்கூடிய
ியமல்ல. இவை சம்பந்தமாக பரிசுத்த வேதாகமம் தருகின்ற
ளிவான சத்தியமே சரியானதாகும். அவை அனைத்தும்
சுத்த ஆவியானவரின் வெளிப்பாடாக உள்ளதே அதற்கான
ணமாகும்.

அதன்படி பாவத்துக்குக் காரணமான சாத்தானின்
லையை சிலுவையில் நசுக்கினார். இயேசு பாவத்தின்
ண்டனையை ஏற்றுக்கொண்டார். அதுமட்டுமல்லாது தமது
சுத்த இரத்தத்தைச் சிந்தி ஜீவனைக் கொடுத்து
டுக்கொண்டார். அதுவே இரட்சிப்பு. இந்தத் தன்மையை
பானதென்று இருதயத்தில் ஏற்றுக்கொண்டு விசுவாசிப்பதின்
மே அந்த இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளுகிறோம். அது
க்கு சொந்தமாகிறது.

அதனாலேயே இயேசுவை "இதோ உலகத்தின் பாவத்தைச்
ந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" (யோவான் 1:29) என்று
ிப்பிடுவதை வாசிக்கிறோம்.

இன்னும் சில வசனங்கள் இப்படிக்கூறுகின்றன.
விகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்"
மோத்தேயு 1:15

"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை.
் இரட்சிக்கப்படும் படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்
ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம்
ளையிடப்படவும் இல்லை" அப்போஸ்தலர் 4:12

இயேசுகிறிஸ்துவின் காலத்துக்குப் பின்னரே இரட்சிப்பு
பது தேவனுடைய கிருபையாக அருளப்பட்டது. சொல்லப்
னால் அது எளிமையாக்கப்பட்டது. பரவலாக்கப்பட்டது.

"கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி. அப்பொழுது
ும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்" அப்போஸ்தலர் 16:31

"கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப் பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல. இது தேவனுடைய ஈவு." எபேசியர் 2:8

எனவே பழைய ஏற்பாட்டுக் காலத்திலே அதாவது நியாயப்பிரமாண காலத்திலே பூரணப்படாமல் இருந்த இரட்சிப்பை பூரணப்படுத்தும் படியான புதிய உடன்படிக்கைக்கான ஒழுங்குகள் நிறைவேற்றப்பட்டு முடிந்தன.

<u>ராஜாவின் பட்டாபிஷேக ஆயத்த பணிகள் நிறைவேறி முடிந்தன</u>

இயேசுவின் பிறப்பின் காலத்திலே மரியாளுக்கு தேவ தூதன் முன்னுரைத்த சத்தியம் ஒன்று உண்டு. "அவர் பெரியவராயிருப்பார். உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார். கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். ... அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது." லூக்கா 1:32,33

தேவனுடைய செயல்கள் பலவிதங்களில் நடைபெற்று உள்ளன. வார்த்தையினால் சிருஷ்டித்து செயல்படுத்தி உள்ளார் மனுஷர் மூலமாக நிறைவேற்றியுள்ளார். தூதர்கள் மூலமாகவும் நிகழ்த்தியுள்ளார். அதே சமயம் தேவகுமாரனே இப்பூமியில் இயேசுவாக பிறந்து சில அரிய காரியங்களை செய்து நிறைவேற்றியுள்ளார்.

அவற்றில் ஒரு பகுதிதான் நாம் மேலே வாசிக்கின்ற வசனமாகும். அது ஆளுகை - ராஜ்யபாரம் சார்ந்தவையாகும் அதன் சுருக்கம் இதோ ...

யாக்கோபு தன்னுடைய முதிர்வயதில் தன் பிள்ளைகளை ஆசீர்வதித்து வாக்குரைத்தான். அதில் "சமாதான கர்த்த வருமளவும் செங்கோல் யூதாவை விட்டு நீங்குவதும் இல்லை (ஆதியாகமம் 49:10) அதன்படி அக்கோத்திரத்தானாகிய தாவீ ராஜாவானான். 1 சாமுவேல் 16:1-13. தொடர்ந்து அவனுடை வம்சம் அரசாண்டனர்.

அதில் எகோனியா காலத்தில் பொல்லாப்புக பெருகினதினிமித்தம் அவனுடைய சந்ததி ஆளுகை செய்யா

என்று எரேமியா சபித்தான். (எரேமியா 22:28-30) அக்காலத்தில் நேபுகாத்நேச்சார் வந்து கர்த்தருடைய ஜனத்தை சிறைப் பிடித்தான். அந்த வம்சத்திலுள்ள யோசேப்புக்கு நியமிக்கப்பட்ட மரியாளிடத்தில் இயேசு பிறந்ததினால் (மத்தேயு 1:1-16) யோசேப்பின் குமாரன் என்று எண்ணப்பட்டார். லூக்கா 3:23

இயேசுவின் பிறப்பு எதிர்மறையான இரு வசனங்களையும் நிறைவேற்றுகிறது. இயேசு எகோனியாவின் வித்து வாரிசல்ல. ஆகையால் எரேமியாவின் சாபத்துக்கு உட்பட மாட்டார். ஆனால் யோசேப்பு எகோனியாவின் வித்து. எனவே அவனுடைய குமாரராக எண்ணப்பட்டதினால் இயேசு சிங்காசன உரிமை பெற்று யாக்கோபின் வார்த்தை நிறைவேறுகிறது.

இயேசுவின் ராஜரீக உரிமையும் சிங்காசன ஆளுகையும் நிலைவரப்பட்டாலும், ஆவிக்குரிய உருமாற்றம் செய்யப்பட்ட தாகவே நமக்கு அருளப்பட்டுள்ளார். யூதருக்கு ராஜாவாகப் பிறந்தார், சாலோமோனைப்போல், கோவேறு கழுதைமேல் பவனி வந்தார், ராஜா ஸ்தோத்தரிக்கப்பட்டவர் ஓசன்னா என்று புகழப்பட்டார், முள்முடி சூட்டப்பட்டார், செங்கோல் கொடுக்கபட்டது. சிலுவையின் மேல் யூதருடைய ராஜா என எழுதப்பட்டது. இயேசு ராஜாவாக சிங்காசத்தின்மேல் வீற்றிருந்து ஆளுகை செய்வார் என்பன போன்ற சான்றுகளை பரிசுத்த வேதாகமம் நமக்குத் தருகின்றது. அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமை பொருந்தியவராய்ச் சகல தூதரோடுங்கூட வரும்போது தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார். மத்தேயு 25:31

அவ்விதமான நித்திய ராஜ்ய ஆளுகைக்கான பட்டாபிஷேக பாதைகளெல்லாம் பாவனையாக நிறைவேற்றி முடிந்தன. "என் ராஜ்யம் இவ்வுலகத்துக்குரியதல்ல... நான் ராஜாதான்" யோவான் 18:36,37

இந்த ஆறாம் வசனம் தரும் பாடம்

எல்லாவற்றையும் இயேசு நிறைவாக செய்து முடித்துவிட்டார். அது அவருக்கான தெய்வ சித்தம். அதனால் தொடர்ந்து நாம் என்ன செய்வது தகுதியானது என தெரிந்து வாழ்வது சரியானதாகும்.

1. தேவனுடைய கிருபையை உணர வேண்டும்

"கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப் பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல தேவனுடைய ஈவு." எபேசியர் 2:8

இரட்சிப்பு விலையேறப்பெற்றது. சர்வ லோகத்துக்கும் ஒரு மனிதனால் செய்து நிறைவேற்ற முடியாதது. அதை தேவகுமாரனாகிய இயேசுவால் தேவன் நிறைவேற்றித் தந்தார். "ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல" எபேசியர் 2:9

அதைப்போல நியாயப்பிரமாணமும் இரட்சிப்பைத் தரவில்லை. "எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளி னாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை." ரோமர் 3:20 இரட்சிப்பு இயேசுவினால் கிடைக்கச் செய்வது தேவனுடைய ஈவு. அது தேவனுடைய கிருபையே- கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

2. இயேசு ஒருவரே வழி - விசுவாசிக்க வேண்டும்

"நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" யோவான் 14:6

இந்த உலகம் பாவமன்னிப்புக்காக பல வழிகளிலே முயற்சி மேற்கொள்ளுகிறது. சத்தியத்தை ஏற்றுக்கொள்ளவில்லை அல்லது விசுவாசிக்கவில்லை.
"வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள்" ஏசாயா 62:10
இயேசு சொன்னார் "நானே ஆடுகளுக்கு வாசல்" யோவான் 10:7
அவர் ஒருவரே நியமிக்கப்பட்டார், அனுப்பப்பட்டார். தம்முடைய பணியை வெற்றிகரமாக செய்து முடித்தார்.
"ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமா யிருக்கிறது. அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்." மத்தேயு 7:14

3. ராஜ்யத்தின் புத்திரராக வேண்டும்

இது மறுமைக்குரிய செயல்திட்டமாகும். தேவதிட்டம் நம்மை பொறுத்தமட்டில் இப்படிக் கூறுகிறது. "நாம் புத்திரசுவிகாரம் அடையும்படி ...தம்முடைய குமாரனை அனுப்பினார்

லாத்தியர் 4:4,5 நிலம் உலகம், நல்ல விதை ராஜ்யத்தின் புத்திரர் த்தேயு 13:38

கர்த்தருடைய பிள்ளைகளைக் குறித்து வேத வனம் பெருமைபடக் கூறுகிறது. "தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே நம்மை இயேசுகிறிஸ்து மூலமாய்த் தமக்குச் சுவிகார புத்திரராகும்படி முன் குறித்திருக்கிறார்." எபேசியர் 1:6

ராஜ்யத்தின் புத்திரர் என்னப்பட்டவர்கள் செய்யத்தக்கது இதோ ... "தம்முடைய ராஜ்யத்துக்கும் மகிமைக்கும் உங்களை அழைத்த தேவனுக்கு நீங்கள் பாத்திரமாய் நடக்க வேண்டுமென்று, தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறது போல நாங்கள் உங்களில் ஒவ்வொருவனுக்கும் புத்தியும், தேறுதலும், எச்சரிப்பும் சொன்னதை அறிந்திருக்கிறீர்களே." தெசலோனிக்கேயர் 2:11,12

"... கிருபையைப் பற்றிக் கொள்ளக்கடவோம்" எபிரெயர் 12:28 நமது கடமையாக்கப்பட்ட பணியை நாம் செய்து முடிப்பதே நமது வாழ்வின் பயனாகும். அப்படி இல்லாமல் நமது ஜீவனை நஷ்டப்படுத்தினால் நமக்கு லாபம் என்ன?

ஏழாம் வசனம்

லூக்கா 23:46

"பிதாவே உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்."

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

இந்த ஏழாம் வசனத்தைக் குறித்துத் தியானிப்பதற்கு முன் முதலாவது இந்த வசனத்தில் கூறின வார்த்தைகளின் தன்மையைப் பற்றி பார்ப்போம்.

மீண்டும் முதலாம் வசன நிலை:-

முதலாம் வசனத்தில் "பிதாவே" என்று அழைத்துப் பேசின இயேசு, இந்த ஏழாம் வசனத்திலும் "பிதாவே" என்று அழைத்துப் பேசுகிறார். அப்படியானால் இயேசு, இந்தத் தருணத்தில் முதலாம் வசனத்தைப் பேசின சமயத்தில் இருந்த நிலைப்பாட்டில் மீண்டும் இருக்கிறார் என்பதை நாம் அறிய முடிகிறது. ஏன் மீண்டும் என்று குறிப்பிடுகிறோம் என்றால் பிதாவாகிய தேவனை முதலாம் வசனத்தில் பிதாவே என்று அழைத்துப் பேசினவர் நான்காம் வசனத்தைக் கூறும்போது 'என் தேவனே என் தேவனே' என்று அழைத்ததை நாம் அறிகிறோம்.

இதன் பொருளாக 'பிதாவே' என்றும் முதலாம் வசனத்தைக் கூறும்போது இயேசு என்ன நிலையில் இருந்தார் என்பதை நினைத்துப் பாருங்கள். பிதாவின் ஐக்கியத்திலிருந்து விடுபட்ட இயேசு தனிமையில் இருந்தார். நான்காம் வசனத்தைக் கூறும்போது இன்னும் கூடுதலாக பிதாவின் பிரசன்னத்தையும் இழந்திருந்தார் எனவும் அறிகிறோம். நான்காம் வசனத்தின் கருப்பொருளை, அந்நேரத்தில் இயேசு சந்தித்த நிகழ்வை வெற்றியுடன் நிறைவேற்றி முடித்தார் என்பதினாலேயே ஏழாம் வசனத்தில் 'பிதாவே' என மீண்டும் அழைக்கும் தன்மையில் காணப்பட்டார் என்று தீர்மானித்துக்கொள்வோம்.

இவ்வாறாக பிதாவின் ஐக்கியத்திலிருந்து விடுபட்டு முதலாம் வசனத்தை வெளிப்படுத்தியவர் அந்த நிலைப்பாட்டிலே ஏழாம் வசனத்தையும் கூறுவதினால் அவர் அனுபவித்த பாடுகள் அனைத்தையும் பூரண மனிதத்தன்மையுடனே தானே அனுபவித்தார் என்ற உன்னத வெளிப்பாடு நமக்குக் கிடைக்கிறது.

இவை சார்ந்த விபரங்களை நினைவுபடுத்த முதலாம் மற்றும் நான்காம் வசனங்களுக்குரிய தியானத்தின் முற்பகுதியில் "பிதாவே" என்றும் "என் தேவனே" என்றும் அழைப்பதில் காரண காரியங்களைக் குறித்து கூறப்பட்டவைகளை மீண்டும் ஒருமுறை வாசித்துப் பாருங்கள். அக்கருத்தினை மனதிலே பதிய வைத்துக்கொள்வது இந்தப் பகுதி தியானத்துக்குப் பேருதவியாக இருக்கும்.

ஆவி

'ஆவி' என்றால் பொதுவாக வாயுரூபம் கொண்டது என்பதை நாம் அறிவோம். அதே சமயம் வேத புத்தகத்தில் கூறப்பட்டுள்ள 'ஆவி' அல்லது 'ஆவிகள்' வாயு ரூபம் கொண்டவைகளாக இருந்தாலும் அவை சாதாரண நிலையிலுள்ள ஆவியாக இல்லாமல் அறிவுபூர்வமான பல பண்புகள் கொண்டவைகளாக உள்ளன. மேலும் பல உணர்வுகள் உடையவைகளாகவும், உள்ளன. அதே சமயம் அந்த ஆவிகள் உருவமின்றியும், சில சமயங்களில் உருவம் பெற்றும், உருவங்களுக்குள்ளும் செயல்கள் செய்கின்றன.

முதலில் வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள ஆவிகளின் வகைகளை அறிவோம். அவை மூன்று முக்கிய பிரிவுகளில் பொருந்தும்.
1) தேவ ஆவி அல்லது கர்த்தரின் ஆவி. 2) அசுத்த ஆவி அல்லது பொல்லாத ஆவி 3) மனுஷனின் ஆவி.

இவ்வாறு இந்த மூன்று பகுதி ஆவிகளைக் குறிக்கும் வேறு பல பெயர்கள் ஆங்காங்கே நாம் பார்க்க முடியும். அவை சந்தர்ப்பங்களுக்குத் தக்க குறிப்பிடப்பட்டுள்ளன.

இப்படியாக பல வகையானவற்றை நாம் பரிசுத்த வேதாகமத்தில் வாசிக்கிறோம். இன்னும் இவைகள் பல வேறுபட்ட பண்புகளைக் கொண்டவைகளாகும்போது வேறுபல பெயர்களாலும் அழைக்கப்படுகின்றன.

மனுஷனின் ஆவி

"... மனுஷனிலும் ஒரு ஆவி உண்டு." யோபு 32:8 உலகில் பகுத்தறிவாளர், அறிஞர் போன்றோரின் தீர்வுகளையும் தாண்டி

வேதாகமம் தருகிற ஆள்தத்துவம் ஒன்றை சற்று நிதானிப்போம். "...உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக". 1தெசலோனிக்கேயர் 5:23

இவ்வசனத்தின் மூலமாக மனித உடல் என்பது ஆவி, ஆத்துமா (உள்ளம்) சரீரம் இவற்றைக் கொண்டதுதான் என்பது புலனாகிறது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவியில் பல தன்மைகள் அல்லது குணநலன்கள் பொருந்தியுள்ளதாக வேதவசனங்கள் கூறுகின்றன. அவற்றில் சிலவற்றை நாம் தெரிந்துகொள்ளுவோம்

அவை ...

முறிந்த ஆவி ... நீதிமொழிகள் 18:14
ஒடுங்கின ஆவி, துதியின் ஆவி ... ஏசாயா 61:3
பணிந்த ஆவி ... ஏசாயா 57:15
கலங்கின ஆவி ... தானியேல் 2:1
சாந்தமுள்ள ஆவி ... கலாத்தியர் 6:1
கபடமில்லா ஆவி ... சங்கீதம் 32:2
நறுங்குண்ட ஆவி ... சங்கீதம் 34:18
நொறுங்குண்ட ஆவி ... சங்கீதம் 51:17
உயிர்ப்பிக்கிற ஆவி ... யோவான் 6:63

ஆவி சார்ந்த இன்னுமொரு வசனத்தைப் பாருங்கள். "சகல பிராணிகளின் ஜீவனும், மாம்சமான சகல மனுஷரின் ஆவியும் அவர் கையிலிருக்கிறது." யோபு 12:10

இந்த வசனத்தில் பிராணிகளின் ஜீவன் என்று மட்டும் கூறப்பட்டுள்ளது. அதேசமயம் சில வசனங்கள் மூலம் இன்னொரு பார்வையில் தியானிப்போம்.

"மனுப்புத்திரருக்கு சம்பவிக்கிறது மிருகங்களுக்கும் சம்பவிக்கும். இவைகள் சாகிறதுபோலவே அவர்களும் சாகிறார்கள். ஜீவன்களுக்கெல்லாம் சுவாசம் ஒன்றே. எல்லாம் ஒரே இடத்துக்குப் போகிறது. எல்லாம் மண்ணிலே உண்டாகிறது. எல்லாம் மண்ணுக்குத் திரும்புகிறது.

உயர ஏறும் மனுஷனுடைய ஆவியையும், தாழப் பூமியிலிறங்கும் மிருகங்களுடைய ஆவியையும் அறிகிறவன் யார்?" பிரசங்கி 3:18-21

மேற்கண்ட வசனங்களின் மூலமாக ஓர் உண்மையை பரிசுத்த வேதாகமம் நமக்குத் தருகிறது. அதை மீண்டும் சுருக்கமாக நாம் பார்ப்போம். பிராணிகளுக்கும் ஜீவன், ஆவி ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளது. மனுஷருக்கும் ஜீவன், ஆவி என்னப்பட்டவைகள் உண்டு எனக் கூறப்பட்டுள்ளது.

தனிச்சிறப்பு

இனி அடுத்தபடியாக நமது சிந்தனை செல்லும்போது; மிருகம் மனுஷன் ஆகியோரது உடல் மண்ணுக்குத் திரும்புகிறது என்பதுடன், உயர ஏறும் மனுஷனுடைய ஆவியும் தாழப் பூமியிலிறங்கும் மிருகங்களின் ஆவியும் என்று கூறப்பட்டுள்ள தால் நமக்கு ஒரு தெளிவு கிடைக்கிறது.அதன்படி மிருகங்களின் உடலும் ஆவியும் மண்ணுக்குத் திரும்புகிறது என அறிகிறோம். ஆகவே தான் அவற்றின் ஆவி அதன் ஜீவனோடு பொருந்தியுள்ளது என்ற ஒரு நிலைப்பாட்டுக்கு வருவதனால்தான் யோபு தன்னுடைய உரையில் மிருகங்களின் ஜீவன் என்று குறிப்பிடுவதைப் பார்க்கிறோம். இதிலிருந்து மிருகத்தைப் பொருத்தமட்டில் அதன் ஜீவன் முன்னிலைப்படுத்தி முக்கியத்துவப் படுத்தப்படுகிறது.

அதேசமயம் மனுஷனைப் பொருத்தமட்டில் உடல் மண்ணுக்கும், ஆவி உயர ஏறுகிறதென்றும் பிரசங்கியின் வசனங்களில் அறிவதினால் யோபு ஆவியை முக்கியத்துவப்படுத்தி ஆவியும் எனக்குறிப்பிடுவதை வாசிக்கிறோம்.

இவ்வித வசனங்களின்மூலம் யோபு கூறுகிற உண்மைத் தன்மையை நாம் புரிந்து கொள்ளக்கூடிய விளக்க உரையாக பிரசங்கியில் கூறப்பட்டுள்ளவைகளை நாம் எடுத்துக்கொள்ளலாம்.

இவற்றிற்கு ஆதாரமாக சிருஷ்டிப்பின் தன்மையை நாம் நினைவு கூருவோம். தேவன், நீர்வாழ் ஜந்துக்களையும், ஜாதி ஜாதியான சிறகுள்ள சகல பறவை பட்சிகளையும் ஜலமானது ஜநிப்பிக்கக் கடவது என்று ஐந்தாம் நாளில் சிருஷ்டித்த தேவன் ஆறாம் நாளில் சகல நாட்டு மிருகங்கள், ஊரும் பிராணிகள்,

காட்டு மிருகங்கள் முதலியவற்றை பூமியானது பிறப்பிக்கக்கடவது என்று சிருஷ்டித்ததை ஆதியாகமம் 1:20-25 வசனங்களில் வாசிக்கிறோம். இவைகள் அனைத்து ஜீவன்களும் வார்த்தை யினாலேயே சிருஷ்டிக்கப்பட்டன.

அதே சமயம் மனுஷனை, "பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவ ஆத்துமாவானான்." ஆதியாகமம் 2:7

அப்படியே மனுஷியையும், "ஆதாமுக்கு அயர்ந்த நித்திரை வரப்பண்ணி அவன் விலா எலும்பினில் ஒன்றை எடுத்து அதை மனுஷியாக உருவாக்கினார்." (ஆதியாகமம் 2:21,22) என்று வாசிக்கிறோம். ஆதலால் மனிதர்கள் தனிச்சிறப்புடையவர்களே என்ற ஒரு சிறப்பைப் பெறுகிறார்கள் என்று அறிகிறோம். அவர்கள் வார்த்தையினால் ஜநிபிக்கப்பட்டவர்கள் அல்ல. தேவனின் கிரியை யினால் சிருஷ்டிக்கப்பட்டவர்கள் என்ற தெளிவு பெறுகிறோம்.

<u>யோபுவின் பின்னிலை ஆசீர்வாதம் :</u>

ஆகையால் மனுஷனுடைய ஆவி என்பது தேவனுடைய சுவாசம் என்பதினால் மிக உன்னத இடத்தைப் பெறுகிறது. மேலும் யோபுவின் பின்னிலை ஆசீர்வாதத்திலும் இவ்விதமான உண்மை பூரணமாக விளங்குகிறது. தேவனாகிய கர்த்தர் யோபுவின் ஆஸ்தியில் இடம்பெற்ற மிருக ஜீவன்களையும், அவனுடைய பிள்ளைகளையும் சாத்தானின் வல்லமையினால் அழிக்க அனுமதித்தார். இறுதியில் இரண்டத்தனையாக அவர் திரும்பக் கொடுத்தார். அந்த விபரத்தைக் கவனியுங்கள்...

யோபுவின் முன்னிலை (யோபு 1:2,3)	யோபுவின் பின்னிலை (யோபு 42:10,12,13)
7000 ஆடுகள்	14000 ஆடுகள்
3000 ஒட்டகங்கள்	6000 ஒட்டகங்கள்
500 ஏர்மாடுகள்	1000 ஏர்மாடுகள்
500 கழுதைகள்	1000 கழுதைகள்
7 குமாரர்	7 குமாரர்
3 குமாரத்திகள்	3 குமாரத்திகள்

மேற்கண்ட பட்டியலைக் கவனியுங்கள். ஆடுகள், ஒட்டகங்கள், ஏர்மாடுகள், கழுதைகள் இவை யாவும் பின்னிலை இரட்டிப்பாகக் கொடுக்கப்பட்டன. ஆனால் குமாரர்கள் மற்றும் குமாரத்திகள் முன்பு இருந்ததைப் போலவே பின்னிலையிலும் கொடுக்கப்பட்டதை அறிகிறோம்.

மேலே கூறப்பட்டுள்ள சத்தியங்கள் மூலமாக ஓர் உண்மை மேலும் வலுப்பெறுகிறதல்லவா? மிருக ஜீவன்களுக்குரிய ஆவி அந்த மிருகங்களின் ஜீவனில் பொருந்தி இருப்பதினால் அந்த ஜீவனுடன் அதன் ஆவியும் சேர்ந்து மண்ணுக்கே திரும்பி விடுகிறது. ஆகவே யோபுவின் மிருக ஜீவன்கள் முதலாவது கொடுக்கப்பட்டவைகள் மடிந்ததினால், அவை இல்லாதவை களாகவே பாவிக்கப்பட்டு இரண்டு மடங்கு திரும்பகொடுக்கப்பட்டது.

ஆனால் யோபுவின் பிள்ளைகளின் விஷயத்தில் அவர்கள் மரித்தபோது மாம்சம் மட்டுமே மண்ணுக்குத் திரும்பி ஆவி அழிவின் கணக்கில் சேர்க்கப்படாதபடி தொடர்ந்து அவை இருக்கிற தாகவே பாவிக்கப்பட்டதினால் மீண்டும் ஏழு குமாரரும் மூன்று குமாரத்திகளும் மட்டும் கொடுக்கப்பட்டுள்ளனர். இப்போது முன்னிருந்த பத்து பிள்ளைகளும், பிந்தி பிறந்த பத்து பிள்ளைகளும் சேர்ந்து இருபது பிள்ளைகளாக அதாவது இரண்டத்தனையாக கொடுக்கப்பட்டனர் என்று கணக்கிட்டுக் கொள்ளப்பட வேண்டியதாகும். இது எவ்வளவு உன்னதமான சிந்தனையாகும்? கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

இவ்விதமான சிந்தனையினால் மனுஷனின் ஆவிக்கு கூடுதலான ஒரு சிறப்பு கொடுக்கப்பட்டுள்ளது என அறிகிறோம். அதனாலேயே அது பொருந்தியுள்ள மனுஷ ஜீவனும் விலையேறப் பெற்றதாக மதிப்பிடப்படுகிறது. எனவே மனுஷனின் ஆவி மனுஷ ஜீவனுக்கு மேலாக ஒரு கிரீடம் போல் பொருந்தி இருக்கிறது.

விஞ்ஞானம் Vs மெய்ஞானம்

இன்னொன்றையும் நாம் புரிந்து கொள்ளுவோம். மனித ஜீவன் சரீரத்தை உயிரூட்டுவதாக உள்ளது. அதைப் போல ஆவியானது ஆத்துமாவுக்கு உயிரூட்டுவதாக உள்ளது.

இவை நமது உலக அறிவுக்கு சற்று கூடுதலான சிந்தனையே. எனவேதான் மேற்கண்ட வசனங்களின் இறுதியில்

(பிரசங்கி 3:18-21) அதை அறிகிறவன் யார்? எனக் கேட்கப்பட்டுள்ளது.

பொதுவாக அறிவியல் துறையின் முன்னேற்றம் என்பது அளப்பற்கரியது. அதனுடைய ஆழமான வெளிப்பாடு இக்காலத்திலே மிகமிக வியக்கத் தக்கதே. இலட்சக்கணக்கான கிலோ மீட்டர் தூரத்திலுள்ள விண்கலங்களை பூமியிலிருந்து மென் பொருள் தொழில் நுட்பத்தின் மூலம் இயக்குகிறதும், சீர் செய்கிறதும், விண்வெளி ஆய்வு செய்கிறதும் விந்தையாகவே தோன்றுகிறது. இன்னும் வரப்போகிற காலங்களில் இத்தகைய வளர்ச்சி எப்படி இருக்கும் என்பதை நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை. அது விஞ்ஞானம்.

அதேசமயம் மேலே கூறப்பட்ட வசனங்களில் குறிப்பிட்டபடி உயர ஏறும் மனுஷ ஆவி, தாழப் பூமியிலிறங்கும் மிருகங்களின் ஆவி, இவற்றை அறிகிற அறிஞன் யார் என்று வசனம் கேட்கிறது ஒருவருமில்லை என்பதே அதற்குரிய பதில். இது மெய்ஞானம்.

இவற்றில் ஓர் உண்மை. மெய்ஞானத்தை விஞ்ஞானம் மேற்கொள்ளுமா? சாத்தியமில்லை என்பதே பதில். இதைக்குறித்து ஆயிரம்பேர் ஆயிரம் விதமாகக் கூறினாலும் என் உள்ளத்தில் எழுந்த இந்த சிந்தனையானது, கர்த்தர் தந்த செய்தியாகவே நான் உறுதியாக எண்ணுகிறேன்.

இந்தக்கருத்தை ஒட்டு மொத்தமாக விளக்கும் விதமாகவே இயேசுவின் ஏழாம் வசனம் குறிப்பிடுவதை நாம் வாசிக்க முடியும். அதை நன்றாகப் பகுத்துப் பாருங்கள். "இயேசு பிதாவே உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய் கூப்பிட்டுச் சொன்னார். இப்படிச் சொல்லி ஜீவனை விட்டார்." லூக்கா 23:46

மனுஷனுடைய ஆவியைக்குறித்து இன்னும் ஒருபடி மேலே கூடுதலாகப் பெருமை கொள்ளுகிற வசனம் ஒன்று உண்டு. "மனுஷனுடைய ஆவி கர்த்தர் தந்த தீபமாயிருக்கிறது" நீதிமொழிகள் 20:2. இப்படியாகவும் மகிமைப்படுத்துகிறது.

மனுஷ ஆவியும் அதன் மீது உரிமையும்

மனுஷனுடைய ஆவியைக் குறித்து பின்னும் ஒரு

கருத்துடன் கூடிய ஒரு வசனம் இப்படிக்கூறுகிறது. ஆவியை விடாதிருக்கிறதற்கு ஆவியின் மேல் ஒரு மனுஷனுக்கும் அதிகாரமில்லை. மரண நாளின் மேலும் அவனுக்கு அதிகாரமில்லை. பிரசங்கி 8:8

இந்த நோக்கில் இந்த வசனத்தைக் குறித்து பெருமைப்பட்டு கர்த்தரை ஸ்தோத்தரிப்போம். மனிதனின் அறிவியல் வளர்ச்சி அளவிட முடியாததாக உள்ளது என்று நாம் ஏற்கனவே கூறினோம். மேற்கண்ட வசனத்தில் கூறப்பட்டுள்ள சத்தியத்துக்கு எதிரான தீர்வு ஏதும் உண்டோ?

பெரிய பெரிய அறிவியல் அறிஞர்களுக்கும் ஒருநாள் மரணம். உயிர்காக்கும் மருந்துகளைக் கண்டுபிடித்தவர்களும் ஒருநாள் உயிரை விடுகின்றனர். அந்த மருந்தை கையாண்டு பல உயிர்களைக் காத்த மருத்துவர்களும் கூட மரணத்தைக் காணாதபடி தாங்கள் உயிரைக் காத்துக்கொள்ள முடியவில்லை. அப்படியே ஐசுவரியவான்களானாலும், அதிகாரமுடையவர்களானாலும், பலவான்களானாலும், மேதைகளானாலும், தலைவர்களானாலும், ராஜாவானாலும் மரணத்தைச் சந்திக்காமல் இருக்க முடியாது.

சொல்லப்போனால் உலக அதிசயங்களாக உள்ள பிரமீடுகளையும், தாஜ்மஹாலையும் நினைவிடமாகக்கட்டி அதனுள்ளே உயிரற்ற சடலங்களைத்தான் வைத்திருக்க முடியுமே தவிர மரணமின்றி இருக்கச் செய்ய முடியாது. மனிதனின் அறிவு ஒரு சரீரத்தைக் கெட்டுப்போகாமல் பதப்படுத்தி வைத்திருக்க முடியுமே தவிர, ஜீவன், சரீரத்தை விட்டுப் போகாமல் இருக்க நிலைப்படுத்தி வைத்திருக்க முடியாது.

ஒரு வசனம் நமக்குத் தருகிற புத்திமதியைப் பாருங்கள். "...மண்ணானது (மண்ணினாலுண்டான சரீரமானது) தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகாததற்கு முன்னும் அவரை உன் வாலிபப் பிராயத்திலே நினை." பிரசங்கி 12:7

"அவனுடைய ஆவி பிரியும், அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான். அந்நாளிலே அவன் ஆசை அழிந்து போம்." சங்கீதம் 146:4

உலகில் ஒரு பழமொழி உண்டு. அதை நடைமுறை சொற்றொடர் என்றும் கூறுவதுண்டு. ஒருவரின் குறிக்கோள் அல்லது உயிர்மூச்சாக எந்தப்பொருளைக் குறித்து அவர் வைராக்கியம் கொண்டிருப்பாரோ, அதை நோக்கியே தனது உயிர்மூச்சு முடிவடையும் எனக்கூறுவர். எடுத்துக்காட்டாக தமிழ், மீது மிகவும் பற்று கொண்டவர் உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு என்று கூறுவர்.

மேலே குறிப்பிடப்பட்ட வேத வசனங்களின் மூலமாக ஒரு கிறிஸ்தவனின் கோட்பாடு இப்படி இருக்க வேண்டுமென எடுத்துக்கொள்ளலாமே! "கிறிஸ்தவனின் உடல் மண்ணுக்கு ஆவி தேவனிடத்துக்கு" இதை ஓர் இலட்சியமாகக் கொண்டு வாழ்வது ஒரு சிறப்பன்றோ?

இவ்வளவு நேரமும் சில சத்திய வேத வசனங்கள் மூலம் தியானித்து ஒரு தெளிவைக் கண்டடைந்தோம். அதன் சுருக்கத்தை நினைவுபடுத்துவோம்.

சரீரம் (உடல்), ஆவி ஆகியவை மிருகங்களுக்கும் மனிதனுக்கும் உண்டு. இந்த இரு பகுதியினரின் உடலும் மண்ணுக்குத் திரும்புகிறது. அத்துடன் மிருகங்களின் ஆவியும் தாழ பூமியில் இறங்குகிறது. அதே சமயம் மனிதனின் ஆவி மேலே செல்லுகிறது எனவும் அறிகிறோம்.

குறிப்பாக மனிதனின் ஆவி விசேஷவிதமாக கர்த்தர் தந்தது ஆகும். அந்த ஆவியை விடாதிருக்க எந்த மனுஷனுக்கும் ஆவியின் மேல் அதிகாரமில்லை. அது தந்தவரிடத்துக்கே திரும்ப தரப்பட வேண்டும். இதுவே தெய்வீக ஒழுங்கு.

இந்த வேத சத்தியங்களின்படியே இயேசுவின் வார்த்தைகள் உள்ளன. அவருடைய வாழ்வும் அப்படியே நிறைவு பெற்றது. இயேசுவும் தம்முடைய ஆவியை பிதாவின் கைகளில் ஒப்படைக்கிறார். ஒப்படைத்து ஜீவனை விட்டார். இது ஒரு சிறந்த காரியமாகவே காணப்படுகிறது.

ஸ்தேவானின் சாட்சி

இதைப்போலவே இரத்த சாட்சியாக மரித்த ஸ்தேவானைப் பற்றி அப்போஸ்தலர் 6 மற்றும் 7 அதிகாரங்களில் வாசிக்கிறோம்.

ஸ்தேவானுடைய சுவிசேஷப் பிரசங்கத்தினிமித்தம் கோபம் கொண்ட யூதர் அவனை கல்லெறிந்து கொன்றார்கள். அந்த ஸ்தேவானே கிறிஸ்தவ சபையில் முதலாவது இரத்தசாட்சி ஆவான்

அவன் கர்த்தராகிய இயேசுவே என் ஆவியை ஏற்றுக்கொள்ளும் என்று தொழுது கொள்ளுகையில் அவனைக் கல்லெறிந்தார்கள். அவனோ முழங்கால் படியிட்டு ஆண்டவரே இவர்கள் மேல் இந்த பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். இப்படிச் சொல் நித்திரையடைந்தான்" அப்போஸ்தலர் 7:59,60

மேலே கூறப்பட்ட வசனத்தின் மூலமாக, இயேசு எப்படி தன் ஆவியைப் பிதாவினிடத்தில் ஒப்புவித்தாரோ அதே போல ஸ்தேவானும் தன் ஆவியை இயேசுவிடம் ஒப்படைத்து ஏற்றுக் கொள்ளும்படியாக தொழுதுகொண்டான் என்று பார்க்கிறோம்

ஸ்தேவானுடைய இந்த மரணம் இன்னும் சில சத்தியங்களைப் படிப்பினையாக நமக்கு உணர்த்துகிறதாக நான் உணருகிறேன். அதை நன்றாக சிந்தித்துப் பாருங்கள்

இயேசு சிலுவைய்யில் முதலாவது வசனமாக பிதாவே இவர்களுக்கு மன்னியும் என்ற வேண்டுதலைச் செய்தார்.தன்னை பாடுகளுக்குட்படுத்தி கொலை செய்தவர்களுக்காக அவ்வாறு வேண்டினார். அதன்பின் கடைசி வசனமாக பிதாவே உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று கூறினார்.

இது என்ன புதிய விந்தையாகத் தெரிகிறது. ஆனால் ஒன்றுமட்டும் புரிகிறது. ஒன்று சத்துருக்களுக்கு மன்னிக்கும் தன்மை / சுபாவம்; இன்னொன்று ஆண்டவரிடம் தன் ஆவியை ஒப்புவித்தல். மனிதனுடைய வாழ்வு நிறைவடையும் நாட்களிலே இந்த இரு தன்மைகளும் மிகவும் அவசியமாகக் கருதப்பட வேண்டும். அதனால் அதற்கு மாதிரியாக இயேசுவானவர் சிலுவையில் பேசின முதலாம் வசனத்தையும் ஏழாவது வசனத்தையும் முன்மொழிந்த சத்தியத்தை ஸ்தேவான் வழிமொழிந்ததாக நாம் எடுத்துக்கொள்வோமாக.

ஆனால் ஸ்தேவான் முதல் ஆவியை இயேசுவுக்கு ஒப்புக்கொடுத்து பின்பு மன்னிப்பை வெளிப்படுத்தும் வார்த்தையைச் சொன்ன காரணம் என்னவாக இருக்கும்? காரணம் சொல்லப்படாவிட்டாலும் நாம் அதை முக்கியத்துவப் படுத்துவது தவறில்லையே !

மொத்தத்தில் பிறர் அறியும்வண்ணம் அறிக்கையிடுவது ஒரு சாட்சியின் அனுபவமல்லவா? இப்போ ஸ்தேவானின் நிலையை அறிவோமா? அவன் கல்லெறிந்து கொல்லப்படுகிறான். நிச்சயம் மரணம் என்பதை சந்தேகமின்றி அவன் தெரிந்து கொண்ட நேரம், இயேசுவே என் ஆவியை ஏற்றுக்கொள்ளும் என்கிறான். இதுவே கிறிஸ்துவுக்குள் மரிக்கிற அனுபவமாகும்.

"...கிறிஸ்துவுடனே சிலுவையில் அறையப்பட்டேன். ஆயினும் பிழைத்திருக்கிறேன். இனி நானல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார். நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்." கலாத்தியர் 2:20

மேற்கண்ட வசனம்தான் ஓர் உண்மை கிறிஸ்தவனின் வாழ்க்கையாகும்.

மேலும் கல்லெறியப்படும்போது ஏதாவது ஒரு கல் வாயில் பட்டு, பிறகு பேசமுடியாமல் போனால்... அல்லது நெற்றிப் பொட்டிலேபட்டு சடுதிமரணம் நிகழ்ந்துவிட்டால்... அதுவுமல்லாமல் பிடரியில்பட்டு ஏதாவது நினைவிழந்துபோனால்... எப்படி இவ்வாறு அறிக்கையிட முடியும்? அதனாலேயே முதல் ஆவியை ஒப்புவிக்கும் அறிக்கையை விட்டிருப்பான்.

இதன் மூலம் நாம் ஓர் உண்மையை புரிந்துகொள்ள வேண்டும். மனித வாழ்க்கை நிலையற்றது. உலகில் மனிதர்களின் மரணம் பல விதங்களில், எதிர்பாராமல், நினையாத வேளையிலே நிகழ்ந்து விடுகின்றன. ஒரு வேதவனம் இவ்வாறு சொல்லுகிறது. ... "...இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம். சாவுக்கினமான எங்கள் மாம்சத்திலே இயேசுவினுடைய ஜீவனும் விளங்கும்படிக்கு, உயிரோடிருக்கிற நாங்கள் எப்பொழுதும் இயேசுவினிமித்தம் மரணத்துக்கு ஒப்புக்கொடுக்கப்படுகிறோம்." 2 கொரிந்தியர் 4:10,11

இந்த வசனத்தின் உயிரோட்டத்தை கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கும் விளங்கச் செய்வாராக.

நாமும் ஓர் உறுதிப்பாட்டை எடுத்துக்கொள்ளுவோமாக. இயேசு ஆரவாரத்தோடு வானத்திருந்து வரும்போது நாம் உயிருடன் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நமது வாழ்வு

கிறிஸ்துவுக்குள் இருக்கட்டும் அல்லது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களாக இருக்கட்டும்.

எனவே ஒவ்வொரு மனிதனின் வாழ்வின் இறுதிநாட்கள் எவ்வாறு இருக்கும் என்பதை யாரும் அறியாததினாலே கீழ்க்கண்ட வசனத்தின் நிழலாட்டமான எச்சரிப்பை நினைவில் வைத்துக்கொள்ளுவோம்.

"அக்காலத்தை நீங்கள் அறியாதபடியால் எச்சரிக்கையாயிருங்கள், விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்." மாற்கு 13:33

இதை ஏன் இப்படி சிந்திக்கிறேன் என்றால் ஒவ்வொரு மனிதனின் ஆவியும் கர்த்தரிடம் ஒப்படைக்கப்பட வேண்டியதின் முக்கியத்துவத்தை உணர்த்துவதே எனது நோக்கமாகும்.

இன்னொரு சத்தியம் என்னவென்றால் ஸ்தேவான் இரத்த சாட்சியாக மரித்துள்ளான் என்பதே. அவனுடைய பாடுகளுடன் கூடிய வேதனையுடன் மரணமடைந்துள்ளான். இதுவும் இயேசுவின் மரணத்தைப் போன்று நிழலாட்டமாக நிகழ்ந்துள்ளதாக உணருகிறோம். அவன் அடைந்த பாடுகளும் வேதனைகளும்ன இயேசுவின் அன்பை விட்டு அவனை பிரிக்க முடியவில்லை.

அப்படிப்பட்ட தன்மையைத்தான் பவுல் அப்போஸ்தலன் கூறுவதை வாசிக்கிறோம். "... உபத்திரவமோ. வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ. நாசமோசமோ, பட்டயமோ, இவைகளோடு மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களனானாலும், வல்லமைகளானாலும், நிகழ் காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும் தாழ்வானலும், வேறெந்த சிருஷ்டியானாலும், ... தேவனுடைய அன்பை விட்டு பிரிக்க மாட்டாது." ரோமர் 8:36-39

இந்தத் தருணத்தில் நடந்து முடிந்ததாக நாம் இப்போது இரு சம்பவங்களைக் குறிப்பிட்டோம். ஒன்று இயேசுகிறிஸ்துவின் சிலுவை வார்த்தைகள் குறித்தது. இன்னொன்று அதைப் போன்ற ஸ்தேவானின் வார்த்தைகள். இரண்டும் ஒருமித்த கருத்துடையவையாக நிகழ்ந்துள்ளன. அந்த வரலாற்று நிகழ்வுகள் பரிசுத்த வேதாகமத்தில் இடம் பெற்றவைகள் நம்மை சரியான பாதையில் வழிநடத்துகின்றன.

ஆனால் நமது குறிக்கோள் இயேசு கிறிஸ்து பேசின ஏழாவது வசனத்தைக் குறித்த தியானமாகும். அதன்படி இயேசு தமது ஆவியை பிதாவின் கையில் கொடுத்ததின் மகிமையையும் வேத ஆதாரங்களுடன் அதன் அவசியத்தையும் பற்றி கர்த்தர் தந்த கிருபையின்படி அறிந்தோம்.

இயேசுவின் ஆவி பிதாவைச் சென்றடைந்ததா?

அடுத்தபடியாக இயேசு ஒப்புக்கொடுத்த அவரது ஆவி பிதாவினிடம் சென்றடைந்தா? ஒப்புவித்த அந்த ஆவியை பிதா ஏற்றுக்கொண்டாரா? என்பன போன்ற கேள்வி களுக்குத் தக்கவிடை சரியானதாகக் கிடைத்தால் மட்டுமே அந்த வசனம் நமக்கு ஒரு முன்மாதிரியாக அமைய முடியும்.

முதலாவது அந்த வசனத்தைக் குறித்து சந்தேகப்பட நமக்கு அதிகாரமே கிடையாது. ஏனெனில் அவ்வசனத்தைப் பேசினது நமது இரட்சகராகிய இயேசுகிறிஸ்து. இதில் ஏதாவது நமக்கு ஐயப்பாடு ஏற்பட்டால் பின்னே எதைத்தான் நாம் ஏற்றுக்கொண்டதாக அர்த்தப்படும்? அப்படியிருந்தும் அதைக் குறித்து நாம் ஏன் தியானிக்க முற்படுகிறோம்?

அதைக்குறித்த தொடர் நிகழ்வுகளை நாம் பகுத்துப் பார்க்கும்போது அவை இயேசுகிறிஸ்துவின் மகிமைக்கு உகந்த தாகவும், நமது விசுவாசம் பெலப்படுவதற்கு ஏதுவாகவும் உதவியாக இருக்கிறது என்று எண்ணுவோமாக. அதனால் கர்த்தருக்குள் சந்தோஷப்பட்டு அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்து கிறோம். கர்த்தர் தமது கிருபையினாலே நமக்கு உதவி செய்வாராக.

அந்த அடிப்படையில் நாம் தியானிப்போம். இயேசு பிதாவே உமது கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று சொன்னபிறகு தொடர்ந்து (உடனே) தமது ஜீவனை விட்டார் என்று பார்க்கிறோம்.

ஆவி பிதாவைச் சென்றடைந்தது நிரூபிக்கப்பட்டது

நடந்து முடிந்த அதிலும், ஒரு நியாயப் பிரமாண நிறை வேறுதல் சரியாகக் கையாளப் பட்டிருக்கிறதென்றும், அதிலும் கர்த்தருடைய நாமம் மகிமைப்பட்டிருந்தது என்றும் அறிகிறோம். அந்தக் காரியங்கள் அவ்வாறு அமைந்திருந்தன.

இயேசுவை சிலுவையில் அறைந்தது பெரிய ஓய்வு நாளுக்கு முந்தைய ஆயத்த நாள். அந்த நாளிலே சிலுவைகளில் உடல்கள் இருக்கக்கூடாது. ஓய்வுநாள் பரிசுத்தமாய் ஆசரிக்கப்பட வேண்டும். (லேவியராகமம் 23:7,8) மேலும் மரத்திலே தூக்கிப் போடப்பட்ட சரீரம் இரவிலே மரத்திலே தொங்கலாகாது. (உபாகமம் 21:22,23)

அந்த அடிப்படையில் சிலுவையில் அறையப்பட்டவர்கள் சாயங்காலத்திற்குள் சாகாமலிருந்தால் அன்று இரவுக்குள் சாகத் தக்கதாக அவர்களின் காலெலும்புகள் அடித்து முறிக்கப்படும். அந்நாளிலே சிலுவையிலே மூன்று பேர்கள் தூக்கிலிடப்பட்டனர் என்பதை அறிவோம். அவர்கள் மூவரின் உடல்கள் சாகாமல் இருந்தால் கால்களை முறித்து சாகடித்து உடல்களை சிலுவை யிலிருந்து இறக்கிட யூதர்கள் பிலாத்துவிடம் உத்தரவு கேட்டுக் கொண்டனர். யோவான் 19:31. அதன்படி இரு கள்ளர்களின் கால் களையும் முறித்தார்கள். யோவான் 19:32 ஆனால்...

அவர்கள் இயேசுவினிடத்தில் வந்து அவர் மரித்திருக் கிறதைக் கண்டு அவருடைய காலெலும்புகளை முறிக்கவில்லை. "அவருடைய எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை என்கிற வேதவாக்கியம் நிறைவேறும்படி இவைகள் நடந்தது" யோவான் 19:33,36 அவர் (இயேசு) இத்தனை சீக்கிரமாய் மரித்துப் போனாரா என்று பிலாத்து ஆச்சரியப்பட்டான்..."
மாற்கு 15:44

ஆகிலும் போர்சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான். உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது. அதைக் கண்டவன் சாட்சி கொடுக்கிறான். அவனுடைய சாட்சி மெய்யாயிருக்கிறது. இவைகள் எல்லாம் வேத வசன நிறைவேறுதலாகும்." யோவான் 19:33-37

இப்படிப்பட்ட செயல்கள் எல்லாம் நம்முடைய பார்வையில் வெகு சாதாரணமாக நடைபெற்றதாக எண்ணலாம். தற்செயலானதாகவும் தெரியலாம். எல்லாம் காரணத்தோடும் தேவ திட்டத்தின்படி வேதவசன நிறைவேறுதல் என்று நாம் அறிவதினால் தேவனுக்கு ஸ்தோத்திரம்.

அடுத்ததாக மத்தேயு 27:51-54 வசனங்களைப் படித்து பாருங்கள். அதைச் சுருக்கமாகக் குறிப்பிடுகிவோம். அவர் மரித்த போது தோவலயத்தின் திரைச்சீலை மேல் தொடங்கி கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது - இதை யாரும் கிழிக்கவும் இல்லை.

அதிலும் மேல்தொடங்கி.. என்பதை நினைத்துப் பாருங்கள். தேவனுடைய செயல்களை நினைத்து அவரை ஸ்தோத்தரிப்போமாக. மேலும் பூமி அதிர்ந்தது; கன்மலைகளும் பிளந்தது; கல்லறைகளும் திறந்தது; நித்திரையடைந்திருந்த அநேக பரிசுத்தவான்களின் சரீரங்களும் எழுந்திருந்தது. அவர் உயிர்த்தெழுந்தபின்பு இவர்கள் கல்லறைகளை விட்டுப் புறப்பட்டு பரிசுத்த நகரத்தில் பிரவேசித்து அநேகருக்குக் காணப்பட்டார்கள். இவை எங்கும் எப்போதும் நடைபெறாதவைகளாகும்.

இந்த வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவங்கள் அனைத்தும் நடைமுறை நியதிக்கு அப்பாற்பட்ட செயல்களாக அமையப் பெற்றிருந்தன என்பதற்கு சந்தேகமேயில்லை. அது மட்டுமல்லாமல் இயேசு ஜீவனை விட்ட சமயத்தில் நடைபெற்ற வற்றைக் கண்ட அல்லது கேள்விப்பட்ட நூற்றுக்கு அதிபதி, காவலர்கள், இயேசுவுக்கு ஊழியம் செய்ய வந்திருந்த ஸ்திரீகள் மத்தேயு 27:54,55; லூக்கா 23:27 போர்ச்சேவகர் (யோவான் 19:34,35) ஆகியோர் பயந்தார்கள். இயேசு தேவனுடைய குமாரன் என்று சாட்சி கூறினார்கள்.

இத்தனை சம்பவங்களும் ஆச்சரியப் படத்தக்க விதமாக நடைபெற்றன. அதுமட்டுமல்லாது வேத வசனங்களின் நிறைவேறுதலாகவும் அமையப் பெற்றிருந்தன. இவைகள் யாவும் அவரது மரணத்துக்குப்பின் தொடர்ச்சியாக நடைபெற்றிருப்பதினால் இயேசு கிறிஸ்துவின் வாழ்வு மாசற்றதாக பூரண தெய்வ சித்தத்தின்படி நிறைவு பெற்றதாக சந்தேகமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளன.

இதினிமித்தம் தேவன் இயேசுவின் ஆவியை ஏற்றுக்கொண்டார் என்பதுவே சத்தியமாகும்.

<u>இந்த ஏழாம் வசனம் தரும் பாடம்</u>

"... கர்த்தரோ ஆவிகளை நிறுத்துப்பார்க்கிறார்"
நீதிமொழிகள் 16:2

தேவன் அதிக அன்பு கொண்டது மனுஷன் மேலேயே. அதனாலே விழுந்துபோன அவனை மீட்கும் பாதையை அமைத்தார். "... ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந் திரும்ப வேண்டும்..." 2பேதுரு 3:9 அதுவே தேவசித்தம்.

1.கர்த்தரால் மீட்கப்பட வேண்டும்

"உமது கையில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் சத்திய பரனாகிய கர்த்தாவே நீர் என்னை மீட்டுக்கொண்டீர்" சங்கீதம் 31:5 இதனால் கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் மட்டுமே அவரிடத்தில் தங்களின் ஆவியை ஒப்புவிக்க முடியும் என அறிகிறோம்.

கர்த்தருடைய பிள்ளைகளே பரிசுத்த பவுல் சொல்லும் வார்த்தைகளைப் கவனியுங்கள். "நிர்ப்பந்தமான மனுஷன் நான். இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்." ரோமர் 7:24. நாம் யாவரும் மீட்கப்பட வேண்டும். "கர்த்தரிடத்தில் கிருபையும் அவரிடத்தில் திரளான மீட்பும் உண்டு. அவர் இஸ்ரவேலை அதின் சகல அக்கிரமங்களினின்றும் மீட்டுக்கொள்வார்." சங்கீதம் 130:7,8

மேலும் கர்த்தருடைய வார்த்தை இவ்வண்ணமாய்ச் சொல்லுகிறது. "அவர்களை நான் பாதாளத்தின் வல்லமைக்கு நீங்கலாக்கி மீட்பேன். அவர்களை மரணத்துக்கு நீங்கலாக்கி விடுவிப்பேன்..." ஓசியா 13:14

அதே வல்லமையின்படி "குற்றமில்லாத ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர் களென்று அறிந்திருக்கிறீர்களே," 1 பேதுரு 1:19

இவ்வண்ணமாக மீட்கப்பட்டவர்கள் செய்ய வேண்டியவை களாகக் கூறப்படும் வார்த்தைகள் இதோ...

"கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே. ஆகையால் தேவனுக்கு உடையவர்களாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்" 1கொரிந்தியர் 6:20

"நான் பாடும்போது என் உதடுகளும், நீர் மீட்டுக்கொண்ட என் ஆத்துமாவும் கெம்பீரித்து மகிழும்." சங்கீதம் 71:23

2. கர்த்தரால் பராமரிக்கப்பட வேண்டும்

எனக்கு ஜீவனை தந்ததும் அல்லாமல், தயவையும் எனக்குப் பாராட்டினீர். உம்முடைய பராமரிப்பு என் ஆவியைக் காப்பாற்றினது. யோபு 10:12

கர்த்தர், தம்முடைய பிள்ளைகளாக மீட்கப்பட்டவர்களைக் குறித்து, இவ்வாறு வேத வசனம் கூறுகிறது. "சிதறுண்ட ஆடுகளைப் போலிருந்தீர்கள். இப்பொழுதோ உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும் கண்காணியுமானவரிடத்தில் திருப்பப் பட்டிருக்கிறீர்கள்." 1 பேதுரு 2:25

கர்த்தர் தம்முடையவர்களைக் கைவிடாமல் பராமரிக்கிறவராக இருக்கிறார். "... பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறார்..." ஏசாயா 57:15

"கர்த்தரை நம்புகிறவனோ உயர்ந்த அடைக்கலத்திலே வைக்கப்படுவான்." நீதிமொழிகள் 29:25.

'அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார். அவர் செட்டை களின் கீழே அடைக்கலம் புகுவாய். அவருடைய சத்தியம் உனக்கு பரிசையும் கேடகமுமாகும்." சங்கீதம் 91:4

கர்த்தர் நம்மை பராமரிக்கிறவர் என்பதை ஏற்றுக் கொள்ளுகிற நாம் "...மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க ... பரிசுத்தமாகுதலை தேவபயத்தோடே பூரணப்படுத்தகடவோம்." 2 கொரிந்தியர் 7:1

கிறிஸ்துவுக்குள் வாழ்ந்து கிறிஸ்துவுக்குள் மரிக்கிறவர் களாயிருக்க வேண்டும். (1 தெசலோனிக்கேயர் 4:16,17.) "ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புதுசிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின." 2கொரிந்தியர் 5:17

3. இறுதிவரை உத்தமத்திலே நிலைத்திருக்க வேண்டும்

"... என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன்." யோபு 27:5

நாம் பெருமைப்படும் விதத்திலே யோசேப்பு, எசேக்கியா ராஜா, தானியேல், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ மற்றும் பலதேவனுடைய பிள்ளைகளின் பக்தியும், தியாகமும் போலல்லாமல் யோபுவினுடைய வாழ்க்கை வரலாறு முற்றிலும் வேறுபட்டது. அப்படித்தான் நான் நினைக்கிறேன். யோபுவும் உத்தமனாகக் குறிப்பிடப்படுகிறான். யோபு 1:1

மேலும் அவன் கூறுகிற ஒரு வார்த்தை நம்மை மெய் சிலிர்க்க வைக்கும். அது இதோ..

"அவர் என்னைக் கொன்று போட்டாலும் அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்." யோபு 13:15

"உத்தமனாய் நடக்கிறவன் இரட்சிக்கப்படுவான்." நீதிமொழிகள் 28:18

உத்தமமும் உண்மையுள்ள ஊழியக்காரன் எஜமானனின் சந்தோஷத்துக்குள் பிரவேசிப்பான் (மத்தேயு 25:21) என்று இயேசுவே கூறியுள்ளார்.

இன்னும் நோவா, எசேக்கியா ராஜா போன்றோரும் உத்தமத்தை விட்டு விலகாதவர்களாகப் பார்க்கிறோம். அவர்கள் விசேஷ விதமாக ஜீவன் பெற்றார்கள்.

"முடிவு பரியந்தம் நிலை நிற்பவனே இரட்சிக்கப்படுவான் மத்தேயு" 24:13

இந்த நேரத்தில் பரிசுத்த பவுல் சொல்லுகிற வார்தைகளைக் நமது குறிக்கோளாகவும் இலக்காகவும் கொண்டு வாழுவோம்.

"நல்ல போராட்டத்தைப் போராடினேன். ஓட்டத்தை முடித்தேன். விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அதை எனக்குத் தந்தருளுவார். எனக்கு மாத்திரமல், அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருள்வார்." 2 தீமோத்தேயு 4:7,8

".... அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்." ரோமர் 6:5

பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய
திரியேக தேவனுக்கே
மகிமை உண்டாவதாக ஆமென்.

இந்த பாடலை எழுதி, இசையமைத்தது
S. **துரைப்பாண்டியன்** ஆகிய நானே.
கர்த்தருக்கு ஸ்தோத்திரம்

பாடல்

பல்லவி

இரத்தத்தைக் காண்பாயோ அது
தரையில் சிந்தினதே
சத்தத்தைக் கேட்பாயோ அது
தேவனைக் கூப்பிடுதே

அனு பல்லவி

இரத்தம் இரத்தம் இரத்தம் - அது
ஜீவனின் இருப்பிடமே
சத்தம் சத்தம் சத்தம் - அது
ஜீவனால் புறப்படுமே.

சரணங்கள்

1. ஆபேலின் இரத்தம் தரையில் சிந்தி
தேவனைக் கூப்பிட்டதே
ஐயோ என் தெய்வமே அநியாயமாய்க் கொன்றான்
பழி தீர்க்க வரமாட்டீரோ - **இரத்தத்தை**

2. இயேசுவின் இரத்தம் தரையில் சிந்தி
தேவனைக் கூப்பிட்டதே
அப்பா பிதாவே நான் பாவிகட்காய் மாண்டேன்
இரங்கி மன்னித்திடும் - **இரத்தத்தை**

3. மானிட இரத்தம் சிந்திட வேண்டாம்
மாபாவம் சேர்ந்திடுமே
இயேசுவின் இரத்தம் சிந்தினதே அது
மாபாவம் போக்கிடுமே - **இரத்தத்தை**

அந்த பாடலுக்குரிய....

இராகம் – சங்கராபரணம் ; தாளம் – திஸ்ரம் (சதுஸ்வர ஜாதி)

ஸ்ருதி: 2கட்டை (D)

ஸ்வரம் **பல்லவி**

பஸக	பாம்	கா ,	, கக
கம்ம்	ரீஸஸ	நீ ,	தா ,
பநிரி	மாப	கா ,	, ஸநி
பாநிரி	காதநி	ஸா ,	; ,

அனு பல்லவி

பாக	பாக	பாக	, கக
காகக	காரிக	ம்ா ,	; ,
ம்ாரி	ம்ாரி	ம்ாரி	, ஸரி
காகக	ரீரிரி	ஸா ,	; ,

சரணங்கள்

பபப	பபப	ததத	ததா
பபப	பாரிம்	கா ,	; ,
ம்ம்ம்	ம்மக	ரிகக	ரிஸநி
ரிரிரி	ககரி	ஸா ,	; , – பஸக

அந்தப் பாடலின் இசையை, 'ஸ்வரமாக' தொகுத்து அமைத்து தந்த, எனது பஜனையின் இசைக்குழு தலைவரான அன்புசகோதரன் **திரு.G.ஏர்ணஸ்ட்பாலையா** (மருதகுளம்) அவர்களுக்கு எனது நன்றி.

சிறிய ஆலோசனை பெரிய ஆசீர்வாதம்

1. பரிசுத்த வேதாகமம்:-

இதை அடிக்கடி வாசியுங்கள், வாசித்ததை தியானம் பண்ணுங்கள். வசனங்களை விசுவாசித்து ஏற்றுக் கொள்ளுங்கள்.

காரணம்:- அவை, தேவ ஆவியினால் ஏவப்பட்டு எழுதப் பட்டவை.

2. இயேசு:-

இவரை இரட்சகராக ஏற்றுக் கொள்ளுங்கள். அவருடைய இரத்தமே நம்மை சுத்திகரிக்கும். அதுவே தேவநீதி வேறு வழி இல்லை.

காரணம்:- இயேசு தேவனால் அனுப்பப்பட்டவர்.

3. ஆலயம்:-

இது சபைசார்ந்தது; நிலைத்திருங்கள், தவறாமல் ஆராதனையில் கலந்துகொள்ளுங்கள். அதில்தான், துதி, தோத்திரம், தியானம், விண்ணப்பம் உண்டு.

காரணம்:- இதுவும் தேவன் ஏற்படுத்தின ஒழுங்காகும்.

கர்த்தர் ஆசீர்வாதிப்பாராக ஆமென்.

தன்னுரை

கிறிஸ்துவுக்குள்
பிரியமானவர்களே! வணக்கம்!!
ஒரு தன்னிலை விளக்கமாக என்னை
நானே அறிமுகப்படுத்திக் கொள்ளுகிறேன்

பெயர் மற்றும் முகவரி **S. துரைப்பாண்டியன்**
சர்ச் தெரு, மேல உப்பூரணி
கரிசல்பட்டி அஞ்சல்
சேரன்மகாதேவி வழி - 627 414
திருநெல்வேலி மாவட்டம், தமிழ்நாடு

பிறந்த தேதி : 10.06.1942
கல்வித்தகுதி : முற்கால SSLC (VI th Form / XI std)
பணி அனுபவம் : தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளி
தலைமை ஆசிரியர் - 36 ஆண்டுகள்.
பணி ஓய்வு - 2000

ஊழியப் பாதை:-

1)சபை ஊழியப் பொறுப்பு : 25ஆண்டுகள்
2)பஜனை ஊழியம் 1969 முதல் ....
3)அழைக்கப்பட்ட சபைகளில் செய்தியளித்தல்

அடுத்த வெளியீடு :

என்னுடைய அடுத்த முயற்சியாக
"கன்னிகைப் பிறப்பு" என்ற தலைப்பில்
செய்திகளை தொகுத்துக்கொண்டிருக்கிறேன்.
விரைவில் நிறைவு செய்து வெளியிட
கர்த்தர் கிருபை செய்வாராக. ஆமென் !

கைப்பேசி எண்கள் } 9443556288
9585536288